# சாயி மார்க்கம்

ஆகஸ்ட் - டிசம்பர்
2023



சத்யம் தர்மம் சாந்தி பிரேமை அஹிம்சை

## மாநாட்டு சிறப்பிதழ்

இலங்கை சத்திய சாயி சர்வதேச நிறுவனத்தின்
தமிழ் சஞ்சிகை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ சாயிராம்

# சாயி மார்க்கம்
# Sai Markam

மலர்: 30
இதழ்: 71

ஆகஸ்ட்
டிசம்பர்
2023

## உள்ளே......


- மாநாடுகள் 2
- வரவேற்புரை 4
- அறிமுகவுரை 6
- ஆரோக்கியமான வாழ்க்கை 11
- நாளாந்த வாழ்வில் தர்மத்தை கடைப்பிடித்தல் 17
- செய்யும் செயலே பிரார்த்தனை 20
- நிலையான வாழ்வு வாழ்தல் 23
- சாயியின் தூர நோக்கிற்கான செயற்பணி 29
- கேள்வி - பதில் 40
- யாழ். பல்கலைக்கழக துணைவேந்தரின் உரை 41
- மாநாட்டின் உரை 44
- முடிவுரை 46
- கௌரவ விருது அளிக்கும் நிகழ்வு 48
- சர்வம் சாயி மயம் 49
- எடுக்கப்பட்ட தீர்மானங்கள் 52
- சாயி நிலையங்களில் ஆற்றிய உரைகள் 56
- யாழ்ப்பாணம் 58
- பருத்தித்துறை 60
- தண்ணீரூற்று 65
- யாழ்ப்பாணம் 70
- எங்களின் நோக்கு என்ன? 73
- நல்லது நினைத்தால் நல்லது நடக்கும் 75
- நத்தார் பண்டிகை 76
- பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா கூறியவை.. 76


**ஆசிரியர்:**
Dr.R.கணேசமூர்த்தி
659, நாவலர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்
தொ.பே. 021 222 2832 / 5580
Email:moothy1941@yahoo.com

**துணை ஆசிரியர்:**
திரு.S.R. சரவணபவன்
தொ.பே - 021 222 5442

இலங்கையில் தனிப்பிரதி ரூபா 150.00
வருடச் சந்தா ரூபா 250.00

வெளிநாடு:
வருடச் சந்தா 15 அமெரிக்க டொலர்

**சந்தா அனுப்ப வேண்டிய முகவரி**
ஆசிரியர்,
சாயி மார்க்கம்,
166/5, சேர்.பொன். இராமநாதன் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

*சாயி மார்க்கம் புதிய கணக்கு இலக்கம்*
**காசோலை:**
Sathiya Sai International Organization – Northern Region
A/C No: 86002792
**SWIFT CODE: BCEYLKLXXXX**
Bank of Ceylon - Thirunelvely,
Jaffna, Sri Lanka.

சத்யம் தர்மம் சாந்தி பிரேமை அஹிம்சை

**ஒரே ஒரு மதம் அது**
**அன்பென்னும் மதம்**

இலங்கை சத்திய சாயி சர்வதேச நிறுவனத்தின் தமிழ்ச் சஞ்சிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரிய தலையங்கம்

# மாநாடுகள்



மாநாடுகள் பல இடங்களிலிருந்தும் பல இன, மத, மொழி, கலாசாரத்தைச் சேர்ந்தவர்களும் பல ஆற்றல்கள், அனுபவங்கள் உள்ளவர்களும் சேர்ந்து தமது அனுபவங்களைப் பகிர்வதும் மேலும் முன்னேறுவதற்குரிய வழிகளை வகுப்பதற்குமாக நடைபெறும் மகத்தான நிகழ்வாகும்.

சத்திய சாயி நிறுவனத்தைப் பொறுத்த வரையில் மாநாடுகள் பிரசாந்தி நிலையத்திலும் இந்தியாவிலுள்ள மாநிலங்களிலும் பிற நாடுகளிலும் நடந்துள்ளன.

சாயி ஆன்மீகக் கல்வி குருமார்கள், இளைஞர் அணியினர், மகளிர் அணியினர், சேவாதள்கள், முழு அங்கத்தவர்கள், நிறுவனத்தில் பதவி வகிப்பவர்கள், கல்வியாளர்கள், வேதவிற்பன்னர்கள் ஆகியோரின் மாநாடுகளின் முடிவில் பகவான் உரைமூலம் வழி காட்டல்களைக் குறிப்பிடுவார்.

இவ்வருடம் ஏப்ரல் மாதத்தில் கலிபோர்னியாவில் (அமெரிக்கா) மாநாடு நடந்தது. அம் மாநாட்டின் மைய வாக்கியம், **"அன்பும் சேவையும் - பகவானின் தெய்வீக வழிகாட்டல்களைப் பரப்பி மேம்படுத்துதல்"** ஆகும்.

இலங்கையில், யாழ்ப்பாணத்திலும் செப்டெம்பர் மாதம் 29ஆம் திகதி தொடக்கம் ஒக்டோபர் முதலாம் திகதி வரை யாழ். பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீட கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதில் பிராந்தியங்கள் 4ம் 5ம் முக்கிய பங்கு வகித்தன. இலங்கை சத்திய சாயி சர்வதேச நிறுவனம் பெருமளவில் ஒழுங்குகளைச் செய்தது. இதில் 16 நாடுகளிலிருந்து 1600 அங்கத்தவர்கள் கலந்து கொண்டார்கள். இம் மாநாட்டின் மைய வாக்கியம், **"எனது வாழ்வு பகவானின் செய்தி"** என்பதேயாகும்.

இம் மாநாடு வேதபாராயணத்துடன் பங்குபற்றும் நாடுகளின் தேசியக் கொடியுடன் மங்கல விளக்கேற்றல், வரவேற்பு இசையுடன் வரவேற்பு உரையுடன் தொழில்நுட்ப மூலமாகத் திரையில் பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்சிகள் ஆகியவற்றுடன் ஆரம்பமாகியது. இந் நிகழ்வில் மிகவும் திறமையான இயல், இசை, நாடகங்கள் சேர்க்கப்பட்டன.

இசை அர்ப்பணத்தில் 71 பாடகர்கள் 12 இசைக்கருவி திறனாளிகள் (5 நாடுகளிலிருந்து) சேர்ந்து உன்னதமான நிகழ்வை நடத்தினார்கள். கணேசப் பெருமானின் மந்திரத்துடன், "I will follow you" என்ற பாடலை பல மொழிகளில் சேர்ந்து பாடினார்கள். SSE மாணவர்களின் இசை, நடனம், நாடகமும் இடம்பெற்றது. இளைஞர் அணியினரின் கண்காட்சியும் இடம்பெற்றது.

இம் மாநாட்டில் தோழமை விருத்தி ஆன்மிகக் கூற்றுக்களுக்கான பூரணமான விளக்கம், திறன் விருத்தி, திட்டமிடல் பயிற்சி, ஆன்மிகப் பயிற்சிப் பட்டறைகள், அனுபவமிக்க அன்பர்களின் உரைகள் மூலமும் பூரண விளக்கத்தைப் பெற்றுக் கொண்டார்கள்.



இம் மாநாட்டில் ஸ்ரீ சத்திய சாயி சர்வதேச நிறுவனத் தலைவர் Dr. நரேந்திரநாத் ரெட்டி, திரு. மனோஜ் குமார் சிங், Dr. திருமதி ரமாதேவி சங்கரன், திரு. அரவிந்த் பாலசுப்ரமண்யா, திரு. கிருஷ்ணமூர்த்தி வெங்கட்ராமன், திருமதி அனுராதா வெங்கடேஸ்வரன், பேராசிரியர் சுரேஷ் கோவிந்த், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் சி. சிறிசற்குணராசா, Dr. பிலிவொங் ஆகியோர் உரை நிகழ்த்தினார்கள். ஆரோக்கியமான வாழ்வு (E.A.S.E) மனநலம் (C.O.R.E) ஆகியவற்றில் கூட்டுக் கருத்துப் பரிமாறல் நடைபெற்றன.

- சுவாமியின் போதனைகளை எவ்வாறு பரப்பலாம்?
- மகளிருக்கான வலுவூட்டல்
- இளம்அணியினருக்கு தலைமைத்துவ வலுவூட்டல், சுவாமியின் பணியை எவ்வாறு நிறைவேற்றலாம்?
- எவ்வாறு வினைத்திறனுடன் பங்குபற்றுவது?

என்ற கருத்துக்களில் அரங்கு நிகழ்வுகள் நடை பெற்றன.

40 வருடங்களுக்கு மேலாக பகவானின் பணியில் ஈடுபட்டவர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன. மேலும் தலைமைத்துவப் பயிற்சியை நிறைவு செய்தவர்களுக்கு பட்டமளிப்பும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

இம் மாநாட்டில் மரநடுகை (K.K.S) கிராமிய எழுச்சிக் கலைநிகழ்வு, செல்வபுரக் கிராமத்திலும் நடைபெற்றன ஆன்மிக சாதனையாக நகர சங்கீர்த்தனமும் காங்கேசன்துறை கடற்கரையில் அதிகாலை காயத்ரீ மந்திர ஜெபத்துடன் சூரியோதயத்தைப் பார்த்தும் மனதை ஒருமைப் படுத்திய நிகழ்வும் நடைபெற்றன.

மாநாடு நடந்த இடம் சோலையாகத் தென்பட்டதும் காலநிலை குளிர்ச்சியாகவும் தென்றல் காற்று வீசியதும் பலரின் மனதில் ஆனந்தத்தையும் ஆன்மிக எழுச்சியையும் ஏற்படுத்தின.

இம் மாநாட்டில் நிகழ்த்திய உரைகள் ஓரளவு முழுமையாகவும் உரையாற்றியபடியே தமிழில் மொழி பெயர்த்து இந்த இதழில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

ஜெய் சாயிராம்

- ஆசிரியர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரவேற்புரை

திரு. மனோஜ் குமார் சிங்
(Chairman, Zone 4, SSIO)



எமது அன்பிற்குரிய சுவாமியின் பொற்கமலப்பாதங்களில் பணிந்துகொண்டு உங்கள் அனைவருக்கும் அன்பான ஓம் ஸ்ரீ ஸாயிராம்!

உலகெங்கிலுமுள்ள ஆயிரக்கணக்கான பக்தர்கள் கூடியிருக்கும் அழகானநாள் இன்றாகும். இங்கு கூடியிருக்கும் நாம் அனைவரும் எமது வாழ்வை எவ்வாறு அவரது செய்தியாக மாற்றப்போகின்றோம் என்று எண்ணி சிந்தித்துக் கொண்டிருக்கின்றோம். ஆனால் அச் செயலானது எம் அன்பிற்குரிய சுவாமியின் அன்பும் அருளும் இன்றி நடக்க இயலாது. எமது மனதில் ஒரு கேள்வி எழுகின்றது. ஏன் நாம் எமது வாழ்வை அவரது செய்தியாக மாற்றவேண்டும்? அதுமட்டுமல்லாது அது எப்படி சாத்தியமாகும்? **"அனைத்து மனித குலமும் பேரின்பத்தில் திளைத்திருக்கின்றது."** என்பதை உறுதிசெய்யும் **ஒரு பணி எனக்கிருக்கின்றது** என சுவாமி கூறியதை மீட்டுப் பார்ப்போம். எனவே நாம் எப்போதும் ஆனந்தமாக இருக்கின்றோமா? நாங்கள் வழக்கமாக ஆனந்தம் என்பது சிறந்த ஆரோக்கியம், எமது சொத்து மற்றும் நண்பர்கள், உற்றார், உறவினர் என்றே எண்ணிய வண்ணம் இருக்கின்றோம். ஆனால் அவற்றில் ஒரு நிலையற்ற தன்மை இருக்கின்றது. ஆனால் மகிழ்ச்சிக்கு எந்த சேர்க்கையும் தேவையில்லை என்பதை நாம் புரிந்துகொள்கின்றோம். அது நமக்குள் இருக்கின்றது. அதைத் தான் அடுத்த மூன்று நாட்களுக்கு தேட நாம் வந்துள்ளோம்.

எனவே இதனை அடைந்தவர்கள் யாரென்று பதில் சொல்லவேண்டுமெனில், அனைவரும் அறிந்த இந்திய அளவில் பிரபலமான துளசிதாசர் என்று அழைக்கப்படும் கவிஞரின் அனுபவம் பற்றிப் பார்ப்போம். அவர் இராமரின் சிறந்த பக்தராக இருந்தார். அவர் எங்களுக்கு இராம் சரித்மானஸ், ஹனுமான் சாலிசா, கீதாவலி மற்றும் பல படைப்புக்களை வழங்கினார். அவர் தனது மனைவியிடத்தே மிகவும் அன்பாக இருந்தார். ஒருநாள் அவரது மனைவி அவருக்கு தெரிவிக்காமல் தனது தந்தையின் வீட்டிற்கு சென்றுவிட்டார். இதை அறிந்தவுடன் துளசிதாசர் அவரது மாமியார் வீட்டிற்கு பின்தொடர்ந்தார். அவரது மனைவி ரத்னாவலி தனது வீட்டாரின் அழைப்பின்றி தனது வீட்டிற்கு வருகைதந்ததை எண்ணி வெட்கப்பட்டார். இரத்தமும் எலும்பும் சதையுமான இந்த உடம்பின் மீது உனக்கு எவ்வளவு அன்பு இருக்கின்றது? அந்த அன்பில் சிறிதேனும் உனக்கு இராமர் மீது இருந்தால் உனக்கு மோட்சம் கிடைக்கப்பெறும் என்று ரத்னாவலி கூறினார். அந்த வார்த்தைகள் துளசிதாசரை தோட்டாவாக தாக்கியது. **"நாளைமுதல் இராம சேவைக்காக என் வாழ்வை அர்ப்பணிக்கப் போகின்றேன்"** என்று துளசிதாசர் முடிவுசெய்தார். இதேபோன்று எமது வாழ்க்கையில் நாம் ஒரு சவாலை எதிர்கொள்ளும்போதே எமது சிந்தனைகள் மாற்றமடைகின்றன. இல்லையா? ஏனென்றால் நாம் அனைவரும் சிந்தனைச் செயன்முறைகளால் உருவாக்கப்பட்டவர்கள். இல்லையா? அதுவே நமது குணாதிசயத்தை உருவாக்கின்றது. மற்றும் அகங்காரத்தையும் உருவாக்கின்றது. அவ்வாறான எமது ஆழ்மனதிலுள்ள வேரூன்றிய பழக்கங்களைக் கைவிடுவது மிகவும் கடினம்.

புத்தரின் வாழ்க்கையிலிருந்து அங்குலிமாலா என்பவரின் இன்னுமொரு கதையும் உள்ளது. புத்தரின் வருகைக்காக அங்குலிமாலா காத்திருந்து அவர் புத்தரின் இனிமையான மற்றும் தூய்மையான ஒலியை கேட்க விரும்பியது நினைவிருக்கின்றதா? "நான் ஏற்கனவே நிறுத்தி விட்டேன் அங்குலிமாலா, நீங்கள் எப்போது நிறுத்தப் போகின்றீர்கள்?" என்று புத்தர் கூறிய அந்த வார்த்தைகள் அங்குலிமாலாவின் இதயத்தை உருகச் செய்தன. அவர் இதயத்திலும், மனதிலும் ஏதோ நடந்து அவர் புத்தரின் பாதத்தின் மீது விழுந்து அவர் பின்னாலேயே மடத்திற்குச் சென்றார். எனவே மாற்றம் என்பது மிகவும் தீவிரமான உத்வேக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனையின் மூலம் வரலாம். அதற்கு நாம் அனைவரும் சாட்சியாக இருக்கின்றோம். சுவாமி தனது தோற்றத்தாலும், இனிமையான பேச்சாலும், அற்புதங்களாலும், பலரின் வாழ்க்கையை மாற்றி அமைத்திருக்கின்றார். மற்றும் இதற்காகவே சுவாமி இந்த நிறுவனத்தை எமக்கு அளித்துள்ளார். அங்கு நாம் ஒன்பது ஒழுக்கக் கோவைகளை பின்பற்றுகின்றோம். நாம் சத்சங்கங்கள், பஜனைகள் மற்றும் பல்வேறுபட்ட மாநாடுகளில் பங்குபற்றுகின்றோம். எந்தப் பாடல், எந்த வார்த்தை எமது வாழ்க்கையை சுவாமியின் செய்தியாக எம்மை மாற்றும் என்றோ மாற்றத்தை தூண்டப் போகின்றது என்பதோ எமக்குத் தெரியாது.

அன்பான சகோதர, சகோதரிகளே! வெறும் வார்த்தையால் கூறுவதை விட பயிற்சி செய்து பார்ப்பது மிகவும் கடினம் என்பது எனக்குத் தெரியும். எமது மனம் தொடர்ந்து எண்ணங்களை கொண்டுள்ளது. எப்பொழுதும் எதையாவது சிந்திக்கின்றது. 90% எண்ணங்கள் எமது கட்டுப்பாடில்லாமல் எமது ஆழ்மனதில் இருந்தே வருகின்றது. அவ்வெண்ணங்கள் எதையாவது இணைக்கத் தொடங்குகின்றது. இதனால் என்ன நிகழ்கின்றது? மனம் அவ்வெண்ணங்களுடன் பிணைய ஆரம்பிக்கின்றது. அது இனிமையான எண்ணங்கள் என்றால் அதனுடன் இணையும், மற்றும் கசப்பான எண்ணங்கள் எனில் அதை களைய முயற்சிக்கும். எனவே அனைத்திற்கும் மனமே காரணம். எண்ணங்களல்ல. மனமே பந்தத்திற்கும் பற்றறுத்தலிற்கும் காரணமாகின்றது. எனவே எங்கள் மனதில் எண்ணங்கள் உருவாகும் போது அதை சிறிது நேரம் இடைநிறுத்திக் கட்டுப்படுத்தினால் மனதில் அமைதி நிலவும். மற்றும் எழும் எண்ணங்கள் நல்லவையாக இருக்கும். அந்த நல்லெண்ணங்கள் பணிவிற்குரியதாகவும் அன்பிற்குரியதாகவும் மாற்றம் பெறும் போது நாம் எமது வாழ்வை அவரது செய்தியாக மாற்றிக் கொள்வோம். அதற்காக நாம் எமது குடும்பத்தினரையும் எமது நண்பர்களையும் விட்டுவிட வேண்டுமென்று நான் சொல்லவில்லை. "ந கர்மணா ந ப்ரஜயா த்யாகேனைனேன அம்ருதத்வமானசு" எனும் சுலோகம் இதனையே வலியுறுத்துகின்றது.

தியாகம் செய்யும் போது மட்டும் தான் நாம் அழிவற்ற தன்மையை அடைவோம். நாம் எமது தொழிலாலும் பணத்தாலும் குழந்தை சந்ததியாலும் நிலைபேற்றை அடைய இயலாது. நாம் எம் மகிழ்ச்சியற்றதாக்கும் விடயங்களை விட்டுவிட வேண்டும். நீங்கள் பூவின் சிறிய மொட்டைப் பார்த்திருக்கின்றீர்களா? இம் மொட்டு தனது மென்மையை இழந்து நாளை அழகான வாசனை மிகுந்த பூவாக மிளிரவுள்ளது. அதுவும் நிரந்தரமல்ல. அந்தப் பூவானது தனது அழகை இழப்பதன் மூலம் பெரும் புரட்சியை ஏற்படுத்தும் பழமாகவும் விதையாகவும் மாறிவிடுகின்றது. அதேபோன்று நாமும் எமது வாழ்வை விட்டுச் செல்லும் போது மேலான வாழ்வை வாழ்ந்து சுவாமி கூறிய நிலையான பேரின்பத்தை என்றென்றும் அனுபவிக்கவே இங்கு வந்துள்ளோம். அன்பாலும் பணிவாலும் சேவையாலும் இவ்வுலகத்தையே வெல்லும் போதுதான் எமது வாழ்க்கை அவரது செய்தியாகின்றது.

ஜெய் சாயிராம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிரதான அறிமுக உரை

Dr. நரேந்திரநாத் ரெட்டி, தலைவர், SSSIO

"சர்வரூபதரம் சாந்தம்
சர்வ நாமதரம் சிவம்
சச்சிதானந்தம் அத்வைதம்
சத்யம், சிவம், சுந்தரம்"

அன்பு மற்றும் நன்றியுணர்வுடன் எங்கும் நிறைந்த இறைவன் பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் தெய்வீக பொற்கமலப் பாதங்களுக்கு என் பிரார்த்தனையை சமர்ப்பிக்கின்றேன். பகவான் எல்லா வடிவமும் ஆனவர். எல்லா நாமங்களையும் கொண்டவர். சமாதானம் மற்றும் சிவனும் அவரே. மங்களகரமானவர். அவர் "சத் சித் ஆனந்தம்". அதாவது அறிவின் இருப்பிடம். அத்துடன் அவரே பேரின்பம் ஆவார். அத்வைதம் சொற்களுக்கு அப்பாற்பட்டவர். அவரே பிரம்மன் மற்றும் சத்யம், சிவம், சுந்தரம். அதாவது வாய்மை, மங்களம் மற்றும் அழகும் அவரே. அதனால்தான் நம்முள் பலர் சுவாமியின் வாழ்க்கை வரலாறு பற்றிக் குறிப்பிடும் "சத்யம், சிவம், சுந்தரம்" பற்றி வாசித்து இருக்கின்றோம். அதன் பொருளானது சுவாமி வாய்மை மற்றும் அழகானவர். இந்த எல்லா பிரபஞ்சமும் வேதங்களும் 5 விடயங்களை அதாவது நீங்கள் எது வேண்டும் என்றாலும் பார்க்கலாம். கேட்கலாம், தொட்டு மற்றும் அனுபவிப்பது. இந்த 5 விடயங்கள், ஸத் - ஸித் - ஆனந்தம் - நாமம் - ரூபம் ஆகியவையாகும். இந்த குறிப்பிட்ட வார்த்தையை சுவாமி அவரின் ஆன்மீக சொற்பொழிவுகளில் குறிப்பிடுவது உண்டு. அது சுருங்கக் கூறுவது யாதெனில் உண்மை "சச்சிதானந்தம்" என்பது அறிவின் இருப்பு மற்றும் பேரின்பத்தை குறிக்கும் பதம். அது "அஸ்தி, பாத்தி, பிரியம், பொருட்கள், அறிவு மற்றும் பேரின்பத்தின் இருப்பிடமாக விளங்குவது.

இரண்டாவது அவரே நாம் பார்க்கும் அனுபவிக்கும் எல்லா நாமமும் ரூபங்களாகும். இந்த உலகத்தின் முழு பொருளும் நாமங்களும் வடிவங்களும் அவரே. நீங்கள் நாமங்கள் மற்றும் ரூபங்களில் மட்டும் கவனத்தை செலுத்தினால் நீங்கள் அடைவது துக்கம் மற்றும் அடிமைத்தனம் மட்டுமே. மாறாக நீங்கள் முதல் மூன்றான பிரம்மன், அதாவது அறிவின் இருப்பிடம் மற்றும் பேரின்பம் ஆகியவற்றால் மகிழ்ச்சி அடைவீர்கள். பேரின்பத்தில் ஒரு இரகசியம் உண்டு. அதாவது நாங்கள் எப்போதும் ஞாபகப்படுத்த வேண்டும். என்னவெனில், நாங்கள் உலக விடயங்களில் மட்டும் கவனத்தை செலுத்தினால் எமக்கு கிடைப்பது அடிமைத்தனம் மட்டுமே. மாறாக நாம் சத்தியத்தின்மீது கவனத்தை செலுத்தவேண்டும். முதலில் சுவாமிக்கு என் நன்றியுணர்வை சமர்ப்பிக்கிறேன். பின்பு இந்த நிறுவனத்திற்கும் தொண்டர்களுக்கும் பங்கேற்பாளர்களுக்கும் இந்நிகழ்வு இனிதே நடைபெற ஊக்கமளித்த மக்களுக்கும் எனது நன்றிகள். மதிப்பிற்குரிய முதியவர்கள், யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் சிறிசற்குணராஜா அவர்களுக்கும் யாழ். பல்கலைக்கழகத்தின் மருத்துவபீடத்தின் தலைவர் வைத்திய கலாநிதி சுரேந்திரகுமார் அவர்களுக்கும் சகோதர சகோதரிகளுக்கும் என் அன்பு கலந்த சாயிராம்.

நாங்கள் அதிர்ஷ்டசாலிகள். மற்றும் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். இவ் சமகாலத்திற்குரிய அவதாரத்தை நாம் பெற்றுள்ளோம். ஆன்மிக விடயங்களை மீண்டும் மீண்டும் நினைவுபடுத்துவது முக்கியம். அது சுவாமியைப் பற்றி மீண்டும் மீண்டும் சொல்வதற்கு சமனானது. நான் நினைக்கிறேன் அவர்கள் 1976ஆம் ஆண்டும் ஜூன் 21ஆம் திகதி நடந்த ஆன்மிக சொற்பொழிவை திரையிடுவார்கள் என்று. ஏனெனில் Prof. சுரேஷ் கோவிந்தும் என்னை அதைப்பற்றி கதைக்க சொன்னார். அதில் சுவாமி சொன்னார், "மக்கள் கேட்பார்கள்; நான் ஏன் கூறிய விடயங்களையே மீண்டும் மீண்டும் கூறுகிறேன். நாங்கள் நேற்று, காலை உணவு, மதிய உணவு உண்கின்றோம். அதேபோல் இன்றும் காலை உணவு, மதிய உணவு உண்ணுகின்றோம். ஒரேவிடயத்தை மீண்டும் ஒவ்வொருநாளும் செய்கிறோம். ஆனால் அதனை நாம் ஏன் செய்கிறோம் என்று எமக்குள் கேட்டிருக்கிறோமா? ஆனால் ஆன்மிக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்பொழிவுகளுக்கு ஏன் மீண்டும் அதே விடயத்தை கூறவேண்டும் என்று வினா எழுப்புகின்றோம்? ஏனெனில் மீண்டும் மீண்டும் கூறும்போது அதுபற்றி முழுமையாக சிந்திக்கக்கூடியதாக இருக்கும்."

நான் எல்லா பக்தர்களையும், 1961ஆம் ஆண்டு மே 17 நடைபெற்ற சொற்பொழிவு எங்கள் வலைத்தளத்தில் உள்ளது, அதனை பார்க்குமாறு வேண்டுகிறேன். அதில் 3 முக்கியமான கருத்துக்களை சுவாமி கூறியிருக்கிறார். முதலாவது கருத்து சுவாமி கூறியது. இந்த மனித உருவம் எல்லா தெய்வீகத்தின் வடிவத்தையும் பெயர்களையும் உள்ளடக்கியுள்ளது. அதனால்தான் நான் முன்பு கூறினேன், "சர்வரூபதரம் சாந்தம், சர்வநாமதரம் சிவம் "**சுவாமி எல்லா பெயர் நாமங்களினதும் ரூபங்களினதும் மொத்த ரூபம்.** நீங்கள் இதனை விசாரிப்பதன் மூலமாகவோ விளங்கிக் கொள்வதன் மூலமாகவோ அனுபவிக்கமுடியாது. **அதனை அனுபவிக்கும் ஒரே மார்க்கம் அன்பு மட்டுமேயாகும்.** சுவாமி கூறியிருக்கிறார், நீங்கள் சுவாமிக்கு செய்ய வேண்டிய கொடுப்பனவு தன்னைப் பற்றி அறிந்து கொள்வதையே ஆகும். சுவாமியைப் பற்றி அனுபவிப்பது அவரின் அன்பின் மூலமே ஆகும். இதுவே சுவாமி கூறியிருக்கின்ற சக்திவாய்ந்த இரண்டாவது கருத்து ஆகும். மனோஜ் கூறியிருந்தார், பகவான் தந்த அளப்பரிய பரிசானது **ஸ்ரீ சத்ய சாயி நிறுவனம் ஆகும்.** அது பகவானால் ஸ்தாபிக்கப்பட்டு வளர்க்கப்பட்டு வழிகாட்டப்பட்டு அத்துடன் தொடர்ந்து வழிகாட்டப்பட்டுவருகின்றது. வெளிநாட்டில் முதலாவதாக 1965இல் சாயி நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டது இலங்கையிலே ஆகும். சுவாமி சொல்லியிருக்கிறார் மிகவும் முக்கியமானது ஞானம். ஞானத்திற்கும் புத்திசாலித்தனத்திற்கும் வேறுபாடு காணப்படுகின்றது. கல்வியின் நோக்கமானது சமூகத்திற்கு சேவை செய்வதே என்கிறார் பகவான். அத்துடன் கல்வியின் முடிவு ஒருவரின் ஒழுக்கமாகும். கல்வியின் சாரம் ஒழுக்கம் ஆகும். ஒழுக்கமில்லாத கல்வி ஆபத்தானது என சுவாமி கூறியிருக்கிறார்.

சுவாமி மிகவும் அழகாக கூறியிருக்கிறார், அதாவது நெறிமுறை இல்லாத வர்த்தகம், கொள்கைகள் இல்லாத அரசியல், அன்பு இல்லாத நீதி, ஒழுக்கமில்லாத கல்வியானது எந்தவிதத்திலும் பயனற்றது. அத்துடன் ஆபத்தானது. சுவாமி ஒரு நகைச்சுவை ஒன்று கூறியிருக்கிறார், நீங்கள் BA பட்டத்தை பெறலாம். ஆனால் குணம் இல்லாத BA பட்டம் அது BAD. நீங்கள் Master இல் பட்டம் பெறலாம். அப்பட்டம் MAD க்கு சமன் ஆகும். நீங்கள் MD பட்டத்தை பெறலாம். ஆனால் ஒழுக்கம் இல்லையெனில் அப்பட்டம் மனப்பிரச்சினைக்கும் அடிகோலும். நீங்கள் MBA பட்டத்தைப் பெறலாம். நற்குணம் உங்களிடம் இல்லை எனில் அது Master of BAD Association என பகவான் கூறியிருக்கிறார்.

சுவாமி சொல்லியிருக்கிறார், உயர்ந்தநிலை பட்டம் யாதெனில் தெய்வீகத்தின் நிலைபேறுத்தன்மை பற்றி அறிவது ஆகும். அந்த உயர்ந்த பட்டத்தை தியாகத்தினூடு மட்டுமே நாம் பெறமுடியும். எங்களிடம் காணப்படும் சொத்துப்பத்துகள் மூலம் அதனை பெறமுடியாது. நான் எனும் அகங்காரத்தை தியாகம் செய்வதன்மூலம் மட்டுமே நாம் தெய்வீகத்தன்மையை அறியலாம்..

**இந்த தெய்வீக அன்பை உண்மையாக பெறுவது சக்திவாய்ந்த மந்திரமான காயத்ரீ மந்திரத்தை ஜெபிப்பதன் மூலமேயாகும்.** மிகவும் புராதன மந்திரமாகும். 1996ஆம் ஆண்டு ஜூன் மாதம் நடந்த ஆன்மிக சொற்பொழிவில் காயத்ரீ மந்திரமானது அறிவு ஒளி பற்றி விளக்குகிறது. இம் மந்திரமானது மதவேறுபாடு அற்றது. நித்தியமானது. உலகளாவிய ரீதியானது. இம் மந்திரத்தை எந்த இடத்திலும் எந்த இனமுடைய ஆணோ பெண்ணோ எந் நாட்டவரும் எந்த மதத்தவரும் ஜெபிக்கலாம். இதனால்தான் சுவாமி, **இம் மந்திரத்தை ஜெபிப்பதன் மூலம் எங்கள் வாழ்வை காப்பாற்றலாம் என்று கூறியிருக்கிறார்.** இம் மந்திரத்தை மீண்டும் மீண்டும் கூறும்போது எமது வாழ்வு புனிதமடையும். 1965இல் சுவாமி மக்களை வழிகாட்ட கடிதம் ஒன்று எழுதியுள்ளார். அது தற்போது பல நாடுகளில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. 114 நாடுகளில் சாயி நிறுவனங்கள் காணப்படுகின்றன.

சாயி நிறுவனங்களின் மேன்மையான நோக்கமானது **ஒவ்வொரு மனிதனும் தெய்வீகத்தின் உண்மைத் தன்மையை உணர்வது மட்டுமன்றி தனது சொல், செயலிலும் அதனை வெளிப்படுத்தவேண்டும். அடுத்து யாதெனில் மற்றவர்களையும் தெய்வீகத்தை உணர உதவுவது ஆகும்.** பகவான் தான் சொன்ன போதித்த பாடங்களை முற்றிலும் வாழ்க்கையில் கடைப்பிடிப்பதன்மூலமே பரிபூரண வாழ்வைப் பெறலாம் என்று கூறியுள்ளார்.

சுவாமி ஆயிரத்திற்கு மேற்பட்ட சொற்பொழிவுகளை ஆற்றியுள்ளார். 16 வாஹினிகளை எழுதியுள்ளார். இவ்வாறு பல இருக்க எவ்வாறு அவரின் படிப்பினைகளை கடைப்பிடிப்பது என்ற கேள்வி எழலாம். சுவாமி மிகவும் எளிமையானவர். அவரின் வாழ்க்கை அவரின் படிப்பினைகள் அவரின் இலட்சியங்கள் யாவற்றையும் அவர் சாரமாக சொல்வது அன்பு. சுவாமி எமக்கு மனித விழுமியங்கள் பற்றி கூறியுள்ளது சத்யம், தர்மம், சாந்தி, பிரேமை மற்றும் அகிம்சை. மனித விழுமியங்களுக்கு ஆதாரம் அன்பு ஆகும். அன்புதான் கடவுள். கடவுள்தான் அன்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதை விளங்கவே உலக மகாநாட்டை நாம் நடத்துகின்றோம். **அன்புதான் ஊற்று. அன்புதான் வழிகாட்டி. அன்புதான் பாதை.** சுவாமி கூறியிருப்பது தெய்வீக அன்பு பற்றி. சுவாமி அதனைப் பற்றி நிறைய வரைவிலக்கணங்கள் கூறியிருக்கிறார். நாங்கள் இன்று கவனம் செலுத்தப்போவது காயத்ரீ மந்திரத்தில். சுவாமியின் ஆன்மிக சொற்பொழிவு (1996 ஜூன் 21) புத்திசாலித்தனத்திற்கும் ஞானத்திற்கும் உள்ள வேறுபாட்டை கூறியிருக்கிறார். ஏனெனில் நாம் இந்த புகழ்பெற்ற பல்கலைக்கழகத்தில் உள்ளோம். ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் பட்டம் பெற்று வெளியேறியுள்ளனர். மருத்துவபீடமும் காணப்படுகின்றது. சுவாமியும் கல்லூரிகளையும் பல்கலைக்கழகங்களையும் உருவாக்கியிருக்கிறார். அநேகமாக நடைமுறைக் கல்வியில் இருந்து புத்திசாலித்தனத்தையே பெற்றுள்ளோம். அது எமது வாழ்வாதாரத்தை நடத்துவதற்கு மட்டுமே உதவும்.

**காயத்ரீ மந்திரம் எம்மைப்பற்றி அறிவதற்கு உதவும். ஏன் நாம் அதனை ஜெபிக்கவேண்டும்? அது "சர்வரோக நிவாரணி". அது எல்லாவித மன, உடல் நோய்களில் இருந்து விடுபட உதவும். எல்லோருக்கும் நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். இரண்டாவது "சர்வ துக்க பரிகாரணி காயத்ரீ". எல்லா வித துக்கங்களில் இருந்து விடுபட இம் மந்திரம் உதவும். எமக்கு எம்மால் குடும்பத்தால் மற்றும் சமூகத்தால் பல கவலைகள் ஏற்படும். அதிலிருந்து விடுபட காயத்ரீ மந்திரம் உதவும். மூன்றாவது "சர்வ பலப் பிரதாயினி காயத்ரீ" எமக்கு உலக ஆசைகள் காணப்படும். இவ் நல்ல ஆசைகளை அடைய காயத்ரீ மந்திரம் உதவும். ஒருமுறை சிலபேருக்கு வாகனத்தரிப்பிடம் கிடைக்கவில்லை. அவர்கள் காயத்ரீயை ஜெபித்துக் கொண்டிருக்கும்போது தரிப்பிடம் கிடைத்தது. சுவாமி சொல்லியிருக்கிறார், கற்பகவிருட்சம் கேட்டதை தரும். நீங்கள் அங்கு போய் சுவையான தேநீரைகேட்க அதைத் தரும். ஆனால் நீங்கள் சின்ன சின்ன ஆசைகளை கேட்டு வீணாக்குவதனைவிட உயர்ந்தவற்றை கேட்கவேண்டும். ஏனெனில் காயத்ரீ மந்திரம் எமக்கு சுயஉணர்தலுக்கு உதவும்.**

இக் காயத்ரீ மந்திரமானது,

ஓம் |
பூர் புவ ஸ்வ:|
தத் ஸவிதுர் வரேண்யம் |
பர்கோ தேவஸ்ய தீமஹி |
தியோ யோந: ப்ரசோதயாத் ||

**"காயத்ரீ" என்பதற்கு தன்னை ஜெபிப்பவனை காப்பாற்றும் என்பது பொருள். நம்முள் சிலர் காயத்ரீ மந்திரத்தின் பொருள் தெரியாமல் ஜெபிக்கிறோம். நாம் நன்மை பெறுவது எப்போது எனில் அதன் பொருள் தெரிந்து ஜெபிக்கும்போது மட்டுமே. "ஓம்" என்பது பிரணவஒலி. அது நிர்குண நிராகார பிரஹ்மனின் ஒலியின் அறிகுறி. நான் தத்துவ விடயங்கள் பற்றி பேசுவேன். ஏனெனில் சுவாமி கூறியிருக்கிறார். அதுதான் அத்திபாரம் என்று. கடவுள் வடிவங்கள், பண்புகள் மற்றும் பெயர்களுக்கு அப்பாற்பட்டவர். நேரம், காரணகாரியங்களில் இருந்து விடுபட்டவர்.**

கிருஷ்ணன் பகவத்கீதையில் ஓம் பிரஹ்மனுக்கு சமன் என்று கூறியுள்ளார். பதஞ்சலி ஓம் இன் மகிமையை பற்றி கூறியுள்ளது. கிருஷ்ண பரமாத்மா கூறியிருக்கிறார், **யார் ஒருவர் சாகும் தருவாயில் காயத்ரீ மந்திரத்தை ஜெபிக்கின்றாரோ அவர்களுக்கு மறுபிறப்பு இல்லை.** நான் உங்களுக்கு மானுஷ உடநிடதத்தினை பரிந்துரைப்பேன். ஏனெனில் அது ஓம் இன் மகிமையை கூறியிருக்கிறது. அதில் 12 சுலோகங்கள் காணப்படுகின்றது. அது பல்வேறு நிலைகளை விளக்கியுள்ளது. விழிப்புநிலை, தூங்கும்நிலை, கனவுகாணும்நிலை, ஆழ்ந்த உறக்க நிலை, மேல்நிலை ஆகியவையாகும். மேல்நிலை, பரப்பிரஹ்மனை அடையும் நிலை ஆகும். **அதனால் "ஓம்" ஜெபிப்பது சக்திவாய்ந்ததாகும்.**

பிரசாந்தி நிலையத்தில் நிகழ்வுகள் 21 தடவை ஓங்காரம் உச்சரித்த பின்னரே தொடங்கப்படும். அதன்பின்னரே நகரசங்கீர்த்தனம், பஜனை, வேதம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓதுதல் இடம்பெறும். சுவாமி கூறியிருக்கிறார், காயத்ரீ ஓதுவதனை சடங்கு முறைப்படியாக ஆக்கக்கூடாது. மாறாக ஆன்மிகமாக ஆக்கவேண்டும். நாம் காயத்ரீயை 1, 2, 3 தடவைகள் இல்லாமல் **21 தடவைகள் ஜெபிக்கவேண்டும்.** ஏனெனில் எமது 5 கர்மேந்திரியங்களை தூய்மைப்படுத்தும் (அதாவது அங்கங்களின் செயற்பாடுகள்). அத்துடன் ஞானேந்திரியங்களை தூய்மைப்படுத்தும் (அதாவது ஞானத்தின் அங்கங்களை). மூன்றாவதாக 5 பிராணன்களை தூய்மைப்படுத்தும். ஆடுத்தாக 5 கோசங்களை தூய்மைப்படுத்தும். நாங்கள் இவை எல்லாம் பெறும்போது இறுதியாக பிரஹ்மனின் பேரின்ப உணர்வைப் பெறுவோம். எல்லோரும் பேரின்ப நிலையை பெறத்தான் போகிறோம். இந்த பேரின்பம் சாதாரண மகிழ்ச்சி இல்லை. பிரம்மானந்தத்தை அடைவது சாதாரணம் இல்லை. தைத்திரிய உபநிடதம் ஒரு அழகான உபநிடதம். "ஆனந்தவல்லி" பற்றி கூறியிருக்கிறது. "மனிஷானந்தா" என்பது மகிழ்ச்சியின் ஒரு அலகு.

ஒரு இளந்தாரி, மனிதப்பிறவியின் பேரின்பநிலை யாதெனில் அறிவு, அழகு, எல்லா அதிகாரங்கள் என்பவற்றிலேயே இருப்பதாக கூறியிருக்கிறார். பின் அதுவே ஒரு அலகு ஆகும். அவன் எல்லா செல்வங்களையும் அழகு, அறிவு, அதிகாரம் எனும்போது இந்த இன்பம் பல மடங்காகும். எப்போது எனில் ஆனந்த இறுதியில் பிரம்மானந்தம். (10 அலகில் 18 ஆவது அடுக்கு ஆகும்.) வேதங்கள் கூறியிருக்கிறது, பிரம்மானந்தாவை விளக்குவது கடினம். புரிந்துகொள்வது கடினம். அது அனுபவிக்க வேண்டிய ஒன்று. இதுவே"ஓம்" சொல்வதன் பலனாகும்.

"காயத்ரீ" பற்றி சுவாமி நிறைய விளக்கவுரை கொடுத்திருக்கின்றார். சுவாமி கூறியிருக்கின்றார், "சுவாமி ஒவ்வொரு முறையும் புதிய விளக்கம் கொடுப்பதாக தெரிகிறது. சுவாமி அவரைப்பற்றி சொல்லியிருக்கிறார். "சுனாதன" நித்தியமானவன். நான் புதியவன். "பூர்" பூலோகத்தினை குறிக்கும் புவி, புவர் லோகம் ஆகாயத்தைக் குறிக்கும் மற்றும் சுவஹு சொர்க்க லோகத்தை குறிக்கும். அத்துடன் 3 வேதங்களையும் இவை குறிக்கும். ருிக், யஜுர் மற்றும் சாமவேதம். 3 பிராணன்கள் பிராண, அபான, விபான. அத்துடன் 3 கடவுள்களையும் (பிரஹ்மா, விஷ்ணு, மஹேஸ்வரன்) குறிக்கும். நெருப்பு, காற்று மற்றும் சூரியர்களை குறிக்கும். சுவாமி அதனை நன்கு எளிமைப்படுத்தியிருக்கிறார். அத்துடன் எண்ண ஊற்று (Radiation), அதிர்வு (Vibration), ஜடப்பொருளாக்கம் (Materialization) ஆகியவற்றையும் குறிக்கும்.

1976 சுவாமியின் ஆன்மிக சொற்பொழிவில், "நீ" 5 கூறுகளை கொண்டது என கூறினார். அவையாவன ஆன்மீக இதயம், பிரகாசம், மேலான தன்னம்பிக்கை, ஞாபகசக்தி, விழிப்புணர்வு. அவதார புருஷர்கள் எப்போதும் விழிப்புணர்வுடன் இருக்கிறார்கள். சுவாமி அழகாக கூறியிருக்கிறார். **ஞானம் எவ்வளவு முக்கியம் வாய்ந்தது என்று. ஞானமானது எல்லா சுதந்திரத்தையும் தரும். புத்திசாலித்தனம் சந்தேகம் மனச்சோர்வு என்பவற்றைத் தரும். புத்திசாலித்தனமாக இருப்பது நன்று. ஆனால் புத்திசாலித்தனமானது ஞானத்துடன் இணைய வேண்டும்.**

சுவாமி முக்கியமான கொள்கைகளைப் பற்றி பேசியுள்ளார். சிரத்தை, ருதம், சத்தியம், யோகம் மற்றும் மகேந்திர சக்தி. மகேந்திர சக்தி தெய்வீகசக்தியை குறிக்கும். மனிதப் பிறவி, சாயி நிறுவன நோக்கம் தெய்வீக சக்தியை அறிவது ஆகும். அதாவது நாங்கள்தான் பிரஹ்மன், தெய்வீகம் என்பதனை அறிதல் ஆகும். இதனை அறிய நாம் **இந்த பின்வரும் நான்கையும் கடைப்பிடிக்கவேண்டும்.**

**முதலாவது சிரத்தை. நம்பிக்கை.** மனிதன் நம்பிக்கையுடன் இருக்கவேண்டும். ஸ்ரீகிருஷ்ணன் பகவத்கீதையில் கூறியிருக்கிறார் எவன் நம்பிக்கையுடன் இருக்கின்றானோ அவன் ஞானத்தை அடைவான். நம்பிக்கை இழந்தால் அவன் சந்தேகம், மனஅழுத்தத்திற்கு ஆளாவான். சுவாமி சொல்லியிருக்கிறார் வாழ்க்கை ஒரு ஆறாக எடுக்கவேண்டும். ஆற்றின் ஒருபக்கம் சந்தேகம், மனஅழுத்தம் இக்கரையிலிருந்து அடுத்த கரைக்குச் செல்லும்போது முழு நம்பிக்கை காணப்படவேண்டும். எதில் நம்பிக்கை காணப்படவேண்டும்? கடவுள்மீது முழு நம்பிக்கை காணப்படவேண்டும். கடவுள் இருக்கிறார் என்று நம்பவேண்டும். அப்போது உங்கள் எல்லா கவலைகளும் மறைந்துவிடும்.

சுவாமி இருக்கும்போது நாங்கள் அவரை தொட்டோம், உணர்ந்தோம், நாங்கள் நம்பினோம். அவர் உடலைவிட்டு போனபின்பு பலபேர் அவரின் நிறுவனங்கள், கல்வி நிலையங்களுக்கு என்ன நடக்கும் என கேள்வி எழுப்பினார்கள். சுவாமி எமக்கு உறுதிமொழி ஒன்றைத் தந்துள்ளார். எனது நிறுவனங்கள், நிலையங்கள் 1000 வருடங்கள் காணப்படும் என்று. எனவே நாம் அதனை சந்தேகிக்கக்கூடாது. இரண்டாவது **முழுநம்பிக்கையை சுவாமியின் வார்த்தைகளில் வைக்கவேண்டும்.** எல்லா ஆன்மிக சொற்பொழிவுகள் அவரின் வாஹினிகள், சுவாமியின் ஒவ்வொரு வார்த்தையும் மந்திரம். சுவாமியின் ஒவ்வொரு வாக்கியங்களும் சூத்திரம். சுவாமியின் ஒவ்வொரு ஆன்மிக சொற்பொழிவுகளும் வேதமும் உபநிடதங்களுமாகும். எனவே சுவாமியின் வார்த்தைகள் மீது முழு நம்பிக்கை வைக்கவேண்டும். **மூன்றாவது எங்கள் மீது நம்பிக்கை வைக்கவேண்டும்.** நான் பிரஹ்மன், நான் தெய்வீகம், **இரண்டாவது**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"ருதம்"**. நாங்கள் சொல்லுவனவற்றிலும் செய்வனவற்றிலும் நல்லிணக்கம் இருக்கவேண்டும். சுவாமி கூறியிருக்கிறார், இந்த நவீன உலகில் சொல், செயல் என்பவற்றில் நல்லிணக்கம் இல்லை. உயர்ந்தோர்கள் யார் என்றால் சொல், செயல் என்பனவற்றில் நல்லிணக்கம் உடையோர். துஷ்டர்கள் யார் என்றால் சொல்வது ஒன்று செய்வது வேறாக இருப்பவர்கள். நீங்கள் நினைப்பதனை சொல்லமுடியாத சமயங்களில் அமைதியாக இருங்கள். மாறாக மற்றவர்களையும் உங்களையும் ஏமாற்றாதீர்கள். சொல்லிலும் செயலிலும் இணக்கம் காணப்படும்போது அது தெய்வீகத்துக்கு சமன். மூன்றாவது சத்தியம் "நிகாலபாத்யம்". உண்மையான சத்தியம் நிகழ்காலம், இறந்தகாலம், எதிர்காலத்திற்கு அப்பாற்பட்டது. நான்காவது "யோக" உணர்வுக் கட்டுப்பாடு. நல்லவற்றைப் பார், கெட்டவற்றை பார்க்காதே. நல்லவற்றை கேள், கெட்டவற்றை கேட்காதே, நல்லவற்றை செய், கெட்டவற்றை செய்யாதே, நல்லவற்றை பேசு, கெட்டவற்றை பேசாதே. இதுவே கடவுளை அடையும் வழி. எனவே நான்கும் இருக்கும்போது எமக்கும் மகேந்திரசக்தி கிடைக்கும். அதாவது தெய்வீக சக்தி கிடைக்கப்பெறும். எனவே காயத்ரீ மந்திரத்தை ஜெபியுங்கள். மற்றும் சுவாமியின் படிப்பினைகளை பின்பற்றுங்கள். சாதனா செய்யுங்கள். இதுவே எமது நோக்கத்தினை அடையும் வழி. நான் சுவாமியை எமக்கு ஆசி வழங்குமாறு பிரார்த்திக்கின்றேன். எனவே இனிதே இம் மாநாடு தொடங்குகின்றது.

ஜெய் சாயிராம்

Dr. நரேந்திரநாத் ரெட்டி
தலைவர்,
ஸ்ரீ சத்திய சாயி சர்வதேச நிறுவனம


**சாயி மார்க்கம் வாசகர்களிடம் ஓர் வேண்டுகோள்..**

**சாயி பக்தர்களின் அனுபவங்கள். சாயி இலக்கியம் என்னும் கடலில் மூழ்கி கிடைத்த முத்தான கருத்துக்களை ஏனைய பக்தர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே சாயிமார்க்கம் என்ற சஞ்சிகை ஆரம்பிக்கப்பட்டது. ஆகவே உங்கள் சாயி அனுபவங்களை அல்லது சாயி நிலையங்களின் விசேட செயற்பாடுகள் பற்றி அல்லது சாயி இலக்கியத்தில் நீங்கள் ரசித்த விடயங்களை எமக்கு எழுதி அனுப்புங்கள். ஏனைய பக்தர்களுடனும் பகிர்ந்து கொள்வோம்.**

**நன்றி**

- ஆசிரியர்


## தேசிய சேவைத் திட்டம்



**சத்திய சாயி முதியோர் இல்லம் - மீகொட - கொழும்பு**

**இது 32 கி.மீ கொழும்பிலிருந்து அமைந்துள்ளது. ஆரம்பத்தில் 20 பெண்களும் 20 ஆண்களும் பராமரிப்பதென திட்டமிடப்பட்டு கட்டிடத்திற்கான பூமி பூஜை 28.05.2015 இல் மேற்கொள்ளப்பட்டது. இந்த முதியோர் இல்ல கட்டிடம் 2017.04.30 திகதியன்று இலங்கை அரசின் சபாநாயகர் கௌரவ கரு ஜெயசூரியா அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இச் சேவைப்பணியிலும் நீங்கள் இணைந்து கொள்ளலாம்.**

தொடர்புகளுக்கு:
தெலைபேசி: 0094 112687014, 0094 777316935
E mail - info@ssiosrilanka.org
website: www.ssiosrilanka.org

### நான் செத்ததும் வா

மன்னர் ஒருவர் தன் மகனை ஜென் குருவிடம் பயிற்சி பெற அனுப்பினார். இளவரசன் ஜென் குரவின் ஆச்சிரமத்திற்குச் சென்று கதவைத் தட்டினான். "யாரது?" என்று உள்ளிருந்து குரல் கேட்டது.

"நான் இந்த நாட்டு இளவரசன்" என்றான். "நான் செத்தபிறகு வா" என்றார் ஜென் குரு. அவர் கூறியதைப் புரியாமல் திரும்பத் திரும்ப கதவைத் தட்ட "நான் செத்ததும் வா" என்றே பதிலே கிடைத்தது.

இளவரசன் மன்னரிடம் சென்று நடந்ததைக் கூறினான். மன்னர் இளவரசனுடன் ஜென் குரவின் ஆச்சிரமத்திற்குச் சென்று கதவைத் தட்டினார். "யாரது?" என்று குரல் கேட்டது. "அடியேன் தங்களிடம் பாடம் கற்க வந்துள்ளேன்" என்றார் மன்னர். கதவைத் திறந்து ஜென் குரு இருவரையும் வரவேற்றதுடன் இளவரசனைத் தன் மாணவனாகச் சேர்த்துக்கொண்டார். "நான் என்ற அகந்தை ஞானத்திற்கு எதிரானது" என்று இளவரசன் அறிந்தான்.

- இராமகிருஷ்ண விஜயம், டிசெம்பர் 2023



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரோக்கியமான வாழ்க்கை (E.A.S.E)

**Dr. Ramadevi Sankaran**
(Pediatrician; Member, SSSIO,
International Medical committee)
(28.09.2023)



அந்தர்யாமியாக எல்லோரிலும் நிறைந்திருக்கும் அன்பான சாயி அன்னையின் பொற்கமலப் பாதங்களில் எனது பணிவான வந்தனங்கள். எனது பெற்றோருக்கு எனது பணிவான வந்தனங்கள். அவர்கள் இல்லாமல் நான் இங்கு இல்லை. எங்களது சாயி அன்னையின் அன்பையும் சக்தியையும் உணர்வதற்கு இங்கு இருக்கும் வாய்ப்புக் கிட்டியது பெரும் பாக்கியமே. அனைத்துப் பெரியோர்களுக்கும் பணிவான வணக்கங்கள். அனைவருக்கும் அன்பான வணக்கங்கள்.

நாங்கள் உங்களது கடவுள் உங்களது கடவுள் உங்களது கடவுள் என சுவாமியின் வார்த்தைகளுடன் தொடங்கினோம். சகோதரர் சுரேஷ் ஆரோக்கியமான வாழ்க்கைக்கு EASE PROGRAMME உடன் வந்தமை ஒரு அருமையான நிகழ்வு. என்னை ஆரோக்கியமாக வாழ்தலைப் பற்றி 20 நிமிடங்களுக்கு பேசக் கூறியபோது நான் நினைத்தேன் நான் மருத்துவ கல்லூரிக்கு பயிற்சிக்காக 12 வருடங்களுக்கு மேலாக சென்றுள்ளேன். 20 நிமிடங்களிற்கு பேச வேண்டும் என்ற போது நான் இந்த எளிய சூத்திரத்துடன் வந்துள்ளேன். எனது பேச்சிற்கு அத்திபாரம் இட்டமைக்கு தலைவர் ரெட்டிக்கு நன்றி. நிறைய விடயங்களை அவர்கள் பேசிவிட்டார். எனவே எனது வேலை இப்போது இலகுவாகி விட்டது.

தூய்மை என்னும் போது எங்கள் எல்லோருக்கும் தெரியும். எண்ணங்களில் தூய்மை. அதுவே ஆரோக்கியமாக வாழ்வதற்கான விதையாகும். சொல் மற்றும் செயலிற்குள் தூய்மையான எண்ணங்களைப் போடுவது பேரானந்தத்தைத் தருகின்றது. எங்களது எண்ணம் சொல் செயலிற்கு இடையில் தொடர்பில்லாமல் இருக்கும் போதே நோய் வருகிறது. இங்கிருக்கும் குழந்தைகளைப் பாருங்கள். அவர்கள் முழுமையாக பேரானந்தத்தில் இருக்கிறார்கள். கடவுளுடன் ஒன்றியிருப்பதை உணர்கிறார்கள். அதுதான் சந்தோசமாகவும் ஆரோக்கியமாகவும் இருப்பதற்கான விதை. குழந்தையாக இருங்கள் அப்போதுதான் உள்ளிருக்கும் தெய்வீகத்தை உணர்வீர்கள்.

ஒரு வைத்தியராக இருப்பதால் ஆரோக்கியமாக வாழ்தலைப்பற்றி பேச முன்னர் ஆரோக்கியம் என்றால் என்னவெனப் பார்ப்போம். நாங்கள் ஆரோக்கியம் என்றால் என்னவென புரிந்து கொள்ள வேண்டும். (WHO) உலக சுகாதார கூட்டுத்தாபனம் கூறுகிறது, சுகாதாரம் என்பது வெறுமனே நோய் / பலவீனம் இல்லாமல் இருப்பதல்ல. முழுமையான உடல், உள, சமூக நல்வாழ்வு வாழும் நிலையே ஆகும். எங்களது நிறுவனம் ஆரோக்கியமான வாழ்வு வாழ எவ்வாறு உதவுகிறது என்பது பற்றி சிந்தித்தால், சுவாமி எல்லா நேரமும் ஆரோக்கியமாக வாழ்வதற்கு ஒரு அழகான வழிமுறையைத் தந்துள்ளார்.

இது தான் சுவாமி தந்த வழிமுறை -

**உடல் ஆரோக்கியத்தை எடுத்தால் அது பக்தி யோகம்,** ஆன்மீகப் பாடல்களைப் பாடல் எங்களுக்குள் இருக்கும் தெய்வீகத்துடன் தொடர்பு கொள்வதற்கானது. அது உடல் வலிமை, உள்ளார்ந்த நம்பிக்கை என்பவற்றைத் தருகிறது.

**மன ஆரோக்கியத்தைப் பார்த்தால், அது ஞானயோகம்.** எங்களுக்கு வெளியிலிருந்து எல்லா அறிவு சார் அறிவுரைகளும் (Intellectual Knowledge) கிடைக்கலாம். ஆனால் எங்களுக்குள் உள்நுளைந்துள்ள உள்ளுணர்வு. அதைத்தான் விஞ்ஞான ரீதியாக Wisdom என்கிறோம். அந்த Wisdom எல்லோருக்குள்ளும் இருக்கிறது. அந்த Wisdomஐ வெளியிலிருந்து பெற முடியாது. ஆகவே அந்த விதையை நாம் SSE மற்றும் கல்வி வட்டங்களுக்கு ஊடாக விதைக்கின்றோம். ஆகவே இதில்லாமல் எங்களால் மனரீதியாக ஆரோக்கியமாக இருக்க முடியாது.

**நான் கடவுள் என்பதை உணர சுவாமி கூறியவற்றை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நடைமுறைப்படுத்தி மனிதகுலத்திற்கு சேவை செய்வதே கர்மயோகம்.** இம்மூன்றையும் சுவாமி அழகாக ஒருங்கிணைத்துள்ளார். அதாவது சுவாமி இதற்காக இதை செய்கிறாய் என்று ஒருபோதும் கூறியதில்லை. அவர் எல்லா அணிகளிலும் ஆர்வமாக இரு என்கிறார். அதுவே ஆரோக்கியமாக இருப்பதற்கான வழிமுறை.

நான் எனது சொந்த அனுபவம் ஒன்றை பகிர விரும்புகின்றேன். அது நான் எவ்வாறு சுவாமியுடன் இணைந்தேன் என்பதாகும். நான் இன்று இவ்வாறு இருப்பதற்கு காரணமான ஒரு சம்பவம் உண்டு. சுவாமி எனது வாழ்வில் வந்தார். எனினும் சுவாமி கடவுள் என்ற நம்பிக்கை இந்த கனவைக் காணும் வரை எனக்கு வரவில்லை. இது 2005 ஒக்டோபர் மாதமளவில் நவராத்திரி காலத்தில் நிகழ்ந்தது. நான் ராகவேந்திரர் சுவாமியின் தீவிர பக்தர். யாரும் என்னை வியாழக்கிழமைகளில் பஜனைக்கு வரச்சொல்லி அழைத்தால் நான் இல்லை நான் ராகவேந்திரா சுவாமியை தரிசிக்க வேண்டும். சாயி பயனைக்கு வரவில்லை என்பேன். ஆனால் எனது கணவரின் குடும்பத்தில் அனைவரும் சாயி பக்தர்கள். எல்லோரது பெயரும் சாயி எனத்தான் தொடங்கும். நான் கூறுவேன் ராகவேந்திரர் சுவாமி தான் எனது குரு, நான் அவரை வழிபட வேண்டும் என்று. ஆனால் குறித்த இந் நாளில் நான் அழகான கனவொன்று கண்டேன்.

தலைவர் கூறியது போல சுவாமி சர்வஸ்வரூபா, அனைத்து வடிவங்களையும் உள்ளடக்கியவர். இப்போது அதைக் கூறும் போது எனது உடல் சிலிர்க்கிறது. **அந்தக் கனவில் சுவாமியின் இதயத்தில் ராகவேந்திரர் சுவாமியைக் காண்கின்றேன்.** அந்த நொடி எனது உணர்வை முழுமையாக மாற்றியது. சுவாமிதான் அனைத்துமே. இந்த பிரபஞ்சத்திலுள்ள ஒவ்வொரு அணுவுமே சுவாமியால் வழங்கப்பட்டது. அது எனக்கு தைரியம் கொடுத்தது. நான் நைஜீரியா போனாலும் சரி வேறு எந்த நாடு சென்றாலும் சரி நான் மட்டுமே செல்வேன். எல்லோரும் கேட்பார்கள் எவ்வாறு பயணிக்கிறாய்? என. நான் தனியாக செல்லவில்லை. சுவாமி எனக்குள் இருக்கிறார். நான் அதிகாலை 12 மணி அல்லது 2 மணிக்கு தரையிறங்கினாலும் சுவாமிதான் என்னை வரவேற்க இருப்பார் என நினைப்பேன். அது எனக்கு அதிகமான தன்னம்பிக்கையைத் தரும். மருத்துவ முகாம்களுக்கு சேவைக்கு செல்வோம். எவ்வாறு உங்களிடம் எல்லா உபகரணங்களும் இருக்கும் எனும்போது நம்பிக்கை அதுதான் நான் எடுத்துச் செல்லும் உபகரணம் என்பேன். இது எனக்கு சுவாமியின் அன்பைப் பரப்ப அதிகமான தைரியத்தை தருகிறது. அதேவேளை அந்த அன்பை நானும் பெறுகிறேன். அது என்னை ஆரோக்கியம் ஆக்குகிறது.

சுவாமி சொல்வதெல்லாம் எனக்கு வேதம். 2009 ஜூலை எனக்கு கிடைத்த நேர்காணல் ஒன்றில் நான் அனைத்துக்கும் நன்றி சுவாமி எனக் கூறினேன். சுவாமி கேட்டார் எதற்கு நன்றி என்று. நான் கூறினேன். உங்களது அன்பிற்கும் ஆசிக்கும் நன்றி என்று. இதுதான் சுவாமி கூறிய வார்த்தைகள். "நான் உனக்குள் இருக்கின்றேன். நீ எனக்குள் இருக்கிறாய். ஏன் நன்றி?". எனக்கு அந்த நேரம் புரியவில்லை. நான் சிந்திக்கும்போது புரிந்தது. சுவாமியால்தான் நாம் வாழ்நாள் முழுவதும் சிந்திக்கக் கூடிய ஒரு செய்தியைத் தரமுடியும் என்று.

நான் சிந்திக்கும் போது புரிந்து கொண்டேன் சுவாமி அந்தர்யாமி, நான் வெறும் இந்த உடல் மட்டுமே. **நான் என்ன செய்தாலும் சுவாமிதான் எனக்கூடாக அதை செய்கிறார்.** அந்த நம்பிக்கை ஆழமாகி ஆழமாகி அது எனக்கு அதிக வல்லமையைத் தருகிறது. நீங்கள் முழுநேரம் வேலை செய்கிறீர்கள், உங்களிற்கு குடும்பம் இருக்கிறது என்று கூறுவார்கள்.

ஆனால் நேரம் சுவாமியின் கட்டுப்பாட்டிற்கு கீழ் உள்ளது. நாம் அதை சுவாமியின் வேலை செய்யும்போது உணர்கிறோம். இதுவே உடல் உள சமூக ரீதியாக ஆரோக்கியமாக வாழ்வது. இதுதான் நான் பகிர விரும்பிய அனுபவம்.

**அத்துடன் சுவாமி தந்த 4 செய்திகள், கடவுள் மீதான அன்பு.** நான் சிறு குழந்தையாக இருந்தபோது எனக்கு கூறுவார்கள், இதைச் செய்யாதே! கடவுள் தண்டிப்பார். ஆனால் கடவுளிற்கு பயப்படும் போது உங்களால் கடவுளிற்கு அருகே செல்ல முடியாது. நீங்கள் கடவுளை நேசிக்க வேண்டும். அப்போதுதான் அவரை நெருங்க முடியும். பாவத்திற்கு அஞ்ச வேண்டும். சுவாமி, எப்படி ஆனந்தமாக இருப்பது? அதற்கும் ஒரு வழியைக் கூறியுள்ளார். **ஏழைகளுக்கு சேவை செய்யுங்கள்** என்று. அப்படி செய்தால் நீங்கள் ஆனந்தமடைவீர்கள். தலைவர் சொன்னது போலத்தான், இது ஒரு சொல் மட்டுமில்லை. இதை வைத்து பல விரிவுரைகள் வழங்கலாம், தகவல்களைப் பரிமாறலாம். ஆனால் மனமாற்றம் என்பது எங்களின் சொந்த அனுபவங்களுக்கூடாக மட்டுமே வரும். தன்னலமற்ற சேவை மூலமே உண்மையான ஆனந்தம் வரும்.

தெய்வீக வைத்தியரான இந்த கடவுள் மீதான அன்பு பற்றி சிந்திக்கும் போது யோசித்தேன். அந்த தேர்தான் எமக்கு தரப்பட்ட உடல். நாங்களே செய்யும் அனைத்தினதும் கட்டுப்பாட்டாளர். தேரோட்டியை எப்போதும் நினைப்பது. உடல் என்பது ஒரு கருவியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழைகளுக்கு சேவை செய்வதில் ஆனந்தமாய் இருக்கும். அதுவே ஆத்மா. **"நான் கடவுள்" என்னிலிருக்கும் கடவுளை எல்லோரிலும் காண வேண்டும்** என்பதை உணர வேண்டும். இப்போது இந்த கேட்போர் கூடத்திலுள்ள ஆயிரம் பேரையும் பார்க்கும்போது இந்த ஆயிரம் பேரிலும் சுவாமியைப் பார்த்தால்தான் இந்த Slide இன் நோக்கத்தை உணர முடியும். இந்த அனுபவம் உங்களுக்கு சக்தியூட்டும்.

என்னிடம் கேட்பார்கள் எவ்வாறு தொடர்ந்து 12 மணித்தியாலம் வேலை செய்கின்றேன் என்று. நான் தொடும் ஒவ்வொரு நோயாளியும் சுவாமிதான் என்று நினைப்பேன். 12 மணித்தியாலத்திற்கு பின்பும் நான் சக்தியுடன் வருவேன். சுகாதார பிரிவில் நாம் சக்தியிழந்த, மனஅழுத்தம் பற்றிக் கதைப்போம். நான் நினைக்கிறேன் எங்களுக்கு நாம் எதனுடன் வேலை செய்கிறோம் என்ற நல்ல மனப்பாங்கு மற்றும் விழிப்புணர்வு வேண்டும். ஒரு சாயி பக்தராக இருப்பதற்கு அது மிக முக்கியம். எனக்கு பார்த்துக் கொள்வதற்கு குடும்பம் இருக்கிறது. இது நான் சேவை செய்வதற்கான நேரமில்லை. நான் எனது பொறுப்புக்களை முடித்து விட்டு சேவை செய்வேன் என்று எண்ணுவேன். ஆனால் அப்படி ஒரு நாள் வராது. ஒவ்வொரு கணமும் ஒவ்வொரு மூச்சும் நாம் செய்யும் அனைத்திலும் சுவாமியை உணர வேண்டிய கணம். சுவாமி எனக்கு அழகான செய்முறையைத் தந்துள்ளார். பாவத்திற்கு அஞ்சு என்பது வெளிப்படையாக தெரிந்ததுதான். நாம் அடிஅறிமனம், நனவுநிலை, உயர்அறிமனம் (Subconscious Mind, Conscious Mind & Super Conscious Mind) பற்றிப் பேசினோம். சுவாமி சொல்கிறார் உங்களிடம் நம்பும் திறமையை கட்டுக்கட்டாக சிந்தனைகள் உள்ள அடிஅறிமனம் பக்கம் திருப்பலாம். அல்லது அதை ஐந்து மனித விழுமியங்களால் நிரம்பிய உயர்அறிமனத்தின் பக்கம் திருப்பலாம்.

சகோதரர் சுரேஷ் இற்கும் காயத்ரீ பற்றி அதிகம் விருப்பம் என எனக்கு தெரியாது. நானும் காயத்ரீயைப் பற்றி யோசித்தேன். அதுவும் ஒருமையிலிருந்து வருகின்றது. நாங்கள் அனைவரும் ஒரே விடயத்தையே நினைக்கின்றோம். ஐந்து மனித விழுமியங்கள் இதுதான் ஸ்ரீசத்ய சாயி மனித மேம்பாட்டுக் கல்வியின் தத்துவம். ஐந்து மனித விழுமியங்களையும் பார்க்கும்போது, ஒரு குழந்தை மருத்துவராக நான் குழந்தைகளை அணுகும்போது அக் குழந்தைகள் முற்றிலும் பேரானந்தத்தில் இருப்பார்கள். அவர்கள் இருப்பது எமக்கு பேரானந்தத்தைத் தருவது மட்டுமல்லாமல் யாரெல்லாம் இருக்கின்றார்கள் எங்கெல்லாம் புதியதொரு பிணைப்பு உருவாகின்றதோ அங்கெல்லாம் அவர்கள் மகிழ்ச்சியை ஏற்படுத்துவார்கள். அதுவே தூய்மை. சுவாமி சொல்கின்றார், ஒரு குழந்தையைப் போல தூய்மையாக இருக்க வேண்டும். அவ்வாறு இருந்தால் மட்டுமே உன்னால் தெய்வீகத்தை உணர முடியும். ஆகவே என்ன நடக்கிறது. நாங்கள் அனைவரும் அந்தத் தூய்மையோடுதான் பிறந்தோம். பின்பு ஏன் எங்களுடைய மூளைக்கு என்ன நடக்கிறது? நாங்கள் அதே போல தூய்மையுடனே இருக்க வேண்டும். அத்தோடு சுவாமி தன்னுடைய ஒரு பேச்சில் காயத்திரீ மந்திரத்தின் ஐந்து கட்டங்கள் அதாவது 5 மனித விழுமியங்கள் பற்றி குறிப்பிட்டுள்ளார். மற்றும் அந்த ஐந்து மனித விழுமியங்கள்தான் 21ஆம் நூற்றாண்டின் வேதங்கள். சுவாமியின் செய்தியை எடுத்துச் செல்வதற்கு நான் ஸ்ரீ சத்ய சாயி மனித மேம்பாட்டுக் கல்வி நிறுவனத்தோடு வேலை செய்வதை மிகவும் அதிர்ஷ்டவசமாகவும் ஆசீர்வாதமாகவும் உணர்கின்றேன். சுவாமியின் செய்திக்கேற்ப வாழ்வதன் மூலமே நாம் சமூகத்திற்கு அந்த செய்தியைக் கொண்டு செல்லலாம். நடைமுறைப் படுத்தாமல் சுவாமியின் செய்தியை எம்மால் சமூகத்திற்கு கொண்டு செல்ல முடியாது.

நான் உங்களுக்கு சில விஞ்ஞான ரீதியான ஆதாரங்களை தர விரும்புகிறேன். இதை நரம்பியல் விஞ்ஞானம் நிரூபித்துள்ளது. அதாவது எங்களது மூளை நல்ல விடயங்களுடனேயே இணைக்கப்பட்டுள்ளது. நாங்கள் பிறக்கும் போது எந்தவொரு தூய்மையின்மையும் இல்லை. எல்லாமே கடவுளின் படைப்பு. இது ஒருபோதும் பிழையாக இருக்க முடியாது. நாங்கள் தூய்மையாகவே படைக்கப்பட்டுள்ளோம். ஆனால் என்ன நடக்கிறது? யாராலும், நாங்கள் எந்த வயதில் இப்படி மாறுகிறோம் என கண்டுபிடிக்க முடியுமா? 18 வயதா? எமது புலன்கள் சுறுசுறுப்பாக தொடங்க அவ்வளவு காலம் எடுக்காது. ஆகவே புலன்களை சிறுவயதிலேயே அடக்குங்கள்.

**ஒரு குழந்தை பிறந்து 6-9 மாதங்களில் அதற்கு பயம் உருவாகிறது.** அதுதான் அவர்களில் முதலாவதாக வளர்ச்சியடைகிறது. உங்களுக்கு பயம் வந்த உடனேயே நீங்கள் தூய்மையான உணர்வு நிலையிலிருந்து விலகிப் போகின்றீர்கள். அவர்கள் பிறந்து **2 வருடம் ஆகும்** போது அவர்கள் முனைப்பாகவும் வன்முறையாகவும் பொறாமையாகவும் கோபமாகவும் இருப்பார்கள். எல்லாமே அவர்கள் 2 வயதானாலும் ஏற்படும். ஆகவே நாங்கள் உலகியல் எண்ணங்களுக்கோ அல்லது ஐந்து விழுமியப் பண்புகளுக்கோ இணைந்து கொள்ளலாம். இது எங்களிலேயே தங்கியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமியும் நனவு நிலை, மனசாட்சி, பேருணர்வு என்பதைப் பற்றிக் கூறியுள்ளார். ஆகவே நாங்கள் எங்களுடைய மனச்சாட்சியின் தொடர்ச்சியான ஒருங்கிணைந்த விழிப்புணர்வில் இருக்கும் வரை, நாங்கள் உலகளாவிய உணர்வை உணர்ந்து கொள்ள முடியாது. அதனாலேயே இதைப்பற்றி ஆழமாக யோசிக்க வேண்டியது மிக அவசியம். இதுவே எங்கள் அனைவருக்கும் வாழ்க்கைக்காலம் முழுவதுக்குமான சாதனையாக இருக்கிறது. அடுத்து உணர்வில் ஏழு கட்டங்களைப் பற்றி உளவியல் கூறுகின்றது. முதலாவது படி உயிர்வாழும் ஆர்வம். இதற்கு அடிப்படை பயம். நாங்கள் பயந்த நிலையில் இருக்கும்போது ஒரு போதும் எங்களால் தெய்வீகத்துடன் தொடர்பில் இருக்க முடியாது. நாங்கள் ஒரு புது இடத்திற்கு செல்லும்போது ஒரு பயம் இருக்கும். இது புதிதாக உள்ளது என. ஆனால் ஒரு சாயி பக்தராக நான் இலங்கைக்கு வந்தபோது நான் வீட்டிலுள்ளது போல சுபீட்சயமாக உணர்ந்தேன். இதுவே ஒருமை உணர்வு. நாங்கள் ஒவ்வொருவரிலும் ஒவ்வொரு இடத்திலும் சாயி இருப்பதை உணர்கிறோம். ஆகவே எங்களுக்கு எந்தப் பயமும் இல்லை. எல்லோருடனுமே நன்றாகப் பழக்கப்பட்டதாக உணர்கின்றோம். ஆகவே இது மிக முக்கியமானது. மற்றும் நான் இந்த முழு வளர்ச்சியின் விளக்கத்திற்கும் செல்லவில்லை. ஆனால் இறுதிநிலை கடவுளுடன் அருகாமையில் வைத்திருக்கும் ஒரே விடயம். அதாவது நான் கடவுள் என உணரவைப்பது தன்னலமற்ற சேவை மட்டுமே. ஆகவே நாங்கள் அனைவரும் மகிழ்ச்சியாகவும், ஆரோக்கியமாகவும் இருப்பதற்கே சுவாமி சத்ய சாயி சேவா நிறுவனத்தை உருவாக்கியுள்ளார். ஆகவே நாங்கள் அனைவரும் எல்லா செயற்பாடுகளிலும் பங்குபற்றினால் நிச்சயமாக அனைவரும் மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியமாகவும் இருக்கப் போகின்றோம். அத்துடன் சமூகம் மாற்றமடையப் போகின்றது. அடுத்து EASE நிகழ்ச்சியைப் பற்றி சிறிது சொல்கிறேன். நாங்கள் கதைக்கப் போவது என்னவென்றால் உளரீதியான பயிற்சி, உடல் ரீதியான பயிற்சி, நித்திரை மற்றும் உணவுப் பழக்கங்கள். இது பற்றி நிறைய நிகழ்ச்சிகள் உள்ளன. நாங்கள் Youtube இற்கு சென்று பார்த்தால் வித்தியாசமான உணவுப் பழக்க காணொளிகள், உடற்பயிற்சிக் காணொளிகளைக் காணலாம். ஆகவே உங்களுக்கு என்ன தேவை? சத்ய சாயி EASE நிகழ்ச்சி பற்றி நாங்கள் என்ன செய்தாலும் அது நான் கடவுள் என்ற விழிப்புணர்வுடன் இணைந்திருக்க வேண்டும். அப்படியானால் மட்டுமே எம்மால் இதைப் பின்பற்ற முடியும். சிலர் 3 மாதத்திற்கு ஒரு உணவுப் பட்டியலை ஆரம்பிக்க முடியும். 3 மாதங்களிற்குப் பின் என்ன நடக்கிறது? நாங்கள் அனைவரும் புதுவருட முடிவுகள் எடுப்போம். ஆனால் அது ஒரு இரண்டு கிழமைக்கு மட்டுமே நீடிக்கும். ஆகவே எமது வாழ்க்கைக்காலம் வரை நீடிக்கப் போகும் மாற்றம் எதுவாக இருக்கப் போகிறது? அது எந்த ஆன்மீக நல்வாழ்வோடு சம்மந்தப்பட்டதாகும்? ஆன்மீக நல்வாழ்வு இல்லாமல் உள மற்றும் உடல் ரீதியாக ஆரோக்கியமாக இருக்க முடியாது. ஆகவே இதைப்பற்றித்தான் நாங்கள் பட்டறைகளிலும் ஆழமாகக் கதைக்கப்போகின்றோம். **நிலையான ஒருங்கிணைந்த விழிப்புணர்வு (CIA)**. அதாவது நான் உண்ணும் போது நான் சுவாமிக்கும் அதை பிரசாதமாக்கி உண்கிறேன். நான் இணையத்தில் எதையாவது பார்க்கிறேன் என்றால் அதை என் கண்களுக்கூடாக பார்ப்பது சுவாமி. ஆகவே நான் எந்த கெட்ட விடயங்களையும் கேட்க மாட்டேன். ஏனென்றால் எனது சுவாமி என்னுடைய காதுகளினூடாக கேட்டுக்கொண்டிருக்கிறார். இந்த நிலையான ஒருங்கிணைந்த விழிப்புணர்வை சுவாமியுடன் கொண்டிருப்பது அவசியம். அப்படி இல்லாவிடில் எங்களது மாற்றத்தை எம்மால் உணர முடியாது. சில பட்டறைகள் ஏற்கனவே நடைபெற்றன. நாங்கள் எங்கெல்லாம் சர்வதேச மருத்துவமுகாம் செய்கிறோமோ அங்கெல்லாம் இந்த EASE பட்டறையையும் இணைத்துக் கொள்கிறோம். மெக்சிக்கோவில் வெவ்வேறு வயது பிரிவினருக்கு ஐந்து பட்டறைகள் நடத்தப்பட்டன. பெற்றோர்களுக்கும் நாங்கள் பட்டறை நடத்தினோம். அத்தோடு உயர் பாடசாலை மாணவர்களுக்கும் ஒரு பட்டறை நடத்தினோம். பொதுமக்கள் மத்தியில் ஆயிரக்கணக்கான மக்களை சென்றடையுமாறு பத்திரிகையில் வெளியிட்டோம். ஆகவே இப்படி விழிப்புணர்வை ஏற்படுத்தல் என்பது மிக முக்கியமானது. ஏனெனில் எல்லோரும் இந்த அறிவிற்கு தகுதியானவர்கள். அடுத்து பயிற்சியாளர்களைப் பயிற்றுவிக்கும் EASE பட்டறையை Zone 1, 2 இல் நடத்தினோம். அதாவது 5 செயலமர்வுகள் நிறைவடைந்து விட்டது. இறுதி செயலமர்வை சுவாமியின் அவதார அறிவிப்பு தினத்திற்கான ஒரு சமர்ப்பணமாக மேற்கொள்ள உள்ளோம். ஆகவே நான் இந்த **Slide**உடன் முடிக்க விரும்புகிறேன். உண்மையாகவே மகிழ்ச்சி என்பது எது? நான் இலங்கையில் இன்று உள்ளதால் மகிழ்ச்சியாக உள்ளேன். எனக்கு பெரிய வீடு உள்ளது. மகிழ்ச்சியாக உள்ளேன். எனது மகளுக்கு திருமணமாகி விட்டது. மகிழ்ச்சியாக உள்ளேன். இவையெல்லாம் தற்காலிகமான மகிழ்ச்சி. சுவாமி சொல்கிறார், **எந்தவொரு காரணமும் இல்லாமல் நீ**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மகிழ்ச்சியாக இருந்தால் அதுவே பேரானந்தம்.** அதுவே நாங்கள் அனைவரும் நிலையாக இருக்க வேண்டிய நிலை. நான் பாதநமஸ்காரம் சுவாமியிடம் எடுத்ததால் மூன்று மாதங்களுக்கு நான் அந்த பேரானந்த நிலையிலேயே இருந்தேன். மூன்று மாதம் கழித்து மீண்டும் இவ் உலகிற்கு வரும்போது சுவாமி என்னை தயவுசெய்து இந்த உலகத்திற்கு கொண்டு வராதீர்கள் எனக் கேட்டேன். ஆனால் துரதிர்ஷ்டவசமாக எனது புலன்கள் வெளியே போவதால் மீண்டும் இந்த உலகத்திற்கு வரவேண்டி உள்ளது. ஆனால் உண்மையிலேயே அந்த 3 மாத பேரானந்தநிலை அனுபவம் என்பது மிகவும் அழகான நிலையாக இருந்தது. சிலவேளை நான் சுவாமியிடம் கேட்பேன் சுவாமி நான் இந்த உலகத்தில் தான் வாழ்கிறேனா? என்று. ஏனெனில் அது என்னை தொந்தரவு செய்யவில்லை. ஏன் இவ்வாறு நடக்கிறது? என்று கேட்பேன். ஆனால் வாழ்க்கை முழுவதும் சுவாமியின் போதனையை தொடர்ச்சியாக பின்பற்றினால் அது நாங்கள் அனைவரும் உணரக்கூடிய ஒரு அழகான ஒரு நிலையாக இருக்கும். இந்த அற்புதமான சந்தர்ப்பத்தை தந்ததற்கு நன்றி. பட்டறையின் போது மீண்டும் சந்திப்போம்.

## HEALTHY LIVING




## WHO AM I ?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## DISEASE = DIS + EASE




## Hsappiness Within Reach - EASE into HEALTH




Moderation
Self Control
↓
RIGHT CONDUCT

Commitment
Self Respect
↓
LOVE

Self Control
Thoughtfulness
↓
LOVE

↓

**Constant Integrated Awarness**

## Hsappiness Within Reach - EASE into HEALTH






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாளாந்த வாழ்வில் தர்மத்தைக் கடைப்பிடித்தல்

ஸ்ரீ அரவிந் பாலசுப்ரமண்யா
(சுவாமியின் கல்விநிறுவனத்தின் முன்னாள் மாணவன்,
மின்னூடகக் குழு அங்கத்தவர்)
(28.09.2023)



சுவாமியின் பொற்கமலப் பாதங்களில் எனது பணிவான வணக்கங்கள். இங்கு இந்நாள் எனக்கு மிகவும் மகிழ்ச்சியை அளிக்கிறது. எங்கும் அன்புமயமாக இருக்கிறது. Confer என்றால் உரையாடு. Conference என்றால் சேர்ந்து உரையாடல் என்பது பொருளாகும். மிகவும் ஆனந்தமாயிருக்கிறது.

1972ஆம் ஆண்டில் ஒரு வெப்பமான நாள். சுவாமியும் மாணவனும் சம்பாஷணை.

சுவாமி : உனக்கு என்ன வேண்டும்?

இக் கேள்விக்கு நாம் என்ன சொல்லவேண்டும்? எதைக் கேட்கவேண்டும்? என்று தெரியவேண்டும். மாணவன் இப்படியான கேள்விக்குப் பழக்கப்பட்டவராகையால் மௌனமாக இருந்தான். சுவாமி குவளையில் நீர் கொண்டுவரச் சொல்லி கடதாசித் துண்டை உருட்டி, நீரில் நனைத்து மாணவனின் சேட் பையில் வைத்தார். அதை எடுத்து வாசிக்கும்படி சொன்னார். அதில் சுவாமி எழுதியிருந்தது, **"இதயபூர்வமாக சுவாமிமீது அன்பு வைக்கும் பலத்தை (மனத்திடத்தை) எனக்கு அளிக்கவும்".** இதைத்தான் நாம் சுவாமியிடம் கேட்கவேண்டும். சந்தேகம், வேறு தடைகள் அன்பைக் குறைத்துவிடலாம். இவ் வரம் இருந்தால் நாளாந்த வாழ்வில் தர்மத்தைக் கடைப்பிடிப்பதில் ஒரு கஷ்டமும் இருக்காது. ஏன் பூரண அன்பு வைக்க முடியாது? பாபத்திற்கு அச்சமில்லாததே காரணம். கடவுள்மீது முழுமையான அசையாத அன்பிருந்தால் பாபம் செய்ய அஞ்சுவோம்.

இம் மகாநாட்டில் எங்கும் அன்பு மயம். ஆகவே தர்மமும் எங்கும் இருக்கிறது. தர்மம் என்றால் ஒழுக்கக் கோவையையே குறிக்கும். எமது நிலை சந்தர்ப்பத்திற்கு ஏற்ப அநேக ஒழுக்கக் கோட்பாடுகள் உள்ளன. இச் சந்தர்ப்பத்தில் சுவாமி எனக்குச் சொன்ன அறிவுரையைச் சொல்கிறேன். "என்னை மகிழ்ச்சிப்பட வைக்க வேண்டுமென்றால் பேராசிரியர் வெங்கட்ராமனை மகிழ்ச்சிப் படுத்து" என்று சொன்னார். அவர் சுவாமியின் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர். ரேடியோ சாயி செயற்பாட்டிற்குப் பொறுப்பாயிருந்தவர். அதாவது **கடமையைப் பூரணமாக செப்பமாகச் செய்வதே தர்மமாகும்.**

ஒவ்வொரு தேசத்திற்கும் யாப்பு வழிகாட்டியாக இருக்கும். இந்தியாவின் யாப்பில் அறிமுகமாக 73 சொற்கள் கொண்ட பகுதியுள்ளது. ஏனைய யாப்புப் பகுதி 146000 சொற்களைக் கொண்டுள்ளது. இதேபோல தர்ம விதிகள் பலவாக நிலை சந்தர்ப்பத்திற்கேற்ப இருந்தாலும் அடிப்படை விதியாக இருப்பது, **ஆத்மதர்மம்** மற்றப் பகுதியை **பரதர்மம்** என்று சொல்லப்படுகிறது. ஆத்ம தர்மம் என்றால் "எங்கும் எல்லாவற்றிலும் எல்லோரிலும் இருப்பது ஒரே ஆத்மாவேயாகும்" என்பதுதான் அடிப்படை. இதை மறவாது செயற்பட்டால் செயல்களெல்லாம் தர்மமாகவே இருக்கும்.

சமூகத்தின் நலனுக்காக சமூகம் 4 நிலைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவையாவன, பிரஹ்மச்சரியம், கிருகஸ்தம், வனப்பிரஸ்தம், சந்நியாசம் என்பவையே ஆகும். இவையெல்லாம் தொடர்ச்சியான வாழ்க்கைப் பயணத்தில் நிலவும் நிலைகளாகும். ஒவ்வொரு நிலைக்கும் அதற்குரிய தர்மம் உண்டு. இதை விளங்குவதற்காக ஒரு ஆற்றின் உற்பத்தி, ஓட்டம், முடிவைப் பற்றி ஆராய்வோம்.

ஆறு மலை உச்சியில் தொடங்குகிறது. சிறிய அகலமாக இருக்கும். மிகவும் விசைவுடன் பாய்ந்துகொள்ளும். ஒரு தடையும் நிற்பாட்ட முடியாது. உச்சத்தில் மிகவும் விரைவாக ஓடும். இதை எமது இளம்பராயத்திற்கு ஒப்பிடலாம். பலம், சக்தி, ஆர்வம், தியாகத்தன்மை எல்லாம் நிறைந்த பருவமே இளமைப் பருவம். ஆகவேதான் சுவாமி மாணவர்கள்மீதும் இளைஞர்கள்மீதும் அதிக கவனம் வைக்கின்றார். இந்த நிலையில் ஆத்மதர்மத்தை விளக்கிப் போதிக்கவேண்டும்.

சுவாமி உலகெங்கும் போதித்துள்ளார். காலம் போய்க்கொண்டேயிருக்கும். எங்களது இலக்கு இறைவனை அடைவதேயாகும். நாங்கள் பிறப்பது, திரும்பவும் பிறக்கக்கூடாது என்பதற்காம். ஒரே ஒரு குறிக்கோளாக இருக்கவேண்டும்.

உதாரணமாக இன்னொரு நிகழ்வு :

மாணவர்களின் விளையாட்டு நிகழ்வு. அங்கு மாணவர்கள் முழு மூச்சாக தம்மை ஈடுபடுத்திக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்வார்கள். சுவாமியின் முகத்தில் சிரிப்பு எழுந்தால் அதுவே ஆனந்தம் ஆனந்தம் என்பார்கள். ஒருமுறை இவர்களின் நிகழ்வின் நடுவிலே சுவாமி எழும்பிப் போய்விட்டார். அடுத்தநாள் காலை தரிசனத்தின்போது மாணவர்கள் ஒரு துக்கமுமில்லாது ஆனந்தத்துடன் இருந்தார்கள். உங்களுக்கு துக்கமில்லையா என்று கேட்டதற்கு "நாங்கள் சுவாமிக்காக செய்தோம். எழும்பிப் போனாலும் சரி, இருந்து முழுமையாகப் பார்த்தாலும் சரி. அவர் முன்னிலையில் நடத்தியதே எமக்கு ஆனந்தம்" என்று சொன்னார்கள். சுவாமியின் புன்னகைக்காக நாம் எதையும் ஏற்றுக்கொள்வோம். இப்படியான **சமநிலை**யை நாம் பேணி வளர்க்கவேண்டும்.

இன்னொரு நிகழ்வு :

சர்வதேச வங்கியில் மூத்த உத்தியோகத்தராகப் பணிபுரிகிறார். சுவாமியின் மாணவராக இருந்தபோது தரிசனத்திற்கு முன் வரிசையில் இருப்பதற்காக கடைசிப் பாடத்தை வெட்டிப் போயிருப்பார்கள். இதைக் கவனித்த சுவாமி எவ்வாறு எப்போதும் முன்வரிசை கிடைக்கிறதெனக் கேட்டார். உண்மையைச் சொன்னார்கள். உங்களைச் சங்கடத்தில் மாட்டப் போகிறேன் என்று சொல்லி விடுதி பொறுப்பாளரை கூட்டிவரச் சொன்னார். வார்டனைப் பார்த்து இதுதானா ஒழுங்கு கட்டுப்பாடு? இவர்கள் போவது வருவது தெரியாதா? என்று எச்சரித்தார். ஒரு மணித்தியாலத்திற்குப் பின்பு இந்த மாணவர்களை நேர்காணலுக்கு அழைத்தார். "எப்படி சங்கடத்தில் மாட்டவைத்தேன், இனி சுவாமி மீது அன்பு இருந்தால் முன்னுக்கு வந்து பாருங்கள்" என்று சொன்னார். இந்த மாணவர்கள் விடுதியில் சிநேகிதத்தை இழந்தார்கள். இவர்கள் தன்னல மில்லாசேவை செய்ய வேண்டு மென்று நினைத்து விடுதியிலிருந்து தரிசனத்திற்கு 6 மாணவர்களைக் கொண்டுபோய் கொண்டு வந்தார்கள். செய்த சேவைக்காக முன்னுக்கு இடம் கொடுக்கப்பட்டது. "ஆற்றைப் போல என்ன தடை வந்தாலும் பயணத்தைத் தொடரவேண்டும்" அண்மைக்கும் அருமைக்குமுள்ள வித்தியாசத்தை தெரிந்துகொள்ளவேண்டும்.

இன்னொரு நிகழ்வு :

சுவாமி காரில் வீதியில் போனால் மாணவர்கள் பின்னால் ஓடுவது வழக்கம். இது நல்ல பழக்கமில்லையென நினைத்து துணைவேந்தர் காருக்குப் பின் ஓடக்கூடாது எனக் கட்டளையிட்டார். மாணவர் பின்னே ஓடிவராததைக் கண்ட சுவாமி காரணத்தை அறிந்து துணைவேந்தரைக் கூட்பிட்டு, "அவர்கள் எனக்குப் பின்னால் ஓடுவதற்காகவே வந்துள்ளார்கள். தடுக்கவேண்டாம்" எனக் கூறினார்.

முதல்நிலையில் கடவுளைப் பற்றிய விளக்கத்தை அறியவேண்டும். வேதங்கள் வாழ்க்கையில் நான்கு குறிக்கோள்களாக "ஆர்த்த, தர்ம, காம, மோக்ஷ" இருப்பதைக் கூறியுள்ளது. ஆறு மலையிலிருந்து தரையை அடைந்தும் விரிவடைகிறது. இதைப்போல நாமும் **கிருகஸ்த நிலையில் விரிவடைகிறோம்.** மனை, மனைவி, மக்கள், செல்வம் ஆகியவற்றை பெற்று விரிவடைவோம். விரிவடைவதும் பேரன்புதான். இந்நிலையில் பொறுப்பும் கூடுகிறது. தர்மவழியில் செல்வத்தைத் தேடி தர்மவழியில் செலவிடவேண்டும். எங்களின் தாயான சுவாமி எம்மை அநாவசியமாகக் கஷ்டப்படவிடமாட்டார்.

றியுகோ ஹிரா (Ryuko Hira) என்ற ஜப்பானியர் சுவாமியின் சேவைத் திட்டங்களுக்கு பணம் சேகரிப்பதற்காக பல கூட்டங்களை ஒழுங்குசெய்து சுவாமியின் சேவைத் திட்டங்களைப் பற்றிப் பேசினார். பேச்சு நன்றாயிருந்தது என்று சொன்னார்கள். ஆனால் பணம் சேரவில்லை. மனைவியுடன் ஆலோசித்துவிட்டு சுவாமியின் தரிசனத்தின்போது தனது வீட்டை விற்று சேவைத் திட்டங்களுக்கு தரவிரும்புகிறேன் என்று சொன்னார். சுவாமி, "எந்தத் தாய் தனது பிள்ளை வாடகை வீட்டில் இருப்பதை விரும்புவார். ஆகவே வீட்டை விற்கவேண்டாம்" என்று கூறினார்.

இன்னொரு நிகழ்வு :

Dr. வள்ளுவன் ஜீவானந்தம் அமெரிக்காவில் மிகவும் பிரபல்யமான இதய சத்திரசிகிச்சை நிபுணர். அவரை இன்னொரு பல்கலைக்கழகம் (Chicago) கூடிய சம்பளம் கொடுத்து தங்களுடன் சேரும்படி வற்புறுத்தியது. இவர் புட்டபர்த்தி வந்ததும் சுவாமி, "நீ சிக்காக்கோவுக்கு போ" என்று அழுத்தமாகச் சொன்னார். அங்கு எத்தனையோ வறுமையானவர்கள் இவரின் சிகிச்சையால் பயன்பெற்றார்கள். தர்மவழியில் பணத்தைச் சேர்த்து தர்மவழியில் செலவுசெய் என்ற வாக்கியத்தை அனுபவமூலமாக உணர்ந்தார்.

தூர நாடுகளுக்கு இலவச வைத்திய சேவை நடத்துவதற்காக வைத்தியர்கள் தங்கள் பணத்தைச் செலவழித்து சேவையைச் செய்கிறார்கள். தன்னலமற்ற சேவைக்காக வளங்களைச் சேர். இச் சேவையினால் சுவாமியின் அருமைக்கு தகுதியுடையவனாகிறாய். ஆறு எப்படி மக்களுக்கும் உயிரினங்களுக்கும் ஆதாரமாக இருப்பதற்கு தன்னை விரிவாக்கிக் கொள்கிறதோ நாமும் அப்படிச் செய்யவேண்டும். கிருஹஸ்தர்கள் ஏனைய நிலைகளில் உள்ளவர்களுக்கு ஆதாரமாயுள்ளார்கள்.

மூன்றாவது நிலை **வனப்பிரஸ்தம். நாம் இனி பற்றுக்களிலிருந்து விடுபடவேண்டும்.** கடவுளையே நோக்காகக் கொள்ளவேண்டும். ஆறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமுத்திரத்தில் சேருவதற்காக கிளைகளாகப் பிரிகிறது. சச்சின் டென்டுல்கர் பிரபல்ய கிரிக்கெட் வீரர் (1977இல்) சுவாமியிடம் தான் 100 ஓட்டங்கள் எடுக்காமல் 90 ஓட்ட எண்ணிக்கையில் வீழ்கிறது ஏன்? எனக் கேட்டார். சுவாமி, "நீ பந்து வீசுபவரைப் பார்க்காமல் பந்திலேயே கண்ணாயிரு" என்று சொன்னார். பின்பு பலநூறு ஓட்டங்களை எடுத்து சாதனை படைத்தார்.

பூசகர் காமவதானி காரு சுவாமியுடன் 15 வருடங்கள் சேவையிலிருந்தார். அவர் சாப்பாட்டில் மிகக் கவனம். தானே சமைத்துக்கொள்வார். வேறு இடங்களில் சாப்பிடமாட்டார். சுவாமியுடன் ஒரு பக்தனின் வீட்டிற்கு அழைத்துச் செல்லப்பட்டார். அங்கே மதிய உணவிற்கு சுவாமிக்கு எல்லாம் பரிமாறப்பட்டது. இவருக்கு சில பழங்கள் வைக்கப்பட்டன. சுவாமி அதிசயத்துடன், ஏன் பழம்? உணவு சாப்பிடமாட்டாயா? எனக் கேட்டார். பூசகர் தான் சாப்பாட்டு விதிகளை இறுக்கமாகப் பின்பற்றுகிறேன் என்றார். சுவாமி, "எனக்கு நன்றாயுள்ளது. உனக்கு நன்றாயிராதா?" என்று சொன்னார். அந்த பக்தரான பூசகர், தனது அனுஷ்டானங்களை மறந்து கோப்பையை எடுத்து உணவை உண்டார்.

கடவுளே முக்கியமானவர். ஒருபோதும் கைவிட மாட்டார். எப்போதும் வழிகாட்டுவார்.

**சந்நியாசம்** : முழுமையான துறவு. எல்லாப் பற்றுக்களையும் களைய வேண்டும். கடவுள்மீதே அன்பை வைத்திருக்க வேண்டும். ஆறு இப்பொழுது சமுத்திரத்துடன் கலக்கின்றது. ஆனால் சமுத்திரமோ கலக்கவிடாது தள்ளிக் கொண்டேயிருக்கும். எனக்கு சிரஞ்சீவி வரம் வேண்டாம். எனக்கு இரண்டறக் கலந்தநிலையே வேண்டும். இதைத்தான் அன்னமயா மகான் திருப்பதி வெங்கடேசரிடம் கேட்டார். நான் என்ற கடைசி நிலையை அழிப்பது மிகவும் கஷ்டம்.

**ஷேசகிரிராவோ (1950) சுவாமியின் முதற் பூசகர். 14 வருடங்கள் சேவை புரிந்தார். நோய்வாய்ப்பட்டு நடமாடக் கஷ்டப்பட்டார். சுவாமி, பேராசிரியர் கஸ்தூரியுடன் அவரது அறையில் போய், "நான் உன்னைக் கூட்டிக்கொண்டு போகத் தீர்மானிக்கவில்லை. இன்றைக்கு வந்து ஆரார்த்தி காட்டவும்" என்று பணித்தார். நடந்து வந்து ஆரார்த்தி காட்டினார். ஆறு மாதங்கள் சேவை செய்தார். பின்னரும் நோய்வாய்ப்பட்டார். இச் சந்தர்ப்பத்தில் பேராசிரியர் நஞ்சுண்டையா சொன்னது எனக்கு ஞாபகம் வருகிறது.**

"சுவாமி மென்மையாகச் சொன்னாலும் அதைக் கவனத்தில் எடுக்கவேண்டும். தற்செயலாகச் சொல்வதை அதிதீவிர கவனத்தில் எடுக்கவேண்டும்" என்று சொன்னார். அவரின் உறவினர் பூசகரை பெங்களூர் கொண்டுபோக உத்தரவு கேட்டார்கள். சுவாமி ஒரு இடமும் போகத் தேவையில்லை. இங்கேயே இருக்கவிடுங்கள் என்று சொன்னார். ஆறு கிழமைகளுக்கு பின்பு அவர் நடமாடினார். ஒருநாள் சுவாமி திடீரென அறைக்குப் போய் பால் கொண்டுவரச் சொல்லி கரண்டியால் பூசகருக்கு பருக்கினார். "இப்போது நீ போகலாம்" என்று சொல்ல அவரும் உடலை நீத்தார்.

நான் பரந்த நிலையில் சொல்லியுள்ளேன். **எல்லாச் செயல்களும் சுவாமியைச் சென்றடைய வேண்டுமென்று செய்தால் அவையெல்லாம் தர்மமாகும்.**

ஆறுகளில் இருவகையுண்டு. மலைஉச்சியிலிருந்து எப்போதும் ஓடிக்கொண்டிருப்பது. அடுத்தது மழையின் காரணமாக ஓடிக்கொண்டிருப்பது.

நாம் எப்போதும் மலை உச்சியிலிருந்து ஓடும் நதியைப் போல சுவாமிமீது பக்தி கொள்ள வேண்டும். உதாரணமாக மீராபாய். "எனது முழுமையான இதய பூர்வமான அன்பைச் செலுத்த வரம் தரவேண்டும்" நான் இதையே பிரார்த்தித்து முடிக்கிறேன்.

ஜெய் சாயிராம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "செய்யும் செயலே பிரார்த்தனை"

அன்பன் கிருஷ்ணமூர்த்தி வெங்கட்ராமன்

கிருஷ்ணமூர்த்தி வெங்கட்ராமன் அவர்கள் அவர்களுடைய உரையினை ஆற்றுவதற்கு சுவாமியிடம் பாதநமஸ்காரம் எடுக்கும்போது சுவாமி அவருடைய தோளில் தட்டி மிகவும் மகிழ்ச்சி. நன்றாக இருக்கின்றது என்று சுவாமி கூறுவதை உணர்ந்தேன் என்று கூறினார். அவருடைய கண்ணில் இருந்து கண்ணீர் வந்துவிட்டது. ஏனெனில் இது அப்படியே 2005ஆம் ஆண்டு புட்டபர்த்தியில் "Reconnect" எனும் நிகழ்வு ஆரம்பிக்கும்முன்பு சுவாமியிடம் பாதநமஸ்காரம் எடுக்கும்போது சுவாமி "ரொம்ப சந்தோசம். நிகழ்வு நன்றாக இருக்கின்றது" என நிகழ்வு ஆரம்பமாக முன்பே கூறிய விடயம் ஞாபகம் வந்தது என்று கூறினார்.

கடமை செய்வது வழிபாடு ஆகும். (Work is worship) என்ற தலைப்பில் சுவாமி என்ன கூறியிருக்கின்றார் என்று தேடும்போது நிறைய விடயங்கள் முடிவில்லாமல் வந்துகொண்டு இருந்தன. அதில் பிடித்த விடயத்தை பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன் என்றார். அதாவது

Work = Duty

Swami : Duty is God. Work is Worship. Even the tiniest work is a flower placed at the feet of God with genuine love and humble devotion. It is worship.

அதாவது சுவாமி கூறுகின்றார், வேலை என்பது எங்களுடைய கடமை. கடமை என்பது கடவுள். ஆகவே கடமை செய்வது என்பது வழிபாடு ஆகும். ஒரு மிகச் சிறிய வேலைகூட உண்மையான அன்புடனும் பணிவான பக்தியுடனும் கடவுளின் காலடியில் வைக்கப்படும் மலர் ஆகும். இதுவே வழிபாடு ஆகின்றது.

1987ஆம் ஆண்டு நவம்பர் 21ஆம் திகதி சுவாமி தெய்வீக அருளுரையில் "Swami loves devotees, who are workers and who work sincerely (Sevadals)

"Dasaanu daasudanu kavalenu ra
nee dasulaku sevane chayavalera"

Become the servant of His servants and serve them seva to Swami's sevadal. This work is the best form of worship.

அதாவது சுவாமி கூறுகின்றார், உண்மையான சேவாதளாக இருக்கின்ற பக்தர்களை நான் நேசிக்கின்றேன். அதிலும் நாங்கள் சுவாமியின் சேவாதளுக்கு சேவாதளாக வரவேண்டும். இந்த



கடமை செய்வது வழிபாட்டின் சிறந்த வடிவமாகின்றது. இலங்கையில் பல சேவாதள்கள் சுவாமியின் சேவாதளுக்கு சேவை செய்வதை நான் பார்த்துக்கொண்டு இருக்கின்றேன் என்றார். ஏன் சுவாமி சர்வதேச மகாநாட்டிற்கு இலங்கையை தெரிவு செய்திருக்கின்றார் என்பதற்கு ஒரு சிறிய ரசிக்கக்கூடிய கருத்துரை ஒன்றைக் கூறினார். அதாவது இலங்கையில் உள்ளவர்கள் ஏதாவது ஒரு விடயத்தில் எங்களுடன் ஒத்திசைந்து செல்லவேண்டும் எனில் "ஆம்" என்று கூறமாட்டார்கள். அவர்கள் "ஓம்" என்று கூறுவார்கள். ஆகவே பல வகையான ஓம்கார சாதனை இலங்கையில் நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றது. இது மிகவும் இரசிக்கக்கூடியது.

2005ஆம் ஆண்டு ஒகஸ்ட் 20ஆம் திகதி புட்டபர்த்தியில் "Reconnect" என்ற தலைப்பில் ஒரு நிகழ்வு நடைபெற்றது. இந் நிகழ்வின் ஆரம்பம் சுவாமியின் ஒலிப்பதிவு ஒன்றுடன் ஆரம்பமாக இருந்தது. அந்த ஒலிப்பதிவு என்னவெனில் சுவாமியின் ஒரு அருளுரை ஆகும். ஆனால் அந்த நிகழ்வின் ஆரம்பத்தில் அந்த ஒலிப்பதிவு வேலை செய்யாமல் போனது. ஆனால் சுவாமி எல்லாவற்றையும் பார்த்து இரசித்துக் கொண்டு இருந்தார். நிகழ்வின் ஆரம்பத்தில் கிருஷ்ணமூர்த்தி அவர்களின் உரை சுவாமி சொன்னபடி என்று ஆரம்பிக்க வேண்டும். ஆனால் சுவாமியின் அருளுரையின் ஒலிப்பதிவு இயங்கவில்லை. ஆகவே எவ்வாறு உரையைத் தொடங்குவது என்று யோசித்துக் கொண்டு இருக்கும்போது எல்லோரும் கிருஷ்ணா உரையை தொடங்கு என்று கூறினார்கள். ஆகவே கிருஷ்ணமூர்த்தி அவர்களும் நிகழ்வின் ஆரம்பத்தில் சுவாமியிடம் பாதநமஸ்காரம் எடுக்கும்போது, "நிகழ்வு நன்றாக இருக்கின்றது. மிகவும் மகிழ்ச்சி" என்று நிகழ்வு ஆரம்பிக்க முன்னரேயே சுவாமி கூறினார். ஆகவே கிருஷ்ணமூர்த்தி அவர்கள் அதனை கூறி சுவாமி இவ்வாறு சொன்னபடி என்று கூறி நிகழ்வினை ஆரம்பித்தார். எல்லோரும் சிரித்தபடி கைதட்டினார்கள். சுவாமியும் மிகவும் அதனை இரசித்து மகிழ்ந்தார். அந்த நிகழ்வும் வெற்றிகரமாக நடந்தது. சுவாமியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்வு மிகவும் நன்றாக இருந்தது. உங்கள் அனைவருக்கும் நேர்காணல் தருகின்றேன் என்று கூறினார்.

கடமை செய்வது வழிபாடு ஆகும். (Work is worship) என்ற தலைப்பின் முக்கியமான பகுதியில் சுவாமி அவருக்கு தந்த செய்தி இது என அவருடைய அனுபவத்தை கூற ஆரம்பித்தார். அதாவது interview room இல் எல்லோரும் சுவாமியுடன் இருந்தபோது கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சுவாமியின் வலது பாதத்திற்கு பக்கத்தில் இருந்தார். அனைவருமே தங்களுடைய பிரார்த்தனையையும் கோரிக்கையையும் கேட்டுக்கொண்டு இருந்தபோது கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சுவாமியின் பாதத்தை பார்த்தபடி பிடித்தபடி 20 நிமிடங்கள் மெய்மறந்து இருந்தார். சுவாமி அவரிடம் கிருஷ்ணமூர்த்தி நீ எதுவும் கேட்கவில்லையா? என்று கேட்டார். அதற்கு கிருஷ்ணமூர்த்தி அவர்கள் கூறினார் உங்களுடைய அறைக்கு வரமுன்பு என்னிடம் கேட்பதற்கு பல விடயங்கள் இருந்தன. இப்போது எனக்கு எதை முதலில் கேட்பது என்று யோசனையாக இருக்கின்றது. ஆகவே சுவாமி நான் எந்த விடயத்தை உங்களிடம் கேட்பது என்று நீங்கள் கூறுங்கள் என்றார். சுவாமியும் அதற்கு உனக்கு பாரிசவாதம் வந்த விடயத்தைப் பற்றிக் கூறு. நான் அதில் இருந்து ஒரு செய்தியை எல்லோருக்கும் கூறவேண்டும் என்றார்.

கிருஷ்ணமூர்த்தி அவர்களும் அவ் விடயத்தை கூற ஆரம்பித்தார். அதாவது 2002ஆம் ஆண்டு மே மாதம் 22ஆம் திகதி என்னுடைய வலது கால், கை எல்லாம் செயலிழந்துவிட்டது. நான் அடையார் மலர் வைத்தியசாலையில் இருந்தேன். 3 மாதமாக என்னால் என்னுடைய விரல்களைக்கூட அசைக்கமுடியவில்லை என்று கூறினார். அதற்கு சுவாமி, "அதாவது **நீ இந்த பிறவியில் சத்திய சாயி நிறுவனத்தில் இணைந்துகொண்டதன் விளைவாகவும் பாலவிகாஷ் கற்றுக்கொண்டதாலும் உன்னுடைய வாழ்நாளில் என்னுடைய சேவாதள்களுக்கு சேவாதளாக இருந்து சேவைகளை அர்ப்பணித்ததன் விளைவாகவும் உன்னுடைய சஞ்சித கர்மாவின் விளைவாக வந்த பாரிசவாதம் உன்னைவிட்டு போய்விட்டது"** என்று கூறினார். அத்துடன் சுவாமி "நீ பறப்பாய், நீ ஓட்டுவாய், நீ நீந்துவாய் (you will fly, you will drive, you will swim) என்று கூறினார். அவர் கூறியபடி அதன்பிறகு கார் வாங்கினேன். 11 நாடுகளுக்கு மேல் சுவாமியின் ஆசீர்வாதத்தால் பயணம் செய்தேன். அத்துடன் இந்த சம்சார சாகரத்தில் சுவாமியின் ஆசீர்வாதத்துடன் சுவாமியை நோக்கி நீந்திக்கொண்டு இருக்கின்றேன் எனக் கூறினார்.

நேற்று உரையாடும்போது ஒரு சகோதரர் சுவாமி ஒரு கற்பகவிருட்சம். முட்டாள்தனமாக நாங்கள் அந்த கற்பகவிருட்சத்திற்கு முன்னால் சென்று கோப்பி வேண்டும் என்று கேட்கின்றோம் என்றார். இவ்விடயத்தை கூறும்போது கிருஷ்ணமூர்த்தி அவர்களும் அவ்வாறான செயலை தானும் ஒருமுறை செய்ததாக கூறினார். அதாவது ஒருமுறை புட்டபர்த்தியில் சுவாமியுடன் இருக்கும்போது சுவாமியின் கதிரையை (Wheel chair) தள்ளிக்கொண்டு வரும் சகோதரர் எவ்வளவு புண்ணியம் செய்தவர் என்று யோசித்தபோது சுவாமி வா வந்து என்னுடைய கதிரையை (Wheel chair) தள்ளு என்று கூறினார். அப்போதுதான் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் யோசித்தாராம் எவ்வாறு எனில் சுவாமி இந்த கதிரையில் இருந்து எழுந்து மீண்டும் எழுந்து வெளியில் எங்களுடனேயே முதல் இருந்தமாதிரி இருக்கலாமே என்று பிரார்த்தனை செய்திருக்கலாமே என்று கூறினார். இந்த மகாநாட்டிற்கு வந்ததன் விளைவாக சுவாமியின் முன்னால் கொடி (flag) கொண்டு செல்லவேண்டும் என்ற என்னுடைய ஆசையையும் சுவாமி நிறைவேற்றிவிட்டார் எனக் கூறினார். அத்துடன் இன்னுமொரு முக்கியமான அனுபவத்தையும் பகிர்ந்துகொண்டார். அதாவது சுந்தரம் சாயி நிலையத்தில் "எது மிகவும் முக்கியமானது? சுவாமியின் நிறுவன வேலையா? இல்லை குடும்ப வேலையா? என்ற தலைப்பில் ஒரு பட்டிமன்றம் ஏற்பாடு செய்யப்பட இருந்தது. அவ்வேளையில் சாயி நிறுவன வேலையே முக்கியமானது எனும் தலைப்பில் கதைப்பதற்கு மூன்று பேர் தெரிவு செய்யப்பட்டுவிட்டனர். ஆனால் நிறுவன வேலையை விட குடும்ப வேலைதான் முக்கியம் என்ற தலைப்பில் வாதம் செய்வதற்கு யாருமே இல்லை. ஆகவே என்னை அதற்கு பொறுப்பாக விட்டார்கள். எனக்கு எந்தவித திட்டங்களும் அந்த தலைப்பின்கீழ் கிடைக்கவில்லை. ஆகவே சுவாமியை பிரார்த்தித்தேன். சுவாமி கனவில் வந்து,"என்ன கிருஷ்ணமூர்த்தி? என்ன விஷேசம்?) என்று கேட்டார். அதற்கு சுவாமி குடும்ப வேலையே சுவாமியின் நிறுவன வேலையை விட முக்கியம் என்ற தலைப்பில் விவாதம் செய்ய வேண்டும். ஆனால் எனக்கு எதுவுமே அதனைப்பற்றிக் கிடைக்கவில்லை என்று சொல்ல சுவாமி, "இது மிகவும் நல்ல தலைப்பு கிருஷ்ணமூர்த்தி. உன்னுடைய குடும்பம் யார்? என்று சுவாமி கேட்டார். அதற்கு என்னுடைய மனைவி, மகள் என்று கூறவே சுவாமி சொன்னார், **"சாயி குடும்பம் என்பது இந்த உலகில் உள்ள எல்லா ஜீவராசிகளும், எல்லா மிருகங்களும், பறவைகளும் எல்லாமே சாயி குடும்பம்"** என்று கூறினார். அதற்கு உன்னுடைய அணியில் ஒரு பாலவிகாஷ் மாணவனையும் ஒரு இளைஞனையும் வைத்துக் கொள். எங்கு ஒரு நிகழ்வு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பெரியவர், இளைஞர், பாலவிகாஷ் என மூன்று அணியும் சேர்ந்து நடக்கின்றதோ நான்காவதாக நான் அங்கு இருப்பேன் என சுவாமி கனவில் கூறி ஆசீர்வாதம் செய்தார் என்று இந்த அனுபவத்தை கிருஷ்ணமூர்த்தி அவர்கள் கூறி மகிழ்ந்தார். இதன்மூலம் சாயி குடும்பம் என்ன என்பதுபற்றி சுவாமி அவருக்கு நன்றாக புரியவைத்துவிட்டார் என்று கூறினார்.

அதோடு அவருடைய தந்தை இறந்தபின் தன்னை நல்வழிப்படுத்திய பாலவிகாஷ் குரு மற்றும் சுவாமியின் அனுக்கிரகம்தான் இந்த நிலையில் தன்னை வைத்திருக்கின்றது என கூறியதுடன் தனது இறுதி மூச்சு உள்ளவரை சுவாமியின் சேவாதளுக்கு சேவாதளாக சேவை செய்யவேண்டும் என பிரார்த்தனை செய்கிறேன் என கூறி தனது உரையை நிறைவுசெய்தார்.

ஜெய் சாயிராம்

தொகுப்பு :
செல்வி ரா. பவதாரணி,
மந்திகை சாயி நிலையம்



சத்திய சாயி பாடசாலை -மானிப்பாய் - யாழ்ப்பாணம்

**கல்வி சேவைத்திட்டத்தை நோக்காக கொண்டு இலங்கையின் முதலாவது சத்திய சாயி பாடசாலை யாழ்ப்பாணத்தில் மானிப்பாயில் சுவாமியின் ஆசியுடன் 2002 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. ஆண்டு 1 தொடக்கம் 11 வரை வகுப்புக்கள் உள்ளடக்கப் பட்டுள்ளது. 200 பிள்ளைகள் கல்வி பயில்கின்றார்கள்.**

**இச் சேவைத்திட்டத்தில் நீங்களும் பங்கு கொள்வதுடன் சாயி சேவையில் உங்களையும் கருவியாக்கிக் கொள்ளலாம்.**

தொடர்புகளுக்கு:
தொலைபேசி: +94 21 225 5417
E mail - info@ssiosrilanka.org
saischool@ssiosrilanka.org
Web: www.ssiosrilanka.org

## அளப்பரிய பொறுமை

திரௌபதியின் 5 புதல்வர்களையும் இரவில் அவர்கள் தூங்கிக் கொண்டிருந்தபோது அஸ்வத்தாமன் கொன்றான். அவனைப் பிடித்த பாண்டவர்கள் அவனது தலையைத் துண்டிக்க விரும்பினர். ஆனால் திரௌபதி அவர்களைத் தடுத்து “அவனைக் கொல்வதால் இழந்த என் பிள்ளைகளை நான் பெறுவேனா? அவனைக் கொல்லாதீர்கள்” என்றாள்.



சோக்ரட்டீஸ் உம் அளவற்ற பொறுமையுடையவர். முன்கோபியான அவரது மனைவி பலமுறை அவருடைய பொறுமையைச் சோதித்ததுண்டு. ஒருமுறை அவருடைய மனைவி அவரை உணவு உண்ண அழைத்தாள். அவர் தன் மாணவர்களுடன் உரையாடலில் ஆழ்ந்திருந்ததால் அவர் பதிலளிக்கவில்லை. ஆத்திரமடைநத அவரது மனைவி நீரைக் கொண்டு வந்து தலையில் ஊற்றினாள். “இத்தனை நாளும் வெறும் இடிமுழக்கமே இருந்தது. இன்றுதான் மழை பெய்தது” என்று பொறுமையுடன் ஹாஷ்யமாகச் சொன்னார்.

(பகவானின் அருளுரை 02.05.1988 கொடைக்கானல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமநிலையான வாழ்வு வாழ்தல்

(சாயி பணி மற்றும் உலகியல் பணி)

சகோதரி அனுராதா வெங்கடேஸ்வரன்
(சுவாமியின் கல்வி நிறுனத்தின் முன்னாள் மாணவி)

எங்களுக்கு மிகவும் பிரியமான பகவானின் தெய்வீகத் தாமரைப் பாதங்களில் எனது பிரார்த்தனையுடன் கூடிய வணக்கங்களை சமர்ப்பிக்கின்றேன். மரியாதைக்குரிய பெரியோர்கள், சகோதரர்கள், சகோதரிகள் மற்றும் அன்பான இளைஞர்கள் அனைவருக்கும் அன்பான சாயிராம்.

நேற்றைய தினத்திலிருந்து இந்த ஒன்றரை நாளும் என்ன ஒரு மகிமையானதாக இருக்கின்றது!. இங்குள்ள அனைத்து பக்தர்களின் அன்பினாலும் பக்தியினாலும் இது மகிமையாயிருக்கின்றது. நாங்கள் பார்த்த அனைத்து வெவ்வேறு நிகழ்ச்சிகளையும் ஒழுங்கமைத்த அமைப்பாளர்களுக்கும் ஒவ்வொரு தனிப்பட்ட அன்பர்களுக்கும் நன்றியைத் தெரிவிக்க சிறிது நேரம் ஒதுக்க விரும்புகிறேன்.

பகவான் ஸ்ரீராமரும் அவருடைய மிகப் பெரும் பக்தருமான அனுமானும் காலடி எடுத்து வைத்த இந்த மண்ணில் நானும் காலடி வைக்க வாய்ப்புக் கிடைத்ததை எண்ணி மிகவும் நெகிழ்ச்சி யடைகின்றேன். சுவாமியின் அன்பு இங்கு மிகவும் நிறைந்திருக்கின்றது. நானும் என்னைப் போன்று வெளிநாட்டிலிருந்து வருகை தந்திருக்கும் ஒவ்வொருவரும் இங்குள்ள அனைவரினதும் அன்பிலும் விருந்தோம்பலிலும் மகிழ்ச்சியடைகின்றோம்.

எங்களுடைய கார் உள்ளே வந்தபோது வெள்ளை நிற கடல் போன்று சகோதரர்கள் வெள்ளை நிற ஆடையுடன் நின்றிருந்தனர். மற்றும் பெண்கள் மஞ்சள் நிற புடவையுடனும் நின்றிருந்தார்கள். இது எனக்கு பர்த்தியில் நிற்கும் உணர்வைத் தந்திருந்தது. மீண்டும் ஒருமுறை இவ் ஒழுங்கமைப்பாளர்களுக்கு வாழ்த்துக்களை தெரவிக்கின்றேன். உங்களின் முயற்சி அளப்பரியது. தெலுங்குவில் முயற்சியை ஷாமா (Kshama) என்று கூறுவார்கள். ஒருமுறை பக்தர் ஒருவர் நிவாரணப் பொருட்கள் தேவைப்படும் மக்களுக்கு பொருட்களை வழங்கியதற்காக நன்றி கூறினார். சுவாமி கூறினார் இது எனது முயற்சியல்ல இது எனது அன்பாகும். அப்படித்தான் சுவாமியும் நாம் சேவை செய்யவேண்டும் என்பதை விரும்புகிறார். இளைஞர்கள் நிகழ்த்தியிருந்த நாடகங்களை பார்க்கும்போது அதில் மிகவும் ஆழமான செய்திகளை சிந்தனையை தூண்டும் வகையில் வெளிப்படுத்தியிருந்தார்கள். சுவாமி கூறுகிறார், பகவத் கீதையில் கூறிய "மம,தர்மா" இதிலிருந்து முதல் வார்த்தையையும் இறுதி வார்த்தையையும் எடுத்தால் "எனது கடமை" என்னும் அர்த்தம் வெளிப்படுகிறது.



இன்று காலை சகோதரர் கிருஷ்ணமூர்த்தி மிகவும் அன்புடனும் தூய்மையுடனும் "எங்களுடைய பணி வணங்குவதற்குரியது" என்னும் கருப்பொருளில் கடமை பற்றி தெளிவாக கூறியிருந்தார். எங்கள் அனைவருக்கும் கடமை உண்டு என்பது உங்கள் அனைவருக்கும் தெரிந்திருக்கும். மாணவர்களின் கடமை நன்றாக கல்வி கற்பது. பெற்றோர்களின் கடமை தங்கள் பிள்ளைகளை உயர்நிலைக்கு தர்ம வழியில் உயர்த்துவது. அதேபோல் சாயி ஆன்மீகக் கல்வி குருமார்களின் கடமை இவ் உலகின் எதிர்கால பிரஜைகளை தர்ம வழியில் வளர்த்து தர்மசீலர்களாக உலகிற்கு வழங்குவதாகும்.

தர்மத்தின் ஒருபகுதி ஆன்மீகமான வாழ்க்கையை நமது கடமையாக ஏற்று வாழ்தல். இது தொடர்பாக சகோதரர் அரவிந் குறிப்பிட்டிருந்தார். நாம் அனைவரும் இம் மாநாட்டில் ஆன்மீக சாதகர்களாக இணைந்திருக்கின்றோம். ஆனால் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் ஆன்மீக வாழ்க்கையையும் ஆன்மீகமற்ற வாழ்க்கையையும் சமநிலையில் பேணுவதில் இடர்பாடுகளை சந்திக்கின்றோம்.

அமெரிக்காவிலும் எவ்வாறு வேலையுடன்கூடிய வாழ்க்கையை சமநிலையுடன் வாழ்வது?, பாடசாலை வாழ்க்கையை சமநிலையுடன் கொண்டு செல்வது மற்றும் சாயி நிறுவனத்தில் சாயி வேலையையும் சாயி வேலை இல்லாததையும் சமநிலையில் பேணுவது தொடர்பான உரைகளை கேட்டிருக்கின்றேன். நீங்களும் இது தொடர்பாக பல்வேறுபட்ட உரைகள், செயற்பாட்டுப் பட்டறைகளில் இணைந்திருப்பீர்கள். நான் நினைக்கிறேன் இங்கு எனக்கு தரப்பட்ட தலைப்பு, பணியுடன்கூடிய வாழ்க்கையை சமாளிப்பது எப்படி? என்பது அல்ல, "சாயி பணியையும் எங்களது அன்றாட வாழ்க்கையையும் எவ்வாறு சமத்துவமாக பேணுவது?" என்பதாகும்.

மனோஜ் ஐயா அவர்கள் நேற்று தனது வரவேற்புரையில் குறிப்பிட்டது போன்று எதுவானாலும் அது உங்களில் மனமாற்றத்தைக் கொண்டுவரும். "ஏதுவும்" என்று குறிப்பிடப்பட்டது ஒரு வார்த்தையாக இருக்கலாம், ஒரு பாடலாக இருக்கலாம் அல்லது அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு செயற்பாட்டுப் பட்டறையாகவும் இருக்கலாம். உங்கள் வாழ்வில் நீங்கள் சந்திக்கும் ஒவ்வொன்றும் ஒரு ஊக்கியாக தொழிற்பட்டு உங்களில் மாற்றத்தைக் கொண்டுவரலாம். இப்போதெல்லாம் உணவு பயிற்சி முகாம்கள், உணவு உண்ணாமல் இருத்தல் தொடர்பான விழிப்புணர்வுகள், நல்ல தூக்கத்திற்கான மருந்துகள் என அறிமுகம் செய்யப்பட்டு எத்தனையோ கோடிக்கணக்கான தொழிற்சாலைகள் இவை சார்ந்து இயங்குகின்றன. இதில் நீங்களும்கூட பணிபுரிபவர்களாக இருக்கலாம். ஆனால் என்னுடைய கேள்வி இவை எல்லாம் எமது வாழ்வாதாரத்தை உயர்த்துமா?, வாழ்க்கையின் அடிப்படைத் தத்துவத்தை உணரவைக்குமா? என்பதுதான்.

நேற்று நாங்கள் சுவாமியின் போதனைகள் செயற்பாட்டுப் பட்டறையில் ஈடுபட்டிருந்தோம். அதில் எமது உள்ளார்ந்த தெய்வீகத்தன்மை தொடர்பாக கூறியிருந்தார்கள். "நான் சாயி", "நான் கடவுள்", "சுவாமி என்னுள் இருக்கிறார்", "நான் சுவாமி". "நான் சுவாமி" என்பதை நாங்கள் நம்பினோம் எனில் இரண்டாவது பர்கர் (Burger) சாப்பிடுவோமா? இல்லையென்றால் பீட்சாவில் 4ஆவது துண்டும் எடுத்து சாப்பிடுவோமா? இல்லை நாங்கள் இது தொடர்பாக எங்களுக்குள்ளே ஆழமாக பல கேள்விகளை கேட்கவேண்டும். ஐயா நீங்கள் துளசிதாஸரைப் பற்றி குறிப்பிட்டிருந்தீர்கள். எவ்வாறு அவர் மனைவி சரஸ்திபாயிடம் இருந்து மனமாற்றத்தை அடைந்தார் என்பது பற்றியும் குறிப்பிட்டிருந்தீர்கள்.

ஷ்ரஸ் அனயாவின் கதையை பகிர்ந்துகொள்ளலாம் என்று நினைக்கின்றேன். அவர் ஒரு பணக்கார வியாபாரி என்பது உங்களுக்கு தெரிந்திருக்கலாம் அல்லது தெரியாமல் இருக்கலாம். அந்தக் காலத்தில் அவர் நமகோ நாயக்கர் என அழைக்கப்பட்டார். அவரிடம் கோடிக்கணக்கான பணமும் இருந்தது. சகோதரர் அரவிந்தும் நேற்று தரக்மோக பற்றிக் குறிப்பிட்டிருந்தார். அதே செல்வம்தான் அவரை சுவாமியிடம் அழைத்துச் சென்றது. பின்னர் அவர்தான் புரந்தரதாச துறவியாகவும் மாற்றமடைந்தார். சுவாமி பல சந்தர்ப்பங்களில் குறிப்பிட்டிருக்கின்றார். மனிதப்பிறவி மிகவும் அரியதொரு பிறவியாகும். அதிலும் பெண்ணாகப் பிறப்பது மிகவும் விசேடம் என்று குறிப்பிட்டிருக்கின்றார்.

ஆதிசங்கரர் கூறியிருக்கின்றார் 3 ஆசீர்வாதங்கள் மிகவும் கிடைத்தற்கரியவை. அவை மனுஷத்வம், முமுக்ஷத்வம், மகாபுருஷஸ்ய சம்ஸ்ரயம். மனுஷத்வம் என்பது நாம் அனைவரும் பெற்றிருக்கும் மனிதப் பிறவி. முமுக்ஷத்வம் என்பது விடுதலைக்கான ஆசை. அதாவது நான் சுவாமியை பெறவேண்டும். நான் சுவாமியை அடையவேண்டும் என்கின்ற உள்ளார்ந்த ஆர்வம். மகாபுருஷஸ்ய சம்ஸ்ரயம் என்பது மகாபுருஷரை அடைதல். சுவாமி ஒரு கடவுள். அவர் ஒரு மகாபுருஷர். எனவே எங்களை நாங்களே தட்டிக்கொள்வோம். ஏனென்றால் ஆதிசங்கரர் கூறிய இந்த 3 ஆசீர்வாதங்களை நாம் பெற்றிருக்கின்றோம். இப்போது எங்களுக்குள் எழும்பும் கேள்வி, "இந்த மூன்றினையும் வைத்து என்ன செய்வது?". அதாவது சுவாமி அழகாக கூறியிருக்கின்றார், சாப்பிடுவது, குடிப்பது மற்றும் இறப்பதற்காக இந்தப் பிறவி இல்லை. ஏனென்றால் மனிதப்பிறவி மிகவும் அரியதொரு பிறவி. இத்தனை சலுகைகளையும் எமக்குத் தந்தது அதியுயர்ந்த இலட்சியமாகிய தெய்வீகத்தை நாம் அடையவேண்டும். விலங்குநிலையிலிருந்து மனிதநிலைக்கு வந்து பின்னர் மனிதனிலிருந்து தெய்வீக நிலைக்கு வரவேண்டும் என்பதற்கேயாகும்.

சகோதரர் அரவிந் மற்றும் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் நான் கூறவந்த பல விடயங்களை கூறிவிட்டார்கள். சகோதரர் நீங்கள் 4 புருஷார்த்தங்களைப் பற்றிக் கூறியிருந்தீர்கள். பொதுவாக இதனை வாழ்க்கையின் இலக்கு என குறிப்பிடலாம். இது தர்மா, அர்த்த, காம, மோக்ஷம் எனப்படும். அதாவது நன்னடத்தை (தர்மம்), செல்வம், ஆசை, விடுதலை என்று பொதுவாக கூறப்படும். ஆனால் சுவாமி எமக்கு நினைவுபடுத்துகின்றார். இவை ஆன்மிகம், தர்மம் எனப்படுவது உடலுக்கு உரித்தானதல்ல. தர்மம் எனப்படுவது ஒவ்வொரு மனிதனும் எது நிரந்தரமானது? எது நிரந்தரமற்றது? என்று தேடி உணர்வதாகும்.

அர்த்த என்பது செல்வம், சொத்துக்கள் சேர்ப்பதென்பதாகும். ஆனால் சுவாமி கூறுகின்ற உண்மையான செல்வம் என்பது தெய்வீக ஞானமாகும். அச் செல்வத்தையே நாம் அடையவேண்டும். காம என்று நாங்கள் கூறுவது அனைத்திலும் ஆசை கொள்வது, பொருட்களில் பற்றுவைப்பது. ஆனால் சுவாமி கூறுகின்றார், "கடவுளுக்காக ஏங்கி அவர்மீது பைத்தியமாகுதல் "காம" எனப்படும். கடவுள்மீது பைத்தியமாயிருத்தல் அதிகூடிய நன்மையான விடயம்" என்று. நீங்கள் சுவாமிக்காக ஏங்குகிறீர்கள் என்றால் அதையே தொடர்ச்சியாக கடைப்பிடியுங்கள். விடுதலை என்பது உடலுடன் தொடர்புபட்ட பற்றுக்கள், பிணைப்புக்களை விட்டுவிலகுதலாகும். இந்த 4 புருஷார்த்தங்கள் என்பது தர்மத்தை சம்பாதித்தல் மற்றும் விடுதலைக்கான விருப்பம்.

சுவாமி மேலும் இதனை சுருக்கி 4F மூலம் விளக்கியுள்ளார். "இறைவனை பின்பற்றுங்கள், சவால்களை எதிர்கொள்ளுங்கள், இறுதிவரை போராடுங்கள், விளையாட்டை முடியுங்கள் "Follow the Master" எனப்படுவது சுவாமியின் நன்னடத்தையை அவதானித்து அவரைப் பின்பற்றுதல், "Face the devil" எனப்படுவது தடைகளை தாண்டுதல். அதாவது பணம் சம்பாதிக்கவேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்படும்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எது இலகுவான வழி? யாரையும் ஏமாற்ற சந்தர்ப்பம் கிடைக்குமா? வரிகளை கட்டாமல் எவ்வாறு தப்பிப்பது? என்று தோன்றுகின்ற தீய எண்ணங்களை தாண்டி சரியான பாதையை தெரிவுசெய்வது. "Fight till the end" எனப்படுவது 6 பகைவர்களான காம, குரோத, லோப, மத, மாச்சர்யம் என்பவற்றை வெல்லுதல். "Finish the game" என்பது எமது இறுதி நோக்கத்தை வெற்றிகரமாக அடைவது.

என்னுடைய பணிவான வேண்டுகோள் என்னவென்றால் **அனைத்து வேலைகளுமே கடவுளது வேலை என்று நினைத்து செய்யுங்கள்.** இது சொந்த வேலை, இது அலுவலக வேலை, இது சாயி நிறுவன வேலை என்று பிரித்துப் பார்க்கவேண்டாம். இது மட்டுமே எங்களது வாழ்க்கையை எப்போதும் சமத்துவமாக சமநிலையில் பேணுவதற்கு உதவும் மிகப் பெரிய இரகசியமாகும். நான் பல விடயங்களை கதைகள் மற்றும் அனுபவங்கள்மூலம் ஞாபகம் வைத்திருப்பேன். சுவாமியின் அருளுரை ஒன்றில் கூறப்பட்டுள்ளது, கிழக்கு கோதாவரியிலுள்ள சில அன்பர்களுக்கு பிரதானமாக பெரும்பாலானோர் விவசாயிகளாக இருந்தார்கள். சுவாமி அனைத்தும் அறிந்தவர். எனவே அவர்கள் இலகுவாக விளங்கக்கூடிய மொழியில் அவர்களுக்கு தேவையானதை கூறினார். சுவாமி உடனேயே சின்னக்கதா கூறப்போகின்றேன் என்றார். அனைவரும் உடனே கண்களை விழித்து ஆர்வமாக சுவாமி கூறிய கதையைக் கேட்டார்கள். நாரத முனிவரின் கதையை சுவாமி கூற ஆரம்பித்தார். ஒருநாள் நாரதர் சிறிதளவு அகங்காரத்துடன் நாராயணனை சந்தித்து "பகவானே இந்த உலகத்திலேயே நீங்கள் எதிர்பார்க்கும் மிகப் பெரிய உங்களுடைய பக்தர் யார்? என்று கேட்டார். நாரதர் எதிர்பார்த்தார் நாராயணன், நாரதர் என்னும் பெயரையே கூறுவார் என்று. ஆனால் நாராயணர் கூறினார், "இந்தியாவிலேயே ஒரு கிராமத்தில் விவசாயி ஒருவர் இருக்கிறார். அவர்தான் மிகவும் சிறந்த பக்தர்" என்று. நேற்றும் ஒரு அன்பர் கூறியிருந்தார் சுவாமிக்கு எவ்வளவு அருகில் இருக்கின்றோம் என்பதைவிட அவரில் எவ்வளவு அன்பு வைத்திருக்கிறோம் என்பதே சிறந்தது. அதேபோல் நாரதருக்கும் ஒரே ஆவல். என்னைவிட நாராயணரில் மிகவும் அன்பான பக்தர் யார்? எவ்வாறு இவ்வளவு அன்பு கொண்டிருக்கிறார்? என்று யோசித்தார். அதனை அறிந்து கொள்வதற்காக நேரடியாகச் சென்று அந்த விவசாயியைப் பார்த்தார். அவ் விவசாயி காலையில் எழுந்தவுடன் மதிய உணவு எடுக்கும் வேளையில் மற்றும் நித்திரைக்குச் செல்லும் முன்னரும் மாத்திரம் இறைநாமத்தை உச்சரித்து பிரார்த்தனை செய்தார். நாரதர் உடனே நான் நாள்தோறும் பல தடவைகள் பகவானின் மந்திரத்தை உச்சரிக்கிறேன். பின்னர் எவ்வாறு என்னைவிட இந்த விவசாயி சிறந்த பக்தர் ஆவார்? என்னும் சந்தேகத்தை பகவானிடமே கேட்டார். இதற்கு நாராயணர் கூறினார், இவ் விவசாயி காலையில் இருந்து அவர் ஈடுபடும் அனைத்து கடமைகளின் முன்னரும் தன்னை நினைத்து அவற்றை அர்ப்பணமாக்கி என்னுடனேயே அவரது கடமைகளை புரிந்தார். இதுவே சுவாமிக்கும் எமது வாழ்க்கைக்கும் இடையேயான சமநிலையை பேணும் வழியாகும்.

இதேபோன்று 1993ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெற்ற சுவாமியின் அருளுரையிலும் இது தொடர்பாக கூறியிருக்கின்றார். ஒரு கப் நீரினுள் ஒரு தேக்கரண்டி சீனியை இட்டவுடன் மேலே உள்ள நீரினை எடுத்து சுவைத்துப் பார்த்தால் அது இனிக்காது. ஆனால் கரண்டியை நன்றாக ஆழமாக விட்டு சீனியை நன்கு கரைத்த பின்னர் நீரை எடுத்து சுவைத்துப் பார்த்தால் அது மிகவும் இனிப்பாக இருக்கும். இதேபோன்றுதான் எங்களுடைய இதயம் நீர் கொண்ட கப் போலவும், தெய்வீகம் என்பது சீனி, நீர் என்பது உலகியல் ஆசைகள். எனவே புத்தியை பயன்படுத்தி ஆன்மிக சாதனாவினால் தெய்வீகத்தை அனைத்திலும் பரவ செய்தால் எங்களுடைய வாழ்க்கையும் அந்த இனிப்பான நீர் போன்று மிகவும் இனிமையாக இருக்கும்.

சுவாமியின் அருளினால் அனந்தபூர் கல்லூரியில் கல்வி கற்கும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. அங்கு கற்கும் மாணவர்களுக்கு சில கடமைகள் வழங்கப்படும். மரக்கறி வெட்டுதல், சப்பாத்தி மாவினை உருட்டுதல் போன்ற சில கடமைகள். இவ்வாறான சந்தர்ப்பங்களில் சுவாமி கூறுவார், "மரக்கறிகளை வெட்டும்போது உங்களுடைய அகங்காரத்தை வெட்டுகிறீர்கள் என்று நினையுங்கள். உங்களுடைய அறைகளை மற்றும் மண்டபத்தை கூட்டும்போது, 6 பகைவர்களையும் வெளியே அகற்றுவதாக நினையுங்கள், மற்றும் சப்பாத்திக்கு மாவை அமத்தும் போது உங்களுடைய இதயம் நன்றாக விரிவடைகிறது என்று நினையுங்கள்".

ஒரு சாதாரண சமையல் ஒன்று செய்யும்போது கர்மமார்க்கம், பக்தி மார்க்கம், ஞானமார்க்கம் என்பதை எவ்வாறு பயிற்சி செய்யலாம் என்பதை எளிய செயற்பாடு மூலம் சுவாமி விளக்கியிருக்கின்றார். பெண் ஒருவர் புதிய புத்துணர்வான மரக்கறிகள் தூய்மையான பாத்திரங்கள் உள்ள அறையை தெரிவுசெய்து ஞானத்துடன் திறம்பட சமைத்தல் கர்மமார்க்கம் ஆகும். அதை மிகவும் அன்புடன் தனது கணவர் பிள்ளைகள் மற்றும் குடும்பத்தினருக்கு பரிமாறுவது இறைவனுக்கு செய்யும் மிகப் பெரும் சேவையாகும். அதாவது அனைவரிடத்திலும் இறைவனைக் காண்பதாகும்.

இதைப்போன்று இன்னொரு அருளுரையிலும் சுவாமி கூறியிருக்கிறார், அதாவது ஒரு விவசாயி மண்ணை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதப்படுத்தும்போது தனது இதயத்தையும் அதைப் போன்று பதப்படுத்தி அமைதியாக்கவேண்டும். விதைகளை விதைக்கும்போது தனது இதயத்தையும் நல்ல சிந்தனைகளால் நிரப்பவேண்டும். அதை வளர்ப்பதற்கு அன்பு எனும் நீர் ஊற்றி வளர்க்கவேண்டும். இதேபோன்று எமது வீட்டுத் தோட்டத்திலும் செய்தால் பூக்கள், மரங்கள் இன்னும் உயரமாக வளரும். நன்றாக காய்கறிகள் காய்க்கும்.

பர்த்தியில் ஆரம்பகாலத்தில் இருந்த அனைவருக்கும் தெரிந்திருக்கும் கமலா சாரதி பற்றி. அவர் மிகவும் சிறந்த வயலின் கலைஞர். வட இந்தியாவில் உள்ள அனைவரும் சப்பாத்தி மிகவும் அருமையாக செய்வார்கள். எனவே சுவாமி ஒரு சிலரை கமலா சாரதியின் வீட்டிற்கு அனுப்பி சப்பாத்தி வாங்கிவருமாறு கூறினார். பக்தர்கள் அவரின் வீட்டிற்கு சென்றபோது கமலா சாரதி அதிர்ச்சியடைந்து "நான் இந்த சப்பாத்தியை சுவாமிக்கு விரும்பியது போன்று நன்றாக செய்யவில்லை. எங்களுக்கு ஏற்றவாறு செய்திருக்கிறேன். ஆனால் சுவாமி கேட்டதால் இவ் சப்பாத்தியை தருகிறேன்" என்று கூறினார். சுவாமி கூறுவார், "நீங்கள் எந்த வேலை செய்தாலும் அதை திறம்பட செய்து சுவாமிக்கு அர்ப்பணமாக்குங்கள். நீங்கள் செய்யும் ஒவ்வொரு சிறிய வேலையையும் சுவாமிக்கு இது மிகவும் பிடிக்குமா? சிறந்த செயலா? என்னும் கேள்விகளை கேட்டு அவற்றை சுவாமிக்கு அர்ப்பணியுங்கள்".

அடுத்ததாக கதை ஒன்றைக் கூற விரும்புகின்றேன். 80ஆம் ஆண்டுகளில் பர்த்தியில் சகோதரர்கள் கிராம சேவைக்காக சென்றிருந்தார்கள். நீண்டநாள் கழித்து அவர்கள் திரும்பி வந்தவுடன் சுவாமி கேட்டார் "நீங்கள் ராதம்மாவை சந்தித்தீர்களா?" என்று. சகோதரர்களுக்கு அவரை யார் என்று தெரியவில்லை. உடனே சுவாமி கூறினார், "உங்களுக்கு சட்னி தந்திருப்பாரே அவர்தான். அவர் ஒரு மருத்துவச்சி" என்று. சகோதரர்கள் அனைவரும் உடனே, அவர் வாழும் கிராமம் மிகவும் வசதிகளற்றது. பின்னர் எவ்வாறு அவரை மருத்துவச்சி என அழைக்கிறீர்கள்? என வினவினார்கள். உடனே சுவாமி கூறினார், "அந்த கிராமத்தில் நடைபெறும் பிரசவங்களை பார்ப்பது இவர்தான். பிரசவம் பார்க்கும்போது, **"சாயீஸ்வரார்ப்பணமஸ்து"** என்று கூறி அனைத்தையும் எனக்கே அர்ப்பணிப்பார். அவர் ஒவ்வொரு குழந்தையையும் 'இது நீங்கள்தான் சுவாமி, இக் குழந்தையை நீங்களே பார்த்துக்கொள்ளவேண்டும்' என்று பிரார்த்திப்பார். எனவே இவர் **சிறந்த ஒரு மருத்துவச்சி** ஆவார்.

உங்கள் அனைவருக்கும் பேராசிரியர் கஸ்தூரி அவர்களைத் தெரிந்திருக்கும். அவர்தான் சத்தியம், சிவம், சுந்தரம் என்னும் நூலின் ஆசிரியர். மற்றும் சுவாமியின் சுயசரிதையை எழுதியவர். கஸ்தூரி தனது பல்கலைக்கழகத்திலிருந்து ஓய்வுபெறும் தருணம் நெருங்கியபோது அவர் மிகவும் சந்தோசமாக சுவாமியிடம் ஓடிவந்து, நான் இனிமேல் உங்களுடனேயே இருப்பேன். உங்கள் பணியை மாத்திரம் புரிவதற்கு சந்தர்ப்பம் கிடைத்திருக்கின்றது என்றார். உடனே சுவாமி, "கஸ்தூரி, நீ இவ்வளவு நாளும் என்னுடன் இருந்தும் இதனை புரிந்து கொள்ளவில்லையே. அனைத்து வேலையுமே என்னுடைய வேலைதான். நீ பல்கலைக்கழகத்தில் கற்பித்ததும் எனது வேலைதான். **நீ எதையும் பிரித்துப் பார்க்காதே"** எனக் கூறினார்.

இதைப்போன்று ஒரு சம்பவத்தையும் சகோதரர் அரவிந் பல சத்சங்கங்களில் கூறியிருக்கிறார். அதாவது பேராசிரியர் பாக்யாவை பற்றியது ஆகும். பேராசிரியர் பாக்யா அவர்கள் பிரசாந்தி நிலையத்தில் தொழில்சார் கற்கைகளை கற்பித்து வந்தார். இவர் வாழ்க்கையில் அனைத்து கடமைகளையும் நிறைவேற்றியவராக உணர்ந்து அனைத்து சந்தோசங்களையும் அனுபவித்துவிட்டேன் என்று எண்ணி பிரசாந்தி நிலையத்திற்கு சாதனாக்களில் ஈடுபட்டு தனது காலத்தை அங்கே செலவழிப்பதற்காக வந்தவர். இவர் சுவாமிக்கு ஒருநாள் கடிதம் ஒன்றை எழுதிக் கொடுத்தார். ஆதில், "சுவாமி நான் இங்கு சாதனைகளில் ஈடுபட்டு தன்னை உணர்தல் நிலையை அடைந்து உங்களுடன் மிகவும் அருகாமையில் வருவதற்காகவே இங்கு வந்தேன். ஆனால் நீங்களோ என்னை கற்பிக்கும் பணியில் ஈடுபடுத்தியுள்ளீர்கள். எனக்கு கற்பித்தலைவிட சாதனாவில் ஈடுபடுவதே மிகவும் பிடிக்கும்" என்று எழுதியிருந்தார். சுவாமி அதற்கு அவரிடம் கூறினார், "நீ இவ்வாறு கடிதம் எழுதியிருப்பது எனக்கு பிடிக்கவில்லை. உலகியல் வேலை வேறு, எனது வேலை வேறு என்று பிரிக்காதே, இவ்வாறு **நீ உலகியல் வேலை மற்றும் ஆன்மிக வேலை என பிரித்துப் பார்த்தால் இந்த பிறவியல்ல ஆயிரம் பிறவிகள் எடுத்தாலும் என்னை அடையமுடியாது"** என்றார்.

இதேபோன்று நாமும் சனி காலை 9 மணிதொடக்கம் 11 மணிவரை நிலைய வேலைகளில் ஈடுபடுவோம். மற்றைய நேரங்கள் எமக்காக ஒதுக்கப்பட்டது என்று பிரித்துப் பார்க்கக்கூடாது. அவ்வாறு பார்த்தால் எங்கள் வாழ்வின் உயரிய இலட்சியமான சுவாமியை அடையமுடியாது. அனைத்து வேலைகளும் சுவாமியினுடையது என நினைத்து அதில் ஈடுபடவேண்டும்.

இதேபோன்று இன்னொரு பேராசிரியரின் தந்தையும் தான் அனைத்து பொறுப்புகளையும் நிறைவேற்றிவிட்டேன். எனது பிள்ளைகளும் நன்றாக இருக்கிறார்கள். எனது மனைவியும் இறந்துவிட்டார். எனது சொத்துக்களையும் விற்றுவிட்டேன் என்றும் இறுதி நிலைக்கு வந்து பர்த்தியில் சுவாமியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தித்தார். சுவாமியிடம் அவர், தான் இமயமலைக்கு செல்லவேண்டும். அதுவே எனது இறுதி ஆசையாகும் எனக் கூறினார். சுவாமி கேட்டார், "சாக்ஷாத்காரா" ஆகிய நான் இங்கு இருக்கும்போது ஏன் இமயமலைக்கு செல்லவேண்டும்?, பர்த்தியிலேயே உங்களுக்கு தரும் கடமைகளை நிறைவேற்றி சாதனாக்களையும் புரிந்தால் தன்னை உணரும் நிலையை இப்பிறவியிலேயே அடையலாம் எனக் கூறினார்.

அதேபோன்றுதான் நாமும் பல்வேறுபட்ட கடமைகளை சுவாமிக்காக செய்துகொண்டிருக்கிறோம். ஆன்மிகக் கல்வி குருமாரின் முயற்சியினால் இங்கு நாம் மிகவும் பிரம்மாண்டமான நாடகம் மற்றும் நடனத்தைப் பார்த்தோம். இங்கு சத்சங்கம் நடந்துகொண்டிருக்கிறது. வெளியே எத்தனையோ அன்பர்கள் மலசலகூடத்தை எங்களுக்காக துப்புரவு செய்கிறார்கள், இம் மண்டபத்தை துப்புரவு செய்கிறார்கள். அவை அனைத்தையும் யார் பார்க்கா விட்டாலும் பகவான் பார்த்துக் கொண்டிருக்கிறார். அதற்கான அனைத்து பலனையும் நிச்சயம் சுவாமி தருவார்.

நீங்கள் நினைக்கலாம் நாம் செய்யும் வேலையை இணைப்பாளர் பார்க்கவில்லையே, தலைவர் பார்க்கவில்லையே என்று. நிச்சயம் சுவாமி பார்த்துக் கொண்டிருக்கிறார். நான் இவ்வளவு கதைகளையும் ஏன் உங்களுக்கு சொல்லிக்கொண்ருக்கிறேன் என்று உங்களுக்குத் தெரியுமா? ஏனென்றால் நானும் இவ்வாறான கதைகளை அடிக்கடி நினைவுகூருவேன். அத்துடன் நீங்கள் களைப்பாகவோ அல்லது சோம்பலாகவோ உணர்ந்தால் ஒரு கணம் அமைதியாயிருந்து, **"அனைத்து பணியுமே சுவாமியின் பணி, நல்ல பணி அனைத்தும் சுவாமியை சென்றடையும் என்னும் நல்ல சிந்தனைகளை அடிக்கடி நினைவுபடுத்திக் கொள்ளுங்கள்".**

இப்பொழுது நான் கூற நினைக்கும் கதையை கூறாவிட்டால் இவ்வளவு நேரம் கூறிய கதைகளும் வீணாகிவிடும். பேராசிரியர் வெங்கட்ராமன் உபவேந்தராகப் பணியாற்றியவர். நான் பௌதிகவியல் பிரிவில் கல்வி கற்றுக் கொண்டிருக்கும்போது சுவாமி அவருக்கு நல்ல பேனை ஒன்றை பரிசாக வழங்கினார். இரு தினங்களில் சுவாமி அவரை அவதானித்தபோது அவர் முன்னர் பயன்படுத்திய பேனையையே பயன்படுத்தினார். சுவாமி அவரை அழைத்து "வெங்கட்ராமா, ஏன் நீ நான் கொடுத்த பேனையை இன்னும் பயன்படுத்தவில்லை?" என வினவினார். உடனே வெங்கட்ராமன், "சுவாமி, நான் அப்பேனையை ஆன்மிக பணிகளுக்கு மாத்திரம் பயன்படுத்தப் போகிறேன். மற்றைய ஆன்மிகமற்ற பணிகளுக்கு சாதாரண பேனையை பயன்படுத்தப் போகிறேன்" என்றார். உடனே சுவாமி கூறினார். **"உனது மனப்பாங்கு தவறு வெங்கட்ராமா. நீங்கள் ஈடுபடும் அனைத்து பணிகளுமே சுவாமியின் பணிதான். அனைத்தும் தெய்வீகப் பணியேயாகும்".**

உதாரணமாக நாளைய நிகழ்விற்காக நீங்கள் ஆவணங்கள் தயார் செய்வது, இந்த பூக்களை மாற்றி ஒழுங்கு செய்வது. சுகயீனமாக உள்ள குழந்தையை தாய் அரவணைப்புடன் பார்த்துக்கொள்வது, அனைத்துமே சுவாமியின் பணியே. சிலர் எங்களது அலுவலக பணியை மிகவும் திறம்பட செய்துவிட்டு நிலைய பணிகளுக்கு சிறிதளவு நேரத்தையே ஒதுக்குவோம். சிலர் நிலைய பணிகளுக்கு அதிகளவு நேரத்தை ஒதுக்கி அலுவலக பணியை குறுகிய காலத்திற்கு மட்டுமே நேரம் செலவழிப்பார். இவ்வாறு இல்லாது அனைத்து பணிகளையும் சமமாக பேணவேண்டும். நாங்கள் சுவாமியை நாம் ஈடுபடும் அனைத்து பணிகளிலும் சேர்த்தோம் என்றால் அனைத்துமே இனிப்புச் சுவையாக மாறிவிடும்.

நாங்கள் ஏன் சத்திய சாயி நிறுவனத்தில் சேவை செய்யவேண்டும் என்ற கேள்வி உங்கள் மனதில் எழுந்திருக்கும். அதாவது சுவாமி கூறுகின்றார், **"நீங்கள் சேவைப் பணியில் ஈடுபட்டால் நீங்கள் பாதுகாக்கப்படுகிறீர்கள்".**

அடுத்து ரீ. ஜீ. கிருஷ்ணமூர்த்தி ஐயா அவர்களின் அனுபவம் ஒன்றினை இங்கு கூறலாம் என்று நினைக்கின்றேன். ஒருநாள் பெங்களூரில் இருந்து கிருஷ்ணமூர்த்தி ஐயா, அவரின் மனைவி மற்றும் அவரின் நெருங்கிய நண்பர் காரில் வந்துகொண்டிருந்தபோது மிகப்பெரும் விபத்து ஒன்று ஏற்பட்டது. ஆனால் அவ் விபத்தில் யாருக்கும் எவ்வித ஆபத்தும் ஏற்படவில்லை. கிருஷ்ணமூர்த்தி ஐயாவிற்கு மாத்திரம் சிறு காயங்கள் ஏற்பட்டன. அவர் அதனை வைத்தியரிடம் சென்று காட்டியபோது இது ஒரு ஆபத்தும் இல்லை, ஒரு சில நாட்களில் மாறிவிடும் என்று கூற அவர் உடனே சுவாமிக்கு இது தொடர்பாக தந்தி ஒன்றினை அனுப்பினார். இவர் உடல்நலம் சரியாகி சுவாமியை பார்க்கவந்தபோது கப்டன் ஒபராய், கிருஷ்ணமூர்த்தி ஐயாவிடம் அவருக்கு நடந்த விபத்து தொடர்பாக சிறிதளவும் மாற்றமின்றி நேரே பார்த்தமாதிரி அவ்வளவு விடயங்களையும் கூறி கேள்விகள் கேட்டார். எனது விபத்து தொடர்பான விடயங்கள் சுவாமிக்கே தெரியாது, உங்களுக்கு எவ்வாறு தெரியும்? என்றார். அதற்கு உடனே அவர் உங்களுடைய விபத்து நடந்த தினமன்று காலை 10.48 மணிக்கு சுவாமி உடனேயே அங்கு நடைபெறுவதை எங்களுக்கு கூறினார். கிருஷ்ணமூர்த்தி ஐயா சந்தோசம் தாங்கமுடியாது சுவாமிக்கு நன்றி தெரிவிக்க ஓடினார்.

ஆனால் சுவாமி அவரைப் பார்த்து புன்னகைத்து தலை அசைத்தார். அவர் நன்றி தெரிவிப்பதற்குரிய சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. அடுத்தநாள் நகரசங்கீர்த்தனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிருந்தாவனத்திற்கு செல்லும்போது சுவாமி கிருஷ்ணமூர்த்தி ஐயாவையும் அழைத்துச் சென்று அங்குள்ள 450 ஜப்பானியர்களுக்கு முன்பே "உனக்கு நடந்த விபத்து தொடர்பாக உரையாற்று கிருஷ்ணமூர்த்தி" என்றார். அவ் உரையில் அவர் சுவாமி நீங்கள்தான் என்னை காப்பாற்றினீர்கள். உங்களால்தான் நான் இங்கு நிற்கின்றேன் எனக் கூறினார். உடனே சுவாமி, **"நீ இவ்வாறு கூறாதே, நான் உன்னைக் காப்பாற்றவில்லை. நீ செய்த நல்ல கர்மாவே உன்னை காப்பாற்றியது"** என்று கூறினார். அதாவது ஆன்மிக வங்கியில் நாம் சேர்த்து வைக்கும் வைப்பாகிய நல்ல கர்மா தக்க தருணத்தில் எம்மைக் காப்பாற்றும். அதற்கு நாம் சுவாமியுடன் பயணித்து நல்ல சேவைப் பணிகளில் ஈடுபடவேண்டும்.

இராமாயணத்தில் உள்ள சுந்தரகாண்டம் மிகவும் அற்புதமானது. அதனை நாம் படித்தாலே அனைத்து விடயங்களையும் பெற்றுவிடலாம். அக் காண்டத்தில் அனுமன் எப்போதும் ஒரே சிந்தனையாக "இராமர் இப்போது என்ன செய்வார்?, இராமர், நான் என்ன செய்யவேண்டும் என்று எதிர்பார்ப்பார்?, நான் இராமருக்கு என்ன செய்யவேண்டும்?" என்பதை பைபிள் வாசிப்பது போன்று உச்சரித்துக் கொண்டேயிருப்பார்.

அதேபோன்று சுவாமியின் பக்தர்களாகிய நாமும் சுவாமி எங்களுக்காக என்னவெல்லாம் செய்தார்? ஒரு சிறந்த பக்தராக நாம் என்ன செய்யவேண்டும்?, அவர் என்ன எதிர்பார்க்கிறார்?, சுவாமிக்காக நாம் என்னவெல்லாம் செய்யவேண்டும் என்பதை அடிக்கடி நினைவுகூர்ந்து அதன்படி நடக்கவேண்டும். எம்மில் பலர் நிறுவன பணிகள் செய்வதற்கும் சேவைப் பணிகளில் ஈடுபடுவதற்கும் நேரம் போதாமல் உள்ளது என்று கூறுவோம். ஆனால் அனைவருக்குமே சுவாமி 24 மணித்தியாலங்கள் தந்திருக்கின்றார். எமது வீட்டுப்பணி, அலுவலகப் பணியை நிறைவுசெய்து தொலைபேசி, தொலைக்காட்சி பார்க்கும் நேரத்தை எடுத்தாலே சேவைக்காக எமக்கு தாராளமாக நேரம் கிடைக்கும். எனவே எம்மால் இயன்றளவு நிலைய சேவைப் பணியிலும் நாம் ஈடுபடவேண்டும்.

எனது உரையினை இறுதியாக ஒரு கதையுடன் நிறைவுசெய்கின்றேன். சுவாமி ஒருநாள் ராணிம்மாவிடம் கேட்டார், "உனக்கு சவால்கள் ஏதும் இருக்கின்றதா?" என்று. உடனே அவர் ஆம் சுவாமி எனது கணவர், பிள்ளைகள், வீட்டுப்பணி அத்தனையையும் பார்க்கவேண்டியுள்ளது என்றார். அதற்கு சுவாமி கூறினார், **"இங்குள்ள அனைத்துமே ஓர் கனவுதான்.** அக் கனவு உலகத்தில், நீங்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறீர்கள். அதை நீங்கள் உணர்ந்தீர்கள் என்றால் அனைத்து பணியும் தெய்வீக பணியாகிவிடும். உங்களால் உணரமுடியவில்லை என்றால் இறைவனிடம் பிரார்த்தியுங்கள்" என்றார்.

ஜெய் சாயிராம்

தொகுப்பு : பிருந்தினி மகேஸ்வரன்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மூன்றாம் நாள் மாலைநேர நிகழ்வு

## சாயியின் தூரநோக்கிற்கான செயற்பணி.

Prof. சுரேஷ் கோவிந் (30.09.2023)

மதிப்பிற்குரிய பெரியோர்களே! அன்பான சகோதர சகோதரிகளே!, பகவான் பாபாவின் அளவற்ற அருள், அன்பு மற்றும் கருணையினால் மட்டுமே கடந்த மூன்று நாட்களாக அளவற்ற தெய்வீக அன்பு, ஒருமைப்பாடு, கருணை போன்றவற்றை நாங்கள் அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம். இவை நடந்திருக்க முடியாதவை, ஆனால் பகவான் பாபாவின் அருள், அன்பு, கருணை மற்றும் ஆசீர்வாதத்தால் இவை எல்லாம் எப்படி நடந்து கொண்டிருக்கிறது என்பதைப் பார்ப்பது மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது.

இந்த பயிற்சிப்பட்டறைகள் மிகவும் திறமையான வளவாளர்களால் செய்யப்பட்டன. அவர்கள் பல சுற்று கலந்துரையாடல்களை மேற்கொண்டு உங்களுக்குத் தேவையானதைத் துல்லியமாக வழங்குவதற்காக விளக்கக்காட்சிகளை (PPT) நன்றாகச் தயாரித்திருந்தனர். இந்த பயிற்சிப்பட்டறைகளில் பங்குபற்றுதல் மட்டும் போதாது. இப் பயிற்சிப்பட்டறையின் மூலம் வளவாளர்கள் குறித்த விடயம் தொடர்பான பசியை உங்களுக்குள் உருவாக்கியுள்ளனர். நீங்கள் இந்த மாநாடு முடிந்து திரும்பிச் சென்றபிறகு, மாநாட்டிற்குப் பிந்தைய பயிலரங்குகள் நடைபெறவுள்ளன. "ஏன்?" ஏனெனில், மாநாட்டை ஏற்பாடு செய்ய நாம் அனைவரும் நேரமும் சிரமமும் எடுத்துள்ளோம். நாங்கள் எல்லாவற்றையும் முடித்துவிட்டு திரும்பிச் சென்றபிறகு இதைப் பற்றி எதுவும் செய்யாமல் இருப்போமேயானால் நாங்கள் ஒரு நிகழ்வை நிர்வகித்த நிகழ்வு ஒழுங்கமைப்பாளராக மாத்திரம் செயற்பட்டவர்களாகி விடுவோம். ஆனால், நாங்கள் திரும்பிச் சென்றபின்னர் இந்த மாநாட்டின் விளைவாக என்ன நடந்தது என்று எங்களை நாங்களே கேட்போமானால் மற்றும் பயிற்சிப்பட்டறைகளில் பயின்றுகொண்ட விடயங்களை நடைமுறைக்கு கொண்டுவருவோமானால், நாங்கள் ஒரு செயற்பணியை இயக்குகிறோம். நாங்கள் நிகழ்வு ஒழுங்கமைப்பாளர்கள் அல்ல. **நாங்கள் சத்திய சாயியின் செயற்பணியின் இயக்கிகள்.** அதனால்தான் நாம் இங்கு இருக்கும் இந்த பொன்னான நேரத்தை பிரயோசனப்படுத்திக் கொள்ளவேண்டும். இதனால் இந்த விஷயங்களும் இந்த இலட்சியங்களும் நம் இதயங்களில் பதியப்படுகின்றன. இதனால் நாம் திரும்பிச் செல்லும்போது நாம் அவருடைய அன்பை கடத்தும் கருவிகளாகின்றோம்.

மதிப்பிற்குரிய தலைவர் ரெட்டி, துணைவேந்தர் அவர்களே, இந்த செப்டெம்பர் மாதத்தில் இந்த மண்டபத்தில் இருப்பதில் நாங்கள் மிகவும் பெருமையடைகிறோம். இந்த அழகான இடம் சுவாமியின் இடம் போலவே இருக்கிறது என்று எல்லோரும் சொன்னார்கள். எல்லோரும் மிகவும் மகிழ்ச்சியாகவும் அன்பில் பிணைக்கப்பட்டவர்களாகவும் இருக்கின்றார்கள்.

எனக்கு கொடுத்த தலைப்பு சாயியின் தூரநோக்கும் செயற்பணியும். (Vision for Sai Mission) சத்திய சாய் சர்வதேச அமைப்பின் நோக்கமும் என்ன?

தலைவர் ரெட்டி இதனை தனது உரையில் வலியுறுத்தியிருந்தார். அதனை நான் மீண்டும் கூறுகின்றேன். முதலாவது, என்ன நடக்கிறது என்பதைப் புரிந்துகொள்ளும் தன்மை உடைய உங்கள் புலன்கள் மற்றும் மன சக்திகளைப் பயன்படுத்தக்கூடிய நிலையை தெய்வீகத்துடன் கூடியதாக உயர்த்துதல். மிருகம் தெய்வீகத்தை அடைய முடியாது என்றார் சுவாமி. 84 லட்சம் உயிரினங்களில், மனிதனால் மட்டுமே இதைச் செய்ய முடியும். **விலங்கிலிருந்து மனிதனாக மாறுகிறோம். பின்னர் மனிதனிலிருந்து, நமது வேலைகள் தெய்வீகமானதாக மாறும்.** இதுதான் பரிணாமம். ஆனால் விலங்குகளின் புலன்கள் அதிகளவில் இருப்பதை நீங்கள் காண்கிறீர்கள். விலங்குகள் அவைகளது உள்ளுணர்வால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உந்தப்படுவதனை / தூண்டப்படுவதனை நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். மனித மனதின் அதிகள விலான பகுதி புலன்களின் கட்டுப்பாட்டிலும் குறைந்தளவிலான பகுதி தெய்வீக கட்டுப் பாட்டிலும் காணப்படுகின்றன. நாம் தெய்வீகத்தை நோக்கி செல்லும்போது எமது நோக்கம் புரிந்து கொள்ளும் தன்மை உடைய ஆத்மிகப் பேருணர்வு சக்தியை (Atmic Conciousness) அதிகரிப்பதாகும். இங்கேதான் சாயி அமைப்பின் நோக்கம் காணப்படுகின்றது. சாயி அமைப்புக்கள் செயற்பாடுகள் அனைத்திலும் ஈடுபடுவதன் மூலம், நாம் நமது தெய்வீக உணர்வின் அதாவது புரிந்துகொள்ளும் தன்மை உடைய தெய்விக மன சக்தியை அதிகரிக்க உதவுகின்றன.

புரிந்துகொள்ளும் தன்மை உடைய தெய்விக மன சக்தியின் உயர்நிலை உணர்வின் நோக்கம் என்ன?
நீங்கள் தெய்வீக மன சக்தியின் உயர்நிலை அடைந்தால் பரந்தளவில் விடயங்களை உங்களால் உணரமுடியும். அதிகமாக உணர முடிந்தால், உங்களால் அதிகமாக காட்சிப்படுத்தி பார்க்க முடிவதுடன் முடிவெடுப்பதில் சிறப்பாக இருப்பீர்கள். நீங்கள் முடிவெடுப்பதில் சிறந்தவராக இருந்தால், சிறந்த அனுபவங்களைப் உங்களால் பெற்றுக்கொள்ள முடியும். அவ்வாறு அனுபவங்களை பெற்றுக்கொள்ளும்போது அனுபவங்கள் என்ன என்பதை நீங்கள் கற்றுக் கொள்வீர்கள். பிறகு உங்களால் இந்த மனதை மாற்றவும் முடியும். அதை ஒரு சிறிய நிலைக்கு குறைக்கலாம், பின்னர் நாம் இறுதியாக கடவுளாக மாறுவோம். அதுதான் நோக்கம். முழுமையான நோக்கமும் கடவுளாக மாறுவதுதான்.

நாம் இதை எப்படி செய்வது? அதன் இரகசியம் என்ன? வானொலி நிகழ்ச்சி, தொலைக்காட்சி நிகழ்ச்சியைப் போல பல நிகழ்ச்சிகளை நாங்கள் செய்துள்ளோம். இவற்றினூடாக உலகை மாற்றுவதற்கு நாங்கள் இங்கு வரவில்லை என்பதை மறந்துவிடாதீர்கள். இங்கு எங்களின் நோக்கம் உலகை மாற்றுவது அல்ல, மாறாக நம்மை மாற்றிக் கொள்வதற்கே ஆகம்.

உங்களுக்கும் எனக்கும் மிகக் குறைந்த நேரம் மட்டுமே உள்ளது. 20 வருடங்கள், 30 வருடங்கள், 40 வருடங்கள் பின்னர் இது ஒரு கடந்து செல்கின்ற மேகங்கள் என்று சொல்லுவோம். நீங்களும் நானும் கூட கடந்து செல்லும் மேகங்கள்தான். ஒரு மாநாட்டில் ஒரு நாள் 2,000 பேர் இருந்தனர், நான் என்னுடன் ஒரு முட்டி கொண்டு வந்தேன், இந்த முட்டி இப்போது எனக்கு வெளியே உள்ளது என்று எல்லோரிடமும் சொன்னேன், ஒரு நாள் என் சுவாசம் நின்றவுடன், நான் ஒரு இந்து, என்னை எரித்து விடுவார்கள். அவர்கள் என்னை முட்டியினுள் வைப்பார்கள். 6 அடி 2 அங்குல உடம்பானது முட்டியினுள் கையடக்கமாக இடப்படும். அதன் பிறகு எனது சாம்பலை கடலில் கலப்பார்கள். நான் திரும்பி வருவதை அவர்கள் விரும்பவில்லை.

வாழ்க்கையின் இந்த நிலையற்ற தன்மையை உங்களுக்கு நினைவூட்டும் வாழ்க்கையின் நிலை மாற்றமே இக் கதையின் கரு ஆகும். விபூதியை ஏன் நெற்றியில் இடுகின்றோம்? உடல் உட்பட நீங்கள் வைத்திருக்கக்கூடிய அனைத்தும் மேகங்களை போல கடந்து செல்கிறது என்பதை நினைவூட்டுவதற்காகும். புரிந்துகொள்ளும் தன்மை உடைய தெய்விக உணர்வு எவ்வளவு உயர்ந்ததோ, அவ்வளவு அதிகமாக நோக்கம் வெளிப்படுவதைக் காணலாம். அதைத்தான் இந்த மாநாடு உங்களுக்கு நினைவூட்ட வேண்டும். நான் என்ன செய்ய வேண்டும்? இதற்குப் பிறகு நான் எப்படி என் வாழ்க்கையை வாழ வேண்டும்? என்பனவற்றை நீங்கள் அறிந்து கொள்வீர்கள்.

நீங்கள் திரையரங்கிற்குச் சென்று ஒரு திரைப்படத்தைப் பார்க்கிறீர்கள், மிக நல்ல இயக்கம், நல்ல நடிகர்கள், நல்ல இசையமைப்புடன் நல்ல படப்பிடிப்பு இடம், நல்ல ஆடைகள், நல்ல ஒலி, நல்ல எடிட்டிங் என்று எல்லாம் நன்றாக உள்ளது. பிறகு ஏன் இந்தப் படம் தோல்வியடையும்? ஏனென்றால், இவை அனைத்தும் இருந்தால்கூட நல்ல கதை இல்லை என்றால் அது ஒரு தோல்விப் படம். கதை என்பது கேக். இவை அனைத்தும் ஐசிங். நல்ல வீடு, நல்ல சொத்து என்று எல்லாமே இருக்கலாம், ஆனால் கதை இல்லை என்றால் எதுவுமே இல்லை என்றாகிவிடும். நீங்கள் உண்டு, புணர்ந்து, இனம்பெருக்கி, அடைகாத்து நுளம்பைப் போல வாழ்ந்து இறந்துவிடுவீர்கள். இப்படிப்பட்ட வாழ்வில் என்ன கதை இருக்கிறது? எதுவும் இல்லை. சுவாமியின் கதையின் ஒரு பகுதியாக நாம் இருக்க முடிந்தால் அதுவே சிறந்த கதையாகும். அவருடைய கதையின் ஒரு பகுதியாக நாம் மாறும் போது நாமும் வரலாறாக மாறுகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த வரலாற்று உத்வேகம் என்னவென்றால், நாம் வாழும் முறை, எமது வாழ்க்கையில் பெறும் அனுபவங்கள், நம்முள் எதிரொலிக்கும் உற்சாக அதிர்வுகள் என்பவற்றை பார்த்து வரும் இந்த தலைமுறைகளுக்கு நாம் எவ்வாறு உதவ முடியும் என்பதாகும். இப்படித்தான் வாழ்வது. இதற்கு நாம் சுவாமியுடைய கதை என்ன? எப்படி நாம் சுவாமியுடைய கதையின் ஒரு பகுதியாக இருக்கக்கூடிய எங்கள் கதை என்ன? என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

வாழ்க்கை வட்டமான சுழற்சி. திரையில் தெரியும் படத்தைப் பாருங்கள், சிறுவன் முச்சக்கரவண்டியுடன் வருகிறான், மறுபுறம் முதியவனும் முச்சக்கரவண்டியைப்போல் உதவிக் கருவியுடன் வருகிறார். நிகழ்ச்சி ஒழுங்கமைப் பாளர்கள் இன்று எனக்கு ஒரு விடயத்தை நினைவு படுத்தினார்கள். அதாவது பல்கணியில் உள்ள நீங்கள் அனைவரும் இளைஞர்கள் (Young adult) இங்கே அமர்ந்திருக்கும் நாங்கள் இளமையான வர்கள் (younger adult). இங்கே அமர்ந்திருக்கும் உங்களை ஒரு இளைஞன் இல்லை என்று கூற இந்த அமைப்பை ஒருபோதும் அனுமதிக்கா தீர்கள். 80/85 வயது வரை கூட, இளமையான வர்கள் என்று சொல்லுங்கள். வருடங்களை வைத்து கணக்கிடும் வயதல்ல இது. உங்களுக்கு என்ன பணி நோக்கு இருக்கிறது. அந்த நோக்கை நிறைவேற்ற பகவான் பாபாவை போல் உங்கள் வாழ்நாள் முழுவதையும் எப்படி செலவிடுகிறீர்கள் என்பதை வைத்தே பார்க்கப்படுகிறது. சில பெரியவர்கள் சொல்கிறார்கள் "தம்பி, நாங்கள் எங்கள் பங்கை செய்து விட்டோம். இப்போது அவர்கள் செய்யட்டும்." இது என்ன வகையான மொழி? சில பெரியவர்கள் நீங்கள் பதவியில் இருந்து விலகும் போது, உங்களைக் காணக்கூட கிடைப்பதில்லை. எங்கோ காணாமல் போய் விட்டீர்கள். அவ்வாறெனில் பகவான் வந்து மோட்சம் வழங்கும் போது, நீங்கள் உங்கள் மோட்சத்தை மற்றவர்களுக்கு வழங்குவீர்களா?. சிந்தித்துப் பாருங்கள்.

பணி நோக்குடன் வாழ்வது என்பதன் அர்த்தம் என்ன? தொலைநோக்கு பார்வையுடன் வாழ்வதற்கு அன்பன் அரவிந்த் பாலசுப்ரமண்யா ஒரு சிறந்த உதாரணம் என்று நினைக்கிறேன். அவருடைய பணி நோக்கு என்னவென்று அவரிடம் கேளுங்கள்? "என் பணி நோக்கு ஒரு கதை சொல்பவராக (Storyteller) இருக்க வேண்டும். நான் பகவானின் கதைசொல்பவராக இருக்க வேண்டும்." எனக் கூறுவார். அவர் தனது பணி நோக்குடன் வாழ்கிறார். அவர் செல்லும் இடமெல்லாம் ஒரு கதையைக் காண்கிறார். மேலும் அவர் ஒரு கதையைச் சொல்லும் போது, அந்தக் கதையில் எல்லா மசாலாவும் இட்டுச் சுவாரஸ்யமாக சொல்லுவார். அதைச் செய்யும் கலை அவருக்குக் கிடைத்தது. அவர் செல்லும் இடமெல்லாம் கதையை பெற்றுக் கொள்வார். அவருக்கு ஒரு பஸ் பயணம் கூட ஒரு கதையாக இருக்கும். ஏன்? ஏனென்றால் அவர் ஒரு பணி நோக்குடன் வாழ்கிறார். தினமும் காலையில் எழுந்தவுடன் ஒவ்வொருவரும் எமது பணி நோக்குடன் வாழ வேண்டும்.

தினமும் காலையில், வேலைக்குச் செல்கிறீர்கள், திரும்பி வருகிறீர்கள். அதன் பிறகு நீங்கள் என்ன செய்வீர்கள்? மறுநாள் மீண்டும் எழுந்து வேலைக்குச் செல்கிறீர்கள், திரும்பி வருகிறீர்கள். ஒவ்வொரு நாளும் ஒரு பூப்பந்தைப் போல் போவதும் வருவதுமாக இருக்கிறீர்கள். நீங்கள் ஒரு பூப்பந்தாகப் பிறந்திருந்தால்கூட குறைந்த பட்சம் இரண்டு பூப்பந்து வீரர்களுக்காவது சேவை செய்திருக்கலாம். பின்னர், வியாழன் அன்று நீங்கள் சாயி நிலையத் திற்கு சென்று உங்கள் நாடகங்கள் மற்றும் ஜிம்னாஸ்டிக்ஸ் செய்து விட்டு திரும்பி வந்து, இந்த வழக்கமான பயணத்தை நிலையாக பராமரிக்குமாறு பாபாவிடம் கேட்கிறீர்கள். அவரை உங்கள் சொத்து பராமரிப்பு மேலாளராக ஆக்குகிறீர்கள். "பாபா! உங்கள் வீட்டை பராமரிக்கவும், உங்கள் குடும்பத்தை பராமரிக்கவும், உங்கள் காரை பராமரிக்கவும். தயவு செய்து பாபா இந்த அனைத்தையும் பராமரிக்கவும்." எனக் கேட்கிறீர்கள். பின்னர், பாபா கேட்டார், "நீங்கள் எனக்கு என்ன செய்வீர்கள்?". நீங்களோ கூறுவீர்கள் "பாபா! பஜனையில் நான் உங்களுக்காக ஒரு பாடலையாவது பாடவில்லையா?" என்பீர்கள். நாம் நன்றாக சிந்திக்க வேண்டும்.

ஒரு பணி நோக்குடன் (vision) வாழ்வது எல்லாம் வெறுமனே சடங்குகள் (Rituals) செய்வதாகும். அதனை நீங்கள் ஆன்மீகமாக மாற்ற வேண்டும். ஆன்மீகம் என்றால் என்ன? சடங்கின் (Ritual) முன் இந்த SPI என்ற மூன்று எழுத்துக்களைச் சேர்க்கிறீர்கள். SPIஎன்றால் என்ன? Swami's purpose and intention (சுவாமியின் நோக்கமும் உள்ளெண்ணமும்). ஒவ்வொரு சடங்குகளிலும் இதை வைத்தால்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்தும் ஆன்மீகமாக மாறும். இன்று காலையில் மந்திரம் ஓதுகின்ற போது தண்ணீர் தெளித்தார்கள். இது என்னவென உங்களுக்குத் தெரியாது. நீங்கள் இது ஒரு இந்து சடங்கு என்று நினைத்திருப்பீர்கள். அது ஏன் செய்யப்படுகிறது என்று யாரும் கேட்கவில்லை, கேட்பதும் மரியாதையான விடயம் அல்ல. மேலும் யாராவது கேட்டாலும், அதை உங்களுக்கு விளக்க யாரும் இல்லை. இந்த வேலையை ஏன் செய்தார்கள்? ஏனெனில் நீங்கள் கடற்கரையில் அமர்ந்திருக் கிறீர்கள் சூரியக்கடவுளும் இருக்கிறார். அனைத்து பஞ்சபூதங்களும் உள்ளன. உண்மையில் நீங்கள் தண்ணீருக்குள் சென்று கடல் நீரை தொட வேண்டும். நாம் இருக்கும் இடங்கள் எல்லாம் ஈரமாகி விடும் என்பதால் நம்மால் அதனை செய்ய முடியாதிருந்தது. எனவே கடலை மதிக்கும் பொருட்டு, அரசே! இந்த பஞ்சபூதங்கள் அனைத்தும் என்னுடன் துணையாக இருக்க வேண்டும். இதற்குப் பிறகு நான் உங்கள் தரிசனத்தைப் பெறப் போகிறேன். அதனால் கடலின் ஆசீர்வாதத்தையும் பெறுகிறோம். இப்படி தண்ணீரை தெளிக்கும் போது, உங்கள் உடலின் ஒவ்வொரு பாகமும் ஆசீர்வதிக்கப்படுகின்றது. இந்த ஆசீர்வாதமே ஒரு நபர் எல்லாவற்றையும் ஆன்மீகம் ஆக்குவதற்கு உதவுகின்றது.

நீங்கள் நேற்று அந்த நாடகத்தைப் பார்த்தீர்கள், நானும் பார்த்தேன். மிகவும் கடினமான நாடகம். குறித்த இந்த நாடகத்தை ஒரு சாயி நிலையத்திடம் கொடுத்து நடிக்குமாறு கூறினால் அதனை பழகி நடிப்பதென்பது எளிது என்று நீங்கள் நினைக்கலாம். ஆனால் அவர்கள் அதை அப்படி செய்யவில்லை. அவர்கள் சபரியின் ஒரு பகுதியை வடக்கில் உள்ள ஒரு சாயி நிலையத்திற்கும். மற்றொரு பகுதியை வேறு ஒரு சாயி நிலையத்துக்குமாக மொத்தம் மூன்று சாயி நிலையங்களிற்கு பிரித்துக் கொடுத்திருக் கிறார்கள். மேலும் அவர்கள் ஒத்திகை பார்க்க நான்கு / ஐந்து / ஆறு மணிநேரம் பயணம் செய்தனர். அந்த சிறப்பான நடிப்பை வெளிப்படுத்துவது மிகவும் கடினமானது. நான் அங்கேயே அமர்ந்து பார்த்துக் கொண்டிருந்தேன். நானும் ஒரு நாடகக் கலைஞன் என்பதால் இந்த நாடகத்தை எப்படி மேம்படுத்துவது என்று யோசித்துக் கொண்டிருந்தேன். நான் பரிபூரணமான சிறந்த விடயத்தை ஒருபோதும் மேம்படுத்த முடியாது. அது ஒரு சரியான அழகான நாடகம். மிகவும் அழகான அற்புதமான நாடகம். அதில் ஒருவர் கூனியபடி நாடகம் முழுவதும் நடித்திருந்தார். கூனியபடி பூக்களைப் பறிப்பது சுலபம் என்று நினைக்கிறீர்களா? அது எளிதானது அல்ல. அந்த உடல் நிலையை அவள் பேணினாள். அவள் மேடையில் இருந்து சென்றதும் நாடகம் முடிந்து விட்டது. குறித்த நாடகம் என்னை நிஜமாகவே சிந்திக்க வைத்தது "சபரியை அங்கேயே இருக்க வைத்தது எது?" "ஏய் சபரி, சபரி, அம்மா! உங்கள் குரு காலமானார். நீங்கள் ஏன் மற்றைய சில பக்தர்களைப் போல் இருக்கக்கூடாது? வேறொரு குருவைத்தேடிச் செல்லக்கூடாது? வேறொரு குருவைத் தேடுங்கள். இந்த குரு சொல்வதை ஏன் கேட்க வேண்டும்?" எனப் பலரும் கூறினார்கள்.

சுவாமி தனது உடலை நீங்கி இவ் உலகை விட்டு போய்விட்டார், மற்ற குருக்களைக் கண்டுபிடித்தல், அமைப்பை மாற்றுதல் போன்ற விடயங்களை செய்கிறீர்களா? இல்லை. நீங்கள் தங்கியிருந்த இடத்தில் தங்கியிருந்தீர்கள். அதைத்தான் அந்த நாடகம் உங்களுக்கு நினைவூட்டுகிறது.

சபரி ஏன் அங்கேயே இருந்தாள்? அவளுக்கு ஸ்ரீராமனை கூட தெரியாது, ஸ்ரீ ராமரைப் பார்த்ததும் நீங்கள் யார் என்று அவரிடம் கேட்டாள். "நான் ஸ்ரீ ராமர்" என்று விளக்கினார். ஏன் அப்படி செய்தாள்? கடவுள் வரும் போது இங்கேயே இருங்கள், சேவை செய்யுங்கள் என்று அவளது குரு கூறியதால் அவள் அங்கேயே தங்கியிருந்தாள். இதுவே உள்ளார்ந்தமான கீழ்ப்படிதல். (Implicit Obedience)

பிரசாந்தி நிலையத்தில் கோடை மழை அருளுரையின் (Monsoon showers in Prashanthi Nilayam) முன் பகுதியில் உள்ளார்ந்தமாக கீழ்ப்படிதல் ஒன்றே முழு ஆனந்தத்தைப் பெறுவதற்கான ஒரே வழி என்று பாபா கூறுகிறார். எனவே குரு காத்திருக்குமாறு கூறினார். அவள் காத்திருந்தாள். அவள் ஒன்று இரண்டு வருடங்கள் காத்திருக்கவில்லை, அவளது இளமை முழுவதும் முடிந்தும் பல வருடங்களாக அங்கே காத்திருந்தாள். அவள் ஸ்ரீராமரின் பின்னால் ஓடவில்லை. ஸ்ரீராமர் அங்கு வந்தார். குருவின் பின்னால் பக்தர்கள் ஓடக்கூடாது. உள்ளார்ந்தமாக கீழ்ப்படிந்து நீங்கள் இருக்கும் இடத்தில் இருங்கள். குருவே வர வேண்டும். ஏனென்றால் அதுதான் பக்தி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊர்மிளாவுக்கும் அப்படித்தான் நடந்தது. ராமரும் சீதையும் 14 வருடங்கள் காட்டிற்கு சென்றபோது இலட்சுமணனும் பின்தொடர்ந்தார். இச்சந்தர்ப்பத்தில் ஊர்மிளாவின் கூற்றைப் பாருங்கள். "நான் உங்களுடன் வந்தால் உங்கள் கவனம் என் மீதும் இருக்கும். உங்கள் கவனம் என்மீது இருந்தால், உங்கள் நேரத்தின் முழுப்பகுதியையும் (100%) ஸ்ரீராமருக்கு எப்படிக் கொடுக்க முடியும்? எனவே, நான் இங்கேயே இருக்கின்றேன்". இலட்சுமணன் சென்று 14 ஆண்டுகள் இராமருடன் காட்டில் இருப்பதற்காக ஊர்மிளா தியாகம் செய்தாள். தியாகத்தின் பலனாக இரவில் 14 வருடங்களின் பின்னர் வந்த ராமர் உள்ளே வந்து அவரைச் சுற்றி வருகிறார். கடவுள் ஒரு பக்தரை சுற்றி வருகிறார். ஏன்? ஏனெனில் சுய தியாகம் உங்களை சுய-உணர்தலுக்கு இட்டுச் செல்லும். இதையே பாபா கூறினார்.

எனவே, இதன் இரகசியம் என்ன? கதை கேட்பதென்பது ஒரு சடங்கு மட்டுமே. நிகழ்வுகள் அனைத்தையும் எமது வாழ்க்கையை வாழ தேவையானவையாக மாற்றுவதென்பதே ஆன்மீகம். அதனால்தான் இங்கு அரங்கேற்றப்பட்ட ஒவ்வொரு நாடகமும் ஏன் இப்படி நடந்தது என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். நான் தாழ்ந்த ஜாதி, எனக்கு அறிவு இல்லை, எனக்கு வேத அறிவு இல்லை, எனக்கு எதுவும் தெரியாது, உங்களுக்கு ஞானம் கிடைத்துள்ளது என்ற விடயங்களை எல்லாம் சபரி எவ்வாறு கடந்து வந்தாள்?

சுவாமியின் நேர்காணல் அறையில் இதுதான் நடந்தது. சுவாமியின் கைகளை எடுத்து என் தலையில் வைத்தேன். சுவாமி என்ன செய்கிறாய்? என்று என்னிடம் கேட்டார். எனக்கு ஞானோதயம் வேண்டும், இப்போதே கொடுங்கள் எனக் கேட்டேன். உடனடியான கோப்பி தேனீர் போல, இப்பவே கொடுங்கள் என்றேன்.

ஞானம் என்பது நான் உங்களுக்குக் கொடுப்பதற்கும், நீங்கள் எடுப்பதற்கும் அது வியாபாரப் பரிவர்த்தனை அல்ல. நீங்கள் சம்பாதிக்க வேண்டும். அதாவது அது ஒவ்வொருவரினதும் முயற்சி என்று பாபா கூறினார். நீங்கள் மகிழ்வதற்காகவே நான் உங்களுக்கு ஐந்து விடயங்களை கொடுத்துள்ளேன். ஆனால் ஒரு நிபந்தனை உள்ளது. அது என்னவென்றால் நீங்கள் இந்த ஐந்து விடயங்களை எவ்வாறு பயன்படுத்துகிறீர்களோ அதனால் வரும் விளைவுகளையும் நீங்கள் அனுபவிக்க வேண்டும். வாழ்க்கையின் இரகசியம் என்னவென்றால், நாம் அனைத்தையும் ஆன்மிகமாக மாற்ற வேண்டும். பொது வாழ்க்கை மற்றும் ஆன்மீக வாழ்க்கை என்று எதுவும் இல்லை. நீங்கள் எங்கு சென்றாலும் அனைத்தும் ஆன்மீக வாழ்க்கையே.

மிகப்பெரிய குறைபாடு என்ன? சிந்தனையில் தான் பெரிய குறை உள்ளது. நாம் தவறாக சிந்திக்கின்றோம். அதனால்தான் பகவத் கீதை வந்திருக்கிறது, இந்த சிந்தனையை சரி செய்ய குருமார்கள் வந்திருக்கிறார்கள்.
இந்த பிறப்பு மிகவும் சக்தி வாய்ந்தது.
பிறப்பு பிறரால் வழங்கப்படுகிறது
பெயர் பிறரால் வழங்கப்படுகிறது
வருமானம் பிறரால் வழங்கப்படுகிறது
மரியாதை பிறரால் வழங்கப்படுகிறது
முதல் மற்றும் கடைசி குளியல் மற்றவர்களால் வழங்கப்படுகிறது
உங்கள் சொத்துக்கள் மற்றும் உடமைகள் மற்றவர்களால் எடுத்துக்கொள்ளப்படும்
இறுதிச் சடங்கு மற்றவர்களால் செய்யப்படும்
இவை அனைத்தும் மற்றவர்களால் செய்யப்பட்டால், நான் மற்றும் என்னுடையது என்பது ஏன்?

பிறகு நான் மற்றும் என்னுடையது என்பதற்கு என்ன முக்கியத்துவம்? இது சிந்தனை செயற்பாட்டில் உள்ள மிகப்பெரிய குறைபாடு. உங்களிடம் இணைப்பு இருக்கக்கூடாது, உங்களிடம் இருக்க வேண்டிய ஒரே இணைப்பு உங்கள் இணைக்கப்பட்ட குளியலறை மாத்திரமே. எனவே, குறைபாடாக உள்ளது சிந்தனை செயல்முறையே. சிந்தனைச் செயல்பாட்டில் திருத்தங்களை செய்வதற்காகவே நாம் சாயி நிறுவனங்களுக்கு வருகை தரவேண்டும், வந்து இதைச் செய்ய வேண்டும்.

திரையிலுள்ள படத்தில் பையன் ஒருவன் தண்ணீருக்காக தவிக்கின்றான். அவருக்கு தண்ணீர் குடிக்க மட்டுமே தெரியும். அதனால் அவரிற்கு இடப்பக்கமாக 9 கி.மீ. தூரத்தில் தண்ணீர் உள்ளது என மட்டுமே அறிய முடிந்தது. தண்ணீர்தான் H2O என்று கூறப்படுகிறது, அது 50 மீ. இல் வலப்பக்கமாக இருக்கிறது என படத்தில் காட்டப்பட்டுள்ளது. ஆனால் பையனுக்கு H2O தெரியாது. இது தெரிந்திருந்தால் அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடித்திருக்கலாம். அவனது அறியாமையால் அவர் வெகுதூரம் பயணிக்கிறார். அறிவே ஆற்றல். நீங்கள் எவ்வளவு அதிகமாகக் கற்றுக் கொள்கிறீர்களோ, அவ்வளவு சிறப்பாக நீங்கள் அதைப் பற்றி முடிவெடுக்க முடியும். நாம் உண்மையில் தகவல்களை அறிந்து கொள்ள வேண்டும். அறிவு சக்தி வாய்ந்ததாக இருக்க வேண்டும். அதனால்தான் ஷார்க்தி என்ற விடயத்துடன் இந்த தொடக்க விழாவைத் தொடங்கினோம்.

அறிவே ஆற்றல். அறிவு எவ்வளவு செழுமையானது என்பதை நீங்கள் அறிந்தால், நீங்கள் அறிவைப் புரிந்துகொண்டு, அறிவானவர்களாக வாழ்வீர்கள். ஆனால் நீங்கள் பொருட்கோடல் செய்தால் பிரச்சனை அங்கே வருகிறது. நாம் அதை எவ்வாறு பொருள் கொள்ள விரும்புகிறோமோ அதன்படி அதை பொருட்கோடல் செய்து அதன்படி வாழ்கிறோம், அதற்கு ஆன்மிகம் என்று முத்திரை குத்துகிறோம்.

பக்தர்களிடம் என்ன சோதனை செய்கிறோம் தெரியுமா? ஒரு வியாழன் நான் சாயி மையத்திற்குச் வெள்ளை ஆடை அணிந்து, விபூதி போட்டு, "சமஸ்த லோகா சுகினோ பவந்து" என்று கூறி சென்றேன், நான் ஒரு சாயி பக்தன். எனவே, எனது சரிபார்ப்புப் பட்டியலை எடுத்துக்கொண்டு நான் இறந்த பிறகு, சொர்க்கத்திற்குச் செல்கிறேன். அங்கே ஒரு குடிவரவு அதிகாரி இருக்கிறார். எனது சரிபார்ப்பு பட்டியலை எடுத்து, நான் ஒரு சாயி பக்தன், நான் சொர்க்கத்தில் நுழைய வேண்டும் என்று சொன்னேன். ஆம்! வெள்ளை ஆடை அணிந்து, நிறுவனத்தில் சேர ஒப்புக்கொண்டார். எல்லாம் சரியாக உள்ளது. இப்போது அவர் மற்றொரு சரிபார்ப்புப் பட்டியலை எடுக்கிறார். "எவ்வளவு கோபத்தைக் கட்டுப்படுத்தி வைத்திருக்கிறீர்கள்? நீங்கள் தியானம் செய்கிறீர்களா? மற்றவர்களுக்கு சேவை செய்ய நேரம் ஒதுக்குகிறீர்களா? நீங்கள் மற்றவர்களின் வாழ்க்கையை மேம்படுத்தினீர்களா?" அவருக்கு ஒரு சொந்த சரிபார்ப்பு பட்டியல் உள்ளது. ஏய்! இந்த சரிபார்ப்பு பட்டியல் எனக்கு வழங்கப் படவில்லை. என்னுடைய இந்த சரிபார்ப்புப் பட்டியல்தான் என்னைத் தீர்மானிக்கிறது என்று முடிவு செய்துவிட்டேன். இல்லை ஐயா. இந்த பக்கத்தில் உள்ளவை ஆன்மாவின் வெளிச் சத்தின் தாக்கத்தால் தீர்மானிக்கப்படுகிறது. நாம் நேரத்தையும் சிரமத்தையும் எடுத்துக் கொள்ளாவிட்டால், அது நடக்காது.

அனைவரும் ஸ்ரீராமரிடம் சென்று ஸ்ரீராமரின் பாதத்தில் நின்று, ராமா நீங்கள் பெரியவர், ராமா அற்புதம், ராமா நீங்கள் அழகானவர், ராமா நீங்கள் கடவுள் என்றார்கள். ஒருவர் அங்கு வந்தார். ஸ்ரீராமரிடம் உங்களுக்கு என்ன வேண்டும்? என்று கேட்டார். ஸ்ரீராமர் "சீதாதான், கடலைக் கடந்து போய் வர முடியுமா?" ஏனக் கேட்டார். கவலைப்பட ஒன்றுமில்லை, என்னிடம் விட்டுவிடுங்கள் என்றார். பின்னர் ஸ்ரீராமர் ஒரு மோதிரத்தை கொடுத்து அவளிடம் கொடுக்க சொன்னார். அவர் அங்கு சென்று குதித்து சுற்றி பார்த்தார். அவ்வாறு திரிந்து பார்பதற்கு அவருக்கு நிறைய தடைகள் இருந்தன என்பதை மறந்துவிடாதீர்கள். அவர் அங்கு வந்து, சுற்றிப் பார்த்தார், அங்கு நிறைய தாரகைகளை பார்த்தார், அத்துடன் ஒரே ஒரு பெண் மிகவும் மென்மையாக இருந்ததை கண்டார். தனது ஆன்மீகக் குணத்தால் அவர் சீதையாக இருக்க வேண்டும் என்பதை அறிந்து, "அம்மா சீதா, இது உங்கள் கணவர் கொடுத்த மோதிரம்" என்று கூறி கொடுத்தார். இப்போது, அவர் மீண்டும் ஸ்ரீராமரிடம் செல்லும்போது, அவர் அவளுக்கு என்ன நடந்தது? என்று கேட்பார். ஸ்ரீராமர் சண்டையிடப் போவார் என்பது அவருக்குத் தெரிந்ததால் அவர் உள்ளே சென்று தனது வாலில் கட்டிவிடப்பட்ட நெருப்பினால் அரண்மனையின் பல இடங்களை எரித்தார். ஆனால் அவர் உண்மையில் எத்தனை காவலர்கள் இருக்கிறார்கள், எத்தனை வீடுகள், எத்தனை அறைகள், எத்தனை கதவுகள் என்று எல்லாவற்றையும் பார்த்து புரிந்து கொண்டு அந்த தகவல்களை ஸ்ரீராமனிடம் கொடுத்தார். இந்த தகவல்களை ஸ்ரீராமன் கேட்கவில்லை. தொலைநோக்கு பார்வை ஆன்மீகத்தின் ஒரு குணம். அர்ஜுனனுக்கு கீதை கொடுக்கப்பட்டதற்கு அதுதான் காரணம். அந்த தொலைநோக்கு பார்வை. அதாவது ஒரு பிரச்சனை வரும் வரை நாம் காத்திருக்க மாட்டோம். அவ்வாறே அனுமனும் அது வருவதற்கு முன் செய்கிறார். எனவே அறிவே சக்தியாகும்.

"டாக்டர், நான் அதிக எடை உடைய நபர், நீங்கள் என்னவற்றையெல்லாம் சாப்பிட சொன்னீர்கள் என்று எனக்குத் தெரியும். இருப்பினும் நான் ஒரு தோசை சாப்பிடலாமா? என்னை ஒரு தோசை சாப்பிட அனுமதிப்பீர்களா?". டாக்டர் "ஆம், ஒரே ஒரு தோசை மட்டும் சாப்பிடுங்கள்" என்றார். ஆனால் அவர் மிகப் பெரிய தோசை ஒன்றை செய்து சாப்பிட்டார். அதை செய்யாதீர்கள். அவளுடைய பொருட் கோடலில் ஒரு தோசை என்பது ஒரு பெரிய மிக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீளமான தோசை. இதுவே அனைத்து கொழுப்பிற்கும் ஆணிவேர்.
படத்தைப் பாருங்கள், படத்தில் விமானத்தில் எல்லா எலக்ட்ரானிக் சாதனங்களையும் அணைக்கும்படி கூறும்போது மனைவி தனது கணவரின் பேஸ்மேக்கரையும் நிறுத்துகிறாள். எல்லா எலக்ட்ரானிக் சாதனங்களையும் அணைக்கும்படி உங்களிடம் கேட்கும்போது, உங்கள் கணவரின் பேஸ்மேக்கரை அவர்கள் எண்ணவில்லை - சரியான பொருள்கோடல் வேண்டும்.

இதையெல்லாம் நான் ஏன் உங்களுக்குச் சொல்கிறேன் என்றால், நம்முடைய வேதப் புத்தகங்களில் உள்ள பல விஷயங்களை நாம் எப்படி பொருள்கொள்ள வேண்டும் என்று விரும்புகிறோமோ, அதை அப்படியே பொருள்கொண்டு அதன்படி வாழ்கிறோம். அவ்வாறு செய்கையில் எமக்கு உண்மையில் ஆராய வேண்டிய அந்த அனுபவம் கிடைக்காது. ஆழமாக மூழ்கி, முழு விஷயத்திற்குச் செல்லுங்கள், நீங்கள் இதைச் செய்யவில்லை என்றால், நாங்கள் மேலோட்டமாக எங்காவது இருந்திருப்போம் என்பதை நீங்கள் காண்பீர்கள். மற்றவர்களுக்கு குருக்கள் உண்டு, நமக்கு குருவாக வந்த கடவுள் உண்டு. இந்த வாய்ப்பை நாம் வீணடிக்க முடியாது. இன்று நாம் என்ன செய்ய வேண்டுமோ அதை நாம் செய்ய வேண்டும், மற்றும் உயர்ந்ததை அடைய வேண்டும்.
சரியான பொருட்கோடல் என்பது முக்கியம். இந்த படத்தை பாருங்கள் படத்திலுள்ள சிறுவனுக்கு கட்டை விரலை வாயில் வைக்கும் பழக்கம் உள்ளது. எனவே, அவரது பெற்றோர் ஒரு தளர்வான காற்சட்டையை கொடுத்தனர். இப்போது பிரச்சனை தீர்ந்துவிட்டது. இப்போது சிறுவன் கையை வாயில் வைக்கவில்லை. என் நண்பர்களே ! உங்களுக்கு ஒரு பிரச்சனை இருக்க வேண்டும், உங்களுக்கு கவலை இருக்க வேண்டும். ஆனால் உங்களுக்கு என்ன பிரச்சனை இருக்க வேண்டும்? உனக்கு என்ன கவலை இருக்க வேண்டும்? என்பதே கேள்வியாகும். இது வாழ்க்கையின் ஒரு இரகசியம்.

தேனீக்கள்

பூச்சி உலகின் தலைசிறந்த கட்டடக் கலைஞர்.
மகரந்தம் மற்றும் தகவல்களை சேகரித்தல்
இயக்கம், ஒலி மற்றும் சைகை மூலம் தொடர்பு
எண்ணுங்கள் - வழியில் குறிப்பிடத்தக்க பொருட்களை நினைவில் கொள்ளுதல்
சிறிய தேனீக்களை கவனித்துக் கொள்ளுதல்.
நடனம் - அவர்கள் சிக்கலான நடனத்தை ஆடுகிறார்கள், ஏனென்றால் அவர்கள் நடனமாடும் போது மற்ற தேனீக்களுக்கு தேன் எங்கே என்று சொல்ல வழிசெலுத்துகிறது.
மற்ற தேனீக்களை வேறுபடுத்துகிறது
அவர்களால் சாப்பிட முடியும், அவர்களால் மூர்க்கத்துடன் போராட முடியும், வேகம் மற்றும் ஒருங்கிணைப்பு மூலம் பறக்க முடியும்
தேனீக்களால் கேட்க முடியும்
தேனீக்களால் கற்றுக்கொள்ள முடியும்
தேனீக்களால் அமைப்பில் வாழ முடியும்
முடிவுகளை எடுக்க முடியும்
தேனீக்களால் செல்ல முடியும்
தேனீக்களால் தேனை உற்பத்தி செய்ய முடியும்
தேனீக்களால் வெப்பநிலையை சீராக்க முடியும்
தேனீக்களால் நினைவில் கொள்ள முடியும்
தேனீக்களால் இனப்பெருக்கம் செய்ய முடியும்
தேனீக்களால் பார்க்க முடியும்
தேனீக்களால் மொய்க்க முடியும்
தேனீக்களால் அனைத்து ஐந்து புலன்களை உணர முடியும்
தேனீக்களால் இவை அனைத்தையும் செய்ய முடியும்
தேனீக்கள் இவை அனைத்தையும் 960,000 மூளை செல்கள் மூலம் செய்கிறது. 960,000 மூளை செல்கள் கொண்ட ஒரு தேனீயால் முடியும் என்றால், மனிதனால் இவை அனைத்தையும் செய்ய முடியும்.

இப்போது அவமானகரமான புள்ளிவிவரங்களை பார்ப்போம்.
மனித மூளையில் 100 மூளை செல்களை ஒரு முள் தலையில் பொருத்தலாம். அவை மிகவும் சிறியவை. நீங்கள் அனைத்து மூளை செல்களையும் வரிசைப்படுத்தினால், அது சந்திரனை (340,000 கிமீ) அடையும் அளவிற்கு உள்ளது. அதாவது நம்மிடம் உள்ள மூளை செல்கள் அதிகமாகும். அதாவது தட்டச்சு செய்யப்பட்ட பூஜ்ஜியங்களை நீங்கள் 10.5 மில்லியன் கிமீ தட்டச்சு செய்யலாம். ஒவ்வொரு மூளை செல் ஒரு PCஐ விட அதிகமான வேலை செய்ய கூடியது.

அட கடவுளே! எனக்கு ஏன் இவ்வளவு மூளை செல் கொடுத்தீர்கள்?

டாக்டர் ரெட்டி நேற்று தெரிவித்தார். “நாம் பெற்ற பேரின்பம் $10^{18}$ குவிண்டன்” ஆகும். அது அப்படி இருக்க இப்ப, இந்த சின்ன சின்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தோஷத்தில் சந்தோஷமா இருக்கப் போறீங்களா? அல்லது அந்த பேரின்பமா? அது தான் நீங்கள் கேட்க வேண்டிய கேள்வி. ஏனெனில் இதுவே நமது திறன். அதைத் தாண்டி இன்னும் பல விஷயங்களைச் செய்யும் திறன் நம்மிடம் உள்ளது.

இந்தப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தரை நான் வாழ்த்த விரும்புகிறேன் அவருக்கு தொலைநோக்கு பார்வை அவருக்கு இருந்தது. மற்றும் அந்த பார்வைதான் இந்த பல்கலைக்கழகத்தில் DARTS திட்டத்தை இணைத்திருக்கிறது. பல்கலைக்கழக மாணவர்கள் சமூகரீதியாக இணைக்கப்பட்டு உண்மையிலேயே சிறப்பாக செயல்பட்டால் அது இங்குள்ள பல மாணவர்களுக்கு உதவும். ஒரு இளைஞனாக நீங்கள் இளைஞர்களுக்கு பொறுப்பாக இருக்க கற்றுக்கொடுக்கிறீர்கள். சமுதாய வளர்ச்சிக்கு இதயமும் மனமும் கைகளும் தூண்டப்படாவிட்டால், பட்டம் பெற்று பின்னர் வேலைக்காக அலைவதில் அர்த்தமில்லை. இந்தப் பயணத்தை இந்தப் பல்கலைக்கழகம் தொடக்கி வைத்திருக்கிறது. எனவே நாம் வைத்திருக்கும் நம்பிக்கையை மாற்ற வேண்டும். இலங்கை மாநாடு எச்சரிக்கை மணி போல இருக்க வேண்டும். நாம் இப்போது எழுந்திருக்க வேண்டும். "ஜெபம் விஷயங்களை மாற்றுகிறது என்று நான் நம்பினேன். ஆனால் பிரார்த்தனை நம்மை மாற்றுகிறது, நாம் விஷயங்களை மாற்றுகிறோம் என்பதை இப்போது நான் அறிவேன்" - **அன்னை தெரேசா:. பிரார்த்தனை நம்மை மாற்ற வேண்டும். பதிலாக நாம் விஷயங்களை மாற்றுகிறோம்.**

நான் எங்கோ படித்தேன், போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபடும் அனைவரும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளனர். அவை ஒரு அமைப்பினுள் முறையாக தொழிற்படுகின்றன. யாரைப் பயிற்றுவிப்பது என்று அவர்களுக்குத் தெரியும். உண்மையில், அவர்கள் நிறைய தலைமைத்துவத்தை புகுத்துவார்கள். அவர்களுக்கு தலைமை இல்லை என்று நினைக்கிறீர்களா? பலர் ஒன்று கூடுகிறார்கள், அனைவருக்கும் விநியோகிக்கப்படுகிறது, நியாயமான விநியோகம், அமைப்பின் தலைமை பற்றி பேசுவது போதைப்பொருள் வியாபாரிகள். அவர்கள் தீய மக்கள். உங்களையும் என்னையும் போன்ற நல்லவர்கள், சுவாமியின் முன் அமர்ந்து "சமஸ்தா லோக சுகினோ பவந்து" என்று சொல்கிறோம். கடவுள் வந்து எங்களுக்கு உதவுவார் என்று எதிர்பார்க்கிறோம்.

நாம் இப்போது விழித்தெழ வேண்டும், நாங்கள் பணியை hack செய்கிறோம். "மகிழ்ச்சி என்பது கடவுளின் சங்கமம்." கடவுளின் சங்கமம் என்றால் என்ன? நீங்கள் தொடர்ச்சியான பார்த்து உணரும் அனைத்திலும் நான் இருக்கிறேன் என்பதை உணர்ந்து கொள்ளுங்கள் என்று அர்த்தம். அதை எப்படி செய்வது பாபா? உங்களுக்கு C I A (நிலையான ஒருங்கிணைந்த விழிப்புணர்வு) இருக்க வேண்டும் என்று சுவாமி கூறினார்.

சுவாமி! நீங்கள் அங்கே, நான் இங்கே. எனது 10 புலன்களை நான் பயிற்சி செய்ய வேண்டும். பின்னர் நான் ஒன்பது நடத்தை விதிகளை நடைமுறைப்படுத்த வேண்டும். நான் அஷ்டாங்க யோகா பயிற்சி செய்ய வேண்டும். பின்னர் நான் என் ஏழு நிலை உணர்வுகளை கடக்க வேண்டும். என் ஆறு எதிரிகளை வெல்ல வேண்டும். ஐந்து மனித விழுமியங்களை நடைமுறைப்படுத்த வேண்டும். நான்கு பாருஷத்திரங்கள் செய்ய வேண்டும். மூன்று குணங்களைக் கடக்க வேண்டும். ரஜ துவேச இரண்டின் மேல் சென்று ஆத்மாவை அடைய வேண்டும். பாபா நான் செய்ய வேண்டியது அதிகம். சுவாமி நான் இவற்றையெல்லாம் செய்ய வேண்டும். இது அவசியமா? இதையெல்லாம் நான் எப்படி நினைவில் கொள்வது சுவாமி? எல்லோரும் இங்கே இருக்கிறார்கள், நான் உங்களை நினைவில் கொள்கிறேன். ஆனால் நான் திரும்பிச் செல்லும்போது என் குடும்பம் இருக்கிறது, பிரச்சனைகள் இருக்கிறது, சமூகம் இருக்கிறது, எனக்கு வேலை அழுத்தம் அதிகம். ஸ்வாமி உங்களை எப்படி நான் தொடர்ந்து நினைவுகூருவது? தயவு செய்து இவற்றை விட நடைமுறையான ஒன்றை நீங்கள் எனக்கு கொடுக்க வேண்டும். என்னால் முடியும், ஆனால் என்னால் தொடர்ந்து உங்களை நினைவில் கொள்ள முடியாது.

பாபா **"ஷிரத்தா - உறுதியான நம்பிக்கை"** - ஷிரத்தா என்றால் என்ன? பாபா சொன்னது ஷிரத்தா இரண்டு விஷயங்களைக் கொண்டது. முதலாவது நீங்கள் ஏங்க (விருப்பம்) வேண்டும். நீங்கள் இங்கு வர விரும்பும் ஏக்கம் உங்களிடம் இருக்க வேண்டும், பின்னர் நீங்கள் மீதமுள்ளவற்றைப் பயிற்சி செய்யலாம். உங்களுக்கு ஷபரி மாதிரி ஏக்கம் இல்லாவிட்டால், ஊர்மிளா மாதிரி ஏக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாவிட்டால், எங்களுக்கு ஏக்கம் இல்லை என்றால் எதுவும் நடக்காது. இவையெல்லாம் வெறும் சடங்குகளாக மாறிவிடும். எனக்கு இறுதி ஏக்கம் இருக்க வேண்டும். என்ன? இந்த நதி (உடல்) இந்தக் கடலைச் சென்றடைய வேண்டும். நாளின் முடிவில் இந்த நதி என்ன சொன்னாலும் கடலை அடைய வேண்டும். இந்த நதி வேறு எங்கும் செல்லக்கூடாது, கடலை அடைய வேண்டும். இரண்டாவது நிலைத்தன்மை. இவை இரண்டும் ஷிரத்தாவை உருவாக்குகின்றன.

சுவாமி இது அருமை. உங்கள் சூத்திரம் (formula) எனக்கு கிடைத்தது. ஆனால் இதை நான் நினைவில் வைத்துக் கொள்ள ஒரு வழி சொல்லுங்கள். இரண்டு விஷயங்களை நீங்கள் மறக்கவே கூடாது. அவர்கள் மரணம் மற்றும் கடவுள். நீங்கள் சிறையில் இருந்து வெளியே வருவதற்கு முன், நீங்கள் சிறையில் இருப்பதை முதலில் உணர வேண்டும். இதனடிப்படையிலேயே முழு ஆன்மீக உணர்வும் வளர்ந்தது. "கடவுளே! நான் மிகவும் வரையறுக்கப்பட்ட வாழ்கைக்குள் இருப்பவன், நான் மிகவும் கட்டுப்படுத்தப்பட்டவன். நான் ஏன் இந்த சிறையில் இவ்வளவு தங்கியிருக்கிறேன்? நான் வெளியே வர வேண்டும்" என எண்ணினேன். நான் எப்போது வெளியே வர விரும்புகிறேனோ, அப்போது நான் இவற்றைப் பயிற்சி செய்வேன். அதனால்தான் குருவை விட முக்கியமானது இலக்கு என்று பாபா கூறினார். இந்த சிறையிலிருந்து வெளியே வர வேண்டும் என்ற இலக்கு எனக்கு இருக்க வேண்டும்.

பாபா கூறினார் "முக்தியை அளிக்கும் உயர்ந்த ஞானத்தை அடைய வேண்டும் என்ற உள்ளார்ந்த ஏக்கம் உள்ளவர்கள், மரணத்தின் நிகழ்வைப் பற்றி சிந்திக்க வேண்டும். மரணம் என்ற பயம் எழக்கூடாது, அதை அசுபமாக கருதக்கூடாது." இவை அனைத்தும் மரணத்தைப் பற்றியது. சக்திவாய்ந்த வேதங்கள். சுவாமி மரணம் பற்றி கூறுகிறார்.

மரணத்தை நினைக்காதவர்கள் யாரும் இருப்பவர்களாக கருதப்பட மாட்டார்கள் என்று வாஹினிகளில் பாபா கூறினார். "பாபா! நான் உன்னிடம் ஒன்று கேட்கிறேன். எனக்கு ஒரு சூத்திரம் கொடுக்க முடியுமா?" இந்த ஒரு சூத்திரம். நான் சிறு வயதிலேயே கண்டுபிடித்தேன். நீங்கள் இதை செய்யுங்கள், நீங்கள் ஒருபோதும் தவறு செய்ய மாட்டீர்கள், நீங்கள் ஒருபோதும் மறக்க மாட்டீர்கள், அனைத்து மந்திரங்களும் வரும், நீங்கள் உள்ளே சக்தியைக் காண்பீர்கள்.

இதுவே அந்த சூத்திரம். அதாவது நீங்கள் உறுதியான வேகமாக இருக்க வேண்டும், நீங்கள் ஏங்க வேண்டும், நீங்கள் நிலைத்தன்மையுடன் இருக்க வேண்டும். மரணமும் கடவுளும் நினைவுகூர வேண்டிய இரண்டு விஷயங்கள். எப்படி தொடர்ந்து பகவானை நினைவில் கொள்வது? நான் இந்த உலகில் வாழ வேண்டும். ஒரு மந்திர வார்த்தை, இந்த வார்த்தை உங்களுக்குத் தெரியும், அதுவே "பணி". இதைத்தான் நாம் தொடர்ந்து நினைவில் வைத்துக் கொள்ள முடியும். இந்த வாழ்க்கையில் ஒவ்வொரு நாளும் அவருடைய பணிக்காக வாழுங்கள்.

அதனால் பகவான் "என் நோக்கம் என்ன என்று என்னை கேட்டீர்கள்? உங்கள் நோக்கம் என்ன என்று நான் கேட்கட்டுமா?" என்றார். பாபா கூறினார், "எல்லா மனிதர்களையும் வளர்ப்பது மற்றும் அவர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சி நிறைந்த வாழ்க்கையையும் உறுதி செய்வது எனது ஒரு பணி" என்றார்.

உங்களில் எத்தனை பேர் காலையில் எழுந்ததும் உங்களுக்கு வாழ இன்னொரு நாள் கிடைத்ததில் மகிழ்ச்சி அடைகிறீர்கள்? "ஓ! இன்னும் ஒரு நாள். நீங்கள் உற்சாகமாக உணர்கிறீர்களா? அல்லது ஓ! இன்னும் ஒரு நாள் என் மாமியார் என்னுடன் வாழ்கிறார். மேலும் உங்களுக்கு பல்வேறு பிரச்சனைகள் உள்ளன என எண்ணி சலிப்படைகிறீர்களா? இன்றிலிருந்து உங்களிடம் ஒரு பணி இருக்கும்போது ஒவ்வொருநாளும் நீங்கள் மகிழ்ச்சியடைவீர்கள். அதனால்தான் வேண்டுமென்றே மனநிலை மாற்றத்தை ஏற்படுத்தும் செயலமர்வுகள் ஏற்பாடு செய்ய முடிவு செய்தோம். நம் உடலையும் மனதையும் எவ்வாறு கையாள்வது என்று நமக்குத் தெரியாதபோது, பெரிய தத்துவங்களைப் புரிந்துகொள்வதில் அர்த்தமில்லை. அதனால்தான் பயிலரங்குகள் உணர்ச்சி கட்டுப்பாடு, நிதி ஆதாரங்கள் பற்றியது. முதன்முறையாக, எந்தவொரு சாதனா முகாமிலும் நடைபெறாத விடயமான நிதி கல்வியறிவை நாம் அறிமுகப்படுத்தியுள்ளோம். அது ஏன்? ஏனென்றால் பக்தர்களே, உங்களுக்கு 4,000 மற்றும் 6,000 ரூபா தேவை இருந்தால், நீங்கள் பணத்தைப் பற்றி யோசித்துக்கொண்டிருப்பீர்கள், கடவுளைப் பற்றி எங்கே நினைப்பீர்கள்? எனவே, இப்போது நாம் எப்படி முதலீடு செய்யலாம்? நீங்கள் இதை எப்படி செய்ய முடியும்? உங்கள் மனதை எவ்வாறு ஒழுங்குபடுத்துவது? என தெரிந்து கொள்ள கூடியதாக இருந்திருக்கும்.

அதாவது நீங்கள் எந்த சூழ்நிலையிலும் நீங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்ச்சியாக இருக்கிறீர்கள் நீங்கள் மகிழ்ச்சியாக உணர்கிறீர்கள். அதனால் நீங்கள் இந்த உணர்வை மற்ற அனைவருக்கும் வழங்க முடியும். அதன்மூலம் அனைவரையும் மகிழ்ச்சியடையச் செய்யலாம். 364 நாட்களும் நீங்கள் மகிழ்ச்சியாக இல்லை, 365ஆவது நாள் நான் உங்கள் வீட்டிற்கு வந்து "உங்களுக்கு பிறந்தநாள் வாழ்த்துக்கள்" என்று கூறுகிறேன். என்ன பயன்? உங்கள் வாழ்க்கையில் ஒவ்வொரு நாளும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். ஏனென்றால் நீங்கள் சோகமாக இருந்தால், நீங்கள் கடவுளை அவமதிக்கிறீர்கள். நீங்கள் தனிமையில் இருந்தால் நீங்கள் கடவுளை அவமதிக்கிறீர்கள். நீங்கள் மனச்சோர்வடைகிறீர்கள் என்றால் கடவுளை அவமதிக்கிறீர்கள். ஏனென்றால் அவர் உங்களுடன், உங்களைச் சுற்றிலும், உங்களுக்குள்ளும் இருக்கிறார். நீங்கள் அதை உணர வேண்டும். நீங்கள் இதை எப்படி செய்கிறீர்கள்? டொக்டர் ரெட்டி, நான் சொல்ல வேண்டும். அரவிந்தன் எடுத்த காணொளி ஒன்றில் நான் பேசினேன். அந்த காணொளியை பார்த்த என் மனைவி நீங்கள் அந்த வீடியோவில் பொய் செல்லியிருக்கிறிர்கள் என்றார். நான் எந்தப் பகுதியில் பொய் சொன்னேன்? எனக் கேட்டேன். உங்கள் நேரத்தில் 80% சாயி அமைப்பிற்காக செலவிடுகிறீர்கள் என்று அவர்களிடம் சொன்னீர்கள். அது பொய். நீங்கள் 100% கொடுக்கிறீர்கள். நீங்கள் வீட்டில் இருந்ததில்லை. அவள் விரக்தியில் சொன்னாளா அல்லது பெருமைக்காக சொன்னாளா என்று தெரியவில்லை. அவள் அதை பெருமைக்காக சொன்னாள் என்று நம்புகிறேன். 100% எனது முழு இளமையையும் அந்த அமைப்புக்குக் கொடுத்தேன்.

அன்புள்ள நண்பர்களே!, நான் முற்றிலும் தோல்வியடைந்த ஒருவன் என்று உங்களுக்குத் தெரியுமா? நான் எனது உயர்தரப்பரீட்சையில் தோல்வியடைந்தேன். ஒட்டுமொத்த சமூகமும் நான் தொழில் என்ற ஒன்றில் இல்லை என்று முடிவு செய்து விட்டனர். தொழில் வழிகாட்டுதல் ஆலோசகர், அறிவியலை ஒருபோதும் எடுக்க வேண்டாம் என்று என்னிடம் கூறினார். ஆனால் நான் சென்று எனது தேர்வை மீண்டும் செய்தேன். நான் மீண்டும் தோற்றேன். நான் வந்து கதவைத் திறந்தபோது என் தந்தை அழுவதைக் கண்டேன். அவர் இந்தியராக இருப்பதால் நீங்கள் வழக்கறிஞராகவோ டாக்டராகவோ அல்லது பொறியியலாளராகவோ இருக்க வேண்டும். அவர் அழுவதை நான் பார்த்தபோது என்ன நடந்தாலும் அந்த நிமிடத்தில் இருந்து என் பெற்றோர் என்னை டொக்டர் என்று அழைப்பார்கள் என்று முடிவு செய்தேன். அப்போது அண்ணன் ஜெகா என் கல்லூரிக்குள் வந்து பேசியது என்னைக் கவர்ந்தது.

இந்த நேரத்தில் நான் ஏன் பேசுகிறேன், நான் எங்கே இருக்கிறேன் என்பதற்கு என் குருநாதர் அண்ணன் ஜெகதீஷ்தான் காரணம். என் நன்றி எப்போதும் உள்ளது. நீங்கள் என்னை என்னவாக பார்க்கிறீர்களோ அதை அவர்தான் உருவாக்கினார். அவர் வந்து பேசினார் நான் அவரைப் பின்தொடர்ந்து சாயி மையத்திற்குத் திரும்பினேன், அவரைப் பின்தொடர்ந்து பகவானிடம் சென்றேன். அந்த தருணத்திலிருந்து, மொத்தம் 100% நான் சாயி பணியில் இருந்தேன். பிலி பாங் எனது தேசிய இளைஞர் தலைவராக இருந்தார். நான் அவருக்கு துணையாக இருந்தேன். சகோதரர் ஜெகா எங்களை பேட்மேன் என்றும் ராபின் என்றும் அழைப்பார். பேட்மேன் யார், ராபின் யார் என்று நாங்கள் இன்னும் விவாதித்து வருகிறோம். ஆனால், நாங்கள் நாடு முழுவதும் சுற்றி, எல்லா வகையான விஷயங்களையும் செய்து வந்தோம். எங்களிடம் இணையம் இருக்கவில்லை எங்களிடம் தொலைபேசி இருக்கவில்லை, ஆனால் நாங்கள் இந்த சேவையை தொடர்ந்து செய்துவந்தோம். எமது முழு இளமையும் சாயியின் பணிக்கு வழங்கப்பட்டது.

இளைஞர் யுவதிகளே! இன்று இந்த பல்கலைக்கழகத்தில் வாழ்க்கையின் இரகசியத்தை உங்களுக்கு கூறுகிறேன். "இந்த பணிக்கு (Mission) உங்கள் வாழ்கையை அர்ப்பணியுங்கள், சத்திய சாயி நிறுவனத்திற்கு உங்கள் வாழ்கையை தொடுங்கள், அதன்பின்னர் உங்கள் வாழ்க்கை எங்கு செல்கிறது என்பதைப் பாருங்கள். நீங்கள் வெற்றியின் உச்சத்தை அடைவீர்கள், வாழ்வில் உயர்ந்த நிலையை அடைவீர்கள். ஒவ்வொரு முறையும் நான் விருது வாங்கும்போது என்னை நினைத்து நானே சிரிப்பேன். ஏனென்றால் எனது திறமை எனக்குத்தானே தெரியும். நான் தேசிய இளம் விஞ்ஞானி விருது உட்பட சுமார் 20 ற்கும் மேற்பட்ட விருதுகளையும் பெற்றேன். இதற்கெல்லாம் காரணம் அவன் அருளே. நான் சகோதரர் Billy Fong வார்த்தைகளைப் பின்பற்றினேன். அவர் ஒரு தெரு நாயை தெரு விளக்காக மாற்றக்கூடியவர். எனவே, சரியான பாதையில் இருந்து விலகிச் செல்லும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவரையும் நல்வழியில் அழைத்துச் செல்வதாக நான் சபதம் செய்துள்ளேன். நான் இப்போது நல்ல பாதையில் செல்ல வேண்டும்.

அன்பான பக்தர்களே! நீங்கள் உறுதிமொழி ஒன்றை இன்று எடுத்துக் கொள்ளுங்கள். இளைஞர்களின் உறுதிமொழி அவர்களையும் மக்களையும் மாற்றுகிறது, இளைஞர்களின் மாற்றம், அவர்கள் சிறந்த மனிதராக மாற உதவுகிறது. நீங்கள் மக்களைச் சிறந்தவர்களாக ஆக்கும்போது உங்கள் வாழ்க்கை எப்படிப் போகிறது என்பதைப் பார்ப்பீர்கள்.

இறுதியாக பாபா கூறிய ஒரு விடயத்தைக் கூறுகின்றேன். அதாவது பகவான் பாபா "நல்ல பாதையில் இருந்து விலகிச் செல்லும் அனைவரையும் நல்வழியில் அழைத்துச் சென்று அவர்களைக் காப்பாற்றுவேன் என்று நான் சபதம் செய்துள்ளேன்" எனக் கூறியுள்ளார். இந்த பணிக்காக (Mission) உங்கள் வாழ்க்கையை அர்ப்பணிக்கவும். தினமும் காலையில் எழுந்ததும் பாபா நான் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும்? அது என்ன பாபா? எனக் கேளுங்கள். இது ஒரு உடைமை. எல்லா உடைமைகளிலும் கடவுள் உடைமையே சிறந்தது.

அன்பு சகோதர சகோதரிகளே! இந்த சத்ய சாயி அமைப்பு இல்லாவிட்டால் வாழ்வு இல்லை. வேறொரு கப்பல் வந்து அதற்குள் மாறி ஏறுமாறு சொன்னால், அவர்களுக்கு கூறுங்கள் அந்தக் கப்பலில் நீங்கள் எங்கே போகிறீர்களோ நானும் அங்கேதான் போகின்றேன். கவலைப்படாதீர்கள் நான் உங்களை அங்கே சந்திக்கிறேன் என்று. நீங்கள் சொல்ல வேண்டியது அவ்வளவுதான். குழப்பமடைய வேண்டாம். உங்கள் காரியத்தில் உறுதியாக இருங்கள். சபரி மாதிரி இங்கேயே இருங்கள். இங்கேயும் அங்கேயும் குதிக்க வேண்டாம். ஏனென்றால் அப்படிப் பட்டவர்களைத் தான் குருக்களும் ஆசிரியர்களும் தேடுவார்கள். ஏனெனில், நாங்கள் அவதாரத்தின் பணியை நிறைவேற்றவந்த அர்ப்பணிக்கப்பட்ட ஆத்மா. தூய ஆத்மா!

ஜெய் சாயிராம்

தொகுப்பு :
சகோதரி ஜோதினி செல்வானந்தன்
பருத்தித்துறை சாயி நிலையம்










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்வி பதில் நிகழ்வு (30.09.2023)

நெறியாளர் : திரு. வி. மனோகரன்
அணியினர் : Dr. நரேந்திரநாத் ரெட்டி
திரு. மனோஜ்குமார் சிங்
திரு. கிருஷ்ணமூர்த்தி வெங்கட்ராமன்
திரு. அரவிந் பாலசுப்ரமண்யா
Dr. ரமாதேவிசங்கரன்
சகோதரி அனுராதா வெங்கடேஸ்வரன்

**கே :** எவ்வாறு கடவுளின் அண்மையையும் அருமையையும் அடையலாம்?
**ப :** அருமைதான் இதில் முக்கியம். பகவத்கீதை 12ஆவது அத்தியாயத்தில் பக்தனின் குணாதிசயங்கள் சொல்லப்பட்டுள்ளன. முதற் பண்பு ஒருவரிலும் வெறுப்புக் கொள்ளாமையேயாகும். சேற்றில் வளரும் தாமரை போல உலகுடன் ஒட்டாமல் உலகில் வாழப் பழகவேண்டும். குளத்திலுள்ள தவளை போலல்லாமல் தேனீ போல் வாழவேண்டும். அன்பே எல்லாவற்றிற்கும் அடிப்படையாகும்.

**கே :** எவ்வாறு மனதைக் கட்டுப்படுத்தலாம்? புலன்களைக் கட்டுப்படுத்துவது எப்படி?
**ப :** மனம் பித்துப் பிடித்த குரங்கு. இதை கீர்த்தனம். நாமம், சங்கீர்த்தனம் ஆகியவற்றால் கட்டுப்படுத்தலாம். தொடர்ச்சியான அப்பியாசம் தேவை. சிறுமி இதே கேள்வியைக் கேட்க, சுவாமி சைபிக்கிள் ஓடப் பழகுவது போல் பயிற்சி செய்யவேண்டும் என்று கூறினார். விவேகமும் வைராக்கியமும் தேவை.

**கே :** சேவைக்கு சாதனைகளில் ஏன் முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது ?
**ப :** சேவை பலரைக் கவரக்கூடியது. பாரபட்சம் அற்றது. எமது அகங்காரத்தை அழிக்கும் தன்மையுடையது. பெரிய உத்தியோகத்திலுள்ள சேவாதள்கள் பிரசாந்தி நிலையத்தில் மலசலகூடம் சுத்தம் செய்வதில் ஈடுபடுவார்கள். எங்களில் விரைவாக உன்னத மாற்றத்தை ஏற்படுத்தும்.
சகல நோயாளிகளையும் சுவாமி ஆசீர்வதிப்பவர். சேவையினால் எங்களில் அன்பு விசாலமடையும். "நிறுவனத் தலைவர்களை சேவை செய்யும்படி பணித்து ஆசீர்வதிக்கின்றேன். பலனை எதிர்பாராமல் செயற்படவேண்டும்" என சுவாமி கூறியுள்ளார்.
எல்லாம் சுவாமிதான் என்பதை மறந்துவிடுகிறோம். ஒருமுறை பக்தன் ஒருவர் சுவாமியைத் தன் வீட்டிற்கு வரும்படி அழைத்தார்.
சுவாமி : அது யாருடைய வீடு?
பக்தர் : அது எங்களுடையது
சுவாமி : ஆகா இதென்ன வியாபாரமா? 50க்கு 50
பக்தர் : இல்லை சுவாமி, உங்களுடையதுதான்.
சுவாமி : என்னை என் வீட்டிற்கு வரவேண்டும் என்று ஏன் அழைக்கவேண்டும்? நான் எங்கும் எப்போதும் உள்ளேன்.

**கே :** சுவாமி எங்களுடன் எப்போதும் இருக்கிறார்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதை எவ்வாறு தெரிந்துகொள்ளலாம் ?

ப : ஒருவர் சுவாமியுடன் கடற்கரையில் போகும்போது இரண்டு சோடி கால் சுவடுகளை அவதானித்தார். அவர் கஷ்டத்தை அனுபவிக்கும் போது ஒரு சோடி அடிச் சுவட்டைத்தான் கண்டார். அவர் சுவாமியிடம், ஏன் சுவாமி நான் கஷ்டத்தில் இருக்கும்போது கைவிட்டீர்கள்? என்று கேட்டார். சுவாமி, "நீ கண்ட அடிச் சுவடு என்னுடையது. நான் உன்னை என்மீது சுமந்து சென்றேன். இது உனக்குத் தெரியவில்லை" என்று சொன்னார்.

**கே** : மனித விழுமியங்களைப் பின்பற்றுவதால் எவ்வாறு ஆரோக்கியம் பேணப்படும் ?

**ப** : வியாதிகளைக் கண்டுபிடிக்கவும் அவற்றைத் தீர்க்கவும் ஆற்றலைத் தருகின்றன. (Dr. ரமா) நான் வைத்தியசாலையில் உள்ளே சென்றதும் "சர்வம் சாயி மயம்" என்ற உணர்வுகள் மேலோங்குகின்றன. என்னிலிருந்து அன்பு என்னும் சக்தி நோயாளியிடம் அடைகின்றது. இது அவர்களின் நோய் எதிர்ப்பு வல்லமையைக் கூட்டுகிறது.

வேலை செய்யும்பொழுது ஏனைய உத்தியோகத்தர்களில் நல்ல மனப்பாங்கு மேலோங்குகிறது.

(கிருஷ்ணமூர்த்தி) மனித விழுமியங்கள் ஆபத்து நேரங்களில் எம்மைப் பாதுகாக்கும். எனக்கு இதய வலி ஏற்பட்டதும் மனைவி காரை ஓட்டி வைத்தியசாலைக்குள் நுழைந்ததும் இதய சிகிச்சை நிபுணர்கள் ஆயத்தமாக நின்றார்கள். தாமதம் ஏதுமின்றி சிகிச்சை வழங்கப்பட்டது.

**கே** : சாயி பக்தர்கள் ஏன் தாடி, மீசையை சவரம் செய்திருக்கவேண்டும்? சீரடி சாயி பாபா தாடி வைத்திருந்தாரே! இதற்கும் ஆன்மீகத்திற்கும் என்ன தொடர்பு ?

**ப** : (அரவிந்) சபுரி அன்னையின் செயற்பாட்டைப் பின்பற்றவும். மாதங்க முனிவர், இராமபிரான் தரிசனம் தருவார். இந்த ஆச்சிரமத்திலேயே இரு என்று சொன்னதை அப்படியே பின்பற்றினார். குருவின் வார்த்தையை மாற்றுவது குருவை மாற்றுவது போலாகும்.

ஒருமுறை ஒரு இளைஞர் அணி கஷ்டப்பட்டு பிரசாந்தி நிலையம் வந்தார்கள். அவர்களுக்கு நீண்ட தலைமுடியும் மீசையும் இருந்தது. சுவாமி அருகே வந்து ஏதோ சொல்லவேண்டும் என்று நினைத்தாலும் பின்பு ஒன்றும் சொல்லாமல் போய்விட்டார். இவ் இளைஞர்கள் அதன் அர்த்தம் புரிந்து அடுத்தநாள் மீசை, தாடி, தலைமுடி வழித்துவிட்டு வந்திருந்தார்கள். தரிசனத்தின்போது சுவாமி அருகில் வந்ததும் தாங்கள் சுவாமி விரும்புவதையே செய்வோம் என்றும், தாங்கள் தாடி மீசையிலும் பார்க்க சுவாமி மீதே அன்பு கொண்டுள்ளோம். சுவாமியும் அவர்களை ஆசீர்வதித்தார். கடவுளுக்காக நாம் சகலதையும் செய்யவேண்டும். குரு சொன்னபடியே நடக்கவேண்டும். சில சந்தர்ப்பங்களில் மாணவர்களை தாடி மீசை வளர்க்க விட்டுள்ளார். முக்கியமாக தோல்வியாதி, ஒவ்வாமை வியாதி உள்ளவர்களுக்கு விதிவிலக்கு அளித்தார்.

(Dr. ரமாதேவி) மேற்கூறிய பதிலைத் தொடர்ந்து சுவாமி பெண்பிள்ளைகளுக்கும் தலைமுடியை விரித்து அரக்கியர் போல வரவேண்டாம் என்று சொல்லியுள்ளார் என்று கூறினார்.

**கே** : பலர் சேவை செய்வதில் ஆர்வம் காட்டினாலும் பொறுப்பு ஏற்றுக்கொள்ள முன்வருவதில்லை. ஏன்?

**ப** : (ரெட்டி) உலகெங்கும் இந்த நிலை காணப்படுகிறது. பதவி ஏற்கவிருப்பமில்லை. பலவந்தமா அல்லது மூலாதாரமான கடவுளா முக்கியம் என்பதை தெளிவுபடுத்தவேண்டும். சுவாமியே, நீங்கள் உங்களை எனக்கு அர்ப்பணித்தால் மிகுதியெல்லாம் தரப்படும் என்று சொல்லியுள்ளார்.

**கே** : விதி ஒழுங்குமுறையைத் தலைவருக்குத் தெரியாமல் மீறலாமா ?

**ப** : விதிமுறைகளுக்கு உள்ளே, உயர் நிர்வாகிக்குத் தெரியாமல் சூழ்நிலை காரணமாகச் செய்யலாம். எப்போதும் பொறுப்பதிகாரிக்கு அறிவித்தே எதையும் செய்யவேண்டும்.

**கே** : சாயி ஆன்மிகக் கல்வியை எவ்வாறு விரிவுபடுத்தலாம்? பெற்றோர் இக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. என்ன செய்வது?

**ப** : கல்வியின் நிறைவு ஒழுக்கம். இத்துடன் அறிவுத் திறனும் சேர்ந்தால் மிகவும் விசேடம். குருமார் முன்மாதிரியாகத் திகழவேண்டும். குருவாக இருப்பதே அதியுயர் ஆசீர்வாதம். பிள்ளைகள் இக் கல்வியைப் பின்பற்றினால் ஆனந்தமாக ஒழுக்கமாக திறனுடையவர்களாக வளர்வார்கள்.

ஜெய் சாயிராம்

"தன்னம்பிக்கையையும் ஒழுக்கத்தையும் வளர்த்து ஒருவனைச் சொந்தக் காலில் நிற்க வைக்கும் கல்வியே தற்போது தேவை"
– சுவாமி விவேகானந்தர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சிறிசற்குணராஜா அவர்களின் உரை



இந்த பூமி மிகவும் தனித்துவம் வாய்ந்தது. நான் ஒரு கணிதவியலாளன். ஹாக்கினின் கோட்பாட்டிற்கு அமைவாக இவ் அண்ட சராசரமானது ஒரு குறிப்பிட்ட புள்ளியிலிருந்து பெரு வெடிப்பு கோட்பாட்டின் ஊடாக உருவாகியது. இதிலிருந்து பஞ்சபூதங்கள் உருவாகின. அதில் முதலாவதாக உருவாகியது ஆகாயம். நேரத்திற்கும் ஆகாயத்திற்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதை ஐன்ஸ்டீன் விஞ்ஞானி கூறுகிறார். கிருஷ்ணர் உபதேசித்த கீதையில் மிக முக்கியமான ஸ்லோகம் தர்ம ஸ்தாபனாய என்பதாகும். கிருஷ்ணர் தன்னுடைய பக்தர்களை தீயவர்களிடமிருந்து காப்பதற் காகவும் தர்மத்தை நிலை நாட்டுவதற்காகவும் யுகம் யுகமாக அவதரித்திருக்கிறார். யுகம் என்பது காலம். காலம் மனித வாழ்க்கையில் பெரிய பங்கு வகிக்கிறது. சனாதன தர்மத்தின் அடிப்படையில் காலம் என்பது சுழற்சிக்கு உட்பட்டது. இன்று 60 ஆண்டுகளை கடந்து வைர விழா கொண்டாடும் ஸ்ரீ சத்ய சாயி சர்வதேச நிறுவனத்தின் தலைவரான Dr. ரெட்டி அவர்களை வாழ்த்துகிறேன். இவ்விழாவை கொண்டாடு வதற்காக யாழ். பல்கலைக்கழகத்தை தேர்ந் தெடுத்தமைக்காக நான் பெருமைப்படுகிறேன்.

ஆதியும் அந்தமும் இல்லாத இறைவனை எளிதில் புரிந்து கொள்வது கடினம். எனவேதான் கிருஷ்ணரை அறிந்து கொள்வதும் கடினமாகவே இருக்கும். அவர் தனது சகோதரியான மாயையுடன் இப்புவியில் அவதரித்தார். ஆகவே அவரைப் புரிந்து கொள்வது மிகவும் கடினம். என்னுடைய குரு ஒரு கதை சொல்லுவார். அதாவது நாங்கள் எல்லோரும் சம்சார கடலை நீந்தி கரையேறுவதற்காகவே இந்த புவியில் பிறந்திருக்கிறோம். விஞ்ஞானத்தில் பூமியைப் போன்ற ஒத்த கிரகம் இன்னும் கண்டு பிடிக்கப்பட வில்லை. ஆனால் சனாதன தர்மம் பூமியைப் போல மூன்று விதமான லோகங்கள் உள்ளன என கூறுகிறது. அவை யாவன பாதாள லோகம், மத்திய லோகம், மேலோகம் ஆகும். இம் மூன்று லோகங்களிலும் வெவ்வேறு விதமான உயிரினங்கள் காணப்படுவது போலவே வெவ்வேறு நிலையிலான பக்தர்கள் இங்கு குழுமியிருக்கிறார்கள். இங்கு அவர்கள் ஒவ்வொருவரும் தர்மத்தை உணர்ந்து இறைவனை அடையும் ஒரே நோக்கத்துடன் குழுமி இருக்கிறார்கள். தர்மம் என்றால் என்ன? உயிரினங்கள் அனைத்தின் இருப்பையும் தக்கவைத்துக் கொள்வதே தர்மம் ஆகும். உயிரினங்களின் இருப்பை அழிக்கும் அல்லது துன்புறுத்தும் செயல்கள் அதர்மம் ஆகும். 30 வருட காலமாக இந்த யாழ். மண் அதர்மத்தை எதிர்கொண்டு சொல்லொணா துயரை அனுபவித்தது. இந்த பௌதிக உடல் ஆனது நமக்கு நமது தாய் தந்தையரால் கொடுக்கப்பட்டது. மிகவும் விசித்திரமானது புதுமை மிக்கது. மேலும் இவ் உடலில் உள்ள ஆன்மாவை புரிந்து கொள்வது மிகவும் கடினம். கீதையில் மட்டுமே இவ் ஆன்மா மறைமுகமாக விளக்கப்படுகிறது. உதாரணமாக எவ்வாறு விகிதமுறா எண்களை விவரிக்க முடியாதோ அவ்வாறே ஆன்மாவையும் வரை விலக்கணப் படுத்த முடியாது. ஆன்மாவுக்கு கிருஷ்ணர் கொடுக்கும் வரைவிலக்கணம் ஆனது "எது ஒன்று எரிக்கவோ, வெட்டவோ, பார்க்கவோ, உணரவோ முடியாததோ அது ஆன்மாவாகும்". அது ஒரு ஜடப்பொருள் அல்ல. நாங்கள் எல்லோரும் இந்த பௌதிக உலகத்தில் மாயையுடன் வாழ்கின்றோம். இந்த உலகத்தில் 7 ஆயிரம் பில்லியன் மக்கள் வாழ்கிறார்கள். அவர்களுள் பகவான் பாபாவை பற்றி அறிந்தவர்கள் பாபாவுடன் நெருங்கிய தொடர்புடன் இருப்பவர்கள் புண்ணியவான்கள். நாரதமுனிவர் கூறியவாறு தம்முடைய முன்னைய பிறப்பின் புண்ணியத்திற்கு அமைவாகவே நல்லவர்களின் சேர்க்கை இருக்கும். அதேபோல் நீங்கள் செய்த புண்ணிய காரியங்களின் விளைவாகவே பகவானின் அதாவது இறைவனின் சேர்க்கை உங்களுக்கு கிட்டி இருக்கிறது. பகவான் பாபா எங்களுடைய இருப்பை தக்கவைத்துக் கொள்வதற்காகவே இந்த பூமியில் அவதரித்திருக்கிறார். சனாதன தர்மத்தில் அகஸ்திய முனிவரால் அருளப்பட்ட சித்த வைத்தியம் எமது பௌதிக உடலின் இருப்பை தக்கவைத்துகொள்ள உதவுகிறது. மேலும் உள்ளார்ந்த அறிவு சார்ந்த இருப்பை தக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்துக்கொள்ள பல சாஸ்திரங்கள், வேதங்கள் மற்றும் புராணங்கள் உள்ளன. அதுமட்டுமல்ல உணர்வு சார்ந்த இருப்பை தக்கவைத்து கொள்ள தெய்விக நடனம், தெய்வீக இசை, தெய்வீக கலை என்பன உள்ளன. சமூக இருப்பை தக்கவைத்துக் கொள்ள இறைவன் கிராமங்களை உருவாக்கினார். ஆனால் மனிதனோ நகரங்களையே உருவாக்கினான். புட்டபர்த்தி கூட ஒரு கிராமமே.

பிறப்பின் பின்னதான வாழ்க்கையைப் பற்றியும் சனாதன தர்மம் கூறுகிறது. அதையே நாங்கள் இறுதி இலக்கு என்று கூறுகிறோம். அதற்காகவே நாங்கள் அனைவரும் முயற்சி செய்கிறோம். பகவான் பாபா சனாதன தர்மத்தை ஸ்தாபிப்பதற்கு 1926இல் இப்பூமியில் அவதரித்து 85 ஆண்டுகள் எம்முடன் வாழ்ந்திருக்கிறார். நாம் இப்பூமியில் பிறந்ததற்கான நோக்கத்தை ஒரு குட்டிக்கதை மூலம் கூறுகிறேன். நான் வடக்கு நோக்கி நடந்து சென்றால் 25 ஆயிரம் கிலோமீட்டருக்கு அப்பால் சென்ற பின்னரும் அதே இடத்திற்கு வந்து சேருவேன். அதேபோல் மேல் நோக்கி சென்றாலும் ஒரு கிலோ மீட்டருக்கு அப்பால் என்னால் செல்ல முடியாது. ஒட்சிசன் இல்லாததால் மீண்டும் திரும்பி வரவேண்டி ஏற்படும். ஆகவே நாம் அனைவரும் இந்த திறந்த சிறைச்சாலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இந்த திறந்த சிறைச்சாலையில் இருந்து விடு படுவதற்காக நம்மை நாமே பண்படுத்து வதற்காகவே நாம் அனைவரும் இங்கு கூடி இருக்கிறோம். நாம் எல்லோரும் யோகமாயின் செயல்பாடு காரணமாக இப்புவியில் அவதரித்திருக்கிறோம். மனித குலம் ஒன்றே தற்கொலை செய்ய கூடிய ஒரே ஒரு உயிரினம். மற்றைய விலங்குகள் ஒன்றேனும் தற்கொலை செய்வதில்லை. அண்மைக்காலத்தில் பல்கலைக்கழகத்தில் தற்கொலை முயற்சிகள் அதிகம் இடம் பெறுகின்றன. இதை கருத்தில் கொண்டு பேராசிரியர் சுரேஷ் கோவிந்த் அவர்கள் எம்முடன் இணைந்து மாணவர்களிடையே பண்பியல் கல்வி தொடர்பான விளக்கம் அளிப்பதற்காக எம்மோடு இணைந்துள்ளார். அதாவது இந்த அலைபாயும் மனதை ஒருநிலைப்படுத்துவது மிகவும் முக்கியமான ஒரு காரியம் ஆகும். மனம் ஒரு திடமான வரைவிலக்கணம் அற்றது. மனம் ஆனது எமது ஆத்ம சக்தியின் ஒரு பகுதி என்று ரமண மகரிஷி கூறுகிறார். அலைபாயும் மனதை ஒருநிலைப் படுத்த தெரிந்தால் நாம் மகிழ்ச்சியாக இருக்கலாம். இதைப்பற்றி நான் உங்களுக்கு கூற வேண்டிய தேவை இருக்காது. இறைவனோடு நெருங்கிய தொடர்பில் இருக்கும் உங்களுக்கு மனதை கட்டுப்படுத்தி ஒருநிலைப்படுத்துவது மற்றும் பேரின்பத்தை அடைவது பற்றியும் நன்றாகவே தெரியும். சனாதன தர்மம் இதனையே போதிக்கிறது. சனாதன தர்மத்தை ஆன்மிக அறிவின் மூலம் அறியலாம். ஆனால் தற்காலத்தில் விஞ்ஞான ரீதியான அறிவும் மெய்ஞான ரீதியான அறிவும் சரிசமமாக செல்ல வேண்டிய தேவை இருக்கிறது. ஆனால் பல்கலைக்கழகங்களில் விஞ்ஞான அறிவு போதிக்கப்பட்டாலும் மெய்ஞான அறிவு போதிக்கப்படுவதில்லை. இதனால் மெய்ஞான அறிவை உணர்வதற்கு பண்பியல் கல்வி முக்கியமாகிறது. தற்கால மாணவர்கள் தொழில்நுட்ப அறிவில் சிறந்து விளங்குவதால் பல்வேறு விதமான தகவல்களை பல்வேறு முறை மூலம் பெற்றுக் கொள்கிறார்கள். அவர்களது ஆன்மிக அறிவை வளர்க்க வித்தியாசமான அணுகுமுறையானது கையாளப்பட வேண்டும். ஆகவே இந்த திறந்த சிறைச்சாலையில் மிகவும் முக்கியமான விடயமாக நாம் முதலில் ஒரு குருவை பின்பற்றி எம்மை நாமே பண்படுத்தவும் உயர்த்தவும் முயற்சிக்க வேண்டும்.

யாழ். பல்கலைக்கழகம் இந்த மாபெரும் நிகழ்ச்சியை நடத்துவதற்காக தேர்ந்தெடுக்கப் பட்டது நமது பாக்கியமே. நடக்க இருப்பது இறைவனின் சித்தம். அதாவது இங்கே வீற்றிருக்கும் திரு. சிவராம் எமது மூதவையின் உறுப்பினர் மற்றும் மனோகரனும் அவருடைய குழுவும் எம்முடன் நெருங்கிய தொடர்பை பேணிக் கொண்டிருக்கிறார்கள். அண்மையில் பேராசிரியர் சுரேஷ் கோவிந்த் அவர்களை நமது மருத்துவ பீடம் வரவழைத்து பண்பியல் கல்வி தொடர்பாக மாணவர்களுக்கு இடையேயான விழிப்புணர்வை ஏற்படுத்தும் பணிமனை தொடர் ஒன்றை நடத்துவதற்கு ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச் சாத்திடப்பட்டது. மேலும் நமது பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகத்தில் மூன்று நாள் தலைமைத்துவ கருத்தரங்கு நடைபெற்றது. இவை யாவும் நமது பல்கலைக்கழகத்திற்கு பெருமைசேர்க்கும் விடயமாக உள்ளன. 30 வருட கால யுத்தத்தின் பின்னர் இந்த பத்து வருடங்களில் மீண்டு எழுந்த எமக்கு ஆன்மிக தாகத்தை தீர்ப்பதும் மாயையில் இருந்து விடுபடுவதும் மிகவும் முக்கியமாகும். நாம் யாவரும் ஆன்மிக தாகத்தை தீர்க்க தக்கன செய்து இறை அருளை பெற ஆவன செய்வோமாக.

நன்றி

தொகுப்பு:
அகல்யா செகராஜா
யாழ். சாயி நிலையம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாநாட்டின் முடிவுரை (30.09.2023)

## தலைவர் Dr. நரேந்திரநாத் ரெட்டி

அன்புடனும் நன்றியுணர்வுடனும் பகவானின் பொற்கமலப் பாதங்களில் எனது சமர்ப்பணங்கள். மதிப்புக்குரிய பெரியோர்களே! மதிப்புக்குரிய துணைவேந்தர் அவர்களே! அன்பான சகோதர சகோதரிகளே! எல்லோருக்கும் சாயிராம்.

எம் எல்லோரையும் இங்கு ஒன்றுகூடவைத்து அன்பையும் ஞானத்தையும் எண்ணங்களையும் பகிர்ந்துகொள்ள வைத்ததற்கு பகவான் சாயிக்கு எமது இதயபூர்வமான நன்றிகள்.

இம் மாநாட்டைத் திட்டம்போட்டு அனைத்தையும் ஒழுங்கு செய்தவர்களுக்கும் தொண்டர்களுக்கும் நிறுவன அங்கத்தவர்கள் எல்லோருக்கும் நன்றிகள். சமையலறை தொடக்கம் அரங்கு வரைக்கும் சேவை செய்த சேவாதள்கள் அனைவருக்கும் நன்றி. பக்தர்களுக்கு சேவை செய்வதும் பக்தர்களின் சேவையாளருக்கு சேவை செய்வதும் மிகவும் மேன்மையானதாகும். ஏனென்றால் பக்தனும் கடவுளும் ஒன்றேயாவர்.

மாநாடு நடந்த இடம் மிகவும் அழகானது. இது சோலை போலவும் குளிர்மையாகவும் இருந்தது. இப் பல்கலைக்கழக வளவில் பெரிய சிவன் கோவில் உள்ளது. இதுவும் ஒரு தனிச் சிறப்பு. துணைவேந்தர் சற்குணராசா அவர்கள் பெயருக்கேற்ப நல்ல குணாதிசயங்களைக் கொண்ட அரசராகவே விளங்கினார். என்னைக் கோயிலுக்கு கூட்டிச் சென்று பிரார்த்தனை செய்து பஞ்சபுராணத்தையும் பாடினார். அவரின் இச் செயலை மிகவும் விரும்பி சிவன் தனது பிரசன்னத்தை தனது சிலையிலிருந்த இரண்டு பூக்களை விழுத்திக் காட்டினார். அவர் பக்தி, ஞானம், கர்மமாகிய மூன்று மார்க்கங்களையும் ஒன்று சேர்த்து செயற்பட்டார். அவர் தனது உரையில் கடவுள் அவதரிக்கும்போது மாயையுடன் அவதரிப்பார். கிருஷ்ணபரமாத்மா கீதையில் இந்த மாயையை வெல்வது கடினம் என்று கூறியுள்ளதை நினைவுபடுத்தினார். ஸ்ரீராமரின் வனவாசத்தின்போது லட்சுமணனும் போயிருந்தார். லட்சுமணன், ஸ்ரீராமருக்கு அருகில் போக முடியாமல் இடையில் சீதாபிராட்டி நின்றார். சீதாபிராட்டியை மாயைக்கு ஒப்பிடுவார்கள். **மாயையை வெல்வதற்கு கடவுளிடம் பூரண சரணாகதி அடைவதே ஒரேயொரு வழியாகும்.**



சுவாமி உலகியல் அறிவிற்கும் எஜுகெயருக்கும் உள்ள வித்தியாசத்தை கூறியுள்ளார். சாதாரண கல்வி, தரவுகளை புத்தகங்கள், புத்திமூலம் கொடுத்து அறிவைப் பெருக்குகிறது. ஆனால் எஜுகெயர் என்ற விழுமியக் கல்வி உன்னத மாற்றத்தை ஏற்படுத்தும். இதில் மனித விழுமியங்கள், எண்ணம் சொல் செயல் மூலம் வெளிப்படும். தெய்வம் எங்கும் உள்ளதென்பதை வெளிப்படுத்த ஒரு நிகழ்வு:

ஒரு புவியியல் நிபுணருக்கு சின்ன கல் ஒன்றை கொடுத்து இது என்ன? என்று சுவாமி கேட்டார். புவியியலாளர் தனது அறிவிற்கு எட்டியபடி சிலிக்கோனால் ஆனது என்று சொன்னார். கவனமாகப் பார்க்கச் சொன்னதும் கிருஷ்ணரின் உருவமாக மாறியது. வாயில் போடச் சொன்னார். போட்டதும் இனிமையான கற்கண்டாக மாறியது. கல்லிலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வீகமும் இனிமையும் உள்ளதென்பதைக் காட்டியுள்ளார்.
சுவாமி எமது இதயத்தில் வீற்றுள்ளார். காயத்ரீ மந்திரத்தை இதயபூர்வமாக ஜெபிக்கும்பொழுது புத்தி பிரகாசிக்கும். உள்ளிருக்கும் பிரகாசமும் வெளிப்படும்.
சுவாமியின் பல நிகழ்வுகளையும் கதைகளையும் கேட்பதே பகவானின் பாகவதம் ஆகும். பரீட்சித் மகாராஜா ஸ்ரீமத் பகவதத்தைக் கேட்டு முக்தியடைந்தாரோ நாமும் சுவாமியின் பகவதத்தை வாசித்தோ அல்லது கூறக்கேட்டோ முக்தி அடையலாம். **இது பக்தி மார்க்கம்.**
பகவானின் சாயி நிறுவனங்கள் பல சேவைகளை பல நாடுகளில் செய்கின்றன. நாம் அவர்மீது நம்பிக்கை கொண்டால் எங்களை ஊக்குவித்து சேவையும் செய்ய சந்தர்ப்பங்களையும் அளிப்பார். அதாவது நாம் அனைவரையும் நேசித்து அனைவருக்கும் சேவை செய்யவேண்டும். **இதுவே கர்மமார்க்கம்.**
சுவாமியின் போதனைகளைக் கேட்டு விளங்கிப் பின்பற்றவேண்டும். கடைசி இலக்கான அத்வைத நிலையை அல்லது எல்லாம் ஒன்று என்ற நிலையை அடையவேண்டும். **இதுதான் ஞான மார்க்கம்.** ஷீரடி சாயி பாபா சொன்னார், "சுவாமியிடம் ஞானத்தைத் தரச் சொல்லிக் கேட்கத் தேவையில்லை. நீங்களே ஞானம். மறைந்திருக்கும் முகில்களை (அஞ்ஞானத்தை) அகற்றினால் ஞானம் பிரகாசிக்கும்" என்று கூறியுள்ளார்.
பக்தியில் சரணாகதி முக்கியம்.
கர்மத்தில் தன்னலமற்ற சேவை முக்கியம்.
ஞான மார்க்கத்தில் சுயபரிசோதனை முக்கியம்.
அதாவது நான் யார்? எங்கிருந்து வந்தேன்? எங்கு போகிறேன்? என்ற பரிசோதனை.
தன்னலமற்ற சேவை தன்னை உணரும் ஞானத்தைத் தரும்.
சுவாமி! எங்களுக்கு உம்மீது வலிமையான அன்பைச் செலுத்த எம்மை ஆசீர்வதியுங்கள். தன்னலமற்ற சேவை செய்ய ஆசீர்வதியுங்கள்.

ஜெய் சாயிராம்.

## சுதந்திரம் என்றால் என்ன?

உண்மையான சுதந்திரம் எது? எதை வேண்டுமானாலும் எங்கு வேண்டுமானாலும் செய்வதா சுதந்திரம்? தன்னை அறிவதுதான் சுதந்திரம். ஆத்மானந்தம் சுதந்திரம். புலனடக்கம் சுதந்திரம். மற்றவர்களின் சுதந்திரத்தைத் தடை செய்யாதிருப்பது சுதந்திரம். தனிமனித சுதந்திரம் பொதுச் சட்டத்தை கவனித்து நடப்பது சுதந்திரம். சுதந்திரம் என்று சொல்லி நடுத்தெருவில் அமர்வது பொதுச் சட்டத்தை மீறுவதாகும். இது சுதந்திரம் அல்ல.

## ஒரு பக்தனின் செய்தி

சுவாமி உங்களுக்கு எந்த வேலையைக் கொடுத்தாலும் அனுமானைப் போல அதைச் செய்ய எப்போதும் தயாராக இருக்கவேண்டும். நாம் அனைவரும் அவருடைய நித்தியமான எல்லையற்ற அருளைப் பெறுவதற்கான ஒரே வழி இதுதான்.

சனாதன சாரதி, நொவெம்பர் 2016

## தேசிய சேவைத் திட்டம்



**புற்றுநோயாளர் காப்பகம்**
**ஹன்வல, மகரகம**

**வைத்திய சேவையை நோக்காகக் கொண்டு 2002 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப் புற்று நோயாளர் காப்பகம் மகரகமவிலிருந்து 20 கி.மீ தொலைவிலுள்ள ஹன்வல எனும் இடத்தில் அமைந்துள்ளது. இதில் வழங்கப் படும் சேவைகள் அனைத்தும் இலவசம். இச் சேவைத்திட்டத்தில் நீங்களும் பங்கு கொள்வதுடன் சாயி சேவையில் உங்களையும் கருவியாக்கிக் கொள்ளலாம்.**

தொடர்புகளுக்கு:
தொலைபேசி: 0094 715 678 332
E mail - info@ssiosrilanka.org
Web: www.ssiosrilanka.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முழவுரை

அஷோக் சக்ரானி (Chairman - Zone 05)

அனைவருக்கும் ஓம் ஸ்ரீ சாயிராம்.
சில நேரங்களில் மூன்று நாட்களின் இறுதியை நோக்கி செல்வது நன்மையானது அல்ல. காலப் போக்கில் உங்கள் வாழ்க்கையோட்டத்தில் நீங்கள் ஓடிக் கொண்டிருக்கும்போது இந்த மூன்று நாட்களின் ஞானம் உங்களிடம் இருப்பதை அறிவீர்கள்.

"என் வாழ்க்கை - சுவாமியின் செய்தி" இது பக்தர்களுக்கான ஒரு அற்புதமான மாநாடு. ஏனென்றால், நம் அன்பிற்குரிய சுவாமிகள் நமக்கு விட்டுச்சென்ற கொள்கைகள் மற்றும் நடைமுறைகளைப் போதிக்கும் செல்வத்தை அது வழங்கியிருக்கிறது. sai.org மூலம் நேரடி ஒளிபரப்பில் உலகம் முழுவதும் இதை நீங்கள் அனைவரும் பார்த்து வருபவர்களே!

நான் கூறியது போல எமது குரு எமக்கு அளித்த வழிமுறைகளை எமது பேச்சாளர்கள் மூலமும் நடைமுறைகளை கருத்தமர்வுகள் மூலமும் பகிரப்பட்டுள்ளன. எமது பேச்சாளர்கள் இந்த தலைப்பில் தமது அறிவாற்றலை வெளிப்படுத்தியுள்ளனர் எனக் கூறலாம். சுவாமியுடைய கோட்பாடுகளை இவர்கள் எமக்கு மிக அழகாகக் கூறியுள்ளனர்.

இங்கு நிகழ்ந்த எல்லா பேச்சுக்களிலும் ஒரு ஒத்த கரு வெளிப்பட்டது. இங்கு நடந்த பேச்சுக்களின் கருப் பொருளை சொல்லுவதற்கு நான் சில நிமிடங்களை எடுத்துக் கொள்கிறேன். இது நீங்கள் எடுத்துச் செல்ல இலகுவாக இருக்கும்.

நிறைய சொல்லப்பட்டுள்ளது. நான் சிலவற்றை மேற்கோள் காட்டுகின்றேன். இந்த மூன்று நாட்கள் நாங்கள் கேட்டவை, சுவாமியின் அருளுரையுடன் ஆரம்பித் தோம். சுவாமி நிறைய சொல்லி யிருந்தார். ஆனால் நான் சில கருத்துக்களைச் சொல்கிறேன்.

வாழ்விலுள்ள புனிதத்துவத்தையும் ஆன்மிக த்தையும் நாம் முன்னர் அறியவில்லை. முழுப் பொறுப்புடன் நடந்து கொள்வோம்.



ஒரு உண்மையான மனிதனாக வாழ்கையை வழி நடத்துங்கள். மற்றும் அன்பான சுவாமியின் தெய்விக அனுபவமாக மாறுங்கள்.

சகோதரர் மனோஜ் சொல்லியிருந்தார், மாற்றம், நிகழ்வுகள் மாற்றும் எண்ணங்கள் மூலம் வர முடியும். மேலும் அந்த கருத்துக்களைப் பற்றி சிந்திக்குமாறு உங்களை கேட்டுக்கொள்கிறேன், ஏனெனில், டொக்டர் ரெட்டி, சுவாமி பல முறை சொன்னது தகவல் இல்லை ஆனால் மாற்றம் பற்றி என்றார். மற்றும் எளிதான பட்டறை ஒன்றை நடத்தும் பாக்கியம் எனக்கு கிடைத்தது. மற்றும் கோபத்துடன் பிறந்தால் கோபத்துடன் இறப்போம். இந்தப் பிறவியை உன்னத மாற்றத்திற்குப் பயன் படுத்துவோம் என்று நான் எப்போதும் பகிர்ந்து கொண்டேன்.

தியாகத்தால் மட்டுமே நாம் ஒழுக்க முள்ளவர்களாக மாற முடியும் என்று சுவாமியின் அருமையான மேற்கோளுடன் சகோதரர் மனோஜ் முடித்தார். தலைவர் ரெட்டி தனது தொடக்க உரையில் வாழும் அவதாரத்தின் சம காலத்தவர்களாக நாம் இருப்பது எவ்வளவு பாக்கியம் என்பதை நம் அனைவருக்கும் நினைவூட்டினார். 1968 ஆம் ஆண்டு மே 17 ஆம் தேதி சுவாமியின் சொற்பொழிவுகளுக்கு அவர் கவனம் செலுத்தினார், அவர் மூன்று விடயங்களைக் குறிப்பிட்டார். நான் மூன்றாவதை முன்னிலைப்படுத்த விரும்புகிறேன். நமது உண்மையான இயல்பை உணர்ந்து, அதை நம் எண்ணங்கள், வார்த்தைகள் மற்றும் செயல்களில் வெளிப்படுத்துவதும், மற்றவர்களுக்கு உதவுவதும்தான் இந்த அமைப்பின் நோக்கமாகும், மேலும் நமது உண்மையான இயல்பை நாம் எப்படி உணர்வது என்று சொல்லாட்சியாகக் கேட்டார் டொக்டர் ரெட்டி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் சுவாமியின் வாழ்க்கையின் சாராம்சத்தை நினைவுபடுத்துகிறார். மேலும் அவர் 1996 இல் சுவாமியின் சொற்பொழிவில் கவனத்தை ஈர்த்தார், அப்போது சுவாமி நான் நித்தியமானவன், ஆனால் அதற்குப் பிறகு நாம் அனைவரும் அழியாமையின் குழந்தைகள். பின்னர் காயத்ரீ மந்திரத்தைப் பற்றிப் பேசிய ரெட்டி, இது புத்தியை ஒளிரச் செய்யும் மந்திரம் என்றும், ஜெபிப்பதே நம்மைக் காக்கும் என்றும், அதைச் சிந்திப்பதன் மூலம் உங்கள் உயிர் மீட்கப்படும் என்றும் கூறினார். சுய உணர்தலுக்காக காயத்ரீயின் சக்தியைப் பயன்படுத்துங்கள், அப்போது எங்களிடம் சகோதரி ரமாதேவி கூறியிருந்தார், அவர் எளிதாக முக்கிய திட்டத்தைப் பற்றி பேசினார். "நான் சொன்னபடியே அவள் சென்றாள்". நாமும் கடவுள் என்று மிகத் தெளிவாகச் சொல்வதன் மூலம் அதுவே இச் செயலமர்வின் அடிப்படையாகும்.

ஜெய் சாயிராம்

23.11.1926 பிறந்த நாள் பரிசு

இந்த பிறந்த நாளில் சுவாமிக்கு என்ன பரிசு கொடுக்கலாம் என்று நீங்கள் யோசிப்பீர்கள். சக மனிதர்கள்மீது அன்பு செலுத்தி அவர்களின் துன்பங்களைப் பகிர்ந்துகொண்டு அவர்களுக்கு சேவை செய்வதில் ஈடுபட்டால் மட்டுமே சுவாமிக்கு சரியான பரிசைக் கொடுத்துள்ளதாக மகிழ்ச்சியடையமுடியும்.



**மாநாடு நிறைவடைந்த பின்பு சில சாயி நிலையங்களில் விசேட உரைகள் ஒழுங்கு செய்யப்பட்டன.**

| | | |
|---|---|---|
| 01.10.2023 | யாழ். சாயி நிலையம் | திரு. கிருஷ்ணமூர்த்தி வெங்கட்ராமன் |
| | பருத்தித்துறை நாவலடி கடற்கரை | திரு. அரவிந்த் பாலசுப்ரமண்யா |
| 02.10.2023 | தண்ணீரூற்று சாயி நிலையம் | திரு. அரவிந்த் பாலசுப்ரமண்யா |
| 02.10.2023 | கல்முனை சாயி நிலையம் | திரு. அரவிந்த் பாலசுப்ரமண்யா |
| 03.10.2023 | யாழ். சாயி நிலையம் | திரு. அரவிந்த் பாலசுப்ரமண்யா |
| 04.10.2023 | தலவாக்கல சாயி நிலையம் | சகோதரி அனுராதா வெங்கடேஸ்வரன் |
| 05.10.2023 | கொழும்பு சாயி நிலையம் | தலைவர் நரேந்திரநாத் ரெட்டி |
| 06.10.2023 | கொழும்பு சிவானந்த நிலையம் | சகோதரி அனுராதா வெங்கடேஸ்வரன் |

## விதியா? மதியா?

குரு : ஒரு காலைத் தூக்குங்கள்

சாதகன் : இடது காலைத் தூக்கினார்

குரு : மற்றக் காலையும் தூக்குங்கள்

சாதகன் : என்னால் தூக்க முடியாது

குரு : முதல் எந்தக் காலைத் தூக்குவது என்று தீர்மானம் எடுத்தது மதி. அந்த சுதந்திரத்தினால் பின்பு மற்றக் காலைத் தூக்க முடியாததுதான் விதி. மதியா? விதியா? என்று யோசிக்காமல் உங்களால் முடிந்த செயல்களைச் சிறப்பாகச் செய்து உங்களை உயர்த்திக் கொள்ளுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீண்டகால சாயி சேவையில் தம்மை அர்ப்பணித்தமைக்கான கௌரவ விருது அளிக்கும் நிகழ்வு (30.09.2023)

ஸ்ரீ லங்கா சத்திய சாயி, தேசிய சபையின் தலைவர் சகோதரர் ஹரிதர்ஷன் கீழ்வரும் கூற்றுடன் இந்நிகழ்வை ஆரம்பித்துவைத்தார்.

ஓம் ஸ்ரீ சாயிராம். பல வருடங்களுக்கு முன்பு கொடைக்கானலில் சுவாமி திடீரென ஒரு மாணவரைப் பார்த்துக் கேட்டார்,

"உலகில் எது மிகவும் அரிதாக உள்ளது?

மாணவர்கள் மௌனமாக இருந்தார்கள்.

சுவாமி கூறியது, "அவதாரம் வாழும் போது உலகில் வாழ்வது அரிது. அவரை இனங்கண்டுகொள்வது இதனிலும் அரிது. அவர்மீது அன்பு கொள்வது மேலும் அரிது. அவரின் பணியில் பங்குபற்ற கிடைக்கும் சந்தர்ப்பம் எல்லாவற்றிலும் மேலாக அரிதானது".

நாம் இன்று 40 வருடங்களுக்கு மேலாக சுவாமியின் சேவையிலீடுபட்டு சாயி நிறுவனத்தில் பல பதவிகளை வகித்தவர்கள் சிலரை கௌரவிக்க கூடியுள்ளோம்.

பட்டியலில் இருந்து பெயர்களை வாசிக்க சேவையாளர்கள் மேடைக்கு வந்து விருதைப் பெற்றுக்கொண்டார்கள். சமுகமளிக்காதவர்களுக்கு அந்தந்த நாட்டு நிர்வாகிகளுக்கூடாக விருது அனுப்பிவைக்கப்பட்டது.

கௌரவிக்கப்பட்டவர்களின் பட்டியல் :

**From Thailand**
Sis Kamlesh Jagota
Sis Angela Loraine Burrows
Dr. Art Ong Jumsai Ayudhya

**From Indonesia**
Pak Phoa Krishnaputra
Pak Pritam Kishordas Gurbani
Pak Mohan Leo

**From Sri Lanka**
Bro. K. Thevanantham
Bro. K. V. Sivanesan
Bro. A. Jeganathan
Dr. V Jeganathan
Sis. Kamalishini Selvaraja
Sis. Chandrawathani Govindaraj
Bro. K. Karthigesupillai
Late Bro. T Kulaveerasingam
Bro. S. R. Saravanabavan
Sis. Mathivathani Saravanabavan
Sis S. R. Madugalle
Bro Tissa Karunaratne
Sis Ira Thilakaratna

**From Philippines**
Bro Rene Emata

**From Singapore**
Bro Palanivelu Suntharanathan

**From Malaysia**
Mr. R Ramachandran.
Prof Dr. Suresh Govind
Bro Tan Suei
Bro Cheah Woon Kwong









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வம் சாயி மயம்- கண்காட்சி

மகாநாட்டின் பிரதான எண்ணக்கருவான "எமது வாழ்க்கை அவரது செய்தி" என்பதை விளங்கப்படுத்தும் முகமாக ஆறு வேறுபட்ட சிந்தனையைத் தூண்டும் காட்சிக்கூடங்கள் ஒழுங்கமைக்கப்பட்டன. 40இற்கும் மேற்பட்ட சாயி இளைஞர்கள் அவர்களின் பிராந்தியம் அடிப்படையில் ஒன்றிணைந்து சாயி ஆன்மீகக் கல்வி மாணவர்களையும் உள்வாங்கி இவ் ஆறு காட்சிக்கூடங்களையும் வடிவமைத்தனர். இவை பின்வரும் விடயங்களை மக்களுடன் பகிரத் தயாராக இருந்தன.

1. பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் வாழ்க்கை வரலாறும் அதன்மூலமான அவரது செய்திகளும்
2. பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் போதனைகளில் ஒன்றான 5 மனித விழுமியங்கள்
3. பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் போதனைகளைப் பின்பற்றுவதில் உள்ள சவால்கள்
4. ஆன்மிகமும் விஞ்ஞானமும்
5. சத்ய சாயி நிறுவனங்களின் நோக்கமும் செயற்பரப்பும் (Vision & Mission)
6. பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா எமது பார்த்த சாரதி.

இக் கட்டுரை காட்சிக்கூடங்கள் ஒவ்வொன்றைப் பற்றியுமான சிறு குறிப்புரைகளை உள்ளடக்கி வடிவமைக்கப்படுகின்றது.

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் வாழ்வில் நடந்த தெரிவு செய்யப்பட்ட நிகழ்வுகளை முப்பரிமான ஓவியங்களாக காட்சிப்படுத்தியிருந்தார்கள். பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் பூலோக பிரவேசம், அன்றிரவு வீட்டில் நிகழ்ந்த அற்புதங்களான இசைக்கருவிகள் தாமே ஒலித்தமை மற்றும் ஆதிஷேசனின் மெத்தை, தொடர்ந்து அவதாரப் பிரகடனம், முதல் பஜனைப் பாடல், கற்பகவிருட்சம், பண்டரி பஜன் கோஷ்டி மற்றும் சிறுவயதில் சுவாமி பிறருக்கு செய்த சேவைகள் என்பன சித்தரிக்கப்பட்டிருந்தன. இவை பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் அவதாரம் எவ்வாறு நிகழ்ந்தது மற்றும் அவதாரத்தின் நோக்கம் பற்றியும் பகவானின் எளிய முன்னுதாரணமான வாழ்க்கை முறைபற்றியுமான புரிதலை பார்வையாளர்களுக்கு ஏற்படுத்தியிருந்தன.

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் போதனைகளில் ஒன்றான சத்யம், தர்மம், சாந்தி, பிரேமை, அகிம்சை எனும் 5 மனித விழுமியங்களை புகைப்படங்கள், ஓவியங்கள், ஒலிப்பதிவுகளுடன் கட்டமைப்பு ஒன்றையும் காட்சிப்படுத்தியிருந்தனர். அதில் பிரேமை (அன்பு) எனும் அடிப்படை மனித விழுமியத்திலிருந்து
அன்பினால் பேசுவோம் - சத்யம்
அன்பினால் செய்வோம் - தர்மம்
அன்பினால் சிந்திப்போம் - சாந்தி
அன்பினால் விளங்கிக்கொள்வோம் - அகிம்சை
என விளங்கப்படுத்தி இருதயத்தில் நிறைந்த அன்பினால் வெளிப்படும் சத்யம் (தாமரைப் பூ), தர்மம் (தர்மச்சக்கரம்), சாந்தி (சமாதானப் புறா) மற்றும் அகிம்சை என்னும் விளக்கு என்பவற்றை கட்டமைத்து அழகாக காட்சிப்படுத்தினார்கள்.

சுவாமியின் போதனைகளைப் பின்பற்றுவதில் எமக்கு ஏற்படும் சவால்களை எவ்வாறு எதிர்கொள்வது என்பது பற்றி மூன்றாவது குழு "வாழ்க்கை ஒரு விளையாட்டு, விளையாடிவிடு" என்ற (Life is a game play it) தலைப்பில் பகவானின் 5D கொள்கையைக் காட்சிப்படுத்தியிருந்தனர். இந்த விளையாட்டு ஒரு வீட்டினரை கட்டியெழுப்புவது தொடர்பானது. இவ்வீடு பகவானின் அன்பு எனும் அடித்தளத்தாலும் கூரையாலும் பாதுகாப்பாக அமைக்கப்பட்ட 5 தூண்களை உடையதாகும். இவை ஒரு நிமிட விளையாட்டாக ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது.

1. Dedication தரப்பட்ட சவாலை/ சந்தர்ப்பத்தை முகங்கொடுக்க நம்மை ஏற்புடையவராக ஆக்குதல்

(Swami says give your availablility, I will give you ability) இதற்காக முடிச்சுக்கள் நிறைந்த






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கயிறு ஒன்றை அவிழ்க்குமாறு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

2. Devotion பக்தி எவ்வாறான சவால்/ சூழ்நிலை/ சந்தர்ப்பங்களானாலும் அவற்றில் கடவுளைத் தேடும் அல்லது இறுதி நோக்கத்தை அடைவதைத் தேடும் சுய விருப்பமே பக்தி என்றும் இதற்காக வழங்கப்பட்ட அட்டையில் உள்ள உருவத்தைத் தரப்பட்ட பொருட்களை மட்டும் பயன்படுத்தி அமைக்குமாறு விளையாட்டு அமைத்திருந்தனர். இதன் இறுதியில் கோபிகைகள் கிருஷ்ணரை எல்லாவற்றிலும் கண்டார்கள் என்ற கதையை விளக்கிக் கூறினார்கள்.
3. Discipline ஒழுக்கம் - ஒரு சந்தர்ப்பத்தை/ சவாலை/ சூழ்நிலையை தரப்பட்ட நெறி/ ஒழுக்கக்கோவைக்கு உடன்பாடாகக் கையாளவேண்டும். எனில் நாம் எமது ஒவ்வொரு செயல்களினையும் உன்னிப்பாக அவதானித்துச் செய்ய வேண்டும். இதற்கு "சுவாமி சொல்கிறார் செய்யுங்கள்" என்ற விளையாட்டை அமைத்திருந்தார்கள்.
4. Discrimination பகுத்தறிவு நாம் சவால்களை எதிர்கொள்ளும்போது எமக்கு நிறைய தீர்வுகள் நோக்கிய பாதைகள் தென்படலாம். அவற்றில் கலங்காது மிகவும் சரியான நேர்மையான சுவாமி விரும்பும் பாதையைத் தேர்ந்தெடுப்பதே பகுத்தறிவு என்பதை Case scenarios சந்தர்ப்பங்களை வழங்கி 4 விடைகளில் சரியானதை தெரிவு செய்யக்கூடிய Quizboard காட்சிப் படுத்தியிருந்தனர். இதற்கு ஜனக மகாராஜாவின் கதையையும் கூறினார்கள்.
5. Determination திடசங்கற்பம் - மேற்குறித்த நான்கு D களையும் பின்பற்றி வாழ்வின் சவால்களை வெற்றிகொண்டு இறுதியிலக்கை அடைவேன் என ஒத்திகை பார்க்குமாறு இவ் விளையாட்டு அமைந்தது. வலது கையால் தலையில் தட்டியபடியும் இடதுகையால் வயிற்றில் தடவியபடியும் "ஓம்" எனும் மந்திர உச்சாடனத்தைச் செய்யச் சொன்னார்கள்.

விளையாட்டுகள் அனைத்தும் குறித்த நேரத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டு அனைவருக்கும் நிற அளவீடு வழங்கப்பட்டது. 5 வர்ண தூண்களோடான வீட்டை அனைவரும் கட்டி முடித்தனர்.

விஞ்ஞானமும் ஆன்மிகமும் என்ற 4ஆவது பகுதி உடலில் உள்ள 7 சக்கரங்களும் அவற்றின் அமைவிடங்கள் மற்றும் தொழில்களை விளக்கிக்கூறி பின்னர் அவை எவ்வாறு எமது







உடலுறுப்புகளுடன் தொடர்புபட்டு மனிதனின் உடல் உள ஆரோக்கியத்தில் பங்கெடுக்கின்றது என்பதை காட்சிப்படுத்தியிருந்தனர். இறுதியில் பார்வையாளர்கள் அமைதியாக தியானத்தில் ஈடுபட ஒரு இடம் வழங்கப்பட்டது. அவர்கள் கண்காட்சியில் பார்த்ததை சுவாமியுடன் தொடர்புபடுத்தி அனுபவிக்க அச்சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

இறுதியில் சுவாமிதான் எமது பார்த்தசாரதி எனும் **விமானப்பயணம்** ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது. இதில் சுவாமி விமானியாக இருந்து பயணம் செய்வோருடன் உரையாடிக்கொள்வார். காயத்ரீ மந்திரத்துடன் தொடங்கிய பயணம் விமானியின் அறிவுறுத்தலுக்கு அமைய விமானியை முழுமையாகச் சரணடைந்து ஆசனப்பட்டி அணிதல், தயார்படுத்தல் என்பவற்றைப் பின்பற்றி பயணித்து முடியும் வரை அவரது வழிகாட்டல்களை பின்பற்றி பயணமுடிவில் பகவானின் ஆசிமழையில் நனைந்து ஆனந்தப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருவெள்ளத்தில் மூழ்கடித்தனர். இதில் விமானி, விமான உதவியாளர்களாக பாலவிகாஷ் பிள்ளைகள் பங்கெடுத்தனர். 23 இருக்கைகளை உடைய இவ் Sai Airlines தான் எமது வாழ்க்கையும் என்று கூறி இக் கூட்டத்தினர் தமது காட்சியை நிறைவு செய்தனர்.

பிறப்பிலிருந்து இறப்புவரை தொடக்கத்திலிருந்து முடிவுவரை இவ் 6 காட்சிக் கூடங்களும் பகவானின் செய்திகளை மனம் நெகிழ்ந்து உணர்ந்து எளியமுறையில் விளங்கிக்கொள்ள உதவியிருந்தன. அவ்வகையில் இச் செயற்பாடு பாலவிகாஷ் சிறுவர்கள், இளைஞர்கள் பெரியவர்கள் மற்றும் முதியவர்கள் என அனைவராலும் இரசிக்கப்பட்டது என்றால் மிகையாகாது. இச் சந்தர்ப்பத்தை வழங்கிய பகவான் பாபாவின் பாதார விந்தங்களில் இக் குறிப்புரையை சமர்ப்பிக்கின்றோம்.

ஜெய் சாயிராம்
யாழினி சண்முகநாதன்
யாழ்ப்பாண சாயி நிலையம்.



**Conference Comperors**
Bro. Ruwan Mapa SL
Sis. Sai Shruthi SL
Bro. Atchchuthan SL
Sis. Hobidal Shah - Singapore

**பெருமிதம்**

"உன்னை நீயே பாராட்டக் கற்றுக்கொள். உன்னுடைய பெருமையை தற்பெருமையாக அல்ல, பெருமிதமாக நினைக்கக் கற்றுக்கொள;"

Aum Sri Sairam

## Concluding Prayer at the Conference on 30.09.2023

Dear Mother Sai !, with hearts brimming with gratitude, we stand before you once more as your children enriched by the experiences we had in this spiritual journey.

We offer our deepest gratitude for the love you have poured into our hearts, for the wisdom you have imparted for unity for aligning our thoughts and mind within your Divine Core as your istruments in your service.

We adore reflecting on the journey of our days at this conference. Dear Swami !, we are overwhelmed by the depth of experience we have shared. We thank you for the moments of enlightenment, the bonds of brotherhood & sisterhood and the profound Teaching that have enriched our lives at the Radiant Feet.

We express our gratitude for blessing this conference, a tapestry of Love, Learning and Devotion as we conclude this beautiful chapter.

Dear Swami, we pray that you continue to guide us. illuminate our paths, and Bless us with the strength to live as embodiments of your Divine Message.

- SSSIO devotees



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 2025 ஆம் ஆண்டு எதிர்வரவுள்ள சுவாமியின் 100ஆவது அவதாரதினத்தை முன்னிட்டு சத்திய சாயி சர்வதேச நிறுவனம், வலயம் 4 இனால் எடுக்கப்பட்ட தீர்மானங்கள்

### கல்வி

1. சாயி ஆன்மிகக் கல்விமாணவர்கள் மற்றும் சாயி மனித மேம்பாட்டுக் கல்வி மாணவர்களின் விரிவாக்கம்
    - சாயி ஆன்மிகக் கல்வி – தற்போதுள்ள 5059 எண்ணிக்கையிலிருந்து 10,000 இற்கு அதிகரித்தல்.
    - சாயி மனித மேம்பாட்டு கல்வி - தற்போதுள்ள 962 எண்ணிக்கையிலிருந்து 1,500 இற்கு அதிகரித்தல்.
2. பின்வருவனவற்றிற்கு ஒரு நிலையான பாடத்திட்டத்தை அமைக்கவேண்டும்
    - சாயி ஆன்மிகக் கல்வி
    - ஆசிரியர் பயிற்சிவழிகாட்டி
    - வலயம் 4 நாடுகளுக்காக பெற்றோரியல் வழிகாட்டிகள்
3. வலயம் 4 நாடுகளில் மேற்கொள்ளப்படும் மனித மேம்பாட்டு திட்டங்கள் அல்லது படிப்புகளை முடித்தவுடன் அனைத்து மாணவர்களுக்கும் ஒரு சர்வதேச சான்றிதழை வழங்கவேண்டும்.
4. சத்ய சாயியின் பணியை நிறைவேற்ற அந்தந்த சாய் மையங்களில் ஈடுபடும் 1000 செயலில் உள்ள முன்னாள் மாணவர்களை நிறுவுதல்.

### இளைஞர்கள்

(இந்த உறுதிமொழிகள் யாவும் வலயம் 4 நாடுகளின் இளைஞர் இணைப்பாளர்களால் மேற் கொள்ளப்பட்டது.)

1. எல்லா நாடுகளிலும் செயற்திறன் கொண்ட இளைஞர்கள் உருவாக்கப்பட வேண்டும் என்பது எமது விருப்பம்.
2. எல்லா நாடுகளிலும் வாஹினி தொடரை கல்வி வட்டங்களில் கலந்துரையாடுவதற்கு ஆர்வமுள்ள இளைஞர்கள் இருப்பதை உறுதி செய்யவேண்டும்.
3. எல்லா நாடுகளிலும் பெண் இளைஞர் அணியினர் இளம் வயது கற்பங்களைத் தடுப்பதற்கான விழிப்புணர்வுகளை பாடசாலைகளில் செய்வதை உறுதி செய்யவேண்டும்.
4. எல்லா நாடுகளிலும் போதை, புகைப்பிடித்தல், மது, உறவுமுறைகளில் வரும் பிரச்சினைகள் மற்றும் நேர வீண்விரயம் என்பவற்றிற்கான விழிப்பணர்வு நிகழ்வுகள் நடத்தப்பட வேண்டும்.
5. மிருகங்களைப் பாதுகாப்பதற்கான செயற்திட்டங்களை செயற்படுத்தவேண்டும்.
6. பின்தங்கிய அல்லது கிராமப்புற குழந்தைகளுக்கு ஆங்கிலக் கல்வி ஊடாக மாற்றத்தை ஏற்படுத்துவதன் மூலம் சாயி மனித மேம்பாட்டு கல்விக்கு உதவுதல்.
7. எல்லா நாடுகளிலும் மரநடுகை செயற்திட்டத்தை செயற்படுத்தல்.
8. சுற்றுச் சூழல் தூய்மை மற்றும் அதற்கான விழிப்புணர்வு மூலம் மீள் சுழற்சி செயற்திட்டத்திற்கு உதவுதல்.
9. ஒவ்வொரு நாட்டிலும் தலைமைத்துவம் தொடர்பான செயற்திட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருப்பதை உறுதிசெய்தல்.
10. ஒவ்வொரு நாட்டிலும் வருடாந்தம் விளையாட்டுப் போட்டி நடைபெறவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்மீகம்

1. வலயங்களின் எல்லா நாடுகளிலுமிருந்து குறைந்தது 500 பக்தர்களாவது தினமும் 108 காயத்ரீ மந்திரம் உச்சாடனம் செய்யவேண்டும் என்பது எல்லா நாடுகளும் எடுத்துக் கொண்ட உறுதிமொழி.
2. இலங்கையில் ஸ்ரீ ருத்ர ஏகாதசினி உச்சாடனம் செய்யப்படுகின்றது.
3. 100 நாட்களுக்கு அஷ்டோத்திரம் உச்சாடனம் செய்யப்படுகின்றது.
4. 100 நாம லிகித புத்தகங்கள் எழுதிமுடித்தல்

தியானம்

- தியானத்தை நடத்துவதற்கு 100 பயிற்சியாளர்களை பயிற்றுவிக்கவேண்டும்.
- ஒவ்வொரு நாட்டிலுமிருந்தும் 100 சிறுவர்களுக்கு ஜோதி தியானம் பயிற்சி அளிக்கவேண்டும்.

பஜனை

100 பயிற்றுவிக்கப்பட்ட பஜனைப் பாடகர்களை நிகழ்நிலை பயிற்சி மூலம் பயிற்றுவிக்க வேண்டும்.

கல்விவட்டம்

1. கற்பதற்கும் இதயத்தை தூய்மையாக்குவதற்கும் சுவாமியின் 100 சொற்பொழிவுகளை கல்விவட்டங்களில் கலந்துரையாடவேண்டும்.
2. சுவாமியின் 100 அமுதமொழிகள் மொழிபெயர்க்கப்பட வேண்டும்.
3. வலயங்கள் ரீதியான கல்விவட்டங்களில் இணைபவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும்.

Reaching Out

1. மலேசியா மற்றும் சிங்கப்பூரில் ஆலயங்களில் ஆன்மிக சாதனாக்கள் செய்யப்படுகின்றது.
2. பிலிப்பைன்ஸில் தேவாலயங்களில் ஆன்மீக சாதனாக்கள் செய்யப்படுகின்றது.

சாதனா முகாம்கள்

1. ஒவ்வொரு நாடுகளும் தங்கள் பக்தர்களுக்காக வலயங்களால் தயார்படுத்தப்பட்ட சாதனா முகாம்களை நடத்தவேண்டும்.
2. ஆன்மிக மாற்றத்திற்கான முன்னேற்றங்கள் தேசிய ஆன்மிகத் தலைவரால் மதிப்பிடப்பட்டு கண்காணிக்கப்படும்.
3. அனைத்து மையங்களிலும் பக்தர்களின் வளர்ச்சியை இயல்பாக்குவதற்கு ஆன்மிக இணைப்பாளர்கள் ஆன்மிக பயிற்சித் திட்டங்களை செயல்படுத்துதல்.

# சேவை

மருத்துவம்

1. 130 மருத்துவ முகாம்களை ஒழுங்குசெய்தல்.
2. இரத்ததானம் மூலம் 1400 லீற்றர் இரத்தம் கொடுக்கப்பட வேண்டும்.
3. 5000 விழிவெண்படல சத்திரசிகிச்சைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.
4. பெருமூளை நோயினால் பாதிக்கப்பட்ட 100 நோயாளிகளுக்கு உடற்பயிற்சி சிகிச்சை (Physiotherapy) செய்யப்பட வேண்டும்.
5. இலங்கை மகளிர் அணியினரால் 100 கர்ப்பிணித் தாய்மார்கள் கவனிக்கப்படல்.

சமூகசேவை

1. 34 கிராமங்கள் தத்தெடுத்தல்.
2. தேவையானவர்களுக்கு 108 சக்கர நாற்காலி வழங்கல்.
3. 1000 மூக்குக்கண்ணாடிகள் வழங்கல்.
4. 3700 நபர்களுக்கு நாராயண சேவை செய்தல்.
5. 1000 people to be trained with mental wellbeing skills by the 23rd of November 2024, in Zone 4

சுற்றுச் சூழல்

1. 260,000 இற்கும் மேற்பட்ட மரங்கள் நாட்டல்.
2. produce 3000 litres of enzyme for clearing pollution

விலங்குகளின் நன்மைக்காக

1000 விலங்குகளை கவனித்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

INTERNATIONAL CONFERENCE

# MY LIFE HIS MESSAGE

## PROGRAMME OVERVIEW

*DAY 1*
THURSDAY 28TH SEPT
HOOVER AUDITORIUM, MEDICAL FACULTY, UNIVERSITY OF JAFFNA

| | |
|---|---|
| 6.30am | Breakfast |
| 8.15am | Participants to be seated in the main hall |
| 8.30am | Welcome Procession, Lighting of Lamp |
| 8.45am | Bhajan and Divine Discourse |
| 9.05am | **Welcome Address:**<br>Mr. Manoj Kumar Singh<br>*Chairman, Zone 4, Sri Sathya Sai International Organization* |
| 9.25am | **Keynote Address:**<br>Dr. Narendranath Reddy<br>*Chairman, Sri Sathya Sai International Organization* |
| 9.55am | Opening Ceremony and Flag Procession |
| 10.30am | Opening Introduction |
| 10.35am | **Talk – *Healthy Living (E.A.S.E)***<br>Dr. Ramadevi Sankaran<br>*Pediatrician; Member, SSSIO, International Medical Committee* |
| 10.55am | Introduction on Workshop on Physical Well Being |
| 11.05am | Refreshments |
| 11.45am | Inauguration of Exhibition |
| 11.50am | **Workshop on Physical Well Being**<br>*(Sessions will be conducted in English & Tamil)*<br><br>Session 1: ***Exercise Regularly***<br>Session 2: ***Attitude Positively***<br>Session 3: ***Sleep Deeply***<br>Session 4: ***Eat Responsibly*** |



SRI SATHYA SAI INTERNATIONAL ORGANIZATION
ORGANIZED BY ZONES 4 & 5
conferenece@ssiosrilanka.org

| | |
|---|---|
| 1.20pm | Lunch |
| 2.50pm | **Workshop on Physical Well Being**<br>*(Sessions will be conducted in English & Tamil)*<br><br>Session 1: ***Exercise Regularly***<br>Session 2: ***Attitude Positively***<br>Session 3: ***Sleep Deeply***<br>Session 4: ***Eat Responsibly*** |
| 4.25pm | Refreshments |
| 5.10pm | Young Adults and Sai Spiritual Education Cultural Programs |
| 5.55pm | ***My Life is His Message – Practising Dharma in Daily Life***<br>Mr. Aravind Balasubramanya<br>*Alumni, Sri Sathya Sai Institute of Higher Learning*<br>*Member, Digital Media, Sri Sathya Sai international Organization* |
| 6.40pm | Announcements |
| 6.45pm | Bhajan and Mangala Arathi |
| 7.15pm | Dinner |
| 8.30pm | Departure to Hotel |

*DAY 2*
FRIDAY, 29TH SEPT
JAFFNA SAI CENTRE AND
HOOVER AUDITORIUM, MEDICAL FACULTY, UNIVERSITY OF JAFFNA

| | |
|---|---|
| 5.30am | Omkar Suprabatham |
| 5.55am | Nagasankeerthanam |
| 7.00am | Breakfast |
| 8.30am | Omkar & Bhajan |
| 8.55am | Opening Introduction |
| 9.00am | **Opening Address – Mr. Billy Fong**<br>*Zone 4 Central Coordinator, Sri Sathya Sai International Organization* |
| 9.10am | Swami's Divine Discourse |
| 9.20am | ***My Life is His Message – Work is Worship***<br>Mr. Krishnamoorthy Venkataraman<br>*Alumni, Sri Sathya Sai Institute of Higher Learning* |
| 10.00am | Refreshments |
| 10.45am | Young Adults and Sai Spiritual Education Cultural Programs |
| 11.30am | ***My Life is His Message – Living a Balanced Life***<br>Ms. Anuradha Venkateswaran<br>*Alumnus, Sri Sathya Sai Institute of Higher Learning*<br>*Regional Devotional Coordinator, SSSIO USA, Region 3* |
| 12.15pm | ***"My Life is His Message"* – Experiences & Engagement** |

SRI SATHYA SAI INTERNATIONAL ORGANIZATION
ORGANIZED BY SSSIO ZONES 4 & 5
conference@ssiosrilanka.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 1.00pm | Introduction on Workshop on Mental Well Being |
| 1.10pm | Lunch |
| 2.35pm | **Workshop on Mental Well Being**<br>*(Sessions will be conducted in English & Tamil)*<br>Session 1: **C**onsistency in Sadhana<br>Session 2: **O**bjectivity – Finding your Purpose<br>Session 3: ***R**esource Management – Financial Literacy*<br>Session 4: ***E**motional Wellness – Being Happy* |
| 4.05pm | Refreshments |
| 4.50pm | **Panel Discussion**<br>Session 1: **Panel Discussion -** *Sai Young Adults*<br>*(English with Tamil translation)*<br>*Topic: Empowering leadership and formulating way forward to fulfil Sai's Mission*<br><br>Session 2: **Panel Discussion** *(conducted in Tamil)*<br>*Topic: How to play an effective role in the Sai Mission*<br><br>Session 3: **Panel Discussion** *(conducted in English)*<br>*Topic: How to spread Swami's message to the world*<br><br>Session 4: **Panel Discussion -** *Ladies*<br>*(conducted in English and Tamil)*<br>*Topics: Empowering women -How to face challenges of today by practicing Swami's teachings* |
| 6.30pm | **Convocation - Sathya Sai International Leadership Program**<br>*Zone 4 and 5 Young Adults* |
| 7.10pm | Bhajan and Arathi |
| 7.25pm | Dinner |
| 9pm | Departure to Hotel |

*DAY 3*
SATURDAY 30TH SEPT
KKS BEACH
HOOVER AUDITORIUM, MEDICAL FACULTY, UNIVERSITY OF JAFFNA

| | |
|---|---|
| 4.45am | Buses depart for Beach |
| 5.30am | Sunrise Prayers by the Beach |
| 7.00am | Breakfast |
| 8.10am | Photo Taking at University of Jaffna |
| 9.00am | Omkar & Bhajan |
| 9.30am | Swami's Divine Discourse |

SRI SATHYA SAI INTERNATIONAL ORGANIZATION
ORGANIZED BY SSSIO ZONES 4 & 5
conference@ssiosrilanka.org

| | |
|---|---|
| 9.40am | Opening introduction |
| 9.45am | Dr. A.R. Ganeshamoorthy<br>*Member of Sathya Sai Central Trust of Sri Lanka* |
| 9.55am | **Honoring of Senior Devotees**<br>*Sri Sathya Sai International Organization Zones 4 and 5* |
| 10.25am | Refreshments |
| 11.10am | **Workshop on Mental Well Being**<br>*(Sessions will be conducted in English & Tamil)*<br><br>Session1: ***C**onsistency in Sadhana*<br>Session 2: ***O**bjectivity – Finding your Purpose*<br>Session 3: ***R**esource Management – Financial Literacy*<br>Session 4: ***E**motional Wellness – Being Happy* |
| 12.40pm | Lunch |
| 2.10pm | Sai Melodies – The Language of the Heart |
| 3.00pm | Vision for Sai Mission<br>Prof. Suresh Govind<br>*Member, Prasanthi Council* |
| 3.40pm | Panel Session – Question & Answer<br>*(Sessions will be conducted in English & Tamil)* |
| 4.40pm | Refreshments |
| 5.25pm | Snr Prof. S. Srisatkunarajah<br>*Vice-Chancellor of University of Jaffna* |
| 5.50pm | Offering of Resolutions at the Lotus Feet of Swami |
| 6.15pm | Valedictory Address<br>Dr. Narendranath Reddy<br>*Chairman, Sri Sathya Sai International Organization* |
| 6.35pm | Closing Remarks<br>Mr. Ashok Sakhrani,<br>*Chairman, Zone 5, Sri Sathya Sai International Organization* |
| 6.45pm | Swami's Divine Discourse, Bhajans & Mangala Arathi |
| 7.15pm | Dinner |
| 8.30pm | Informal Sharing Session |
| 9.30pm | Departure to Hotel |

*DAY 4*
SUNDAY 1ST OCT

| | |
|---|---|
| 6.30am | Breakfast |
| 8.00am | Service Activity - Village Service & Tree Planting |
| 11.30am | Departure |
| 12.00pm | Lunch |

SRI SATHYA SAI INTERNATIONAL ORGANIZATION
ORGANIZED BY SSSIO ZONES 4 & 5
conference@ssiosrilanka.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**01.10.2023 அன்று திரு. கிருஷ்ணமூர்த்தி வெங்கட்ராமன் அவர்கள் யாழ்ப்பாணம் சாயி நிலையத்தில் ஆற்றிய உரையின் சாராம்சம்**

எல்லோரையும் உரத்து "ஓம் ஸ்ரீ சாயிராம்" சொல்லச்சொல்லி தனது உரையை ஆரம்பித்தார். தான் உரையாட வந்த தலைப்பு என்ன என்பதை தெளிவுபடுத்த பல நகைச்சுவையான விடயங்களைக் கூறி அனைவரையும் தனது பேச்சின் ஆரம்பத்தில் சிரிக்கவைத்தார்.

Bad ஆக இருக்கிறவங்க Good ஆக மாறணும். Good ஆக இருக்கிறவங்க Better ஆக மாறணும். Better ஆக இருக்கிறவங்க Best ஆக மாறணும். Better than the best எப்படி மாறுவது? என்ற தலைப்பில்தான் உரையாற்ற வந்திருக்கிறேன்.

Good ஆனது Bad ஆகாமல் இருக்க நாங்கள் என்ன செய்யலாம்? என்று எல்லோரையும் பார்த்து கேட்டார். ஒரு கேள்விக்கு இருவிதமான பதில்கள் இருக்கின்றன. ஒன்று கேள்விக்கு பொருத்தமான சரியான பதில்கள். மற்றொன்று கேள்விக்கான சிறந்த பதில். கேட்கும் கேள்விக்கு நீங்கள் சொல்லும் அனைத்து பதில்களுமே சரியானவை. ஆனால் ஒன்றே ஒன்று மிகவும் பொருத்தமானது என்ற விளக்கத்துடன் "நாங்கள் என்ன செய்தால் Good ஐ தக்க வைக்கலாம்?, Better ஐ best ஆக்கலாம்? என்ற கேள்விகளை கேட்டார். ஒருவர் சொன்னார், முதலில் bad என்ன என்பதை கண்டுபிடிக்கவேண்டும் என்று. இரண்டாவது கேள்வி, உங்கள் மனதில் நல்லது என தோன்றுவது எது? சுவாமியின் சேவைகள் என இன்னுமொரு இளைஞர் பதில் கூறினார். மூன்றாவது கேள்வி, சாயி நிலையத்தில் என்ன செய்தால் சுவாமியின் சேவைகளை சிறப்பாக செய்யலாம்? சத்சங்கம் செய்தால் நன்றாக இருக்குமென இளைஞர் ஒருவர் பதில் கூறினார். சாதனை, சுய பரிசோதனை, சிறப்பான விடயங்களை அனைத்து சாயி நிலையங்களுக்கும் பகிரலாம் போன்ற பல பதில்கள் இளைஞர்களால் வழங்கப்பட்டன. இறுதியில் அவர் கூறினார், **"பாலவிகாஷ் தான் படித்ததால்தான் தனக்கு அனைத்து பாக்கியங்களும் கிடைத்தன.** எனவே வரம்பு உயர நீர் உயரும், நீர் உயர நெல் உயரும், நெல் உயர மணி உயரும், மணி உயர கோன் உயரும் என்ற ஔவையாரின் கருத்துப்போல் பாலவிகாஷ் உயர்ந்தால் நிலையத்தில் இளைஞர் பிரிவு அதிகரிக்கும், இளைஞர் பிரிவு அதிகரித்தால் சேவா நிலைய அங்கத்தவர்கள் அதிகரிப்பார்கள். அவர்கள் அதிகரித்தால் சேவைகள் அதிகரிக்கும், சேவைகள் அதிகரித்தால் அனைத்து சாயி நிலையங்களுக்கு பகிரலாம்.



**பாலவிகஷை வளர்க்க என்ன செய்யவேண்டும்** என்பது பற்றி கலந்துரையாடவே நான் இன்று வந்திருக்கின்றேன். பாலவிகாஷ் இல் குழந்தைகளை நீங்கள் சேர்க்க முயற்சிக்கும்போது எதிர்கொள்ளும் சவால்கள் என்ன? என்று கேட்டார். அதற்கான பதில்களைப் பற்றி கலந்துரையாடினார்.

புதிதாக ஒருவரிடம் சுவாமியின் கருத்தைப் பற்றி சொல்லும்போது அதை அவர் ஏற்றுக்கொள்ளாதபோது என்ன செய்வது என்று ஒருவர் கேட்டார். அதற்கு அவர் ஆங்கிலத்தில் இரண்டு வார்த்தைகள் உள்ளன. Features and Benefits. பெரும்பாலான சாயி சகோதரர்கள் சாயி நிலையத்தில் என்ன நடக்கிறது என்று கேட்டால் Features மட்டும் சொல்கிறார்கள். (பஜனை பாடுவோம், வேதம் சொல்வோம்) உதாரணமாக தொலைபேசி ஒன்றை எடுத்துக் கொண்டால் இத்தனை GB இருக்கிறது Camera இருக்கிறது என்று பல Features இருக்கிறது. ஆனால் நாம் என்ன சொல்லவேண்டும்? இத்தனை GB இருந்தால் இந்த Camera வினால் என்ன என்ன பலன்கள் என்றுதானே கூறவேண்டும். Features மட்டும் சொன்னால் பலன்கள் புரியாது. **நாம் பலன்கள் பற்றிக் கூறவேண்டும்.** சாயி குருமார்கள் சிறுவர்களுக்கு பாலவிகாஷ் படிப்பதனால் என்ன நன்மை என்று சொல்லிக்கொடுக்கவேண்டும். இன்றைய பெற்றோர் மற்றும் சமுதாயத்திற்கு குழந்தைகள் நல்ல புள்ளிகளை எடுத்து நல்ல கல்லூரிக்கு சென்று நல்ல வேலைக்கு செல்லவேண்டும் என்ற குறிக்கோள் மட்டுமே. பஜனை பாடுவதால் நல்ல புள்ளிகள் வருமா? என்று கேட்கிறார்கள். எப்படி என்று பார்ப்போம். உதாரணமாக ஆசிரியர் படிப்பிக்கும்போது அதை வகுப்பிலேயே கவனிக்கவேண்டும் (Concentration). பின்பு பரீட்சைக்கு அதை ஞாபகப்படுத்தி வைத்திருக்க (retention) வேண்டும். பின்பு பரீட்சைக்கு மீட்டுப் பார்த்தல் (Retrieve). இந்த மூன்றும் செய்தால் பரீட்சைக்கு நல்ல புள்ளிகள் எடுக்கலாம். இதேதான் பஜனையின்போதும் ஒருவர் ஒரு பாட்டைப் பாடுகிறார். அதை Concentrate செய்து Mind இல் வைத்து அதே பாட்டை மீண்டும் பாடுகிறோம். மீண்டும் மீண்டும் இதே மூன்று Exercise



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரும்ப திரும்ப செய்கின்ற வாய்ப்பை சுவாமி நமக்கு கொடுக்கிறார். ஒரு பஜனையில் தனி வார்த்தை மட்டும் மீண்டும் உச்சரிப்பது மட்டுமல்ல. அதே பாவனை, தாளத்துடன் அந்த பாடலை மீண்டும் பாடும் பயிற்சியை சுவாமி நமக்கு தருகிறார். இப்படியான பலன்களை பற்றி நாம் பெற்றோர்களுக்கு சொல்லிக்கொடுப்பதில்லை.

பாலவிகாஷ் குழந்தைகள் வந்தால் Bad ஆகாமல் இருக்க வாய்ப்புகள் குறைவு. எப்படி என்றால் சாயி குருமார்களின் கல்வி, சுவாமியின் போதனைகள் நமது மனதுக்குள் இருந்து நாம் தப்பு செய்யும்போது தடுக்கிறது. திடீரென அனைவருமே பாலவிகாஷ் குழந்தைகளாக மாறிவிட்டால், நீதிபதி, பொலிஸ் அதிகாரிகளுக்கு வேலை இல்லாமல் போய்விடும். பொலிஸ் நிலையங்கள் பஜனை மண்டபங்களாக மாறிவிடும். இந்த உலகம் பணம் என்று அதன் பின்னாலே போகிறது. எது வேண்டுமானாலும் செய்யலாம். பணம் கிடைத்தால் போதும் என்று நினைக்கிறார்கள். இதனால் இச் சமுதாயத்தில் எந்த குழந்தைக்குமே போதைப் பொருள் கிடைக்க சந்தர்ப்பம் கிடைக்கலாம்.

போதைப் பொருள் விநியோகிப்பவர் யாரோ வீட்டுக் குழந்தைக்குத்தானே கொடுக்கிறேன் என்று நினைப்பார். வேறு யாருடைய குழந்தைதானே குடிச்சு கெட்டுப்போகுது, குழந்தைதானே புகைப்பிடிச்சு Cancer இல் செத்துப் போகுது என்று நினைக்கும் உலகத்தில் நம் குழந்தைகள் மட்டும் சிகரெட் பிடிக்காமல் இருந்தால் போதாது. நாமும் நன்றாக இருக்கவேண்டும். நம்கூட இருக்கிறவர்களும் நன்றாக இருக்கவேண்டும். இங்கு இருக்கும் அனைத்து குழந்தைகளையும் பாலவிகாஷ்க்கு கொண்டு வரவேண்டும். அதற்கு **Features மட்டும் சொன்னால் போதாது. Benefits சொல்லவேண்டும்.**

எப்படி இருக்கும்? என்ன செய்யவேண்டும்? என்று பேசிவிட்டோம். இனி இதை எப்படி செய்யலாம் என்று பார்ப்போம். ஒரு Mission எடுப்போம். "100 பாலவிகாஷ் குழந்தைகளை சேர்க்கவேண்டும். ஆளுக்கு ஒரே ஒரு குழந்தையை பாலவிகாஷ் இல் சேர்க்கவேண்டும். Technique No. 1 ஒரே ஒருவருக்கு போய், பாலவிகாஷ் கல்வி படிக்கிறதால் கிடைக்கின்ற நன்மையை (Benefets) சொல்லுங்கள். Technique 2 - இதனால் பயன் அடைந்தவர்களை கண்டறிந்து பெற்றோருக்கு ஒரு விழிப்புணர்வை வழங்கவேண்டும். ஒரு பிரதேசத்தை எடுத்து அங்கு இருக்கும் பொற்றோர்களுக்கு முன் உதாரணங்களாக பல பாலவிகாஷ் படித்த மாணவர்களை காட்டி இதனால் இவர்களது வாழ்க்கை எப்படி மாறியிருக்கிறது என்று **அவர்களது சுய வாழ்க்கை பற்றிய அனுபவத்தை பகிரவைத்தல்.** இப்படி 100 பாலவிகாஷ் மாணவர்கள் சேரும் வரை முயற்சிக்கவேண்டும். இப்படி யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்து அனைத்து இடங்களிலும் நடைமுறைப்படுத்த வேண்டும்.

சென்னையில் என்ன செய்தோமென்றால் 3 விதமான பாலவிகாஷ் நடத்தினோம். Residential பாலவிகாஷ். அதாவது குருஅம்மா வீட்டில் பாலவிகாஷ் நடத்துதல், School பாலவிகாஷ். அதாவது ஒரு School இல் பாலவிகாஷ் நடத்துதல். Village பாலவிகாஷ். Rural Area க்கு சென்று அங்கும் பாலவிகாஷ் நடத்துதல்.

பாலவிகாஷ் கற்றுத்தந்த மிக முக்கியமான பாடம் வாழ்க்கையை 3 ஆக பிரித்துக்கொள்ள வேண்டும். Must do, Need to do, Nice to do என்று. Must do என்ன என்றால் நல்லொழுக்கம். அத்துடன் நல்ல பெறு பேறுகளை எப்படி பெற்றுக்கொள்வது என்றும் குருமார்கள் குழுந்தைகளுக்கு கற்றுக்கொடுக்க வேண்டும்.

இன்றைய சூழலில் குழந்தைகள் அதிகம் Depression இல் இருக்கிறார்கள். எனவே குருமார்கள் தோல்விகளை எவ்வாறு ஏற்றுக்கொள்வது என்றும் கற்றுக்கொள்ள வேண்டும்.

நிறைய நல்ல புத்தகங்களை படிக்க வேண்டும். "நல்ல புத்தகம் நல்ல நண்பன்". புத்தகம் படிப்பது குறைந்துகொண்டே வருகிறது. காரணம் என்னவென்றால், சிறு தவழும் குழந்தையாக இருக்கும்போது புத்தகங்களை தொட அனுமதிப்பதில்லை. ஏனென்றால் அவர்கள் புத்தகங்களை கிழித்துவிடுவார்கள். ஒரு வயதுவரை புத்தகங்கள் தப்பு. அதை தொடப்போனாலே அம்மா, அப்பா தடுக்கிறார்கள் என்ற எண்ணம் வருகிறது. திடீரென Preschool போகும்போது புத்தகங்களை கொடுக்கும்போது குழந்தைகள் தடுமாறுகிறார்கள். பழைய புத்தகங்கள் இருந்தால் குழந்தைகளுக்கு சிறுவயதிலேயே கொடுங்கள். அவர்கள் தனது நேரத்தை புத்தகத்தோடு செலவழிப்பார்கள்.

பெற்றோர் குழந்தைகளுக்கு அளவுக்கு அதிகமாக பாசத்தை கொடுத்து, கேட்டது எல்லாம் வாங்கிக் கொடுப்பதால்தான் குழந்தைகளால் தோல்விகளை தாங்கிக் கொள்ளும் மனநிலை இல்லை. அதிகமாகவும் பெற்றோர்கள் குழந்தைகளை கண்டிக்கக்கூடாது. பெற்றோர் குழந்தைக்கு முன்னால் சண்டை பிடிக்கக்கூடாது. **பெற்றோருக்கு சாயி குருமார்கள் ஒரு விழிப்புணர்வு கலந்துரையாடல் செய்யவேண்டும்.**

நாங்கள் என்ன செய்ய வேண்டுமென்றால் How can we make Jaffna better than best. நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து முயற்சிக்க வேண்டும். பாலவிகாஷ்க்கு குழந்தைகள் சேரச் சேர சமுதாயமே ஆரோக்கியமான உற்சாகமான சமுதாயமாக மாறும்.

ஜெய் சாயிராம்

தொகுப்பு : சௌயந்தி காயாரோகணன்,
கொக்குவில் சாயி நிலையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாமியின் அற்புத லீலைகள்



**01.10.2023 அன்று சகோதரர் அரவிந் பாலசுப்ரமண்யா அவர்கள் பருத்தித்துறை நாவலடி கடற்கரையில் ஆற்றிய உரையின் சாராம்சம்**

சுவாமியின் இளமைக் காலப்பகுதியில் சித்திராவதி நதிக்கரையில் நடைபெற்ற அற்புதமான லீலைகளைப் பற்றி அரவிந்த் பாலசுப்ரமண்யா அவர்கள் பகிர்ந்துகொண்டார். அதாவது சில பக்தர்களுக்கு சுவாமி சித்ராவதி நதிக்கரையின் மணலில் சில பொருட்களை சுவாமி புதைத்துவைத்து இருக்கின்றாரோ என்ற சந்தேகமே ஏற்பட்டது. ஆகவே ஒருமுறை சுவாமி சில பக்தர்களை அழைத்து "நீங்கள் நினைத்த இடத்திலேயே தோண்டுங்கள்" என்றார். அப்போது ஒரு இடத்தில் இருந்து மாம்பழமும் மற்றைய இடத்தில் இருந்து கத்தியும் கிடைத்தது. அதன்பின்பு சுவாமி அம் மாம்பழத்தை எடுத்து ஒரு பாதியை வெட்டி ஒருவருக்கும் மற்றைய பாதியை மற்றவருக்கும் கொடுத்தார். அப்போது, மாம்பழத்தில் முதல் பாதி வெட்டிய பகுதி பழைய நிலையிலேயே இருந்தது. இவ்வாறே அங்குள்ள அனைவருக்குமே சுவாமி ஒரு மாம்பழத்தை வைத்து பாதி பாதி மாம்பழத்தைக் கொடுத்தார்.

இவ்வாறே ஒருமுறை ஒரு வயதான பெண்மணியிடம் சுவாமி, "என்ன வேண்டும்?" என்று கேட்டார். அதற்கு அப்பெண் ஒன்றுமில்லை என்று கூறவே "உனது மனதில் இருக்கும் ஆசை என்னவென்று எனக்கு நன்றாகத் தெரியும். நான் அதனை அறிவேன். அதனை சொல்!" எனக் கேட்டார். ஆகவே அப்பெண் 30 வருடங்களுக்கு முன்பே என்னுடைய கணவர் இறந்து விட்டார். அந்தக் காலத்தில் புகைப்படம் எடுக்கும் வசதி எதுவும் இருக்கவில்லை. எனக்கு என்னுடைய கணவருடைய புகைப்படம் வேண்டும் என்று கூறினார். உடனே சுவாமி மணலில் இருந்து புகைப்படத்தை எடுத்து அப்பெண்ணிற்கு கொடுத்தார். சுவாமியால் செய்ய இயலாத காரியம் என்று எதுவுமே இல்லை என்பதை எல்லோரும் உணர்ந்தனர்.

இன்னொரு சம்பவம், ஒருமுறை பாலபட்டாவியின் மாமனாருக்கு சுவாமி ஒன்றை சிருஷ்டித்து கொடுத்துவிட்டு அதனை "யாருக்கும் காட்ட வேண்டாம். இதனை யாருக்கும் கூறவேண்டாம்" என்று காதின் அருகில் சென்று சில விடயங்கள் கூறினார். அனைவரும் என்ன? என்ன? என்று கேட்டபோது அவர் எதனையும் கூறவில்லை. சில நாட்களின் பின்பு கோயம்பத்தூர் செல்லப் புறப்படும் வேளையில் இதனைப் பற்றி எல்லோரிடமும் கூறுவோம் என்று நினைத்து சுவாமி அவருக்கு கொடுத்த வெள்ளி விநாயகர் சிலையை அனைவருக்குமே காட்டினார். ஆனால் அச் சிலை மற்றையவர்களுக்கு காட்டிய மறுகணமே மறைந்துவிட்டது. அப்போதுதான் அவர் தான் செய்த தவறை உணர்ந்தார். என்னவெனில், சுவாமி என்ன கூறினார் எனில், "இந்த சிலையை யாருக்கும் காட்டவேண்டாம். நீ இதற்கு ஒவ்வொருநாளும் அபிஷேகம் செய்து அந்த அபிஷேக நீரை தீர்த்தமாகக் குடி. இதனை இரகசியமாக வைத்துக் கொள்" என்று சுவாமி கூறினார். இந்த நிகழ்வு சுவாமியுடன் உண்மையான நம்பிக்கை கொண்டவர்களின் பக்தியை பலப்படுத்தியது. ஆனால் சுவாமியிடம் நம்பிக்கை இல்லாதவர்களை இன்னும் பலவீனப்படுத்தியது. ஏனெனில் கோயம்பத்தூரில் இருந்து வந்த அரைவாசி பேர் சுவாமியிடம் வருவதை நிறுத்திவிட்டார்கள். சுவாமியிடம் உண்மையான நம்பிக்கை வைத்திருந்தால் சுவாமி என்ன செய்தாலும் அது அற்புதமாகின்றது. நம்பிக்கை இல்லாவிட்டால் சாதாரணமான ஒன்றாக மாறிவிடுகிறது. எனவே எமக்கு சுவாமியிடம் நம்பிக்கை வைத்தல் என்பது மிக முக்கியமான ஒன்றாகும்.

அதன்பின்பு மன அழுத்தத்தை பற்றி சில விடயங்களை அரவிந்த் பாலசுப்ரமண்யா அவர்கள் கூறினார். அதாவது நாங்கள் இறந்த காலத்தைப் பற்றியும் எதிர்காலத்தைப் பற்றியும் நினைப்பதாலேயே எங்களுக்கு மன அழுத்தம் அதிகம் ஏற்படுகின்றது. நிகழ்காலத்திலேயே வாழ்ந்துவிட்டால் மனஅழுத்தமும் இலகுவில் வந்துவிடாது. எங்களால் இறந்த காலத்தையும் மாற்றமுடியாது எதிர்காலத்தையும் மாற்றமுடியாது. ஆகவே எப்போதும் இப்போது என்ன செய்துகொண்டு இருக்கிறோமோ அதிலேயே எங்களுடைய முழு சிந்தனையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கவேண்டும். உதாரணமாக பஜனை பாடும்போது விஞ்ஞான பாடத்தைப் பற்றி நினைப்பது எந்த பயனும் இல்லாத விடயம் ஆகும். ஏனெனில் பஜனையில் இருக்கும்போது உங்களுடைய கையில் விஞ்ஞானப் புத்தகம் இருக்காது. அதனைப் பற்றி நினைப்பது முட்டாள்தனமான செயல் ஆகும். ஆகவே நீங்கள் எங்கு இருக்கின்றீர்களோ அதில் அதிக கவனம் செலுத்துங்கள். "Enjoy in present". ஏனெனில் எப்போதும் மனதும் நிகழ்காலத்தில் இருப்பதில்லை. இதனால்தான் மன அழுத்தம் ஏற்படுகின்றது. இதன் விளைவாக நித்திரை குறைவு போன்றவையும் ஏற்படுகின்றது. சுவாமியின் பல்கலைக்கழக விடுதியில் இரவு 10 மணிக்கு பின்பு மின்விளக்குகள் அணைத்துவிடப்படும். ஒரு நேரத்தில் "Multi Tasking" பலவகையான வேலையை செய்வது என்பது. குரங்கு அங்கும் இங்கும் என மாறி மாறி தாவுவது போல கடைசியில் எல்லாம் வீணாகிவிடும். ஆகவே ஒருநேரத்தில் ஒருவிடயத்தில் உங்களுடைய முழு சிந்தனையையும் வைத்துக் கொள்ளுங்கள்.

மனஅழுத்தம் வருவதற்கு இன்னுமொரு முக்கிய காரணம் "Fear of result" விளைவை எண்ணி பயப்படுவது என்று கூறிவிட்டு அரவிந்த் பாலசுப்ரமண்யா அவர்கள் அருகில் இருப்பவரிடம் உங்களுக்கு எதற்காக மனஅழுத்தம் ஏற்படுகின்றது? என்று கேட்கவே அவர் கூறினார், நேரமுகாமைத்துவம் என்று கூற அதற்கு அவர் நீங்கள் எந்த விடயத்தை செய்கின்றீர்களோ அதில் உங்களுக்கு முழு கவனமும் இருந்தால் அந்த வேலை இலகுவில் முடிந்துவிடும். அதன்பின் அடுத்த வேலையை பார்ப்பதற்கு போதுமான அளவு நேரம் காணும் என கூறினார். சுவாமி ஒருநாளில் 6 மணித்தியாலம் சேவை செய்யவேண்டும் என்று கூறுகின்றார். அதாவது இப்போது நான் சுவாமியைப் பற்றி நல்ல விடயங்களை உங்களுடன் பகிர்ந்திருக்கிறேன். ஆகவே நல்ல விடயங்களை பகிர்ந்துகொள்வது ஒரு சேவை ஆகும். இவ்வாறே பஜனை கேட்பது அதனை பயிற்சி செய்வது இவை எல்லாம் மனஅமைதியை தரும். தேவையில்லாத விடயங்களில் கவனத்தை செலுத்துவது மனஅழுத்தத்தை ஏற்படுத்தும். இவ்வாறான நேரமுகாமைத்துவத்துடன் இரவு 10 மணிக்கு சரியாக நித்திரை கொள்வதும் மிக முக்கியமான விடயம். அது அதிகாலை எழும்போது புத்துணர்வை ஏற்படுத்தி அடுத்தநாள் வேலையை இலகுவாக்குகின்றது. அத்துடன் காலைப் பிரார்த்தனை மிகவும் முக்கியமானது. பிரார்த்தனையின் போது, இந்த காலையில், சுவாமி! நீங்கள் எனக்கு புதிதாக பிறப்பை தந்திருக்கின்றீர்கள். இந்த நாள் முழுவதும் உங்கள் அன்பு என்னுடன் நிறைந்திருக்கவேண்டும் என பிரார்த்திக்க வேண்டும். ஏனெனில் சுவாமி கூறியிருக்கின்றார், "Every morning is birth and every night is death" என்று. ஆகவே இரவு படுக்க செல்லும்போது சுவாமியிடம் எல்லாவற்றையும் அர்ப்பணித்துவிட்டு மனஅமைதியுடன் நித்திரை செய்யவேண்டும்.

என்ன செய்தாலும் சுவாமியை மகிழ்ச்சிப்படுத்துவதற்காக செய்யுங்கள். அதனால் மனக்கவலை வந்தாலும் சுவாமியின் பிரசாதமாக ஏற்றுக்கொள்ளுங்கள். மகிழ்ச்சி ஏற்பட்டாலும் அதனை சுவாமியின் பிரசாதமாக ஏற்றுக்கொள்ளுங்கள். இதற்கு பிரார்த்தனை முக்கியமானது. பிரார்த்தனையே உங்களுக்கு பலத்தினைத் தரும். ஆகவே பிரார்த்தனையே மனஅழுத்தத்தில் இருந்து உங்களை விடுவிக்கும்.

ஜெய் சாயிராம்

தொகுப்பு : ரா. பவதாரணி,
மந்திகை சாயி நிலையம்

## தள்ளிப்போடுதல்

உன் மனம் வேலைகளைத் தள்ளிப் போடச் சொல்லும்போது உனக்கு நீயே சொல்லிக் கொள்,

"நீ தள்ளிப் போடுவது வேலையை அல்ல. வெற்றியை என்று" -

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம், நவம்பர், 2023

## சிந்தியுங்கள்

"சர்வ ஜனா சுகினோ பவந்து"
"யாதும் ஊரே யாவரும் கேளீர்"
எல்லோரும் ஒரே குடும்பம்
அதுவே சாயி குடும்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ ஸாயிராம்

**02.10.2023 அன்று அரவிந்த் பாலசுப்ரமண்யா அவர்கள் தண்ணீரூற்று சாயி நிலையத்தில் ஆற்றிய உரையின் சாராம்சம்**

அனைவருக்கும் சாயிராம்! எங்கள் அனைவருக்குமே குந்திதேவியை தெரியும். அவர் பாண்டவர்களின் அன்னை. மிக இளவயதிலேயே அவர் தனது கணவரான பாண்டுவை இழந்து தன் குழந்தைகளை மிகவும் கஷ்டத்தின் மத்தியில் வளர்த்து வந்தார். ஆனால் அவர்களுடைய புதல்வர்கள் வளர்ந்து தாயை கவனிக்கவேண்டிய சந்தர்ப்பத்திலும்கூட அவர் தனது புதல்வர்களுடன் காட்டுக்கு செல்லவேண்டிய சந்தர்ப்பம் வந்துவிட்டது. மீண்டும் குந்தி பிரச்சினைக்குள்ளும் சோதனைக்குள்ளும் சிக்கினார். 14 வருடங்கள் வனவாசம் முடித்தபின்பும் அதற்கு பின்பு குருஷேத்திர யுத்தம் தொடங்கியது. அதன்பின்பும் நிறைய பிரச்சினைகள். இவ்வாறு குந்தியின் வாழ்க்கையை எடுத்துப் பார்த்தால் திருமண காலத்தில் இருந்து அதற்குப் பிற்பட்ட வாழ்க்கை முழுவதும் ஒவ்வொரு காலகட்டத்திலும் கஷ்டங்கள் துன்பங்கள் நிறைந்து காணப்பட்டன. யுத்தம் முடிந்தபின்பு யுதிஷ்டிரர் அரசனாக முடிசூடிக் கொண்ட பின்பு கிருஷ்ணர் குந்தியை பார்க்கச் சென்றார். குந்தியிடம் நீ என்னிடம் என்ன வேண்டுமோ அதனை கேள், நான் தருகின்றேன் என்று கிருஷ்ணர் கூறினார். அதற்கு குந்திதேவி எனக்கு தொடர்ந்து கஷ்டத்தையே தா" என்று கேட்டார். கிருஷ்ணர் மிகவும் ஆச்சர்யத்துடன், தாயே! உன் வாழ்நாள் முழுவதும் கஷ்டத்தை மட்டுமே அதிகம் பார்த்துவிட்டாய், மீண்டும் ஏன் கஷ்டத்தை கேட்டாய்?" என கேட்டார். அதற்கு குந்திதேவி, என் வாழ்நாள் முழுவதும் நான் கஷ்டத்தை அனுபவித்துக்கொண்டு இருக்கின்றேன். ஆனால் அக் கஷ்டங்களை அனுபவிக்கும் ஒவ்வொரு நொடியும் உன்னை நினைத்துக் கொண்டு மனமகிழ்வு அடைகின்றேன். எனக்கு சந்தோசத்தை தந்தாய். ஆனால் அது கிருஷ்ணா உன்னை மறக்கவும் செய்துவிடும். ஆகவே எப்போதும் உன்னை நினைத்துக்கொண்டு உன் அருகாமையை பெற கஷ்டத்தை தா கிருஷ்ணா! என்று கூறினார். ஏனெனில் நாம் இறைவனைப்பற்றி நினைப்பதுதான் உண்மையான சந்தோசம். குந்திக்கு எவ்வளவோ கஷ்டங்கள் பிரச்சினைகள் வந்தபோதிலும் அவர் மகிழ்ச்சியாக இருந்ததற்கு காரணம் அவர் இறைவனை நினைத்துக்கொண்டு இருந்தது மட்டுமே.

நம் அனைவருக்கும் மீராபாய் பற்றித் தெரியும். ஒருமுறை மீராபாயிடம் நீ கிருஷ்ணருடைய நாமத்தை சொல்வதை நிறுத்தாவிட்டால் உனக்கு விசம் தருவோம் என்று கூறினார்கள். அதற்கு மீராபாய் என்ன தெரியுமா கூறினார்? விசத்தை அருந்துகின்றேன். ஆனால் கிருஷ்ணரின் நாமத்தை கூறுவதை நிறுத்தமாட்டேன் என்றார். இது என்ன பைத்தியக்காரத்தனமா? இல்லை. இறைவனை நினைப்பதிலும் அவருடைய நாமத்தைக் கூறுவதிலும் அவர் ஆனந்தநிலையை அடைந்துவிட்டார். ஆகவே கஷ்டமான நேரங்களில் இறைவனை நினைப்பதுவே எமக்கு கிடைக்கும் சிறந்த ஆசீர்வாதம் ஆகும். கவலையான சந்தர்ப்பத்தில் இறைவனை நினைப்பதே சிறந்த வழி ஆகும். "Happiness is union with God"

அதனை அடுத்து அரவிந்த் பாலசுப்ரமண்யா அவர்கள் தியாகராஜன் என்ற சுவாமியின் பக்தரைப்பற்றிக் கூறினார். அதாவது தியாகராஜன் அவர்களுக்கு புற்றுநோய் ஏற்பட்டது. அது கடைசி நிலையில் இருப்பதாக வைத்தியர் கூறினார். அதேவேளை இன்னமும் 3 மாதங்கள்தான் உயிரோடு இருப்பார் என்று கூறினார். தியாகராஜா அவர்களுக்கு மிகவும் கவலை ஏற்பட்டது. ஏனெனில் அவருடைய கடைசி மகனுக்கு அப்போதுதான் 10 வயது. அந்தப் பிள்ளையை கவனிப்பதற்கு அவருடைய தாயும் இல்லை. அவர் இறந்துவிட்டார். அக் குழந்தையை யார் பார்த்துக்கொள்வார்? என்று கவலைப்பட்டார். அவருடைய மூத்த மகள் வைத்தியத்துறையில் படித்துக்கொண்டு இருந்தார். ஆகவே புற்றுநோய் தொடர்பான வைத்தியர்கள் இவருடைய மகளைக் கூப்பிட்டு இனிமேல் உங்களுடைய தந்தையை காப்பாற்றமுடியாது. வைத்தியசாலையில் வைத்திருப்பது வீணான செயல். வீட்டுக்கு செல்லுங்கள். அவர் சிறு காலமாவது உங்களுடன் நேரத்தை செலவளிக்கட்டும் என்று கூறினார்கள். ஆகவே தியாகராஜன் தனது இரண்டு மகள்களுடனும் மகனுடனும் வீட்டுக்கு சென்றார்.

ஒருநாள் தியாகராஜன் அவர்களுடைய மூத்த மகளுடன் படிக்கும் தோழி ஒருவர் பிருந்தாவனத்திற்கு சுவாமியின் தரிசனத்திற்காக செல்வதாக கூறினார். ஆகவே அவர் தியாகராஜனின் மூத்தமகளையும் அழைத்தார். அவர் அங்கு சென்று சுவாமியின் தரிசனத்தை பார்த்தவுடன் சுவாமி இறைவன் என்பதை முழுமையாக நம்பினார். அதன்பின்பு தியாகராஜன் அவர்களிடம் நாங்கள் சாயிபாபாவை பார்க்க செல்வோம். அவர் ஒரு கடவுள் என்று கூறினார். ஆனால் தியாகராஜன் அதனை நம்பவில்லை. அவர் கூறினார். நான் பல கடவுள்களை வணங்கிவிட்டேன். எனக்கு எந்த நம்பிக்கையும் இல்லை. நான் வரப்போவதில்லை என்று கூறினார். தியாகராஜன் உடல்நிலை குறைவு காரணமாக வேலை செய்யும் கம்பனிக்கு செல்லாமல் இருந்தாலும் அவருடைய கம்பனியால் அவருக்குரிய சம்பளப்பணம் கிடைத்துக்கொண்டு இருந்தது. சுவாமி, நாங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரைத் தேடிவர வேண்டுமென்று தீர்மானம் எடுத்துவிட்டால் நாம் விரும்பாவிட்டாலும் அது நடந்தே தீரும். நாங்கள் எல்லோரும் நினைக்கிறோம், சுவாமியை நாங்கள்தான் நினைக்கின்றோம் என்றும் நாங்கள்தான் சாயி நிறுவனம் தேடிச் செல்கிறோம் என்றும். ஆனால் அது உண்மையல்ல. சுவாமியின் தீர்மானம் இல்லாமல் எம்மால் அவரை நினைக்கக்கூட முடியாது. நாங்கள் எல்லோரும் பெரிய பாக்கியசாலிகள். இப்போது தியாகராஜன் கதைக்கு வருவோம்.

ஒருநாள் தியாகராஜன் அவருடைய கம்பனியின் முதலாளி, ஒரு மிக முக்கியமான வாடிக்கையாளர் ஒருவர் சத்ய சாயி பாபா அவர்களை பார்க்கச் செல்லவேண்டும் என்று கேட்கின்றார். எனவே நீங்கள் அழைத்துச் செல்லவேண்டும் என்று சொன்னார். தனது மகளுக்கு போகமாட்டேன் என்று கூறிய தியாகராஜனால் தனது முதலாளிக்கு போகமாட்டேன் என்று கூறமுடியவில்லை. எனவே அந்த வாடிக்கையாளருடன் சுவாமியை பார்ப்பதற்கு பிருந்தாவன் சென்றார். அப்போது தியாகராஜன் மனதில் சிறு நம்பிக்கை ஏற்பட்டது. அது என்னவெனில் நான் போகமாட்டேன் என்று நினைத்தேன். ஆனால் சந்தர்ப்பசூழ்நிலையால் நான் சுவாமியிடம் அழைத்துச் செல்லப்படுகின்றேன். அவர்கள் பிருந்தாவனத்தில் நுழையும்போது சுவாமி பஜனை எல்லாம் முடிந்து வெளியில் செல்கின்றார். ஆகவே வாயிற்கதவு மூடப்பட்டுவிட்டது. சுவாமியின் பின் பக்க உருவத்தை மட்டும்தான் தியாகராஜனால் பார்க்கமுடிந்தது. ஆகவே தியாகராஜனிடம் இருந்த சிறு நம்பிக்கையும் போய்விட்டது. ஆகவே அவர் தன்னுடன் வந்த வாடிக்கையாளரிடம் என்ன செய்வது என்று கேட்டார். அதற்கு அவர் நாங்கள் இனி சுவாமியை பார்க்கமுடியாது. ஆகவே இந்த மரத்தின்கீழ் 10 நிமிடம் இருந்துவிட்டு செல்வோம் என்றார். ஆகவே இருவரும் மரத்தின்கீழ் அமர்ந்தனர். அப்போது திடீர் என்று நுழைவாயில் திறந்தது. அப்போது சுவாமி வருகின்றார். சுவாமி இவர்கள் இருந்த மரத்திற்கு நேராக வந்தார். அப்போது தியாகராஜன் நினைத்தார் சுவாமி அந்த வாடிக்கையாளரைத்தான் பார்க்க வருகின்றார் என்று. ஏனெனில் அவர்தான் சுவாமியின் பக்தர் என்று. ஆனால் சுவாமி நேராக வந்து, "தியாகராஜன்! கெதியாக எழும்பு" என்றார். தியாகராஜனுக்கு மிகவும் ஆச்சர்யம். சுவாமிக்கு எவ்வாறு என்னுடைய பெயர் தெரியும்? என்று. நாங்கள் நினைக்கின்றோம் சுவாமிக்கு எதுவும் தெரியாது என்று. ஆனால் சுவாமிக்கு எல்லாமே தெரியும். நாங்கள் சுவாமியிடம் கூறவேண்டும் என்ற அவசியம் இல்லை. நாங்கள் சுவாமியிடம் கூறுவது, பிரார்த்தனை செய்வது எல்லாம் எங்களுடைய மனத்திருப்திக்காக மட்டுமே. சுவாமி தியாகராஜன் அவர்களைக் கூப்பிட்டு வைத்தியர்கள் எல்லோரும் உனக்கு புற்றுநோய் இருக்கின்றது என்று கூறுகின்றனர். ஆனால் நான் கூறுகின்றேன். "your cancer is cancelled" (உன்னுடைய புற்றுநோய் இல்லாமல் போய்விட்டது) என்று. சுவாமி கூறிவிட்டு உடனே திரும்பிவிட்டார். இந்த சம்பவத்திற்கு பிறகு அவர் 25 வருடங்களுக்கு மேற்பட்டகாலம் வாழ்ந்தார்.

அவருடைய 10 வயது மகன் பிற்பட்டகாலப்பகுதியில் சுவாமியின் பல்கலைக்கழகத்தில் இரசாயனவியல் தொடர்பான விரிவுரையாளராக இருக்கின்றார். அவருடைய பெயர் ரவிகுமார். ஒருமுறை சுவாமி கூப்பிட்டு அந்த கதையை கூறும்படி ரவிக்குமார் அவர்களிடம் சொன்னார். இக்கதை சொல்லிக்கொணடு இருக்கும் வேளையில் ரவிக்குமார் அவர்களை சுவாமி கூப்பிட்டு ஒரு விடயம் கூறினார். ரவிகுமார் அவர்களுடைய கண்களில் இருந்து ஆனந்தக் கண்ணீர் வந்தது. அதாவது சுவாமி கூறினார், "உன்னுடைய தந்தை இறந்துவிடுவார் என்று கூறிய வைத்தியர் இப்போது இறந்துவிட்டார். ஆனால் உன்னுடைய தந்தை இப்போதும் உயிருடன் இருக்கின்றார்" என்று. இந்த உரையின் முடிவில் ரவிக்குமார் அவர்கள் ஒரு விடயத்தைக் கூறினார். அது என்னவெனில், "I am thankful to you Swami for that cancer. because of that we got Swami". அதாவது அந்த புற்றுநோயை தந்ததற்கு நான் மிகவும் நன்றி கூறுகின்றேன். ஏனெனில் அந்த புற்றுநோய் வந்ததன்விளைவாகத்தான் நாங்கள் சுவாமியைப் பெற்றுக்கொண்டோம் என்று. அன்று குந்திதேவி கூறியதுபோன்று. யாராவது புற்றுநோய் தந்ததற்கு நன்றி கூறுவார்களா? இல்லை. அதாவது கஷ்டங்கள் என்பது ஒரு நுழைவாயிலைப் போன்றது. அது கடவுள் எம்மை நோக்கி வருவதற்கான நுழைவாயில். கஷ்டங்கள் எப்போதும் எமக்கு கஷ்டமாகத்தான் இருக்கும். ஆனால் இதுவே இறைவனை நெருங்குவதற்கான வழி. இறைவனின் அருகாமையை எம்மால் முழுமையாக உணரக்கூடிய ஒரு உன்னதமான விடயமாக ஏற்றுக்கொள்ளுங்கள் என்றார்.

அரவிந்த் பாலசுப்ரமண்யா அவர்கள் சுவாமியின் கிருபையால் 12க்கு மேற்பட்ட நாடுகளுக்கு சென்றுவிட்டேன் என்று கூறினார். நாங்கள் நினைக்கலாம், அமெரிக்கா, ஆஸ்திரேலியாவில் இருக்கும் மக்கள் வசதியாக மகிழ்ச்சியாக இருக்கின்றார்கள் என்று. ஆனால் அது உண்மை அல்ல. எல்லோருக்கும் ஏதாவது பிரச்சினை இருக்கின்றது. சந்தோசம் என்பது எங்கு சென்றாலும் கிடைக்காது. அது எங்களுக்குள் இருப்பது. வெளியில் இருந்து வருவது அல்ல. "Happiness is coming from inside".

எங்கள் அனைவருக்குமே புத்தருடைய கதை தெரியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் ஒரு அரசன். எல்லாம் அவருக்கு கிடைத்தபோதிலும் அவரால் சந்தோசமாக இருக்கமுடியவில்லை. ஆனால் அவர் காட்டுக்கு எல்லாவற்றையும் விட்டுச் சென்று பசியுடன் இருந்தவேளையில் மகிழ்ச்சியாக இருந்தார். அதற்காக நாங்கள் அனைவரும் காட்டுக்கு போனால்தான் சந்தோசமாக இருப்போம் என்று அர்த்தம் இல்லை. புத்தர் சந்தோசமாக இருந்ததற்கு எது காரணம் என்று நாம் கண்டறியவேண்டும். அந்த காரணமே அதன்பின்பு அவர் எங்கு இருந்தாலும் சந்தோசமாக இருந்ததற்கு காரணம் ஆகும்.

ஒருமுறை சுவாமி ஒரு கதை கூறினார். ஒரு நாய் ஒரு எலும்பை கடித்தது. அது மிகவும் சுவையாக இருந்தது. ஆனால் கடித்த எலும்பில் எந்த இறைச்சியும் இல்லை. வரண்டுபோய் இருந்தது. அந்த எலும்பை நாய் கடிக்கும்போது எலும்புத்துண்டு நாயின் முரசில் குத்திவிட்டது. முரசில் இருந்து நாயின் இரத்தம் அதன் நாக்கில் பட்டது. அதனைத்தான் நாய் சுவைத்துவிட்டு எலும்பில் இருந்து சுவை வருகின்றது என்று நினைக்கிறது. இதன்மூலம் சுவாமி என்ன கூறுகின்றார் எனில் எங்களுக்கு கிடைக்கும் சந்தோசமும் எங்களுக்குள் இருந்துதான் வருகின்றது. சிலர் உங்களிடம் கேட்கலாம் ஏன் சிரிக்கின்றீர்கள் என்று. நீங்கள் கூறுவீர்கள், நகைச்சுவை கூறியதால் என்று. அந்த அதே நகைச்சுவைக்கு சிலர் சிரிக்கமாட்டார்கள். அதற்கு காரணம் அந்த நகைச்சுவையில் சந்தோசம் தங்கியிருக்கவில்லை. அது ஒவ்வொருவருக்குள்ளும் அவருடைய மனநிலையில் தங்கியுள்ளது. நாங்களும் அந்த நாயைப் போலத்தான். சந்தோசம் வெளியில் இருந்து கிடைக்கின்றது என்று நினைத்துக்கொண்டு இருக்கின்றோம். உண்மையான சந்தோசம் பிறபொருட்களில் இல்லை. இறைவன் எங்கள் அனைவருக்குள்ளும் இருக்கின்றார். ஆகவே அவருடைய அருகாமையே உண்மையான சந்தோசம். "Happiness is union with God". இந்த அருகாமையை உணர்வதற்கான உன்னதமான விடயமே கஷ்டங்கள், கவலைகள் ஆகும்.

ஆகவே கவலைகள் வரும்போது நாங்கள் என்ன செய்யவேண்டும்? ஒரு உதாரணம் கூறுகின்றேன். 4 மாதக் குழந்தையை தடுப்பூசி போடுவதற்காக வைத்தியரிடம் அழைத்துச் செல்லும்போது ஊசி போட்ட பின்னர் 10 விநாடிகள் குழந்தை அழும். பிறகு நிறுத்திவிடும். ஆனால் 4 வயதுக் குழந்தையை தடுப்பூசி போட கூட்டிச் செல்லும்போது, வைத்தியர் அவ் ஊசியை எடுத்தவுடன் குழந்தை என்னை ஊசி போடவிடாமல் காப்பாற்றுங்கள் என பெற்றோரிடம் கெஞ்சும். அதற்கு பெற்றோர் வைத்தியர் வேறு யாருக்கோ போடப் போகின்றார் என்று பொய் சொல்லி சமாளிக்கும்வேளையில் வைத்தியர் ஊசியை செலுத்துவார். அப்போது அக் குழந்தை 10 நிமிடங்களுக்கு மேலாக அழும். 4 மாதகுழந்தையாக உள்ளபோது 10 விநாடிகள் அழுத குழந்தை இப்போது ஒரு நிமிடங்களுக்கு மேலாக அழும். இதற்கு காரணம் அந்த குழந்தை பலவீனம் அடைந்துவிட்டதால் இல்லை. 4 மாத குழந்தையாக உள்ளபோது ஊசிபோடும்போது காலில் மட்டும்தான் வலி ஏற்பட்டது. 4 வயதில் ஊசி போடும்போது கால்வலியுடன் மனதிலும் வலி ஏற்படுகின்றது. அது என்ன வலி எனில், பெற்றோர் பொய் சொல்லிவிட்டார்கள். என்னை ஊசி போடுவதிலிருந்து காப்பாற்றவில்லை என்று. அதற்காக உங்கள் குழந்தையை அழவைக்கிறீர்கள் என்று உங்களுக்கு குழந்தைமேல் பாசம் இல்லை என்று ஆகிவிடுமா? இல்லை குழந்தையை ஏமாற்றுகின்றீர்கள் என்று அர்த்தம் ஆகிவிடுமா? இல்லை. நீங்கள் உங்கள் குழந்தைமேல் அதிக பாசம் வைத்துள்ளீர்கள். பிள்ளை அழுதாலும் அதன் நன்மைக்காக செய்கின்றீர்கள். இதனை உங்கள் 4 வயதுப் பிள்ளைக்கு விளங்கப்படுத்த முடியாது. 4 வயதுப் பிள்ளைக்கு அதனை விளங்கிக்கொள்ளும் அறிவு இல்லை. அதேபோலத்தான் எங்களுடைய தெய்வீக அன்னை, தந்தையாகிய சுவாமியும் நாங்களும் பிரச்சினைகள், கஷ்டங்கள் வரும்போது அந்த 4 வயதுப் பிள்ளையைப் போலவே ஏன் இவ்வாறு செய்கிறீர்கள் என்று சுவாமியைக் கேட்போம். அப்போது சுவாமி சொல்வார், உன்னுடைய நன்மைக்காக மட்டுமே நான் செய்கின்றேன் என்று. இப்போது நீ அதனைப் புரிந்துகொள்ள மாட்டாய். நீங்கள் ஆன்மீகப் பாதையில் வளர்ச்சியடையும்போது அதனை அறிந்து கொள்வாய். அப்போது நீ எனக்கு இதற்காக நன்றி சொல்வாய் என்று சுவாமி கூறினார்.

நாங்கள் எல்லோரும் 4 வயது குழந்தைகளைப் போலத்தான். ஆகவே கஷ்டங்கள் வரும்போது சுவாமி! நீங்கள் எனக்கு இந்த கஷ்டத்தை தருவது என்னுடைய நன்மைக்காக மட்டும்தான். ஆனால் இது என்னவென்று என்னால் புரிந்துகொள்ளமுடியவில்லை. ஆகவே நான் அதனை பிரசாதமாக ஏற்றுக்கொள்கின்றேன் என கூறவேண்டும். இந்த முழு நம்பிக்கையை நாம் சுவாமிமேல் வைக்கவேண்டும்.

இப்போது ஹரிஸ் என்ற சுவாமியின் பக்தரின் கதையைப் பற்றி அரவிந்த் பாலசுப்ரமண்யா அவர்கள் கூறினார். 1991ஆம் ஆண்டு ஹரிஸ் இனுடைய தந்தையார் சுவாமியிடம் ஹரிஸ் இன் திருமணத்திற்கு பெண் பார்த்துத் தருமாறு கேட்டார். சுவாமி அதற்கு இரு என்று கூறிவிட்டு வேறு ஒருவரை எழுப்பினார். அவர் தனது மகளின் திருமணத்திற்காக மாப்பிள்ளை பார்த்துத் தருமாறு சுவாமியிடம் கேட்டார் உடனே சுவாமி இவ்விரு குடும்பத்தினரையும் திருமண பந்தத்தின்மூலம் இணைத்துவைத்தார். 1991ஆம் ஆண்டு சுவாமியின் ஆசீர்வாதத்தால் ஹரிஸ் இற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணம் நடைபெற்றது. அதன்பின்பு இரண்டு வருடங்கள் கழித்து 1993ஆம் ஆண்டு வைத்தியரிடம் சில சோதனைகளுக்காக ஹரிஸும் அவருடைய மனைவியும் சென்றனர். அவ் வைத்தியர் பெயர் சாவித்திரி அம்மா. அவர் பெங்களூரில் சுவாமியின் வைத்தியசாலையில் பணிபுரிபவர். அவர் ஹரிஸின் மனைவியை சோதனை செய்தபின்பு ஹரிஸிடம், உங்கள் மனைவியால் ஒரு குழந்தையை பெற்றெடுக்கும் பாக்கியம் இல்லை. குழந்தை பிறக்கும் சந்தர்ப்பம் இல்லை என்று கூறினார். இப்போது ஹரிஸின் சிந்தனை எவ்வாறு இருக்கும் என்று நினைக்கின்றீர்கள்? சுவாமிதானே தெரிவு செய்து திருமணம் செய்துவைத்தார். ஏன் இவ்வாறு நடக்கவேண்டும் என்று நினைத்தால் அது உண்மை அல்ல. ஹரிஸ் இதுவும் சுவாமி என்னுடைய நன்மைக்காக மட்டும் செய்கின்றார் என்று திடமாக நம்பினார். அவருடைய மனைவிக்கு இதனைப்பற்றி எதுவுமே கூறவில்லை. நான்கு வருடங்களாக முயற்சி செய்துகொண்டு இருந்தனர். இவ்விடயமாக கவலையடைந்த ஹரிஸின் மனைவியின் பெற்றோர், அவருடைய மகளை தனியாக வைத்தியசாலை சென்று சோதனை செய்தார்கள். அதில் அவர்களுடைய மகளினால் குழந்தையை பெறமுடியாது என்ற பிரச்சினை அவர்களுக்கு தெரியவந்தது. இதனை ஹரிஸிடம் கூறினார்கள். ஹரிஸ் எனக்கு இது நான்கு வருடங்களுக்கு முன்பே தெரியும். ஆனால் இதனைக்கூறி யாரையும் மனவருத்தப்படுத்த விரும்பவில்லை எனக் கூறினார். அதற்கு ஹரிஸின் மனைவியின் பெற்றோர், நீங்கள் சுவாமியிடம் இதனைப் பற்றிக் கேட்டு பிரார்த்தனை செய்திருக்கலாம். சுவாமியை சென்று பாருங்கள் என்று வற்புறுத்தினர். அதற்கு ஹரிஸ், சுவாமிக்கு எல்லாம் தெரியும். அவர் அனைத்தையும் பார்த்துக்கொள்வார் என்று கூறினார். ஆனால் சுவாமியிடம் செல்லுமாறு எல்லோரும் வற்புறுத்தியதன் விளைவாக ஹரிஸ் சுவாமியிடம் செல்வதற்கு உடன்பட்டார்.

தரிசனத்திற்குச் சென்றபோது சுவாமி இவர் கூற முன்பே, "எனக்கு தெரியும். எனக்கு தெரியும். நான் தருவேன் என்று உன் மனைவியிடம் கூறு" என்று சுவாமி சொன்னார். அதிலும்கூட, சுவாமி ஹரிஸிற்கு குழந்தை 7 வருடமாக இல்லை என்ற விடயத்தைக் கூறி ஹரிஸிற்கு குழந்தை இதுவரை இல்லை என்பதை எல்லோர் முன்னிலையிலும் கூறவில்லை. இதுதான் சுவாமியின் அன்பு. அதன்பின்பு ஹரிஸ் மனைவியிடம் கூறினார். மனைவியும் மிகவும் சந்தோசம் அடைந்தார். அதன்பின்பும் பலவருடம் கழிந்தது. அவர்களுக்கு குழந்தை பிறக்கவில்லை. 13 வருடங்கள் சென்றுவிட்டது. ஆகவே ஹரிஸின் மனைவி சுவாமி குழந்தை கிடைக்கும் என்றுதானே கூறினார். ஆகவே அவர்கள் காமபுத்திரர்களாகத்தான் இருக்கவேண்டும் என்று இல்லை. பிரேம புத்திரர்களாகவும் இருக்கலாமே?! என்று மனைவி கூறினார். அதற்கு ஹரிஸ் கூறினார், நான் சுவாமியிடம் இதனைப்பற்றிக் கேட்கின்றேன் என்று கூறி சுவாமியை பார்க்கச் சென்றார். சுவாமியின் முகம் இதனைக் கேட்டவுடன் கவலையடைந்தது. சுவாமி கோபத்துடன், உனக்கு என்னில் நம்பிக்கை இல்லை என்று கூறினார். சாயி பாபா அவருடைய நாவினால் ஒரு வார்த்தை கூறினால் அது சத்தியம். அது நடந்தே தீரும் என்று கூறினார். அதன்பின் 2008 வரைக்கும் அவர்களுக்கு குழந்தை இல்லை.

2008ஆம் ஆண்டு ஹரிஸ் மீண்டும் பிருந்தாவனம் சென்றார். அப்போது சுவாமி கூறினார், நான் உனக்கு குழந்தை தருகின்றேன் என்று கூறினேன் அல்லவா, அடுத்தவருடம் தருகின்றேன் என்றார். 17 வருடமாக குழந்தை இல்லாமல் இருந்துவிட்டார்கள். எவ்வாறு சபரி ஸ்ரீராமருக்காக காத்துக்கொண்டு இருந்தாரோ அவ்வாறே ஹரிஸும் சுவாமியிடம் முழு நம்பிக்கையில் இருந்தார். 2009ஆம் ஆண்டு ஆகிவிட்டது. ஜூன் வந்துவிட்டது. டிசெம்பரும் ஆகிவிட்டது. 2010ஆம் ஆண்டும் ஆகிவிட்டது. ஆனால் குழந்தைபெறும் பாக்கியம் ஹரிஸின் மனைவிக்கு கிடைக்கவில்லை. அப்போதுகூட ஹரிஸ் சுவாமி ஏன் பொய் சொன்னீர்கள் என்று எதுவும் கேட்கவில்லை. எல்லாம் நன்மைக்கே என்று எடுத்துக்கொண்டார். இந்த ஏற்றுக்கொள்ளும் பக்குவமே ஆழமான பக்தி ஆகும்.

2010ஆம் ஆண்டு சுவாமியின் 85 வீடுகளில் ஸ்ரீ ருத்ர பாராயணம் செய்து அதனை சுவாமிக்கு அர்ப்பணிப்பதாக தீர்மானம் சுவாமியால் எடுக்கப்பட்டது. அந்த 85 வீடுகளில் ஹரிஸின் வீடும் உள்ளடங்கும். 2010ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் ஹரிஸின் வீட்டில் வேதபாராயணம் நடைபெற்றது. இவ் நிகழ்வின் இடையில் ஹரிஸின் மனைவி தலைசுற்றி மயங்கிவிட்டார். அப்போது ஸ்ரீ ருத்ரம் சொல்லும் குழுவில் ஒரு பெண் மருத்துவரும் இருந்தார். அவர் வேறு யாரும் இல்லை, சாவித்ரி அம்மா. அவர் ஹரிஸின் மனைவியை அறைக்குள் அழைத்துச் சென்றார். மனைவியும் வைத்தியருடன் இருப்பதால் ஹரிஸ் ஸ்ரீ ருத்ர பாராயணத்தை நிறுத்திவிடாமல் தொடர்ந்து பாராயணம் செய்து முடித்துவிட்டு மனைவியை பார்க்கவந்தார். அப்போது சாவித்திரி அம்மா, என்ன ஹரிஸ் மனைவியை கவனமாக பார்ப்பதில்லையா? என்று கேட்டார். ஹரிஸும் ஆச்சரியப்பட்டார். அப்போதுதான் சாவித்திரி அம்மா கூறினார், உங்களுடைய மனைவி 2 மாதம் கர்ப்பமாக உள்ளார் என்று. ஆகவே அவர் கர்ப்பமானது 2009ஆம் ஆண்டு டிசெம்பர் மாதமே. ஆகவே சுவாமியின் வார்த்தை எப்போதும் பொய் ஆகாது. அத்துடன் எந்த வைத்தியர் குழந்தை பிறக்காது என்று கூறினாரோ அந்த வைத்தியரே குழந்தை பிறக்கப்போகின்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கூறினார். இதுவே சுவாமியின் லீலை ஆகும். இதிலிருந்து நாம் எடுத்துக்கொள்ளவேண்டிய விடயம் என்னவென்றால் சுவாமிக்கு எல்லாமே தெரியும். எந்த கஷ்டம், கவலை வந்தாலும் அதனைப் பற்றி நினைத்து பயம்கொள்ளத் தேவையில்லை. எல்லாமே நல்லதாகவே அமையும். எங்களைச் சுற்றியுள்ள மாயை சுவாமியை மறக்கச் செய்துவிடும். ஆகவே நாம் ஒவ்வொரு நாளும் சுவாமி கடவுள், அவர் எல்லாம் அறிந்தவர் என்று நினைத்து நினைத்து சாதனா செய்யவேண்டும். நாங்கள் கடவுளை மறப்பதாலேயே கவலைப்படுகின்றோம். அவருடன் உள்ள நம்பிக்கையை இழப்பதனாலேயே கவலைப்படுகின்றோம். மாயை என்று சொல்வது, சுவாமி கடவுள் என்று நினைவு இருந்தாலும் அவர் எங்களுடன் இல்லை. அவருக்கு எங்களில் அன்பு இல்லை என்று நினைப்பதும் மாயைதான். இதுவே எங்களுடைய கவலை, மனவருத்தம் எல்லாவற்றுக்கும் காரணம். ஆகவே மாயையில் இருந்து விலகுவதற்கான உத்தியை நான் கூறுகின்றேன் என்று அரவிந்த் பாலசுப்ரமண்யா அவர்கள் கூறினார். இங்கு வரும்போது மீனவர்கள் கடலில் மீன்பிடித்துக்கொண்டு இருந்தார்கள். அவர்கள் வலைவீசும்போது எல்லா மீன்களும் பிடிபட்டுவிடும். ஆனால் ஒருமீன் மட்டும் ஒரு தடவைகூட வலையில் அகப்படவில்லை. எனவே மற்ற மீன்கள் எல்லாம், எவ்வாறு நீ எல்லா சந்தர்ப்பங்களிலும் வலையில் பிடிபடுவதில் இருந்து தப்பிக்கொண்டு இருக்கின்றாய்? என்று கேட்டன. அதற்கு அந்த மீன் கூறியது. நான் வலையை வீசும்போது மீனவருடைய காலைச் சுற்றி நிற்பேன். அப்போது மீனவருடைய கால்களின் கீழ் வலை சிக்காதுதானே. அந்தநேரம் அவ்வாறு தப்பிக்கொள்வேன் என்று கூறியது. அதுபோலவே எங்களுடைய சுவாமியும் தெய்வீகமான மீனவர். அவர் அவருடைய மாயை எனும் வலையை வீசும்போது நாம் எதுவும் இல்லாமல் இருந்தால் வலையில் சிக்கிவிடுவோம். புத்திசாலித்தனமாக சுவாமியின் பாதத்தைச் சுற்றி சுழன்றுகொண்டு இருந்தோமெனில் அவருடைய மாயை வலையில் அகப்படமாட்டோம். அதனால்தான் சுவாமி கூறுகின்றார், "மானச பஜரே குரு சரணம்". அதாவது இந்த சம்சார கடலை கடப்பதற்கு இறைவனுடைய பாதத்தில் சரணடையுங்கள் என்று. இவ்வாறு கூறி தனது உரையை நிறைவு செய்தார்.

தொகுப்பு:
ரா. பவதாரணி,
மந்திகை சாயி நிலையம்

## தாயே தெய்வம்

எல்லோரிலும் தெய்வீகம் பிணைந்துள்ளது. யார் இதற்கு பொறுப்பு? அம்மாதான். அவர் 9 மாதம் வயிற்றில் சுமந்து, எவ்வளவோ கஷ்டங்களை அனுபவித்து பிள்ளையின் நலனுக்காக தன்னையே தியாகம் செய்யத் தயாராகவுள்ளார். தனது இருப்பே தாயினால்தான் என்பதைப் பிள்ளை உணரவேண்டும். பிள்ளைகளின் நலன் தாயிலேயே தங்கியுள்ளது. தாயின் அன்பினாலேயே பிள்ளைகள் மேன்மையையும் புகழையும் அடைகிறார்கள். ஆகவே தாய்க்கு பிள்ளைகள் நன்றியுடையவராகவே எப்போதும் இருக்கவேண்டும். தாயை மதித்து அவருக்கு வேண்டியதைச் செய்யவேண்டும். மகளிர் தினம் இக் கடப்பாட்டை வலியுறுத்தவே கொண்டாடப்படுகிறது.

தாயை எப்போதும் மதித்து அன்புடன் சேவை செய்யவேண்டும்.

பகவானின் அருளுரை : 19.11.1998



## சனாதன தர்மத்தின் குரல்

- சேர வாரீர் ஜகத்தீரே.
- சேர்ந்த பின்னர் ஜகத்தை முன்னேற்ற உழைக்க வாரீர்.
- நீயும் முன்னேறி பிறரையும் முன்னேற்று.
- முன்னேறுவது மட்டுமன்றி முன்னேறிக்
- கொண்டேயிரு.

- சுவாமி விவேகானந்தர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 03.10.2023 அன்று திரு. அரவிந்த் பாலசுப்ரமண்யா அவர்கள் யாழ்ப்பாணம் சாயி நிலையத்தில் ஆற்றிய உரையின் சாராம்சம்

ஓம் ஸ்ரீ சாயிராம், எனக்கு கிடைத்த இந்த சந்தர்ப்பத்திற்காக சுவாமிக்கு நன்றி கூறுகிறேன். நான் சுவாமியுடன் எனக்கு கிடைத்த அனுபவத்தை உங்களுக்கு சொல்ல முன்வருகிறேன். நான் சில விஷயங்களை சுவாமியிடம் கேட்டிருந்தேன். ஆனால் சுவாமி கொடுத்த பதிலோ வேறு விதமாக இருந்தது. அந்த அனுபவத்தை உங்களிடம் பகிர்ந்துகொள்ள முனைகிறேன். முதலில் நாங்கள் சுவாமியிடம் எது கேட்கவேண்டும் என்பதில் மிகவும் கவனமாக இருக்கவேண்டும். ஏனெனில் நாங்கள் கேட்பதையே சுவாமி தந்துவிடுவார். அவர் தந்ததற்குப் பிற்பாடு நாம் யோசிக்கக்கூடாது. ஐயோ ஏன் இதை கேட்டோம் என்று.

எங்களுடைய குடும்பம் முழுவதும் சுவாமியிடம் எவ்வாறு இணைந்தோம் என்பதைப்பற்றி பகிர்ந்துகொள்ள எண்ணுகிறேன். எனது தந்தையின் மூத்த தமையனார் ஒரு கம்பனியில் வேலை செய்தார். எதிர்பாராதவிதமாக பெங்களூரில் இருந்து கொல்கத்தாவிற்கு மாற்றப்பட்டார். அந்தக் காலத்தில் கொல்கத்தா பெரிய பிரபல்யமான பட்டணமாக இருந்தது. ஆனால் அவர் வேலைமாற்றத்தை எண்ணி மனமகிழவில்லை. ஏனெனில் அவரது சொத்துக்கள் அனைத்தும் பெங்களூரில் இருப்பதாலும் பெங்களூரில் இருந்து கொல்கத்தா பயணிப்பது தூரமாக இருந்ததாலும் இவ்வேலைமாற்றத்தை விரும்பவில்லை. ஆனால் அவர்கள் வேலை மாற்றத்தை தவிர்க்கவும் முடியவில்லை. ஒருநாள் அவர் தனது கனவிலே சுவாமியின் புகழ்களை பாடி மேளமும் அடித்துக்கொண்டு மாடு ஒன்றை அலங்கரித்துக் கொண்டு திரியும் ஒருவரை கண்டார். அவ் மனிதன் "நீர் ஒன்றும் கவலைப்படவேண்டாம். எல்லாம் சரியாகும்" என கூறி மறைந்தார். அவருக்கும் இக்கனவு சிறு மகிழ்ச்சியையும் திருப்தியையும் அளித்தது. அவர் அலுவலகத்தில் இருந்து திரும்பும்பொழுது ராமர் கோவில் ஒன்றில் பிரசங்கம் நடந்துகொண்டிருந்தது. இவரும் அப்பிரசங்கத்தை பார்த்தபொழுது அதிர்ச்சியுற்றார். ஏனெனில் இவர் கனவில் கண்டமனிதர் அங்கு பிரசங்கம் செய்துகொண்டிருந்தார். கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள் நீங்கள் யாரென்று தெரியாமல் கனவில் கண்ட ஒருவரை நேரில் சந்திக்கும்பொழுது இருக்கும் மனநிலையை. அவரும் உடனே அப்பிரசங்கத்தில் கலந்துகொண்டவர்களை கேட்டார். பிரசங்கம் செய்பவர் யாரென்று, அவர்கள் கூறினார்கள், இவர்தான் சத்ய சாயி பாபா. ஷீரடி சாயியின் மறு அவதாரம் என்று. இதை கேட்ட எனது பெரியதந்தை



கனவில் கண்ட மனிதரை சந்திக்க புட்டபர்த்திக்கு சென்றார். 1962ஆம் ஆண்டு புட்டபர்த்திக்கு செல்லும் அனைவருக்கும் சுவாமியை பிரத்தியேகமாக நேர்காணும் வாய்ப்பு கிடைக்கப் பெற்றது. எனது பெரிய தந்தைக்கும் அவ்வாறான வாய்ப்பு கிடைத்தது. சுவாமி எனது பெரிய தந்தையை பார்த்தவுடன் "உனக்கு பெங்களூரில் இருக்கத்தானே ஆசை. கவலைப்படாதே. நீ எப்போதுமே பெங்களூரிலே இருப்பாய். இப்போது உனக்கு என்ன வேண்டும்?" என கூறினார்.

எனது பெரிய தந்தையோ, சுவாமி எனக்கு தேவைப்பட்ட ஒன்றுக்கு தீர்வு கிடைத்துவிட்டது. வேறு எதுவும் வேண்டாம் என்று கூறினார். அவருடைய வேலைமாற்றமும் நிறுத்தப்பட்டு பெங்களூரிலே தங்க வாய்ப்பு கிடைத்தது. 2010ஆம் ஆண்டில் எனது பெரிய தந்தை எல்லாவற்றையும் விடுத்து புட்டபர்த்தியிலேயே வாழ ஆசைப்பட்டார். ஆனால் அவர் ஆறு வருடங்களாக முயன்றும் அவரால் நிரந்தரமாக புட்டபர்த்தியில் தங்கமுடியவில்லை. 2016இல் அவர் பெங்களூரில் உயிரை நீத்தார்.

நான் எனது பெரிய தந்தை சுவாமியிடம் கேட்டுக்கொண்ட பிரார்த்தனையை எண்ணிப் பார்க்கிறேன். சுவாமி கூறியபடி அவர் இறுதிவரை பெங்களூரிலேயே இருந்தார். அதனால் நாங்கள் சுவாமியிடம் பிரார்த்திக்கும்போது கவனமாக இருக்கவேண்டும். ஏனெனில் கடவுள் எப்பொழுதும் எமது பிரார்த்தனையை பூர்த்தி செய்வார். சிலவேளை காலப்போக்கில் நாம் ஆசைப்பட்ட ஒரு விடயத்தில் எமக்கு நாட்டம் ஏற்படாது. அதனால் நாம் என்ன கேட்கவேண்டும் என்பதில் தெளிவாகவும் அது எமது எதிர்காலத்தை சிறப்பாக்கும் வகையிலும் இருக்கவேண்டும். சிலவேளைகளில் நாம் கேட்டவற்றை கடவுள் தராமல் இருக்கிறார் என சிந்திப்பதுண்டு. ஆனால் அவ்வாறு விரக்தி அடையவேண்டாம். ஏனெனில் சரியான சந்தர்ப்பத்தில் எமது பிரார்த்தனைகள் நிறைவேற்றப்படும். உதாரணமாக சபரி என்ற பெண் ஸ்ரீராமரின் தரிசனத்திற்காக நம்பிக்கையாக காத்திருந்து இறுதியில் தரிசனத்தை பெற்றுக்கொண்டார். அதுபோல் நாமும் திடமாக நம்பிக்கையுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்திருக்கவேண்டும். 2008ஆம் ஆண்டு எனது பிறந்தநாள் அன்று புட்டபர்த்தியில் நாங்கள் ஒரு தட்டு நிறைய உலர் பழங்கள் கொண்டு சுவாமியிடம் கொடுத்து ஆசீர்வதித்து பெற்றுக்கொள்ளும் வழக்கம் இருக்கிறது. அன்று திடீரென்று சுவாமி தரிசனத்திற்கு வந்துவிட்டார். அதனால் நான் திடீர் என்று ஆசீர்வதிக்கும் அக்ஷதயை மாத்திரம் கொண்டு சென்றேன். சுவாமி எப்பொழுதும் சரியான நேரத்திற்கே வருவார். தாமதமும் விரைவும் எங்களையே சார்ந்தது. நான் சுவாமியிடம் ஆசீர்வாதம் பெறச் சென்றவேளை சுவாமி அனைவரையும் ஆசீர்வதித்துவிட்டு சென்றுகொண்டிருந்தார். அதனால் நான் பஜன்மண்டபத்தில் இருக்க எண்ணினேன். சுவாமியின் ஆசீர்வாதத்தை பெறுவதற்காக நான் அங்கு வேலைசெய்கிறதால் பஜனைக் குழுவிடம் கேட்டு இரண்டாம் நிரையில் அமர்ந்துகொண்டேன். சுவாமி அருகில் வரும்போது நான் அக்ஷதை தட்டை தூக்கியவண்ணம் சுவாமியை ஆசீர்வதிக்குமாறு வேண்டினேன்.

சுவாமி கதிரையில் அமர்ந்தார். ஆனால் என்னை அவர் அழைக்கவே இல்லை. அதனால் நான் அக்ஷதை தட்டை இன்னும் சற்று உயரத்தில் உயர்த்திப் பிடித்தேன். ஒவ்வொரு பஜனை நிறைவிலும் எனது தட்டின் உயரமும் உயர்ந்தது. என்மனதில் சற்று கலக்கம் எழுந்தது. நான் இவ்வளவு முயற்சித்தும் சுவாமி ஏன் என்னை ஆசீர்வதிக்கவில்லை. சுவாமி கூறினாரே,"நீ ஒரு அடி எடுத்து வை. நான் உன்னை நோக்கி 100 அடி எடுத்து வைப்பேன்" என்று. ஏன் சுவாமி நான் இவ்வளவு முயற்சித்தும் என்னை ஆசீர்வதிக்க முனையவில்லை என்ற குழப்பம் எழுந்தது. நான்கு, ஐந்து பஜனைகளின் நிறைவில் சுவாமி என்னைப் பார்த்து இங்கே வா என அழைத்தார். நானும் சென்றேன். நான் சென்றபோது சுவாமி ஏதோ சொன்னார். ஆனால் என்னால் அதை கிரகிக்கமுடியவில்லை. ஏனெனில் பஜனை தொடர்ச்சியாக நடைபெற்றுக்கொண்டிருந்தது. அப்போது நான் கூறினேன் சுவாமி என்னால் நீங்கள் என்ன சொல்கிறீர்கள் என்பதை கிரகிக்கமுடியவில்லை. ஆனால் இன்று எனது பிறந்ததினம். என்னை ஆசீர்வதியுங்கள் என்று கூறினேன். சுவாமி கூறினார், மௌனத்தின் ஆழத்திலே சுவாமியின் ஓசை விளங்கும் என்று. அதனால் நான் மௌன நிலையை அடைவதற்காக எத்தனித்தேன். ஆனால் சுவாமி மௌனம் என்பதை எதுவாக விபரித்தார் என்றால், உடல்ரீதியான மௌனநிலை மட்டுமல்ல மனரீதியான மௌனநிலைகூட. ஒரு பஜனை முடிந்து மற்றைய பஜனை தொடங்குவதற்கான இடைவேளையிலே சுவாமி திடீரென்று, ஆசீர்வாதத்தை எடுத்துக்கொள் என்று கூற நானும் பாதநமஸ்காரத்தை பெற முனைந்தேன். நான் கையால் சுவாமியின் பாதத்தை தொடுவதற்கு பதிலாக தலையினால் தொட்டு ஆசீர்வாதத்தை பெற முனைந்தேன். நான் சுவாமியின் பாதத்தில் எனது தலையை சாய்க்கும்போது அடுத்த பஜனை தொடங்கியது. "சத்ய சாயி பாதாம்புஜம் பஜரே மானச நிரந்தரம்..." அதன் அர்த்தம் சுவாமியை எண்ணிக்கொள் சுவாமியின் பாத நமஸ்காரம் கிடைத்துவிடும் என்பதாகும். நான் அந்த பஜனை கேட்டு பூரித்துப்போய்விட்டேன். சுவாமியின் சரியான தருணத்தின் ஆசீர்வாதத்தை உணர்ந்தேன். சுவாமி உடனே பஜனை பாடுபவரைப் பார்த்து எப்படி உனது பஜனையையும் இச்சந்தர்ப்பத்தையும் சரியாக இணைத்துவிட்டேன் என்றார். இதை நான் சொல்கிறேன். கடவுள் சரியான தருணத்தில் எமது பிரார்த்தனைகளை நிறைவேற்றுவார் என்று. எனக்கு சரியான சந்தர்ப்பத்தில் பாதநமஸ்காரம் கிடைத்ததால்தான் இன்றுவரை என் ஆழ்மனதில் பதிந்துள்ளது.

இப்பொழுது நாம் எதைக் கேட்கவேண்டும் சுவாமியிடம் என்று பார்ப்போம். எமக்கு சுவாமியின் பாடசாலையில் இணைந்து கல்விபெற மிகவும் ஆவலாக இருந்தது. ஒவ்வொருமுறையும் நான் அனுமதி கேட்கும்போது தரம் 11 அளவிலேயே அனுமதி பெறமுடியும் என்று கூறினார்கள். அதனால்தான் கேரளாவில் உள்ள சுவாமியின் பாடசாலை ஒன்றில் தரம் 7இல் இணைந்துகொண்டேன். ஆனால் அப் பாடசாலையில் கல்வி பெறுபவர்கள் சுவாமியின் பக்தர்கள் இல்லை. அவர்கள் நல்ல கல்வியை பெற்றுக்கொள்ள இணைந்தார்கள். நான் சாயி பாபா என்று கூறும் வேளை எல்லாம் என்னை கேலி செய்வார்கள். அதனால் நான் விரக்தியடைந்தேன். நான் தரம் 8இல் கல்விபெறும்போது ஓணம் பண்டிகை நடைபெற்றது. அப்போது எனக்கு சுவாமியிடம் கதைப்பதற்கான சந்தர்ப்பம் உருவானது. அதனால் நான் சுவாமி எனக்கு உங்களது பாடசாலையில் அனுமதி தருமாறு கேட்கவேண்டும் என்று எண்ணினேன். என்னைப் பொறுத்தவரையில் நான் பேசுவது எதுவாக இருந்தாலும் பரவாயில்லை. இறுதியில் சுவாமியிடம் பாடசாலை பற்றி கதைக்கவேண்டும் என்பதிலேயே குறியாக இருந்தேன். அந்தவருடம் ஓணம் பண்டிகைக்கு வரவேண்டிய பிரதமவிருந்தினரது வருகை தடைப்பட்டதால் எனது பேச்சு நிகழ்வும் ரத்து செய்யப்பட்டது. தரம் 10 அளவிலும் இதேமாதிரியான சந்தர்ப்பத்தை பெற்றுக்கொண்டேன். இந்த சமயம் எனது பேச்சை மட்டும் நன்கு ஆயத்தப்படுத்திக்கொண்டேன். நான் பேசத் தயாராகும்முன், ஒரு நபர் சுவாமியை கேரளா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைக்கு வருமாறு கேட்டுக்கொள் என்று கூற நானும் சுவாமியிடம் கேட்டேன். சுவாமி சொன்னார்,"நீ பேசத் தொடங்கு" என்று. நான் பேசிமுடித்த பிறகே நான் எனது பாடசாலை அனுமதியை கேட்கவில்லை என்பதை உணர்ந்தேன். நான் சுவாமியிடம் சென்று பாதநமஸ்காரம் எடுத்தபின் அவரிடம் கேட்க ஆயத்தமானேன். ஆனால் நான் சுவாமியின் பாடசாலை அனுமதியை கேட்பதற்கு பதிலாக என்னை அறியாமல், சுவாமி! என்னை எப்பொழுதும் உங்களுடனேயே வைத்திருங்கள் என கேட்டேன். சுவாமி ஆசீர்வதித்து அனுப்பினார். நான் மாலை அம்மாவிடம் சென்று அம்மா நான் தவறிழைத்துவிட்டேன். சுவாமியிடம் பாடசாலை அனுமதி கேட்பதற்கு பதிலாக சுவாமி என்னை எப்பொழுதும் உங்களிடம் வைத்திருங்கள் என்று கூறிவிட்டேன். நானும் அழ எனது தாயும் அழுதார். ஆனால் எனது தாய் மகிழ்ச்சியில் அழுதார். கண்ணா நீ சரியானதை சுவாமியிடம் கேட்டாய் என்று கூறினார். ஆனால் எனக்கு புரியவில்லை. அம்மா கட்டியணைத்து கவலைப்படாதே நீ சரியானதையே கடவுளிடம் கேட்டுக்கொண்டாய் என்று கூறினார். இரண்டு நாட்களின் பின்னர் நாங்கள் கேரளா திரும்ப இருந்ததால் சுவாமி எங்கள் அனைவருக்கும் பாதநமஸ்காரமும் விபூதிப் பொட்டலமும் சுவாமியின் புகைப்படமும் தருவது வழக்கம். அச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நான் சுவாமியிடம் பாடசாலை அனுமதியைக் கேட்கலாம் என நினைத்தேன். ஆனால் சுவாமி அருகில் வந்து எனது தலையில் கைவைத்து ஆசீர்வதிக்கும் போது என்னால் ஒன்றும் கேட்கமுடியவில்லை. எனக்கு மிகவும் கவலையாக இருந்தது. அந்த சமயத்தில் சுவாமியின் ஆசீர்வாதத்தையும் பொருட்படுத்த முடியவில்லை. ஆனால் சுவாமி அனைவருக்கும் பாதநமஸ்காரம் கொடுப்பதற்காக சென்றுவிட்டார். திடீரென்று சுவாமி நின்று ஓணப்பண்டிகை அன்று பேச்சு நிகழ்த்தியது யார் என்று வினவினார். உடன் நான் எழுந்து சுவாமியைப் பார்த்தேன். சுவாமி கேட்டார், நீ எதுவாக வரப்போகிறாய்? வைத்தியராகவா? அல்லது என்ஜினியராகவா?. அப்போது நான் சொன்னேன் வைத்தியத்துறைதான் விருப்பம் என்று. சுவாமி கூறினார் எனது பாடசாலையில் இணைந்து உயிரியல் பாடத்தில் கல்வி கற்றுக்கொள். நான் அனுமதி தருகிறேன் என்று. நான் கேட்காமலே சுவாமி எனது பிரார்த்தனையை நிறைவேற்றினார். தரம் 11இல் சுவாமியின் பாடசாலையில் இணைந்தேன். இதில்தான் புரிந்துகொண்டேன். இறைவனிடம் நாம் என்ன கேட்கவேண்டும் என்பதில் கவனமாக இருக்கவேண்டும். ஏனெனில் நாம் என்ன கேட்கிறோமோ அதை சுவாமி தந்துவிடுவார். அடுத்து பிரார்த்தனையின் பின் நம்பிக்கையுடனும் பொறுமையுடனும் காத்திருக்கவேண்டும். சுவாமி சரியான தருணத்தில் தருவார். அடுத்து நாம் சுவாமியிடம் எதை கேட்கவேண்டும்? சுவாமியையே கேட்கவேண்டும்.

சில வேளைகளில் நாம் சுவாமியையே நினைத்துக் கொண்டிருப்போம். ஆனால் சுவாமி கனவிலும் வருவதில்லை. எமது தேடலுக்கும் பதிலளிப்பதில்லை என நாம் வருந்துவதுண்டு. சுவாமி இதைப்பற்றி ஒரு சிறுகதை கூறியுள்ளார். ஒரு சீடன் தனது குருவிடம் கேட்டார்,குருவே நான் நித்தமும் கடவுளையே தியானித்தபடியுள்ளேன். ஆனால் இறைவன் தரிசனம் தருவதில்லை. பதிலளிப்பதுமில்லை என்று. குரு கூறினார், நாளை காலை வா. நான் கடவுளைக் காட்டுகிறேன் என்று. சீடனும் இரவுமுழுவதும் தூங்காமல் களிப்புடன் இருந்தார். காலை பிரஹ்மமூகூர்த்தமளவில் நீராடி திருநீறு அணிந்து குருவிடம் சென்றார். குரு கூறினார், ஆற்றங்கரை சென்று சந்தியாவந்தனம் செய்தபின் திரும்பு என்றார். சீடன் கங்கையில் இறங்கி சந்தியாவந்தனம் செய்துகொண்டிருக்கும் போது குரு பின்பக்கமாக வந்து சீடனின் தலையை பிடித்து நீருக்குள் அமிழ்த்தினார். சீடனும் ஒருவேளை நீரின் அடியில் கடவுளைக் காண்போமோ தெரியவில்லை என்று காத்திருந்தார். சீடனுக்கு மூச்சு திணறல் ஏற்படுவதுபோல் இருந்தது. ஆனால் குரு எடுக்கவில்லை. எவ்வளவு முயற்சித்தும் அவரால் தண்ணீருக்கு மேலாக வரமுடியவில்லை. ஏனெனில் குரு மிகவும் வலிமையுடன் தலையை நீருக்குள் அமிழ்த்தி வைத்திருந்தார். அப்போது சீடன் நினைத்தார் நான் கடவுளை காண எண்ணினேன். குரு கடவுளிடமே அனுப்பிவிடுவார் போல் இருக்கிறதே என்றும் நான் இப்போது மரணிக்கப் போகிறேன் என்றும் எண்ணினார். சீடன் வாழ்வதற்கு ஆசைப்பட்டார். அதனால் தனது ஒட்டுமொத்த வலிமையையும் பயன்படுத்தி நீருக்கு மேல் வந்தார். குரு தூக்கி எறியப்பட்டார். குரு என்ன நடந்தது என கேட்க சீடனும் கோபத்துடன் நீங்கள் என்னை கொல்லப் பார்த்தீர்கள் என கூறினார். குரு கூறினார், நான் உனக்கு கடவுளைக் காட்டுவதற்கு முயன்றேன். முதலில் பொறுமையாக கூறு என்ன நடந்தது என்று. சீடன் கூறினார் நீங்கள் என்னை நீருக்குள் அமிழ்த்தினீர்கள் என்னால் மூச்சுவிட முடியவில்லை என்று. குரு சொன்னார், உன்னால் மூச்சுவிட முடியவில்லை என்றால் நீருக்குமேல் எழுந்து மூச்சுவிட்டிருக்கலாமே என்று. சீடன் கூறினார், எப்படி வருவது? நீங்கள் மிகவும் வலிமையுடன் என்னை அமிழ்த்தி வைத்திருந்தீர்களே என்று. குரு கூறினார், உன்னால் வரமுடியவில்லை என்றால் நீ எவ்வாறு மேல் எழுந்தாய்? என்று. சீடன் சொன்னார் நான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாகப்போகிறேன் என்று தெரிந்தவுடன் வாழ ஆசைகொண்டு எனது ஒட்டுமொத்த பலத்தை பயன்படுத்தி மேலெழுந்தேன் எனக் கூறினார். அப்போது குரு சொன்னார், உன்னால் வழி இல்லாமல் வாழமுடியாது என்பதை புரிந்துகொண்டபின் எல்லா சவாலையும் முறியடித்து நீ வழியை பெற்றுக்கொண்டாய். அதுபோலவே நீ கடவுள் இன்றி வாழமுடியாது என உணரும் பொழுது எல்லாவற்றையும் முறியடித்து எவ்வாறு வழியை அடைந்தாயோ அவ்வாறே கடவுளையும் அடைவாய் என கூறினார்.

2006இல் சுவாமி சில மாணவர்களை கொடைக்கானலுக்கு அழைத்து சென்றார். அந்த சமயத்தில் சுவாமி தன்னிச்சையாக நடக்கமுடியாமல் இருந்தார். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மாணவர்கள் சுவாமியின் கரத்தை பற்றும் வாய்ப்பினைப் பெறுவார்கள். சுவாமி ஒருவரை அழைத்து கரத்தை பற்றும் வாய்ப்பை தரும்போது ஏனையவர்கள் அவன் எவ்வளவு அதிர்ஷ்டசாலி என ஏங்குவது உண்டு. ஒருநாள் சுவாமி ஒரு மாணவனை அழைத்து கரம் பற்றும்போது கூறினார், மற்றவர்கள் போலவே நீ எவ்வளவு அதிர்ஷ்டசாலி, சுவாமியின் கரத்தை பற்றுவதற்கு என கூறினார். அப்போது சுவாமி கூறினார், சுவாமியின் கரத்தை பற்றுவது அவ்வளவு முக்கியமல்ல. கரம்பற்ற வேண்டும் என்ற தவிப்பு, ஏக்கம் அதுதான் முக்கியம் என்று கூறினார். உதாரணமாக ராதாவை விட மீராவே அதிர்ஷ்டசாலி என மக்கள் எண்ணக் காரணம் ராதா கிருஷ்ணனுடனேயே இருந்தபோதிலும் மீரா கிருஷ்ணருக்காக அனுதினமும் ஏங்கிக்கொண்டிருந்தார். அந்த தவிப்பே பெரிதானது என கூறினார்.

சுவாமி கூறுகிறார், சுவாமியின் அருகாமை முக்கியமல்ல. சுவாமியின் இதய அருகாமைதான் முக்கியம் என்று. ஒருநாள் நான் மந்திரில் முதலாவது நிரையில் அமர்ந்திருந்தபோது சுவாமி எனக்கு மிக அருகாமையிலேயே இருந்தார். அப்போது ஒரு இலையான் பறந்து சுவாமியின் தாமரைப் பாதங்கள்மீது இருந்தது. அப்போது அவ் இலையான் எவ்வளவு அதிர்ஷ்டசாலி என்று நான் எண்ணிக்கொண்டிருந்தபோது ஒரு புறா எச்சமிட்டது. அவ் இலையான் சுவாமியின் பாதத்திலிருந்து பறந்து அந்த எச்சத்தின்மேல் போய் அமர்ந்தது. அப்போது நான் எண்ணினேன எவ்வளவு முட்டாள்தனமான இலையான். நான் அதிர்ஷ்டசாலி. ஏனெனில் எனக்கு சுவாமியின் பாதத்தின் பெறுமதி தெரிந்திருக்கிறது என்று அப்போது நான் உணர்ந்தேன். சுவாமியின் அருகாமை அவருடனான நேர்காணல் நல்லது. ஆனால் முக்கியமல்ல என்று. எது முக்கியம் என்றால் சுவாமிக்கான தவிப்பேயாகும். **நாம் சுவாமி இன்றி வாழமுடியாது என்ற தவிப்பே முக்கியம்** ஆகும்.

நாம் ஒருவரின் சத்சங்கத்தை கேட்கும்போது சுவாமி முக்கியம் என்று உண்டாகும் எண்ணம் நிலையற்றது. சுவாமி வேண்டுமென்ற தவிப்பே எப்போதும் நிலையானது. இராமாயணத்தில் சுக்ரீவன் ஸ்ரீராமரிடம் வாலியை வெல்வதற்கு உதவுமாறு கேட்டார். ஸ்ரீராமரும் ஒப்புதல் அளித்தார். ஆனால் சுக்ரீவனின் மனதிலோ வாலியின் பலத்தை எண்ணி சிறு கலக்கம் எழுந்தது. சுக்ரீவன் வாலியின் பலத்தைப் பற்றி ஸ்ரீராமரிடம் கூறினார். பாருங்கள் ராமா! வாலி அவ் அசுரனை அடிக்கும்போது அசுரனது உடல் ஏழு மலைகளையும் தாண்டி வந்து விழுகிறது. அவன் எவ்வளவு பலமானவன் என்று. ராமன் அவ் உடல் அருகில் சென்று உதைய அவ்வுடல் மறுபடியும் ஏழுமலைகள் தாண்டி விழுந்தது. சுக்ரீவன் பிரமித்துப் போனான். சுக்ரீவன் அப்போது சிறு கலக்கமுற்றான். வாலி எறிந்தது எடைகூடிய உடல். இப்போது அது சற்று வலுவிழந்து உடைகுறைந்துவிட்டது. அதனால்தான் இராமரால் இலகுவாக எறியமுடிந்தது என்று. சுக்ரீவன் கூறினான், வாலி ஒருமுறை கம்பு ஒன்றை எறியும்போது அது மரத்தை துளைத்துக்கொண்டு சென்றது. அப்போது இராமர் ஒரு அம்பை வில்லில் வைத்து எய்த ஏழு மரங்களையும் துளைத்துக்கொண்டு சென்றது அந்த அம்பு. அப்போது சுக்ரீவன் எண்ணினான் வாலி தன் கையால்தான் அம்பை எய்தார். ராமர் கோதண்டத்தை பயன்படுத்தினார். இது கோதண்டத்தின் பலமாக இருக்கும் என்று நம்பினார். சுவாமிக்கும் தேள் ஒன்று கடித்ததும் எல்லோரும் தேளின் வலிமையை பாராட்டினார்கள். அது போன்றே சுக்ரீவனின் நிலைமையும் இருக்கிறது.

இராமர் சுக்ரீவனிடம், சுக்ரீவா! சந்தேகம் வேண்டாம். என்னை நம்பி வாலியிடம் சண்டையிடு என கூறினார். வாலியிடம் சென்று சுக்ரீவன் சத்தமிட வாலியின் மனைவி தாரா சுக்ரீவனிடம் சண்டையிடாதே என கூறவும் வாலி அதை மறுத்து சென்றார். வாலி உடன் வெளிவந்து சுக்ரீவனை தோற்கடித்துவிட சுக்ரீவன் விரக்தியில் இராமனிடம் சென்று குற்றம் சாடினான். இராமன் எதுவும் பேசாமல் சுக்ரீவனை தனது கரங்களால் தடவிவிட சுக்ரீவனின் அனைத்து காயங்களும் ஆறி அவன் நலமானான். "கருணாசாகரா, பிரேமஸ்வரூபா, சாபவிமோஷனா" என சுக்ரீவன் உள்ளம் நெகிழ்ந்தார். இராமன் கூறினார், "சுக்ரீவா! இது பக்தி அல்ல உணர்ச்சிவசப்படுதலே" என்று. உணர்ச்சிவசப்படல் வந்துபோகும். அது உனது வெற்றி மகிழ்ச்சி சந்தர்ப்பங்களிலே வெளிப்படும். அது பக்தி அல்ல. பக்தி என்பது உனது கடினமான வேளைகளில்கூட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்படும். அதேபோல பஜனை, மாநாடு, சத்சங்கங்களில் சுவாமியின் மீதான வெளிப்பாடும் உணர்ச்சிவசப்படுதலே ஆகும். இது பக்தி அல்ல. பக்தி என்பது மூச்சு போன்றது. எது நடந்தாலும் நடக்காவிட்டாலும் நாம் மூச்சினை கைவிடுவதில்லை. அதுபோன்றே பக்தியின் இயல்பும். இளமையிலேயே சுவாமியின் அறிமுகம் மிகவும் அதிர்ஷடமான ஒரு விடயம். சுவாமிக்கு ஏதாவது ஒரு காரியம் செய்வதற்கு சந்தர்ப்பம் கிடைக்குமேயானால் அதுபோன்ற சௌபாக்கியம் வேறெதுவுமில்லை.

கிருஷ்ணர் ஒரு சந்தர்ப்பத்தில் தனது விரலில் வெட்டுக்காயம் ஏற்பட்டபோது அவரது மனைவிகள் துணி, மருந்து என்பவற்றை தேடி அலைந்தனர். ஆனால் திரௌபதி தனது சேலையை கிழித்து அவருடைய கையை கட்டினார். இந்த பக்தியின் வெளிப்பாடுதான் திரௌபதியின் மானத்தை சுவாமி அன்று காத்தது. திரௌபதி இரு அங்குல சேலையை கொடுத்தாள். ஆனால் திருப்பி கிருஷ்ணனால் மானம் காக்கும் பொருட்டு வழங்கப்பட்ட சேலையின் மதிப்போ அதிகம். நாம் கடவுளுக்காக ஒன்று செய்யும்போது கடவுள் எமக்கு சரியான தருணத்தில் பலமடங்கு அதிகமாக அதை திருப்பித் தருவார். இதை நான் உணரும்போது நான் நினைத்தேன் சுவாமி எனது நேரம், எனது பலம், எனது சக்தி அனைத்தையும் உங்களுக்காக அர்ப்பணிக்கவேண்டும் என்று. இது இளமையான காலத்தில் உங்கள் அனைவருக்கும் கிடைத்த ஒரு அரிய சந்தர்ப்பம் ஆகும். நீங்கள் ஒவ்வொரு விடயத்தை செய்யும்போதும் அது சுவாமியை மகிழ்ச்சியடையச் செய்யவேண்டும். உங்கள் கல்வி, வேலை, சேவை, அன்பு அனைத்தும் சுவாமியை மனம்மகிழ செய்யவேண்டும். ஒவ்வொருநாள் நித்திரைக்கு செல்லும்போதும் சுவாமியிடம் சொல்லுங்கள், சுவாமி! உங்கள் கிருபையால் இந்தநாள் அன்பு கலந்து சிறப்புடன் நடந்தது. நாளை எழும்பும்போதும் இன்றைவிட சிறப்பான வாய்ப்பை தந்து அருளுங்கள் என கூறுங்கள். நானும் இதையே எனது தினப் பிரார்த்தனையாக செய்கிறேன், சுவாமிக்கான அன்பு எப்பொழுதும் வளர்ந்துகொண்டு இருக்கவேண்டும். இதுவே எனது பிரார்த்தனை.

நன்றி

ஜெய் சாயிராம்

தொகுப்பு :
ரா. சாருகா,
யாழ்ப்பாணம் சாயி நிலையம்.



## சின்னஞ்சிறு சிறுமியின் பிரார்த்தனை

ஒரு சிறிய கோயிலுக்கு அண்மையிலிருக்கும் சிறுமி அங்கு ஒவ்வொருநாள் காலையிலும் வந்து கண்களை மூடி மிகவும் இதய பூர்வமாகப் பிரார்த்தனை செய்துவிட்டு துள்ளிக் குதித்துப் போவதை அக்கோயிலில் பூஜை செய்யும் பூசாரி அவதானித்தார். இச் சிறுபிள்ளை என்ன பிரார்த்தனையைச் சொல்கிறது. ஒன்றும் அறியாத சிறுபிள்ளை மாதிரித் தெரிகிறது என்று நினைத்து என்ன பிரார்த்தனை சொல்கிறார் என்பதைக் கேட்க விருப்பம் கொண்டார். ஒரு நாள் வேளைக்கு வந்து சிறுமியின் பிரார்த்தனை முடிந்ததும் அவரின் தலையில் கைவைத்து ஆசீர்வதித்து என்ன பிரார்த்தனை சொன்னீர்கள்? எனக் கேட்டார். உனக்குப் பிரார்த்தனை செய்யத் தெரியுமா என்றும் கேட்டார். சிறுமி தனக்கு ஒரு பிரார்த்தனையும் தெரியாது என்று சொன்னார். கண்மூடி என்ன முணுமுணுக்கிறீர் எனக் கேட்டார்.

சிறுமி : "எனக்குத் தெரிந்தது a. b. c. d..... z வரையுமுள்ள ஆங்கில எழுத்துக்களே தெரியும். 5 தடவை சொல்லிச் சொல்லி ஆண்டவனிடம் எனக்குப் பிரார்த்தனை தெரியாது. நீங்களே இவ் எழுத்துக்களை வைத்து பிரார்த்தனையை உருவாக்கிக்கொள்ளும்" என்று தான் நான் ஒவ்வொருநாளும் சொல்லிப் போவேன் என்றார். பூசாரி திகைத்துப் போனார். இதுவல்லவோ இறைவன்மீதுள்ள முழு நம்பிக்கை என்று அறிந்துகொண்டார்.

நன்றி : பவான் சஞ்சிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்களின் நோக்கு என்ன?

**இலக்கு** (Destiny) What we are doing ? நாங்கள் என்ன செய்கிறோம்?
**வழிமுறை** (Means) How we are doing? எப்படி செய்கிறோம்?
**மனப்பாங்கு** (Intention) Why we are doing ? ஏன் செய்கிறோம்?

இவை மூன்றுமே நாம் எந்தவொரு செயலையும் செய்யும்போது இருக்க வேண்டிய மிக முக்கிய விடயங்களாகும்.

நம் எல்லோருடைய உறுதியான இலக்கு உள்ளுறையும் தெய்வீகத்தை வெளிக்கொணரல். அதாவது நாம் இறைவனோடு ஒன்றிணைதல். இவ்விலக்கை அடைய நாம் எவ்வாறு/ எப்படி செய்கிறோம் என்பதே வழிமுறை. இவ்விலக்கை அடைய இவ்வழிமுறைகளை ஏன் பின்பற்றுகிறோம்/ செய்கிறோம்? என்ற கேள்விக்கு வரும் பதில்தான் நமது மனப்பாங்கு ஆகும்.

மனப்பாங்கை இறைவன் பெரிதும் எதிர்பார்ப்பது ஏன் என்பதை எமது புராணக் கதையொன்றின் மூலம் நோக்குவோம். நாம் ஜெயா மற்றும் விஜயாவைப் பற்றிக் கேள்விப் பட்டிருப்போம். இவர்கள் மஹாவிஷ்ணுவின் பிரதான வாயிற் காவலர்கள். ஒருமுறை பிரம்ம தேவரின் மானசீக புத்திரர்களான (ப்ரம்மாவின் மனதில் நினைத்ததன் மூலம் பிறந்தவர்கள்). சனகர், சனாதனர், சனந்தனர் மற்றும் சனத்குமாரர் ஆகிய 4 மஹாமுனிவர்கள் மஹா விஷ்ணுவைத் தரிசிக்கும் ஆவலுடன் வைகுந்தம் வந்தார்கள். அவர்கள் பிரதான வாயிலை அடைந்தவுடன் ஜெயா, விஜயா இருவரும் அவர்களை மேற்கொண்டு செல்ல அனுமதிக்காது தடுத்தனர். காரணம் அவர்கள் அந் நான்கு முனிவர்களின் சிறுபிள்ளை வடிவங்களைக் கண்டும் தாம் இறைவனின் வாயிற் காவலர்கள் என்ற எண்ணங்களினால் கர்வமடைந்தார்கள். அவர்களுடைய தவறான செயற்பாட்டால் கோபமடைந்த முனிவர்கள் அவர்களுக்கு சாபமளித்தார்கள். அச்சாபம் என்னவெனில் அவர்கள் இருவரும் பூமியில் பிறந்து, பிறப்பு-இறப்பு வட்டத்தில் அகப்பட்டு மீண்டும் மீண்டும் பிறவி எடுக்கவேண்டும் என்பதாகும். முனிவர்களுடைய சாபத்தைக் கேட்டதும் தாம் செய்த பெரிய தவறை உணர்ந்த ஜெயா மற்றும் விஜயா அவர்களுடைய பாதங்களைப் பணிந்தார்கள். மன்னிப்பு கோரினார்கள்.

தன் பக்தர்களுடைய துன்பத்தை அறிந்த இறைவன் முனிவர்களுக்கும் மற்றும் ஜெயா, விஜயாவுக்கும் தரிசனம் அளித்தார். தன்னிடம் கண்ணீர் மல்க தம் தவறை உணர்ந்து வருந்திக் கொண்டிருந்த ஜெயா, விஜயாவைப் பார்த்து அவர்களுக்கு 2 மார்க்கங்களை அருளினார். ஒன்று அவர்கள் நல்லவர்களாக இறைவன் மீது பக்தி கொண்டவர்களாக 7 பிறவிகள் பூமியில் பிறப்பெடுத்து பின்னர் தன்னை வந்தடைதல். இரண்டாவது 3 பிறவிகள் இறைவன் மீது வெறுப்புள்ளவர்களாக அரக்கர்களாகவோ அசுரர்களாகவோ பிறப்பெடுத்து அதன்பின் தன்னை வந்தடைதல் என்பவையே அந்த இரு மார்க்கங்களாகும்.

இங்கு நாம் அந்நிலையில் எதைத் தேர்ந்தெடுப்போம்? நாம் நன்கு யோசித்து ஏழு பிறவிகள் நல்லவர்களாக இறைவன்மீது அன்பு கொண்டவர்களாகப் பிறக்கவேண்டும் என்பதையே நாம் அதிகம் தேர்ந்தெடுத்திருக்கக்கூடும். ஆனால் ஜெயா மற்றும் விஜயா இறைவனின் இரண்டாவது மார்க்கத்தையே தேர்ந்தெடுத்தார்கள். ஏன் இவர்கள் இப்பாதையைத் தேர்ந்தெடுத்தார்கள்? என்ற கேள்வி எம்முள் எழலாம். ஆனால் இறைவன் ஒருவருக்கு மட்டுமே அவர்களுடைய மனப்பாங்கு என்ன என்பது தெரியும். அங்கே அவர்களுடைய மனப்பாங்கு என்ன என நோக்குவோமானால் இத்தனை காலம் இறைவனுக்கு அருகில் அவரை விட்டுப் பிரியாமல் அவரது சேவையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த அவர்களால் இறைவனை பிரிந்திருக்கப் போகின்றோமே! என்ற ஏக்கத்தை தாங்க முடியவில்லை. எவ்வளவு விரைவில் இறைவனை மீண்டும் வந்தடையமுடியுமோ அவ்வளவு விரைவில் அவரிடம் மீண்டும் இணையவேண்டும் என்பதே ஆகும். அவர்களுடைய அந்த உண்மையான பக்தி மனப்பாங்கை அறிந்த இறைவன் அவர்களுக்கு "அப்படியே ஆகட்டும்" என அருளினார்.

இதனடிப்படையில் அவர்களது முதலாவது பிறப்புகள், இரண்யாட்சன் மற்றும் இரண்யகசிபு எனும் இரு அசுர சகோதரர்கள் ஆகும். இவர்களது இம்முதல் பிறப்பு இறைவன் விஷ்ணுவின் வராக மற்றும் நரசிம்ம அவதாரங்களின் மூலம் நிறைவடைந்தது. இரண்டாவதாக இவர்கள் இராவணன் மற்றும் கும்பகர்ணன் எனும் இரு அரக்க சகோதரர்களாக பிறவி எடுத்தனர். இப்பிறப்பில் அவர்களை இறைவன் தனது இராமாவதாரத்தின் மூலம் முடிவடையச் செய்தார். இறுதி மூன்றாவதாக அவர்கள் சிசுபாலன் மற்றும் தந்தவக்ரனாகப் பிறப்பெடுத்தார்கள். இறைவன் தனது கிருஷ்ணாவதாரத்தின் மூலம் அவர்களது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதிப் பிறப்பை முடித்து அவர்களை மீண்டும் வைகுந்தத்தில் தனது வாயிற்காவலர்களாக இணைத்துக் கொண்டார்.

இங்கு மேலே குறிப்பிடப்பட்ட ஜெயா மற்றும் விஜயாவினுடைய மூன்று பிறப்புகளிலும் எவ்வாறு அவர்கள் பதற்றமடைந்தார்கள். இறைவன் அவர்களை எவ்வாறு மாற்றமடையச் செய்தார் என்பதை நோக்குவோம்.

அந்தவகையில் அவர்களது முதல்பிறவி அசுரர்கள். அதாவது அகோரமான தோற்றம், பயங்கரமான நடத்தைகள், இறைவனை முற்றிலும் வெறுத்தல், அநேக பாவகாரியங்கள் செய்தல் என இருந்தன. அவர்களுடைய இந்த பிறப்பை நிறைவுசெய்ய இறைவனது வராக, நரசிம்ம எனும் இரு அவதாரங்கள் தேவைப்பட்டன. அடுத்து அவர்கள் அரக்கர்கள். அதாவது மனிதவடிவில் இறைவன்மீது பக்தியின் வெளிப்பாடு இருந்தது. பாவங்களின் வீரியம் ஓரளவு முன்னைய பிறப்பைவிட குறைவு. பாருங்கள் இராவணன் சிறந்த சிவபக்தர். சகல கலைகளையும் கற்றுத் தேர்ந்தவர். மிகப்பெரும் பலசாலி கைலாச மலையை அசைக்கும் அளவுக்கு பெரும் திறமையானவர். அவரிடம் இருந்த ஒரேயொரு கெட்ட குணம் ஆசை. அதாவது பெண்மோகம். அதுவே அவரது வீழ்ச்சிக்கு வித்திட்டது. இங்கு நாம் ஒன்றை அவதானிக்க வேண்டும். எம்முடைய மனதில் இராவணன் என்றால் ஒரு அரக்கன், பொல்லாதவன், மகாபாவி போன்ற தோற்றப்பாட்டை நாம் ஏற்படுத்தி வைத்திருக்கிறோம். ஆனால் அவரிடம் இருந்ததோ ஒரேயொரு தீய பண்பு ஆசை. ஆனால் எம்மிடமோ 6 உள்ளெதிரிகளான காம, குரோத, லோப, மோக, மத, மார்ச்சர்யம் என அனைத்தும் உள்ளன. அப்படியான நாம் எப்படிப்பட்டவர்கள்? இதை நாம் யோசித்துப் பார்க்கவேண்டும். மேலும் **இராவணனுடைய உண்மையான நோக்கங்கள் மூன்று.** அவை எவையெனில் தனது இந்த எல்லையற்ற பராக்கிரமத்தையும் திறமைகளையும் வைத்து இலங்கைக்கும் சொர்க்க லோகத்திற்கும் இடையே பாலம் அமைத்தல், நரகத்திற்கும் சொர்க்கத்திற்கும் இடையே பாலம் அமைத்தல் மற்றும் இந்த கடல்நீரின் உவர்ப்புத் தன்மையை இனிப்பாக மாற்றி நன்னீரை அனைவரும் பருகி மகிழ்ச்சியடையும்படி செய்தல் என்பனவாகும். இவற்றை செய்யக்கூடிய அனைத்து திறமைகளும் பலமும் அவரிடம் இருந்தது. "ஆனால் அவற்றை நான் பின்தள்ளினேன். இப்போது நான் எனது மரணத்தின் பாயிலில் நான் எனது இலட்சியங்களில் ஒன்றைக்கூட செய்யாமல் இருந்துள்ளேன் என்பதை உணர்கிறேன். எனவே இலட்சுமணா உனக்கு எப்போது நல்லெண்ணம் ஒன்று மனதில் தோன்றுகிறதோ அதை உடனே செயற்படுத்து. தீய எண்ணம் தோன்றுமெனில் அதைப் பிற்போடு" என்று இலட்சுமணருக்கு தனது ஞானத்தை வழங்கினார். இங்கு இலட்சுமணரை இராவணனிடம் ஞானம் பெற்று வருமாறு கூறியவர் இராமர். இராவணன் மற்றும் கும்பகர்ணனை அழிக்க ஒரு அவதாரம் இராமாவதாரமே போதுமானதாகிவிட்டது.

அடுத்து கிருஷ்ணாவதாரத்தில் அவர்கள் மனிதர்களாகப் பிறந்து இறைவனை அடைந்தார்கள். பாருங்கள் எப்போது இறைவனுடைய ஸ்பரிசம் (நெருக்கம்.'. தொடுகை) கிடைக்கிறதோ அங்கே உன்னத மனமாற்றம் இடம்பெறுகிறது. முதலிரண்டு பிறப்புகளும் இறைவனுடைய அவதார நோக்கத்திற்கு பிரதான காரணமாக அமைந்தது. மூன்றாவது பிறப்பில் கிருஷ்ணாவதார நோக்கத்தில் ஒரு சிறு பங்கே அவர்கள் வகித்தார்கள். இறைவனால் தனது பக்தர்களை நீண்டகாலம்பிரிந்திருக்க முடியவில்லை. உடனே அவர்களது மூன்று பிறப்புகளையும் தானே அவதாரமெடுத்து வந்து நிறைவேற்றி மீண்டும் அவர்களை இணைத்துக்கொண்டார். ஆஹா! இறைவனுடைய எல்லையற்ற அன்பை நம்மால் புரிந்துகொள்ளத்தான் முடியுமோ?

**இந்த கதையிலிருந்து நாம் மூன்று படிப்பினைகளைப் பெற்றுக்கொள்கிறோம்.** ஒன்று ஒருபோதும் பக்தனுக்கும் இறைவனுக்குமிடையே குறுக்கிடாதீர்கள். அந்த பக்தன் இறைவனுக்கு அருகாமையில் எப்போது வேண்டுமானாலும் இருக்கவிடுங்கள். ஏனெனில் பக்தனுக்கும் இறைவனுக்குமிடையே ஓர் நேரடித் தொடர்பு உள்ளது.

இரண்டாவது, பிறரைப்பற்றி அபிப்பிராயம் எடுப்பதைத் தவிருங்கள். நாங்கள் நினைக்கலாம் என்ன ஒரு மூடத்தனமான முடிவை ஜெயா, விஜயா தேர்ந்தெடுத்தார்கள். ஆனால் ஒருபோதும் அவ்வாறு எண்ணாதீர்கள். ஏனெனில் அவர்களுக்கும் இறைவனுக்கும் இடையே உள்ள அன்புத் தொடர்பின் ஆழம் எமக்கு தெரியாது.

மூன்றாவது, இறைவன் எப்போதும் மனப்பாங்கையே பிரதானமாக அவதானிக்கிறார். ஜெயா, விஜயாவினுடைய மனப்பாங்கு இறைவனை மிக விரைவில் வந்தடைதல். அவர்களது பிறப்பு முடிவடையும் முன்னரே இறைவன் அவர்களைக் காண 4 அவதாரங்கள் எடுத்தார். இதிலிருந்து இறைவன் மனப்பாங்கிற்கு எவ்வளவு முக்கியத்துவமளிக்கிறார் என எம்மால் அறிய முடிகிறது.

நாங்கள் பஜனை, சேவை என அநேக சாதனைகள் செய்கிறோம் என்று கூறலாம். ஆனால் அங்கே நாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன செய்கிறோம்? என்பதை விட முக்கியமானது ஒன்று உள்ளது. எது? "எவ்வாறு செய்கிறோம் என்பதாகும். நான் அவற்றை அன்போடு, இரக்கத்துடன், வித்துவத்துடன், சரியாகவா அல்லது பிழையாகவா செய்கிறேன்" என்பதாகும்.

எனவே, நான் என்ன செய்கிறேன் என்பது முக்கியம். ஆனால் அதைவிட மிக மிக முக்கியம் நான் அதை எவ்வாறு அதாவது என்ன மனப்பாங்கில் செய்கிறேன் என்பது.

ஏன் நாங்கள் பஜனை செய்கிறோம்? நாங்கள் நன்றாக பாடக்கூடியவர்கள் என்பதை வெளிக்காட்டவா?... இல்லை.

நாங்கள் சாயி நிறுவனத்திலோ அல்லது வெளியிலோ ஒரு பொறுப்பு அல்லது பதவி வகிக்கின்றோம் எனில் ஏன்? மற்றவர்களுக்கு எமது அதிகார பலம் அல்லது அவர்களுக்கு எமது திறமையை வெளிக்காட்டவா?... இல்லை.இவை எமக்கு வழங்கப்படுவதும் நாம் செய்வதும் ஏதோ ஒன்றினாலேயே கிடைக்கப்பெறுகின்றது. அது எது? மனப்பாங்கு. அதை அதோடு சம்பந்தப்பட்டவரைத் தவிர இறைவன் ஒருவராலேயே புரிந்து கொள்ளமுடியும்.

எங்களுக்கு மற்றவர்களிடமிருந்து எமது நற்செயல்களுக்காக எதிர்ப்புகளோ அல்லது ஏச்சுக்களோ கிடைக்கலாம். ஆனால் நாம் அங்கே பார்க்க வேண்டியது எமது மனப்பாங்கு எவ்வாறு இருந்தது என்பதேயாகும். இதுவே சுவாமி மிகவும் எதிர்பார்ப்பது. ஆகவே நாங்கள் என்ன செய்கிறோம்? எப்படி செய்கிறோம்? என்பதைவிட என்ன நோக்கத்துடன் எவ்வாறு செய்கிறோம்? அதாவது எமது மனப்பாங்கு என்ன என்பதில் மிக மிக அவதானமாக இருக்கவேண்டும்.

## குறை கூறுதல்

**மன அமைதிக்கு** தூய அன்னை (சாரதாதேவி) கூறும் படிகள் :

1. பிறர் குற்றம் பொறுத்தல்.

ஒருவரது தவறை தயங்காமல் தட்டிக் காட்டும் நாம், அதற்கான காரணத்தை ஆராயத் தவறுகிறோம். ஒருவர் தவறு செய்கிறார் என்றால் அவரது இயலாமையே காரணம். தவறுக்கு கண்டிப்பு அவசியம். கண்டிப்பு இல்லாத தவறு தண்டிக்கும் நிலைக்கு செல்லும். நாம் பிறருக்கு குற்றம் செய்யாமல் இருக்கவேண்டுமென்றால் பிறருடைய குற்றத்தை நாம் கருத்தில் கொள்ளாமலிருக்க வேண்டும்".

2. குற்றம் பார்க்க வேண்டுமென்ற எண்ணம் தோன்றினால் அது நம்மை நாமாகவே ஆராய்வதாக இருக்கட்டும். தன்னைச் சீர் செய்துகொள்ள வேண்டும்.

3. உலகில் எவரும் அன்னியர் அல்லர் என எண்ணல்.

உலகத்தைப் பிறர் எனக் கருதாமல் எண்ணும் தன்மையை வளர்த்துக்கொள்ள வேண்டும். இரண்டு அல்ல ஒன்று என்னும் அத்வைத வேதாந்தத்தின் அடிப்படைக் கருத்தில் நம் ஜீவன் பயணிக்கவேண்டும்.

4. உலகையே சொந்தமாக்கிக் கொள்ளல்

தூய அன்னை காட்டு வழியாக போகும்பொழுது எதிரில் தென்பட்ட திருடனை "அப்பா" என அழைத்தார். திருடனிடம், கணவர் ஸ்ரீராமகிருஷ்ணரை குறிப்பிடும்பொழுது "உங்கள் மருமகன்" என்றே குறிப்பிட்டார்.

5. மன அமைதி பெறல்

வெளியுலக இன்பங்களைத் தேடிய மனதிற்கு தற்காலத் தீர்வுகளே கிடைக்கும். பிறர், உலகம் வேறு என்று எண்ணாமல் உலகையே சொந்தமாக்கிக்கொள்வது ஞானம்.

பிறர் குற்றம் காணாது இருப்பதில் நம் சரீரத்தின் பங்கு அதிகம். எனவே இது சரியை. தம் குற்றம் நோக்குவது தன்னுள் ஆராய்வதற்குச் சமம். எனவே இது கிரியை. உலகில் எவரும் அந்நியர் அல்ல என்பது நம்மை உலகத்தோடு இணைக்கும் முயற்சி. எனவே இது யோகம். தன்னுள் உலகையும் உலகில் தன்னையும் கண்டு, தான் வேறு உலகம் வேறு என்று எண்ணாமல் உலகையே சொந்தமாக்கிக் கொள்வது ஞானம். சைவநெறியின்படி ஞானமே இறுதி நிலையாகும். ஞானநிலை அடைந்த ஒருவனே முக்தி பெறுவான். தூய அன்னையின் கண்ணோட்டத்தில் மன அமைதி பெறுதல் முக்தி நிலை.

ஆதாரம் : இராமகிருஷ்ண விஜயம், ப.40



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லது நினைத்தால் நல்லது நடக்கும்



"சிறு வயதில் நான் மிகுந்த சுயநலக்காரனாக இருந்தேன். நல்ல பொருட்கள் எது கிடைத்தாலும் அதை நானே கைப்பற்றிக் கொள்வேன்.

இந்தக் குணத்தின் காரணமாகவே மெதுவாக எல்லோரும் என்னை விட்டு விலக ஆரம்பித்தார்கள். ஒரு கட்டத்தில் எனக்கு நண்பர்களே இல்லாமல் போய்விட்டார்கள். நானோ என்மீது தவறு இருக்கிறது என்றே நினைக்கவில்லை.

மற்றவர்களைக் குறை சொல்லிக்கொண்டிருந்தேன். அந்தச் சமயத்தில் என் அப்பா எனக்குக் கற்றுக் கொடுத்த மூன்று வாக்கியங்கள்தான் எனது வாழ்க்கைக்கு உதவியாக இருந்தன.

ஒருநாள் அப்பா இரண்டு அகலமான பாத்திரங்களில் நூடுல்ஸ் சமைத்து எடுத்து வந்தார். அந்த இரண்டையும் சாப்பாட்டு மேசைமேல் வைத்தார். ஒரு பாத்திரத்திலிருந்த நூடுல்ஸின் மேல் மட்டும் ஒரு முட்டை வைக்கப்பட்டிருந்தது.

இன்னொன்றின் மேல் முட்டையில்லை. அப்பா என்னிடம் கேட்டார்... "கண்ணு... உனக்கு இந்த இரண்டில் எது வேண்டுமோ, நீயே எடுத்துக் கொள்!" என்றார். அந்த நாட்களில் முட்டை கிடைப்பது அரிதாக இருந்தது.

புத்தாண்டின் போதோ, பண்டிகைகளின் போதோதான் எங்களுக்குச் சாப்பிட முட்டை கிடைக்கும். எனவே, நான் முட்டை வைத்திருந்த நூடுல்ஸ் கிண்ணத்தை எடுத்துக் கொண்டேன்.

நாங்கள் சாப்பிட ஆரம்பித்தோம். என்னுடைய புத்திசாலித்தனமான முடிவுக்காக எனக்கு நானே என்னைப் பாராட்டிக் கொண்டேன். முட்டையை ஒரு வெட்டு வெட்டினேன். என் தந்தை அவருடைய கிண்ணத்தை எடுத்து சாப்பிட ஆரம்பித்த போது எனக்கு ஆச்சர்யம் காத்திருந்தது. அவருடைய கிண்ணத்தில் நூடுல்ஸுக்கு அடியே இரண்டு முட்டைகள் இருந்தன.

அதைப் பார்த்துவிட்டு நான் மிகவும் வருத்தப்பட்டேன். அவசரப்பட்டு நான் எடுத்த முடிவுக்காக என்னை நானே திட்டிக் கொண்டேன். அப்பா மென்மையாகச் சிரித்தபடி என்னிடம் சொன்னார்...

"மகனே நினைவில் வைத்துக் கொள்... உன் கண்கள் பார்ப்பது உண்மையில்லாமல் போகலாம், மற்றவர்களுக்குக் கிடைப்பதை நீ அடைய வேண்டும் என நினைத்தால் இழப்பு உனக்குத்தான்."

அடுத்த நாளும் என் அப்பா இரண்டு பெரிய கிண்ணங்கள் நிறைய நூடுல்ஸ் சமைத்துக் கொண்டு வந்து சாப்பாட்டு மேசையில் வைத்தார்.

முதல் நாளைப் போலவே ஒரு கிண்ணத்திலிருந்த நூடுல்ஸின் மேல் ஒரு முட்டை வைக்கப்பட்டிருந்தது. இன்னொன்றில் இல்லை. அப்பா என்னிடம் கேட்டார்...

"மகனே... உனக்கு இந்த இரண்டில் எது வேண்டுமோ, நீயே தேர்ந்தெடுத்துக் கொள்!"

இந்த முறை நான் கொஞ்சம் புத்திசாலித்தனமாக யோசித்தேன். முட்டை வைக்கப்படாத கிண்ணத்தை எடுத்துக் கொண்டேன். அன்றைக்கும் எனக்கு ஆச்சர்யம் காத்திருந்தது.

நூடுல்ஸை அள்ளும் குச்சியால் கிண்ணத்துக்குள் அடிவரை எவ்வளவு துழாவிப் பார்த்தும் ஒரு முட்டை கூடக் கிடைக்கவில்லை. அன்றைக்கும் அப்பா சிரித்தபடி சொன்னார்...

"மகனே... எப்போதும் அனுபவங்களின் அடிப்படையிலேயே ஒன்றை நம்பக் கூடாது. ஏனென்றால், சில நேரங்களில் வாழ்க்கை உன்னை ஏமாற்றக் கூடும், தந்திரத்தில் விழ வைக்கும். இதை ஒரு பாடமாக எடுத்துக் கொள். இதை எந்தப் பாடப்புத்தகங்களிலிருந்தும் கற்றுக் கொள்ள முடியாது."

மூன்றாவது நாள், அப்பா மறுபடியும் இரு பெரிய கிண்ணங்களில் நூடுல்ஸ் சமைத்து எடுத்து வந்தார். இரு கிண்ணங்களையும் மேசையின் மேல் வைத்தார்.

"வழக்கம் போல் ஒரு கிண்ணத்திலிருந்த நூடுல்ஸில் முட்டை, மற்றொன்றில் இல்லை. அப்பா கேட்டார்... "மகனே நீயே தேர்ந்தெடுத்துக் கொள். உனக்கு இவற்றில் எது வேண்டும்?" இந் தமுறை அவசரப்பட்டு கிண்ணத்தை எடுத்து விடாமல் நான் பொறுமையாக அப்பாவிடம் சொன்னேன்...

"அப்பா நீங்கள் தான் இந்தக் குடும்பத்தின் தலைவர். நீங்கள் தான் நம் குடும்பத்துக்காக உழைக்கிறீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே, முதலில் நீங்கள் உங்களுக்கான கிண்ணத்தை எடுத்துக் கொள்ளுங்கள். மற்றதை நான் எடுத்துக் கொள்கிறேன்" என்றேன்.
அப்பா என் கோரிக்கையை நிராகரிக்கவில்லை. முட்டை இருந்த நூடுல்ஸ் கிண்ணத்தை எடுத்துக் கொண்டார். நான் எனக்கான நூடுல்ஸைச் சாப்பிட ஆரம்பித்தேன். அன்றைக்கும் எனக்கு ஆச்சர்யம் காத்திருந்தது. கிண்ணத்தின் அடியில் இரண்டு முட்டைகளிருந்தன.
அப்பா கண்களில் அன்பு கனிய என்னைப் பார்த்தார். பிறகு புன்முறுவலோடு சொன்னார்... "மகனே, நினைவில் வைத்துக் கொள். மற்றவர்களுக்கு நீ நல்லது நினைக்கும் போதெல்லாம் உனக்கும் நல்லதே நடக்கும்!"
அப்பா சொன்ன இந்த மூன்று வாசகங்களை, வாழ்க்கைப் பாடங்களை எப்போதும் நான் நினைவில் வைத்திருக்கிறேன். அதன்படி தான் நான் செயலாற்றுகிறேன். உண்மையைச் சொல்லப் போனால் நான் வெற்றி பெற்றுக் கொண்டிருக்கிறேன்.

# பாலவிகாஸ் மாணவர்கள் பகுதி



## சுவாமியும் நானும்

சாயியே எனக்கு என்றும் துணையாய் இருப்பீரே!
உங்களை நம்பியே நானும் வாழ்கின்றேன்
உங்களை தேடியே ஓடி வருகின்றேன்
பாருங்கள் சாயியே என்னைப் பாருங்கள் சாயியே!

கவலை என்னில் பெருகும் போது
கண்ணீர் துடைக்க வருகின்றீர்கள்
மகிழ்வுடன் நான் நடமாடும் போது
மனதில் இருந்து வழி நடத்துகின்றீர்கள்
பாருங்கள் சாயியே என்னைப் பாருங்கள் சாயியே!

அயோத்தியில் வாழ்ந்த ராமர் நீங்கள் தானே!
கோகுலத்தில் வாழ்ந்த ஸ்ரீ கிருஷ்ணர் நீங்கள் தானே!
என்னுடைய தெய்வமும் நீங்கள் தானைய்யா!
உங்களைவிட எனக்கு யாருமில்லையே சாயி!
பாருங்கள் சாயியே என்னைப் பாருங்கள் சாயியே!

நீங்கள் போதும் நீங்கள் போதும் சாயி
என் பயணத்திற்கு என்றும் தடையில்லைசாயி
உலகம் என்னை வெறுத்தாலும்
உடைந்து போகாமால் காக்கும் தெய்வம் நீங்கள்
பாருங்கள் சாயியே என்னைப் பாருங்கள் சாயியே!

ச.சாயிரமணா
பிரிவு - 2
சத்திய சாயி சேவா நிலையம்
யாழ்ப்பாணம்.



வை.அயன்
பாலவிகாஸ் மாணவர் – யாழ். சாயி நிலையம்

**Swami as Our Eternal Guide**

The name Sai Baba means,
"Divine mother and Divine Father"
Like a Mother he is tender and soft
Giving you happiness and selfless divine love!
Like a father he is guiding and guarding us always!
Yes indeed, he is our ETERNAL GUIDE
Who shall take us to the ultimate high level!

Thejusvini Muralitharan
Group 4
Sathya Sai Centre
Jaffna



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நத்தார் பண்டிகை



இயேசு பிரான் பிறந்த நிகழ்வை கொண்டாடுவதே நத்தார் பண்டிகை ஆகும். இத் தினத்தை (25 டிசெம்பர்) களியாட்ட நிகழ்வாக மாத்திரம் கொண்டாடாமல் ஆன்மிக முன்னேற்றத்துக்கான ஒரு சாதனா விழாவாக கொண்டாடவேண்டும். நாம் இயேசுபிரானை வணங்குவதுடன் நிற்காமல் அவரின் வாழ்வு போதனைகளை ஆழமாக சிந்தித்து வாழ்க்கையில் பின்பற்றி அவரைப் போல மிளிரவேண்டும்.

இயேசு பிரானின் பிறப்பு பவித்திரமானது. அது பிரசவம் அல்ல. பிரவேசம் ஆகும். அவர் உதித்ததை உணர்ந்த மூன்று ஞானிகள் அவரைத் தரிசிக்க நெடுந்தூரம் பயணித்து வந்தடைந்தார்கள். முதலில் பார்த்தவர்,"இக் குழந்தை ஆண்டவன்மீது அதிக பக்தி வைக்கும். அவர் ஆண்டவனின் தூதனே ஆவார்" என்று சொன்னார். இரண்டாவதாக பார்த்த ஞானி,"இவரை ஆண்டவர் மிகவும் அருள்பொழிந்து மகனாக நேசிப்பார்" என்றார். மூன்றாவதாக பார்த்த ஞானி,"தாய் மரியாளே! உன் குழந்தையும் பிதாவும் ஒன்றே" என்று கூறினார். இம்மூன்று பிரகடனங்களும் மனிதனது ஆன்மிக வாழ்வின் மூன்று நிலைகளைக் குறிக்கின்றன. அதாவது துநாதன், மகன், அவனே என்பவையே ஆகும். நாம் எல்லோரும் ஆண்டவரின் தூதர்களாக வேண்டும். எமது வாழ்வின்மூலம் ஆண்டவரின் அன்பைப் பரப்புவதன்மூலமும் ஆண்டவரின் ஒரு பாகமாக அவரே ஆக்கிக்கொள்வார். இதுதான் மகன் என்ற உயர்ந்த நிலை. நான், எனது, என்னுள் இருக்கும் ஆறு உள் எதிரிகள் (காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாத்சர்யம்) அழிந்ததும் நான் அவனாகவே ஆகிவிடுவேன். இதைத்தான் பகவான் சத்ய சாயி பாபா ஜோதி தியானத்தில்,"முதலில் நான் ஜோதியில் இருந்தேன். பின்னர் ஜோதி என்னுள் வந்தது. பின்பு ஜோதியே ஆனேன்" என்று விளக்கியுள்ளார். இம் மூன்று நிலைகளையும் இந்து சமய தத்துவத்தில் துவைதம், விஷிஸ்டாத்வைதம், அத்வைதம் என குறிப்பிட்டு ள்ளார்கள்.

மகான்கள் உடலுடன் வாழும்போது பக்தர்கள் அவர்களிடம் ஈர்க்கப்பட்டு அவர்களின் போதனைகளை விளங்கி பின்பற்ற உற்சாகமும் ஆர்வமும் இருக்கும். அவர்கள் உடலை நீத்தபின்பு சந்தேகங்கள் எழலாம், ஆர்வம் குறையலாம், பின்பற்றுபவர்கள் தங்களது அறிவிற்கேற்ப விளக்கங்களைக் கொடுத்து பல பிரிவுகளை ஏற்படுத்தியுள்ளார்கள்.

ஆனால் உடலில் இல்லாமல் இருக்கும்போது அவரில் நம்பிக்கை வைப்பதன்மூலம் அதிகளவாக ஆசீர்வதிக்கப்படுவோம் என்று இயேசுபிரான் கூறியதை ஞாபகத்தில் வைப்போம்.

- என்மீது நம்பிக்கை வைப்பவர்கள் ஆசீர்வதிக்கப் பட்டவர்கள்
- என் தரிசனம் இல்லாமலேயே என்மீது நம்பிக்கை வைப்பவர்கள் மேன்மேலும் ஆசீர்வதிக்கப் பட்டவர்கள்.
- என்மீது வைத்துள்ள நம்பிக்கையின் நிமித்தம் வசைகள் கேட்டும் பல துன்பங்களுக்கு ஆளாக்கப்பட்ட போதும் நம்பிக்கை தளராதவர்கள் அதியுயர்வாக ஆசீர்வதிக்கப்படுவார்கள்.

எல்லா மதங்களும் மேன்மையானவைகளே என்றும் எல்லோரும் என்ற வாக்குமூலம் ஆண்டவனே எங்கும் எதிலும் எப்போதும் காண் என்று வலியுறுத்தி யுள்ளார்கள். நாம் மனித உருவில் நடமாடிய தெய்வங்களின் அன்பை சுருக்கக்கூடாது. அன்பை மட்டுப்படுத்தக்கூடாது. அது எல்லையற்ற பரந்த தன்மையுடையது. அன்பை விரிவாக்கி எல்லை யற்றதாக ஆக்குவதன் மூலமே தெய்விக நிலையை அடையலாம்.

இதுவே எமது குறிக்கோளாக இருக்கட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

077113013 Mohan



# பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா கூறியது,



"1530 கி.பி. பிரித்தானியாவில் இயேசுவின் வாழ்வில் நடந்த நிகழ்வுகள் அனைத்தையும் சிறிய புத்தமாக தயாரித்தார்கள். அவர்கள் தொகுத்த அனைத்தையும் ருஷ்யர்கள் மிக சிறிய புத்தகமாக்கி கறுப்பு கடற்கரையிலுள்ள (Black Sea) ஒரு இடத்தில் பாதுகாப்பாக வைத்துள்ளார்கள். பகவான் தனது கையை அசைத்து அப்புத்தகத்தை கையில் எடுத்தார். இதுதான் அப்புத்தகம் என்று அவையோருக்கு காட்டினார். முன்னால் இருந்த சில பக்தர்களுக்கும் காட்டினார். இதன் முற்பக்கத்தில் சிலுவை பதிக்கப்பட்டிருந்தது. இப் புத்தகத்தில் மறு மதங்களிலுள்ள சிறந்த குறிப்புகளும் உள்ளன. எல்லா மதங்களும் ஒன்றே என்பதை இது நிரூபிக்கிறது. இதிலுள்ள குறிப்புகள் இப்போதுள்ள பைபிள் நூலில் இல்லை. இச் சிறிய நூலில் இயேசுபிரானைப் பற்றி புதிய குறிப்புகள் உள்ளன. பக்கங்களை அடையாளப்படுத்த வைத்திருக்கும் நூல்களில் மதங்களிலுள்ள சிறந்த வாக்கியங்கள் பதிக்கப்பட்டுள்ளன.

பகவானின் அருளுரை : 25.12.1996

## இயேசு பிரான் பிறந்த தினம்

ஏதோ ஒரு பிரகாசமான நட்சத்திரம் தென்பட்டதென்பதை வைத்து பிறந்த தினத்தை கணித்துள்ளார்கள். பெரிய பிரகாசமான நட்சத்திரம் 800 வருடங்களுக்கு ஒரு முறையே தெரியும். சிலர் செப்டெம்பர் 15ம் திகதி என்று கணித்துள்ளார்கள். அவர் பிறந்தது காலை 3.15 மணிக்கு. டிசெம்பர் மாதம் 28ஆம் திகதி 1980 வருடங்களுக்கு முன்பு நிகழ்ந்தது. அன்று ஞாயிற்றுக்கிழமை. பிரகாசமான நட்சத்திரம் தெரியவேண்டிய அவசியம் இல்லை. இது பக்தர்களின் கற்பனை. இயேசு பிரானே பெரிய பிரகாசமான நட்சத்திரம்.

சத்ய சாயி பாபாவின் அருளுரை 25.12.1979



நான் என்ற அகங்காரத்தை அழித்தால்
பரலோகம் கிடைக்கும். இதுவே
சிலுவையின் அதி உன்னத அர்த்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Mathi Colours
Nallur, 0212229285

Saimargam August - December 2023 Price: LKR 150

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org